பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

மூலமும் தெளிவுரையும்



5

வர்த்தமானன் பதிப்பகம்

வ. ஜோதி M.A

உ

திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

(மூலமும் தெளிவுரையும்)

ஐந்தாம் தொகுதி

உரையாசிரியர் :

வ. ஜோதி M.A.,

வர்த்தமானன் பதிப்பகம்

ஏ. ஆர். ஆர். காம்ப்ளக்ஸ்,

141, உஸ்மான் சாலை, தி. நகர்,

சென்னை - 600 017.

✆ 825 79 95

இரண்டாம் பதிப்பு : 1998

ஐந்து தொகுதிகள்
விலை ரூ.500/-

Laser by : **SRI SATHYA SAI GRAPHICS**
29/1, Sarojini Street, T.Nagar, Chennai - 600 017. ✆ : 433 25 04

பதிப்புரை

திருவிளையாடற் புராணத்தில் ஐந்தாவது தொகுதி இது. இதனுடன் திருவிளையாடற் புராணம் நிறைவு பெறுகிறது. மற்ற இலக்கியங்களில் இல்லாத சிறப்பு ஒன்று இதில் காணப்படுகிறது. இந்நூலின் அருச்சனைப்படலம் (65) தனித் தன்மை வாய்ந்தது. ஆரம்பம் முதல் 64 ஆம் படலம் வரை கூறப்பட்ட செய்திகளை 65 ஆம் படலமான அருச்சனைப்படலம் சுருக்கமாகத் தொகுத்துக் கூறுகிறது. காப்பிய அமைப்பில் இது ஒரு புதுமை! எல்லா இலக்கியங்களுக்கும் பாயிரம் உண்டு. ஒரு நூல் ஆயிரம் பக்கம் அகன்றதாயினும் பாயிரம் இருக்க வேண்டும். பாயிரம் இல்லையென்றால் அது பனுவல் அன்று! ஆனால் நூல் முடிப்புரையுடன் முடிய வேண்டும் என்னும் விதி இல்லை! இந்த வகையில் பரஞ்சோதியார் ஒரு புதுமை செய்துள்ளார். அதுவும் நெஞ்சை உருக்கும் வகையில் மிக அற்புதமாக அமைத்துள்ளார்.

அடியவர்க்காக - எளியவர்க்காக இறைவன் கூலியாளாக வருவதும், மண்சுமப்பதும், பிரம்படி படுவதும் சிந்திக்கத் தக்கன. எத்தகைய உயர்நிலையினராயினும் அந்நிலையிலிருந்து இறங்கி வந்து எளியவர்க்கு உதவ வேண்டும் என்ற உண்மையை இறையனாரின் பல திருவிளையாடல்கள் உணர்த்துகின்றன.

நீண்ட முன்னுரையுடன் அழகாக - தெளிவாக உரை முடித்து உதவிய சுடர்மிகு ஜோதியை வாழ்த்துகிறோம்.

தொடர்புடைய அனைவர்க்கும் நன்றி.

- பதிப்பகத்தார்

பொருளடக்கம்

திருவிளையாடற் புராணம்

திருவாலவாய்க் காண்டம்

ஐந்தாம் தொகுதி

57. வலைவீசின படலம்

2649. மின்றிரித் தன்ன வேணி வேதிய னிடைக்கா டன்பின்
சென்றுமீண் டனையான் கொண்ட பிணக்கினைத்
தீர்த்த வண்ணம்
இன்றுரை செய்து முந்நீர் எறிவலை வீசி ஞாழன்
மன்றலங் குழலி னாளை மணந்துமீள் வண்ணஞ்
சொல்வாம்.

2650. அந்தமில் அழகன் கூட லாலவா யமர்ந்த நீல
கந்தர னுலக மீன்ற கன்னியங் கயற்க ணாளாங்
கொந்தவி ழலங்கற் கூந்தற் கொடிக்குவே றிடத்து வைகி
மந்தண மான வேத மறைப்பொரு ளுணர்த்து மதோ.

2651. நாதனின் னருளாற் கூறு நான்மறைப் பொருளை யெல்லாம்
யாதுகா ரணத்தான் மன்னோ வறிகிலே மெம்பி ராட்டி
காதர மடைந்தாள் போலக் கவலையுஞ் சிறிது தோன்ற
ஆதர மிலளாய்க் கேட்டாள் அஃதறிந் தமலச் சோதி.

57. வலைவீசின படலம்

2649. மின்னலைப் போன்ற சடையை உடைய சோம சுந்தரக் கடவுள், இடைக்காடன் பின் சென்று மீண்டு, அவன் கொண்ட பிணைக்கினைத் தீர்த்து அருளிய திருவிளையாடலைக் கூறினோம். கடலில் எறியும் வலையினை வீசி, புலிநகக் கொன்றை மலரின் மணம் நிறைந்த அழகிய கூந்தலையுடைய உமாதேவியைத் திருமணம் செய்து மீண்டு அருளிய திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

மீனாட்சியம்மையார் சாபம் பெறுதல்

2650. முடிவில்லாத பேரழகனும் ஆலவாய் நகரில் எழுந்தருளிய நீலகண்டனுமாகிய சோமசுந்தரக் கடவுள், உலகத்தைப் பெற்ற கன்னியாகிய அங்கயற் கண்ணம்மைக்கு, தனியிடத்தில் இருந்து இரகசியமான வேதத்தின் உட்பொருளைக் கூறியருள்வானாயினான்.

2651. இறைவன் இனிய திருவருளால் கூறுகின்ற நான்கு வேதத்தின் பொருளை எல்லாம், என்ன காரணத்தினாலோ, நாம் அறியோம். அச்சமுற்றார்போலக் கவலையும் சிறிது தோன்ற, விருப்பம் சிறிதும் இல்லாதவர் போல் கேட்டார். நிமலனாகிய இறைவன் அதை உணர்ந்து கொண்டான்.

2652. அராமுக மனைய வல்குல் அணங்கினை நோக்கி யேனை
இராமுக மனைய வுள்ளத் தேழைமார் போல வெம்பாற்
பராமுகை யாகி வேதப் பயனொருப் படாது கேட்டாய்
குராமுகை யவிழ்ந்த கோதா யுற்றவிக் குற்றந் தன்னால்.

2653. விரதமு மறனு மின்றி மீன்படுத் திழிஞ ரான
பரதவர் மகளா கென்று பணித்தனன் பணித்த லோடும்
அரதன வாரந் தாழ்ந்த வாரமென் முலையாள் அஞ்சி
வரதநிற் பிரிந்து வாழ வல்லனோ வென்று தாழ்ந்தாள்.

2654. வீங்குநீர்ச் சடையா னீங்கு மெல்லியல் பரிவு நோக்கி
வாங்குநீர்க் கானல் வாழ்க்கை வலைஞர்கோன் மகளாய் வைகி
ஆங்குநீ வளர்நாள் யாம்போந் தருங்கடி முடித்து மென்னாத்
தேங்குநீர் அமுதன் னாளைச் செலவிடுத் திருந்தானிப்பால்.

2655. அன்னது தெரிந்து நால்வா யைங்கரக் கடவு டாதை
முன்னர்வந் திதனால் அன்றோ மூண்டதிச் செய்தி யெல்லாம்
என்னவீங் கவளம் போலாங் கிருந்தபுத் தகங்க ளெல்லாந்
தன்னெடுங் கரத்தால் வாரி யெறிந்தனன் சலதி மீதால்.

2652. பாம்பின் படம் போன்ற நிதம்பத்தையுடைய பிராட்டியைப் பார்த்து, ''இருள் போன்ற உள்ளத்தினையுடைய ஏனைய மகளிர் போன்று நீ நம்மிடத்தே பராமுகம் உடையை ஆகி வேதப்பொருளை விருப்பமின்றிக் கேட்டாய். குராவின் மலர்மாலையை அணிந்த கூந்தலையுடையாய்! நீ குற்றம் செய்தவளானாய்.

2653. ''இக் குற்றத்தினால் நோன்பும் அறனும் இல்லாமல் மீன்களைப் பிடித்துக் கொலை புரிதலால் இழிந்த வராகக் கருதப்படுகின்ற பரதவரின் மகளாகப் பிறக்கக் கடவை'' என்று கட்டளை இட்டார். அவ்வாறு பணித்த அளவில் மாணிக்க மாலை புரளும் சந்தனம் பூசிய மெல்லிய கொங்கைகளை யுடைய தேவியார் அஞ்சி, ''வள்ளலே, நின்னைப் பிரிந்து வாழ்வேனோ?'' என்று கூறி வணங்கினாள்.

2654. கங்கையைச் சடையாக உடைய இறைவன், பிரிகின்ற உமையம்மையின் துன்பத்தைக் கண்டு, ''கடற்கறையில் உள்ள சோலையில் வாழும் பரதவ மன்னனுக்கு மகளாகப் பிறந்து அங்கே வளர்கின்ற பொழுது நாம் வந்து உன்னைத் திருமணம் செய்து கொள்வோம்'' என்று நிரம்பிய நீரினை உடைய கடலில் தோன்றிய அமுதம் போன்ற அம்மையைச் செல்ல விடுத்து இருந்தருளினார்.

சிவகுமாரர் இருவரும் கோபம் கொள்ளல்

2655. பின்பு தொடங்கிய வாயுடைய விநாயகப் பெருமான் அச்செய்தியை அறிந்து தம் தந்தையாகிய இறைவன் திருமுன் வந்து, ''இந்நிகழ்ச்சி அனைத்தும் இதனால் அல்லவா மூண்டது? என்று அங்கிருந்த சுவடிகளை எல்லாம் தம் துதிக்கையால் கவளத்தை அள்ளுவதுபோல அள்ளிக் கடலில் வீசினார்.

2656. வரைபக வெறிந்த கூர்வேன் மைந்தனுந் தந்தை கையில்
உரைபெறு போத நூலை யொல்லெனப் பறித்து வல்லே
திரைபுக வெறிந்தா னாகச் செல்வநான் மாடக் கூடல்
நரைவிடை யுடைய நாதன் நந்தியை வெகுண்டு நோக்கா.

2657. அடுத்துநாம் இருக்குஞ் செவ்வி யறிந்திடா திவரை வாயில்
விடுத்துநீ யிருந்தாய் தீங்கு விளைந்ததுன் றனக்கு மிந்தத்
தொடுத்ததீங் கொழிய வின்றோர் சுறவுரு வாகி வையம்
உடுத்தகா ரோத நீர்புக் குழல்கெனப் பணித்தான் மன்னோ.

2658. வெருவரு செலவின் வேழ முகத்தனை விதித்த சாபப்
பெருவலி தன்னைச் சாரும் பெற்றியாற் சாபங் கூறான்
அருவரை நெஞ்சு போழ்ந்த வள்ளிலை வடிவேற் செங்கை
முருகனை வணிகர் தம்மின் மூங்கையா கென்றான் இப்பால்.

2659. நாயகன் ஏவ லாலே நாயகி வலைஞர் மாதர்
ஆயது நந்திப் புத்தே ளடுசுற வாகி முந்நீர்
மேயதுங் கருணை வள்ளல் மீண்டுத் தணங்கை வேட்டுப்
போயது மவட்குக் கேள்வி புகன்றது முறையிற் சொல்வாம்.

2656. கிரவுஞ்சமலை பிளக்குமாறு எறிந்த கூரிய வேற் படையை உடைய முருகக் கடவுளும், தந்தையாரின் திருக்கரத்தில் இருந்த பழமை வாய்ந்த சிவஞானபோத நூலை விரைந்து பிடுங்கி அதனைக் கடலில் வீசி எறிந்தார். செல்வம் மிக்க நான்மாடக் கூடலில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் திருநந்தி தேவரைச் சினந்து பார்த்தார்.

இறைவரின் சீற்றம்

2657. ''நாம் இருக்கும் சமயம் அறியாது இவர்களை உள்ளே விடுத்து நீ வாளா இருந்தனை. அதனால் தீங்கு விளைந்தது, உனக்கும் நேர்ந்த இத்தீங்குநீங்க, இப்பொழுதே நீ சுறாமீன்வடிவம் கொண்டு நிலவுலகைச் சூழ்ந்த கடலில் புகுந்து உழலக் கடவாய்'' - எனச் சபித்தார்.

2658. கண்டோர்க்கு அச்சம் உண்டாக்கும் யானையின் முகம் உடைய மூத்த பிள்ளையார்க்கு இடும் சாபத்தின் வலிமையானது தன்னையே வந்தடையும் தன்மையாலே, அவருக்குச் சாபம் கூறவில்லை. வெல்லுதற்கரிய கிரவுஞ்ச மலையின் மார்பைப் பிளந்த கூரிய வேற்படை ஏந்திய சிவந்த திருக்கரத்தையுடைய முருகப் பெருமானை ''வணிகர் மரபில் ஊமையனாகத் தோன்றக் கடவை'' என்று சபித்தார்.

2659. பின்னர் இறைவனது ஆணையாலே, இறைவி பரதவ மாது ஆனதும், திருநந்திதேவர் கொல்லுகின்ற சுறாமீனாகிக் கடலுள் சென்றதும், அருள் வள்ளலாகிய இறைவன் அம்மீனைப் பிடித்து அம்மாதினை மணந்ததும், அவ்வம்மையாருக்குத் திருவுத்தரகோச மங்கையில் உபதேசம் செய்து அருளியதும் ஆகிய இவற்றை முறையாகக் கூறுவோம்.

வேறு

2660 சூழும் வார்திரை வையையந் துறைகெழு நாட்டுட்
கீழை யார்கலி முகத்தது நெய்தலங் கீழ்நீர்
ஆழ நீள்கருங் கழியகழ் வளைந்துகார் அளைந்த
தாழை மூதெயி லுடுத்ததோர் தண்டுறைப் பாக்கம்.

2661 முடங்கு முள்ளிலை யார்புதைந் தெதிரெதில் மொய்த்து
நுடங்கு கைதையோ தொடுவளி நூக்கநின் றசைவ
மடங்கு மெய்யராய்க் கையிருங் கேட்க வட்டத்
தடங்கி வாள்பனித் தாடம ரரற்றுவார் அனைய.

2662 புலவு மீனுணக் கோசையும் புட்களோப் பிசையும்
விலைப கர்ந்திடும் அமலையு மீன்கொள்கம் பலையும்
வலையெ றிந்திடு மரவமும் வாங்குமா ரவமும்
அலையெ றிந்திடு டரவையா யடைப்பன மாதோ.

2663 வாட்டு நுண்ணிடை நுளைச்சியர் வண்டலம் பாவைக்
கூட்டு கின்றசோறு அருகிருந் துடைந்தபூங் கைதை
பூட்டு கின்றன நித்திலம் பொருகடற் றரங்கஞ்
சூட்டு கின்றன கடிமலர் சூழல்சூழ் ஞாழல்.

வலைச் சேரியின் வருணனை

2660. நீண்ட அலைகளையுடைய வையையாற்றின் அழகிய துறைகள் பொருந்திய பாண்டிய நாட்டில் கீழைக் கடலின் ஓரத்தில் பாக்கம் என்னும் ஊர் ஒன்று உள்ளது. அது நெய்தல் நிலத்தின் உவர் நீரினை உடையது. அஃது ஆழமுடைய உப்பங் கழியாகிய அகழியினாலும், முகிலை அளவும் உயர்ந்து வளர்ந்த தாழையாகிய பெரிய மதிலாலும் சூழப்பெற்றது.

2661. மடங்கிய முள்ளையுடைய இலைகளால் மறைக்கப் பட்டு, தம்முள் எதிர் எதிரே நெருங்கி, காற்றுத் தள்ளுவதால் மலரோடு நின்று அசையும் வளைந்த தாழைகள் வளைந்த உடலுடன், கையில் உள்ள பெரிய கேடகமாகிய வட்டத்துள் மறைந்து, வாளை விதிர்த்துப் போர்புரியும் வீரர்களை ஒத்தது.

2662. புலால் நாற்றமுடைய மீன்களை உலர்த்தும் ஒலியும், அவற்றை உண்ணவரும் பறவைகளை ஓட்டும் ஒலியும், அவற்றை விலை கூறுகிவோர் ஒலியும் அம்மீன்களை வாங்குவோர் ஒலியும், பரதவர் வலை வீசும் ஒலியும், அவ்வலையை இழுக்கும் ஒலியும், அலை வீசும் கடலின் ஒலியை விஞ்சுவன.

2663. மெல்லிய இடையை உடைய நுளைச் சிறுமியரின் விளையாட்டு இடத்தில் உள்ள பாவைக்கு, மலர்ந்த மலர்களை உடைய தாழைகள் அருகிருந்து சோற்றினை ஊட்டும். மோதுகின்ற கடலின் அலைகள் முத்து மாலையைப் பூட்டும். சோலையைச் சூழ்ந்த புலிநகக் கொன்றை மரங்கள் மணம் மிக்க தம் மலர்களைச் சூட்டும்.

2664 நிறைந்த தெண்கடல் ஆடிநீ ணெறியிடைச் செல்வோர்க்
கறந்தெ ரிந்தபோற் பொதிந்தசோ றவிழ்ப்பன தாழை
சிறந்த முத்தொடு பசும்பொனும் பவளமுந் திரட்டிப்
புறந்தெ ரிந்திடக் கொடுப்பன மலர்ந்தபூம் புன்னை.

2665 கொன்று மீன்பகர் பரதவர் குரம்பைக டோறுஞ்
சென்று தாவிமேற் படர்வன திரைபடு பவளம்
மன்றல் வார்குழ லுளைச்சியர் மனையின்மீன் உணக்கும்
முன்றில் சீப்பன கடலிடு முழுமணிக் குப்பை.

2666 கூற்றம் போன்றகண் ணுளைச்சியர் குமுதவாய் திறந்து
மாற்றம் போக்கினர் பகர்தருங் கயற்குநேர் மாறாந்
தோற்றம் போக்குவ வவர்விழித் துணைகளக் கயன்மீன்
நாற்றம் போக்குவ தவர்குழ லறுமலர்க் கைதை.

2667 அலர்ந்த வெண்டிரைக் கருங்கழிக் கிடங்கரின் அரும்பர்
குலைந்த விழ்ந்துதேன் றுளும்பிய குமுதமே யல்ல
கலைந்த ருங்கட லெறிகருங் காற்பனங் கள்வாய்
மலர்ந்த ருந்திய குமுதமு மொய்ப்பன வண்டு.

2664. நிறைந்த தெள்ளிய கடலில் நீராடி, நெடுந்தூரம் வழிச் செல்லும் யாத்திரைக்காரர்களுக்குத் தாழைகள் அறநூல் உணர்ந்தன போல பொதிந்த சோற்றினை அளிக்கும். மலர்ந்த பொலிவினையுடைய புன்னை மரங்கள் சிறந்த முகத்தையும், பசுமையான பொன்னையும் பவளமும் திரட்டி அயலோர் அறியுமாறு கொடுக்கும்.

2665. மீன்களைக்கொன்று விற்கும் பரதவர்களின் சிறிய குடிகள்தோறும், கடலில் உண்டாகிய பவளக்கொடிகள் போய்த் தாவி மேலே படர்ந்து நிற்கும். மணம் நிறைந்த நீண்ட கூந்தலை யுடைய நுளைச்சியர் தம் முன்றிலில் உலர்த்தும் மீன்களைக் கடலின் அலைகளால் வீசப்படும் பெருமுத்துக்கள் சிதைத்துத் தள்ளும்.

2666. கூற்றுவன் போன்ற கண்களையுடைய நுளைச்சியர், ஆம்பல் மலர் போன்ற வாயினைத் திறந்து கூவி விற்கும் கயல் மீனுக்குப் போட்டியாக, அவர்களுடைய இரு கண்கள் அக்கயல் மீன்களின் தோற்றத்தை அளிக்கும். அவர்கள் கூந்தலில் உள்ள நறிய தாமரை மலர் அவற்றின் நாற்றத்தைப் போக்கும்.

2667. பரந்த வெண்மையான அலைகளையுடைய கருமையான உப்பங்கழியிலே மலர்ந்து தேன் ததும்பிய ஆம்பல் மலரிலே அல்லாமல், மரக்கலங்களையுடைய கடலின் அலை மோதுகின்ற கரிய அடியையுடைய பனை மரத்தின் கள்ளை வாயைத் திறந்து உண்ட நுளைச்சியரின் வாயாகிய ஆம்பல் மலரிலும் வண்டுகள் மொய்க்கும்.

2668 ஆய பட்டினத் தொருவன்மேல் ஆற்றிய தவத்தாற்
றூய வானவர் தம்மினுந் தூயனாய்ச் சிறிது
தீய தீவினைச் செய்தியாற் றிண்டிமில் வாணர்
மேய சாதியிற் பிறந்துளான் மேம்படு மனையான்.

2669 செடிய காருடற் பரதவர் திண்டிமி னடத்தா
நெடிய வாழியிற் படுத்தமீன் றிறைகொடு நிறைக்குங்
கடிய வாயிலோன் அவர்க்கெலாங் காவலோ னேற்றுக்
கொடிய வானவ னடிக்குமெய் யன்புசால் குணத்தோன்.

2670 மகவி லாமையால் ஆற்றநாண் மறுமையோ டிம்மைப்
புகலி லானென வருந்துவா னொருபகற் போது
தகவு சால்பெருங் கிளையொடுஞ் சலதிமீன் படுப்பான்
அகல வார்கலிக் கேகுவா னதன்கரை யொருசார்.

2671 தக்க மேருமா மலைமக னோடையிற் றவத்தான்
மிக்க மீனவன் வேள்வியில் விரும்பிய மகவாய்ப்
புக்க நாயகி தன்பதி யாணையாற் புலவு
தொக்க மீன்விலை வலைஞன்மேற் றவப்பயன் றுரப்ப.

2672 இச்சை யாலவன் அன்பினுக் கிரங்குவாள் போலச்
செச்சை வாய்திறந் தழுதொரு திருமக வாகி
நெய்ச்ச பாசிலைப் புன்னைநன் னீழலிற் கிடந்தாள்
மைச்ச காருடற் கொடுந்தொழில் வலைஞர்கோன் கண்டான்.

2668. இத்தகைய நுளைச் சேரியிலே ஒருவன், முற்பிறவியில் செய்த பெரும் தவத்தினால் தேவர்களினும் தூய்மையுடையவனாய் இருந்தும், சிறிது தீவினையைச் செய்ததினால், திண்ணிய தோணியால் வாழ்வோர் பொருந்திய பரதவர் குலத்தில் பிறந்தவன் ஆவான். அவன் அனைவர்க்கும் மேம்பட்டவன்.

2669. முடைநாற்றமுடைய கரிய உடலை உடைய வலைஞர், மரக்கலங்களைச் செலுத்திக் கடலில் பிடித்த மீன்களைத் திறையாக ஏற்று நிறைக்கப்படும் காவலையுடைய வாயிலை உடையவன். அப்பரதவர் அனைவர்க்கும் அரசன்; இடபக் கொடியை உடைய சிவபெருமானுக்கு உண்மையான அன்பு நிறைந்த குணத்தினை உடையவன்.

உமாதேவியார் வலைஞர் மகவாகத் தோன்றுதல்

2670. பல நாட்கள் வரை மகட்பேறு இன்றி மறுமைக்கும் இம்மைக்கும் ஒரு பற்றுக் கோடில்லாதவன் போல வருந்தினான். அவன் ஒருநாள் தன் நெருங்கிய சுற்றத்தினருடன் கடல் மீனைப் பிடிப்பதற்கு அகன்ற கடலுக்குள் செல்கின்றான். அக்கடற் கரையின் ஒருபக்கத்தில், (மகவானார்)

2671. தகுதிமிக்க பெரிய மலையரையன் செய்த சிறந்த தவத்தினால் மலரோடையிலும், பாண்டியன் செய்த தவத்தால் வேள்வியிலும், அவர்கள் வேண்டிய குழந்தை வடிவமாய் சென்று வெளிப்பட்ட இறைவி, தனது கணவனின் ஆணையால், புலால் நாற்றம் மிக்க மீன் விற்கும் பரதவ மன்னன் முற்பிறவியில் செய்த தவப்பயனால்,

2772. தமது விருப்பத்தின்படியே ஒரு திருமகளாகிய அம்மன்னனின் அன்பினுக்குத் திருவுள்ளம் இரங்குவாள் போலத் தமது சென்னிறமான திருவாயினைத் திறந்து அழுதாள். பசிய இலைகள் அடர்ந்த புன்னை மரத்தின் குளிர்ந்த நிழலில் கிடந்தனள். கரிய பெரிய உடலையும் கொடிய தொழிலையும் உடைய பரதவர் மன்னன் குழந்தையைக் கண்டனன்.

2673 கார்கொ ணீர்த்திரு மாதுகொல் கரந்துநீ ருறையும்
வார்கொள் பூண்முலை மடந்தைகொல் வனத்துறை வாழ்க்கைத்
தார்கொள் பூங்குழல் அணங்குகொ றடங்கணு மிமைப்ப
ஆர்கொ லோமக வாகியீண் டிருந்தன ளென்னா.

2674 பிள்ளை யின்மையேற் கிரங்கியெம் பிரான்றமிழ்க் கூடல்
வள்ளல் நல்கிய மகவிது வேயென வலத்தோள்
துள்ள வன்புகூர்ந் தெடுத்திரு தோளுறப் புல்லித்
தள்ள ருந்தகைக் கற்பினா டனதுகைக் கொடுத்தான்.

2675 பிறவி யந்தகன் றெரிந்துகண் பெற்றெனக் கழிந்த
வறிய னீணிதி பெற்றென வாங்கினாள் வலைஞர்
எறியும் வேலையின் ஆர்த்தனர் கையெறிந் திரட்டிக்
குறிய வாணகை வலைச்சியர் குழறினார் குரவை.

2676 பிழையில் கற்புடை மனைவியும் பெறாதுபெற் றெடுத்த
குழவி யைத்தடங் கொங்கையுங் கண்களுங் குளிரத்
தழுவி முத்தமிட் டுச்சிமோந் தன்புளந் ததும்ப
அழகி தாகிய மணிவிளக் காமென வளர்ப்பாள்.

2677 புலவு மீன்விலைப் பசும்பொனாற் செய்தபல் பூணும்
இலகு மாரமும் பாசியுங் காசி டை யிட்டுக்
குலவு கோவையுஞ் சங்கமுங் குலத்தினுக் கிசைய
அலகி லாதபேர் அழகினுக் கழகுசெய் தணிந்தான்.

2673. அப்போது மகிழ்ச்சிமிக, ''கரிய கடலின்கண் தோன்றிய திருமகளோ? நீரில் மறைந்துறையும் கச்சினை அணிந்த அணிகலன் தங்கிய கொங்கைகளையுடைய நீரர மகளோ? காட்டில் உறையும், மாலையை அணிந்த பொலிவான கூந்தலையுடைய கானர மகளோ? இவர்களுள் யாரோ ஒரு பெண் குழந்தையாகிய பெரிய கண்கள் இமைக்க இங்கே இருந்தனள்'' என்று கூறினன்.

2674. ''பிள்ளை இல்லாத எனக்கு, எம்பெருமானாகிய கூடல் பெருமான், அருள் சுரந்து அருளிய குழந்தை இது'' என்று கருதி, வலது தோள் துடிக்க அன்புடன் எடுத்து இரண்டு தோள்களும் பொருந்தும்படி தழுவி, சிறப்பு மிக்க கற்புடைய தன் மனைவியின் கையில் கொடுத்தான்.

2675. அவள் பிறவிக் குருடன் பொருளை அறியும்படி கண் பெற்றாற் போலவும், மிக்க வறியவன் பெருநிதி பெற்றாற் போலவும், அப்பெண் குழந்தையை வாங்கினாள். அலைவீசும் கடல்போல வலைஞர் ஆரவாரம் செய்தனர். ஒளிமிக்க பற்களையுடைய வலைச்சியர் கையை ஒன்றோ டொன்று தட்டிக் குரவைப் பாடல் பாடினர்.

2676. கற்பினையுடைய அவன் மனைவியும், பெறாது பெற்ற குழந்தையை, தடம்கொங்கைகளும், கண்களும் குளிரும்படி தழுவி முத்தமிட்டு, உச்சி மோந்து உள்ளத்தில் அன்பு நிறைந்து ததும்ப, இது அழகிய மணிவிளக்கு என்று கருதிப் போற்றி வளர்ப்பாளாயினாள்.

2677. புலால் நாற்றம் வீசும் மீனை விலை பகர்ந்து விற்றதனால் பெற்ற பொன்னைக் கொண்டு செய்த அணி கலன்களும், முத்துக்களும், பாசிகளும் ஆகிய இவற்றுடன் மணிகள் இடையில் சோக்கப்பட்டு, சிறப்பமைந்த மாலைகளும் அக்கு மணிகளும் ஆகிய இவற்றால் தம் குலத்திற்குப் பொருத்தமான முறையில் அழகுக்கு அழகு செய்து அலங்கரித்தனர்.

2678 தொண்டை வாய்வலைச் சிறுமியர்
தொகையொடுந் துறைபோய்
வண்டல் ஆடியு நித்தல மாமணி கொழித்துங்
கண்டன் ஞாழல்சூழ் கானலங் கடிமலர் கொய்துங்
கொண்ட லோதிபின் றாழ்தரக் குரைகடல் குளித்தும்.

2679 தளர்ந்த பைங்கொடி மருங்குலுந் தன்னுயிர்த் தலைவன்
அளந்த வைகலுங் குறைபட வவனிடத் தார்வங்
கிளர்ந்த வன்புமொண் கொங்கையுங் கிளரநாட் சிறிதில்
வளர்ந்து வைகினாள் வைகலும் உயிரெலாம் வளர்ப்பான்.

2680 ஆல வாயுடை நாயகன் ஏவிய வாறே
மாலை தாழிள மதிச்சடை மகுடமுங் கரங்கள்
நாலு மாகிய வடிவுடை நந்தியுஞ் சுறவக்
கோல மாகிவெண் டிரைக்கடல் குளித்தினி திருந்தான்.

2681 குன்றெ றிந்தவேற் குழகனுங் கரிமுகக் கோவும்
அன்றெ றிந்ததந் திரமெலாஞ் சிரமிசை யடக்காக்
கன்றெ றிந்தவன் அறிவருங் கழன்மனத் தடக்கா
நன்றெ றிந்தகன் மத்தென வுழக்கிடா நிற்கும்.

அம்மையார் சிறுமியர்களுடன் விளையாடுதல்

2678. கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாயினையுடைய பரதவச் சிறுமியர் கூட்டத்தோடு கடற்கரைக்குச் சென்று மணலால் சிற்றில் கோலி விளையாடியும், முத்துக்களைச் சிறு முறத்தால் கொழித்தும், தாழைகளும், புலிநகக் கொன்றைகளும் சூழ்ந்த சோலையில் அழகிய மலர்களைக் கொய்தும் முகில் போன்ற கூந்தல் பின்னே தாழ, ஒலிக்கின்ற கடலில் நீராடியும் மகிழ்ந்தாள்.

2679. ஒல்கிய பசிய கொடி போன்ற இடையும், தன் உயிர்த் துணைவராகிய இறைவன் குறிப்பிட்ட நாளும் சிறிது சிறிதாகக் குறையவும், அப்பெருமாளிடம் வைத்த அன்பு மேன்மேலும் பெருகவும், சிறப்புமிக்க தனங்கள் வளரவும் நாள்தோறும் உயிர்கள் அனைத்தையும் வளர்க்கும் இறைவி உடல் வளர்ச்சியைச் சிறப்புடன் பெற்று வளர்ந்தாள்.

நந்திதேவர் சுறாமீன் வடிவம் கொள்ளல்

2680. திருவாலவாயுடைய இறைவன் ஏவியவாறே, மாலை தாழ்ந்த இளம் பிறையணிந்த சடைமுடியும் நான்கு திருக்கரங்களும், பொருந்திய திருநந்தி தேவரும், சுறாமீன் வடிவம் கொண்டு அலைகளையுடைய கடலிலே சேர்ந்து மூழ்கி இனிதாக இருந்தனர்.

2681. கிரவுஞ்ச மலையைப் பிளந்த வேற்படையை உடைய முருகக் கடவுளும், யானை முகமுடைய மூத்த பிள்ளையாரும் அன்று கடலில் வீசிய நூல்கள் அனைத்தையும் முடியின்கண் அடக்கியும், கன்றினை வீசி எறிந்த திருமாலும் அறிதற்கு அரிய திருவடியை மனத்தின் கண் அடக்கியும் நின்று, பாற்கடலைக் கலக்கிய மந்தரமலையாகிய மத்தைப் போல் நின்று கடலைக் கலக்கும் அச்சுறாமீன்.

2682 கிட்டுந் தோணியைப் படகினைக் கிழிபட விசைபோய்த்
தட்டுஞ் சோங்கினை மேலிடு சரக்கொடுங் கவிழ
முட்டுஞ் சீறிமேல் வரும்பல சுறவெலா முடுக்கி
வெட்டுங் கோடுகோத் தேனைய மீனெலாம் வீசும்.

2683 தரங்க வாரிநீர் கலக்கலாற் றந்திரங் கொடுமேல்
இரங்கு வான்புல வோர்க்கமு தீகையா லெண்ணார்
புரங்கண் மூன்றையும் பொடித்தவன் ஆணையாற் புனலிற்
கரங்க ணான்கையுங் கரந்தமீன் மந்தரங் கடுக்கும்.

2684 தள்ளு நீர்த்திரை போய்துளைச் சேரிகள் சாய்ப்பத்
துள்ளு நீர்குடித் தெழுமழை சூலிறப் பாயும்
முள்ளு நீண்மருப் புடையமீன் பொய்கல மந்தத்
தெள்ளு நீர்த்துறை நடையற வின்னணந் திரியும்.

2685 எற்றி தாலெனத் துறைமகன் யாமிது பிடிக்கும்
பெற்றி யாதெனக் கிளையொடும் பெருவலைப் பாசம்
பற்றி யாழியூர் படகுகைத் தெறிந்தனன் படகைச்
சுற்றி வாய்கிழித் தெயிற்றிறப் பாய்ந்தது சுறவம்.

2682. நெருங்கி வருகின்ற தோணியையும், படகையும் அவை உடையுமாறு விரைந்து சென்று தாக்கும். சோங்கு என்ற ஒருவகை மரக்கலத்தினை அதில் உள்ள சரக்குகள் கவிழும்படி கீழே சென்று முட்டும். கோபத்துடன் தன் மீது வரும் சுறாமீன்கள் அனைத்தையும் துரத்தி வெட்டும். மற்றைய மீன்களை எல்லாம் கொம்பில் கோத்துப் புறத்தில் வீசும்.

2683. மூன்று புரங்களையும் எரித்த இறைவனது கட்டளையால், கடலில் தன் நான்கு திருக்கரங்களை மறைத்து வாழும் அச்சுறாமீன், அலைகளையுடைய கடல் நீரைக் கலக்குவதாலும் நூல்களைத் தலையில் தாங்கி மனம் வருந்தும் புலவர்களுக்கு ஞானாமிர்தத்தை அளித்தலாலும், மந்தரமலையை ஒத்திருந்தது. (கடலைக் கலக்கித் தனது வலிமையைக் கொண்டு, வருந்திய தேவர்களுக்குத் தேவாமிர்தத்தை மந்தரமலை கொடுத்தல் போன்று இச்சுறாமீன் கடலைக் கலக்கி, தன் தலைமேல் சிவஞான போதத்தைச் சுமந்து புலவர்களுக்குக் கொடுத்தமையால் ஒப்புமை).

2684. முள்வாய்ந்த நீண்ட கொம்பினை உடைய அச்சுறாமீன், தள்ளுகின்ற கடல் நீரானது நுளைச் சேரியில் உள்ள குடிசைகள் கீழே விழும்படி துள்ளும். நீரைக் குடித்து எழும்பும் மேகங்கள் கலையும்படி மேலே பாயும். அந்தத் தெளிந்த நீரையுடைய கரைக்குக் கப்பல்களே வரமுடியாதபடி அங்குமிங்கும் அலைந்து உலவும்.

பரதவர் கோமான் சுறா மீன் பிடிக்க எண்ணுதல்

2685. நெய்தல் நிலத்தலைவன் அச்சுறாமீன் புரியும் இடையூற்றினைக்கண்டு, ''இது எத்தகைய தன்மையுடையது? நாம் இதனைப் பிடிப்பது எவ்வாறு?'' எனவும் கருதித் தன் சுற்றத்தாருடன் படகில் கடலுள் சென்றான். பெரிய வலைக் கயிற்றைப் பிடித்து வீசினான். அச்சுறாமீன் அப்படகினைச் சுற்றிப் பாய்ந்து தன் வாயிற் கொம்பினால் அதனைச் சிதைத்தது.

2686 படவு டைப்பவோர் தோணிமேற் பாய்ந்துமத் தோணி
விடவு றத்தெறித் தெறித்திட விசைத்தொரு சோங்கின்
இடைபு குந்துநீள் வலையெறிந் திங்ஙனம் வெவ்வே
றுடல்பு குந்துழ லுயிரெனப் பரதனும் உழல்வான்.

2687 முன்னர் வீசினாற் பின்னுற முளைத்தெழ முயன்று
பின்னர் வீசினான் முன்னுறைப் பெயர்ந்தெழும் வலத்தில்
உன்னி வீசினா லிடம்பட வுருத்தெழு மிடத்தின்
மன்னி வீசினால் வலத்தெழு மகரவே றதுதான்.

2688 எறிவ லைப்படு மகமலர்ந் தீர்ப்பவன் உள்ளம்
மறுத லைப்பட வலையினும் வழீஇப்பொரு ளாசை
நெறிம லர்க்குழ லல்லவர் நினைவென நினைவுற்
றறிப வர்க்கறி தாம்பரம் பொருளென வகலும்.

2689 ஏவ லாளரோ டின்னவா றின்னமீன் படுத்தற்
காவ தாந்தொழில் இயற்றவு மகப்படா தாக
யாவ ரேயிது படுப்பவ ரென்றிருங் கானற்
கரவ லாளனும் பரதருங் கலங்கஞ் ருழந்தார்.

2690 சங்கலம்புதண் டுறைதெழு நாடனிச் சலதித்
துங்க மந்தரம் எனக்கிடந் தலமருஞ் சுறவை
இங்க ணைந்தெவன் பிடிப்பவ னவனியா னீன்ற
பங்கை மங்கலக் கிழானென மனம்வலித் திருந்தான்.

2686. இவ்வாறு அப்படகினை உடைக்க, ஒரு தோணி மேல் பாய்ந்து வலைவீசினான். அத்தோணி மேலும் பாய்ந்து சிதைத்தது. விரைந்து ஒரு சோங்கின் மீது ஏறி வலை வீசினான். இவ்வாறு ஒவ்வொரு உடலிலும் வினைவயத்தால் புகுந்து உயிர் உழலுவது போலப் பரதவ மன்னன் வெவ்வேறு கலங்களின் புகுந்து வலை வீசினான்.

2687. அச்சுறாமீன், முன்னே வலை வீசினால் பின்னே தோன்றி மேலெழும், முயன்று பின்னே சென்று வலையை வீசினால் முன்னே தோன்றி எழும், வலப்புறம் வலைவீசினால் இடப்புறம் எழும். இடப்புறம் வீசினால் வலப்புறத்தில் தோன்றி எழும்.

2688. வீசிய வலையின்கண், அகப்பட்டுவிட்டதென்று மனம் மகிழ்வோடு, வீசியவன் இழுக்கத் தொடங்கினால் மனம் வருந்தும்படி அவ்வலையினின்றும் நீங்கி, பொருளாசை மிக்க மலரணிந்த கூந்தலையுடைய விலை மகளிர் நினைவு போலவும், அறிபவர்க்கு அறிதற்கரிய சிவ பரம்பொருள் போலவும், ஓடிவிடும்.

2689. பரதவராசன் இவ்வாறு இச்சுறாமீனைப் பிடிப்பதற்குத் தன் ஏவலாளருடன் வேண்டும் தொழில்கள் எல்லாம் செய்யவும், அஃது அகப்படாமையால், ''இதனை யாரோ பிடிக்கவல்லார்?'' என்று கருதிப் பெருந் துன்பத்துடன் வருந்தி இருந்தான். அவனோடு பரதவரும் வருத்தமடைந்தார்கள்.

2690. சங்குகள் ஒலிக்கும் குளிர்ந்த நீர்த்துறைகள் உடைய கடல்நாடன். ''இக்கடலின்கண் வலிமை மிகுந்த மந்தர மலை போல் கலக்கும் சுறாமீனை இங்குப் பிடிப்பவன் எவனோ, அவனே யான் பெற்ற மகளைத் திருமணம் செய்து கொள்ளுவதற்கு உரியவன்,'' என்று உறுதி கொண்டான்.

2691 நந்தி நாதனு மினையனா யங்கய னாட்டத்
திந்து வாணுத லாளுமங் கனைய ளாய் இருப்பத்
தந்தி நாலிரண் டேந்திய தபனிய விமானத்
துந்து நீர்ச்சடை யார்மண முன்னினார் மன்னோ.

2692 உயர்ந்த சாதியுந் தம்மினும் இழிந்தவென் றுன்னிக்
கயந்த நெஞ்சுடை வலைக்குலக் கன்னியை வேட்பான்
வியந்து கேட்பதெவ் வாறவர் வெறுக்குமுன் னவருக்
கியைந்த மீன்வலை யுருவெடுத் தேகுது மென்னா.

வேறு

2693 கருகிருண் முகந்தால் அன்ன கச்சினன் கச்சோ டார்த்த
சுரிகையன் றோண்மே லிட்ட துகிலினன் குஞ்சி சூட்டும்
முருகுகொப் பளிக்கு நெய்தற் கண்ணியன் மூத்த வானோர்
இருவரு மறையுந் தேடி யிளைப்பவோர் வலைஞ னானான்.

2694 முழுதுல கீன்ற சேற்கண் முதல்வியை யருளி லார்போல்
இழிதொழில் வலைமா தாகச் சபித்தவா றென்னே யென்றும்
பழிபடு சாப மேறார் பரதராய் வரவும் வேண்டிற்
றழகிது நன்று நன்றெம் மாலவாய் அடிகள் செய்கை.

2691. திருநந்திதேவரும் இத் தன்மையாய் - அழகிய கயல் போலும் கண்களையும், பிறை போன்ற நெற்றியையும் உடைய தேவியும் அத்தன்மையளாய் இருந்தனர். எட்டு யானைகள் தாங்கிய பொன் விமானத்தில் தங்கிய, கங்கையை உடைய சடையை அணிந்த சோமசுந்தரக் கடவுள் திருமணத்தைத் தன் மனத்தில் எண்ணினார்.

இறைவர் வலைஞராய் வருதல்

2692. ''உயர்ந்த மரபுகளும் தங்கள் மரபைவிடத் தாழ்ந்ததே என்று கருதிப் பெருமையமைந்த உள்ளத்தையுடைய வலைஞர் குலத்தில் தோன்றிய அம்மையை, மணக்கும் பொருட்டுத் தம் மரபின் மேன்மை கூறிக் கேட்பது எங்ஙனம்? அங்ஙனம் கேட்டு அவர் வெறுத்து இல்லை என்பதற்கு முன்னரே, அவருக்குப் பிடித்த மீன்பிடிக்கும் வலைஞன் உருவினை எடுத்துப் போவோம்'', என்று கருதினார்.

2693. ''மிகக் கரிய இருளைப் போன்ற கச்சினையுடையவராய், அக்கச்சுடன் கட்டிய உடையவாளை உடையவராய், தோளில் மேலாடை உடையவராய் மயிரின்கண் தேன் துளிக்கும் நெய்தல் மாலையை உடையவராய், தேவர்களில் மூத்தவர்களான திருமாலும், பிரமனும், மறைகளும் தேடிக் காணாது இளைக்க, ஒரு வலைஞன் வடிவம் கொண்டருளினார்.

2694. ''உலகம் முழுவதும் பெற்றருளிய அங்கயற் கண்ணம்மையை அருளில்லாதவர் போல, இழிந்த குலத்தை யுடைய வலைக்குலக் கன்னி ஆகுமாறு சபித்த காரணம்யாதோ? என்னும் பழிபொருந்திய சாபத்தால் பற்றப்படாதவராகிய இறைவர் ஒரு வலைஞராய் வர வேண்டியதாயிற்று. எமது ஆலவாய் அழகரின் செய்கை நன்று! நன்று! இஃது அழகாய் இருந்தது.''

2695 தன்பெருங் கணத்து ளானோர் தலைவனுஞ் சலதி வாணன்
என்பது தோன்ற வேடம் எடுத்தெறி வலைதோ ளிட்டு
வென்புற மலைப்பக் காவி மீனிடு குடம்பை தாங்கிப்
பின்புற நடந்து செல்லப் பெருந்துறைப் பாக்கம் புக்கான்.

2696 கழித்தலைக் கண்டற் காடுங் கைதையங் கானு நெய்தற்
சுழித்தலைக் கிடங்கு நீத்துச் சுஃறெனுந் தோட்டுப் பெண்ணை
வழித்தலை சுமந்து வார்கள் வார்ப்பவாய் அங்காந் தாம்பல்
குழித்தலை மலர்பூங் கானற் கொடுவலைச் சேரி சேர்ந்தான்.

2697 பெருந்தகை யமுதன் னாளைப் பெறாதுபெற் றெடுப்பா னோற்ற
அருந்தவ வலைஞர் வேந்தன் அதிசய மகத்துட் டோன்ற
வருந்தகை யுடைய காளை வலைமகன் வரவு நோக்கித்
திருந்தழ குடைய நம்பி யாரைநீ செப்பு கென்றான்.

2698 சந்தநான் மறைக டேறாத் தனியொரு வடிவாய்த் தோன்றி
வந்தமீன் கொலைஞன் கூறு மதுரையில் வலைஞர்க் கெல்லாந்
தந்தைபோற் சிறந்து ளானோர் தனிவலை யுழவனல்ல
மைந்தன்யாண் படைத்துக் காத்துத் துடைக்கவும் வல்லன் ஆவேன்.

2695. தனது சிவகணத்துள் உள்ள ஒருவனும் நெய்தல் நில வாழ்க்கையுடைய வலைஞன் என்று தோன்ற அவ்வுருவம் எடுத்துக் கொண்டு, வீசும் வலையைத் தோளில் போட்டுக் கொண்டு, அது முதுகில் புரள, மீன் இடும் கூட்டினைத் தொடுத்துத் தாங்கிப்பின்புறம் நடந்துவர, இறைவன் பெரிய கடல் துறையுள்ள பாக்கத்தை அடைந்தார்.

2696. உப்பங்கழியில் உள்ள முள் காட்டினையும், தாழைக் காட்டினையும், நெய்தல் மலரைச் சுழித்து அலைக்கும் கிடங்கு களையும் கடந்து, சுஃறென்று ஒலிக்கும் மடல் பனையானது வழி ஒழுகும் கள்ளினைத் தலையில் சுமந்து வார்க்க, குழியில் ஆம்பல் வாய் திறந்து மலரும் அழகிய சோலைகளை யுடைய நுளைச் சேரியை அடைந்தார்.

இறைவரும் பரதவர் தலைவரும்

2697. பெருமை மிக்க அமுதம் போன்ற உமையம்மையைப் பெறாமல் பெற்ற சிறந்த தவமுடைய வலைஞர் மன்னன், மனத்திலே ஒரு வியப்புத் தோன்ற, வருகின்ற காளைப் பருவமுடைய வலைஞனது வருகையைப் பார்த்து ''மிகுந்த அழகுடைய நம்பி! நீ யார்? சொல்லுக,'' என்று கேட்டான்.

2698. நான்கு மறைகளும் அறியாத ஒப்பற்ற ஒரு வடிவமாகத் தோன்றி வந்துள்ள இறைவன் மீன் கொலை புரியும் வலைஞன் வடிவத்தோடு கூறுவார், ''மதுரையில் உள்ள வலைஞர் அனைவருக்கும் தந்தை போன்ற மேம்பாடுடைய ஒரு ஒப்பற்ற வலைஞனுடைய நல்ல மைந்தன் நான். படைத்துக் காத்து அழிக்கவும் வல்லவனாவேன்.''

2699 அல்லது வான்மீ னெல்லாம் வலைகொண் டோச்ச
வல்லவ னாவே னென்ன மற்றிவன் வலைஞன் கோலம்
புல்லிய மகன்கொன் முன்னம் புகன்றசொல்
லொன்றிப் போது
சொல்லிய தொன்றி ரண்டுஞ் சோதனை காண்டு மென்னா.

2700 தொண்டுறை மனத்துக் கானற் றுறைமக னஃதே லிந்தத்
தண்டுறை யிடத்தோர் வன்மீன் றழலெனக் கரந்து சீற்றங்
கொண்டுறை கின்ற தைய குறித்தது பிடித்தி யேலென்
வண்டுறை கோதை மாதை மணஞ்செய்து
தருவேன் என்றான்.

2701 சிங்கவே றனையான் காலிற் சென்னடைப் படகிற் பாய்ந்து
சங்கெறி தரங்கந் தட்பத் தடங்கடல் கிழித்துப் போகிக்
கிங்கரன் ஆன காளை வரையெனக் கிளைத்த தோண்மேற்
றொங்கலிற் கிடந்து ஞான்ற தொகுமணி வலையை வாங்கி.

2702 செவ்விதி னோக்கி யாகந் திருகநின் றெறிந்தான் பக்கங்
கௌவிய மணிவில் வீச விசையொலி கறங்கிப் பாயப்
பைவிரித் துயிர்த்து நாகம் விழுங்கவாய்ப் பட்ட மீன்போல்
வெவ்வினைச் சுறவே றையன் விடுவலைப் பட்ட தன்றே.

2699. 'அத்துடன் பெரிய மீன்கள் எல்லாம் பிடிபடும் வண்ணம் வலை கொண்டு வீசவும் வல்லவன்'' என்று கூறினார். அதைக் கேட்ட வலைஞர் மன்னன், ''இவன் உண்மை வலைஞனன்றி வலைஞர் வடிவெடுத்து வந்த மகனோ? முன்னம் சொன்ன சொல் ஒன்று. இப்போது சொன்ன சொல் ஒன்று. இரண்டையும் சோதித்துக் காண்போம்'' என்று கருதினான்.

2700. திருத்தொண்டையுடைய அந்நெய்தல் நிலத் தலைவன், ''அங்ஙனமாயின் இக்குளிர்ந்த துறையில் ஒரு வலிய மீன் வடவைக்கனல் மறைந்ததுபோல் மறைந்து சீற்றத்துடன் உறைகின்றது. ஐயனே! அதனைக் குறி வைத்துப் பிடிப்பாயேல், வண்டுறையும் கூந்தலையுடைய என் புதல்வியை உனக்குத் திருமணம் செய்து கொடுப்பேன் என்று கூறினான்.

இறைவர் சுறா மீனைப் பிடித்தல்

2701. ஆண் சிங்கம் போன்ற வலைஞனாய் வந்த இறைவன், காற்றைப் போல் விரைந்து செல்லும் படகில் சென்று, அலைகள் ஆரவாரத்துடன் தடுக்கவும், பெரிய கடலைக் கிழித்துக் கொண்டு சென்று, தம்மோடு வலைஞன் உருவில் வந்த காளை போன்ற சிவகணத் தலைவனது மலை போன்ற தோள் மீது மாலை போல் அசைவும் விளிம்புகளில் கோத்த ஈயமணிகளையுடைய வலையை வாங்கினார்.

2702. மீன் இருக்கும் இடத்தில் தப்பாமல் பார்த்து, உடல் வளைந்து நின்று விளிம்பில் உள்ள மணிகள் ஒளிவீச வீசும் வேகத்தில் எங்கும் ஒலி பரவ வலையை வீசினார். படத்தினை விரித்துச் சீறிப் பாம்பானது விழுங்க அதன் வாயில் அகப்பட்ட மீன் போலக் கொடுமையான தொழிலையுடைய அச்சுறாமீன் இறைவன் வீசிய வலையில் அகப் பட்டது.

2703 மாசறு கேளிர் அன்பின் வலைப்படும் வலைஞர் கோன்றாய்
வீசிய வலையிற் பட்ட மீனினைச் சுருக்கி வாங்கிக்
காசெறி தரங்க முந்நீர்க் கரையிடை யிட்டான் கள்வாய்
மூசுதே னென்ன வார்த்து மொய்த்தன பரதச் சாதி.

2704 கிளையுநங் கோனும் வீசு வலைஞராய்க்
கிளர்தோள் ஆற்றல்
விளைவொடு முயன்று பன்னாள் வினைசெயப்
படாத மீனிவ்
விளையவ னொருவன் றானே யொருவிசை
யெறிந்தா னீர்த்தான்
அளியநங் குலத்தோர் தெய்வ மகனிவ னாகு மென்றார்.

2705 கைதைசூழ் துறைவன் ஒகை கைமிகப் பம்மை யேங்க
நொய்தெனு நுசுப்பிற் கள்வாய் நுளைச்சியர்
குரவை தூங்கப்
பைதழை பகுவாய்க் கச்சைப் பரதவற் கலங்கன் ஞாழல்
செய்தபூங் கோதை மாதைத் திருமணம் புணர்த்தி னானே.

2706 அந்நிலை வதுவைக் கோலம் ஆயின மருக னாரும்
மின்னிலை வேற்க ணாளும் விண்ணிடை
விடைமேற் கொண்டு
தந்நிலை வடிவாய்த் தோன்றத் தடங்கரை மீனந் தானும்
நன்னிலை வடிவே போன்று நந்தியாய் முந்தித் தோன்ற.

2703. குற்றமற்ற அடியார்களின் அன்பெனும் வலையில் அகப்படும் பெருமான் தாவி வீசிய வலையில் அகப்பட்ட மீனை, சுருக்கி இழுத்து அலைகளையுடைய கடலின் கரையில் போட்டார். அப்போது வலைஞர் நெருங்கி வந்து கூடி மதுவினில் மொய்க்கும் வண்டுகள் போல ஆரவாரம் செய்தனர்.

2704. ''நம் மன்னனும் சுற்றத்தாரும், பல நாள் முயன்று வலை வீசியும் அகப்படாத மீனினை இவ்விளைஞன் ஒருவனே ஒரு முறை வலையினை வீசிச் சுருக்கி இழுத்துக் கரையில் விட்டான். இவன் அருளையுடைய நம் குலத்திற்குரிய தெய்வ மகன் ஆவன்'' என்று அவர்கள் ஆரவாரத்துடன் கூறினர்.

திருமணம்

2705. தாழைகளையுடைய நெய்தல் நிலத்தலைவன் பெருமகிழ்வுடன் நெய்தல் நிலப்பறை ஒலிக்கவும், நுண்மையான இடையை யுடைய நுளச்சியர் குரவைக் கூத்தாடவும், படம் விரித்த பிளந்த வாயினையுடைய பாம்பாகிய கச்சினையுடைய வலைஞர் பெருமானுக்கு, புலிநகக் கொன்றை மலராற்றொடுத்த மாலை யணிந்த கூந்தலையுடைய தன் புதல்வியைத் திருமணம் செய்து கொடுத்தான்.

இறைவர் உமாதேவியோடு காட்சியளித்தல்

2706. அப்போது திருமணக் கோலம் பூண்ட வலைஞராகிய சிவபெருமானும், ஒளியினையுடைய வேல் போன்ற கண்ணை யுடைய புதல்வியாரும் விண்ணில் இடபவூர்தியில் எழுந்தருளித் தமக்குரியசகலத் திருமேனியுடன் தோன்றினர். பெரிய கடற் கரையில் கிடந்த மீனும் முன்னுள்ள நல்ல வடிவமான திருநந்தி தேவராகித் திருமுன் வந்து தோன்றினார்.

2707 கொற்றவெள் விடைமேற் காட்சி கொடுத்தவர்
கருணை நாட்டம்
பெற்றின் மேலைச் சார்பாற் பிணித்தவிப் பிறவி யாக்கைச்
சிற்றறி வொழிந்த முந்நீர்ச் சேர்ப்பனல் லறிவு தோன்றப்
பொற்றனு மேரு வீரன் பூங்கழல் அடிக்கீழ்த் தாழ்ந்தான்.

2708 இரக்கமில் இழிந்த யாக்கை யெடுத்துழ லேழை யேனைப்
புரக்கவின் றென்போல் வந்த புண்ணிய வடிவம் போற்றி
அறக்கெறி பவளச் செவ்வா யணங்கினை
மணந்தென் பாசங்
கரக்கவெள் விடைமே னின்ற கருணையே
போற்றி யென்றான்.

2709 அகவிலான் பரவி நின்ற வன்பனை நோக்கிப் பன்னாள்
மகவிலா வருந்த நோக்கி யுமையைநா மகளாத் தந்து
தகவினான் மணந்தே நீயித் தரணியிற் றனத னென்ன
நகவிலாப் போக மூழ்கி நம்முல கடைவாய் என்ன.

2707. வெற்றி பொருந்திய வெள்ளிய இடபவூர்தியில் காட்சி கொடுத்த அவ்விறைவரது அருட்பார்வை பெற்றதனால், கடற்கரைக்குத் தலைவனான மன்னனுக்கு முன்வினைச் சார்பினால் பதிந்திருந்த இப்பிறவியின் சிற்றறிவு நீங்கி நல்லறிவு தோன்றியது. உடனே மேருமலையை வில்லாக வளைத்த வீரனாகிய அவ்விறைவனது கழல் அணிந்த திருவடியின் கீழ்விழுந்து வணங்கினான்.

2708. ''உயிர்களிடத்தில் அருள் இல்லாத இழிந்த உடலை எடுத்து வருந்தும் அறிவிலியாகிய என்னை, இன்று காப்பதற்காக என்னைப் போலவே வடிவம் தாங்கி வந்த அருளாளனே! வணங்குகின்றேன். செவ்வொளி வீசும்பவளம் போன்ற சிவந்த வாயினையுடைய அம்மையைத் திருமணம் புரிந்து என் பாசம் ஒழியுமாறு வெள்ளிய இடபவூர்தியில் நின்று காட்சி தந்தருளிய கருணையே, வணக்கம்!'' என்று கூறி வணங்கினான்.

பரதவராசனுக்கு அருளி உத்தரகோச மங்கையை அடைதல்

2709. அடியார்களின் மனமாகிய கோயிலையுடைய இறைவன், இவ்வாறு துதித்து வணங்கி நின்ற அன்பனைப் பார்த்து ''பல நாட்கள் வரை மகட்பேறு இல்லாமல் வருந்தும் உன் துன்பத்தைக் கண்டு நாம் உமாதேவியை உமக்கு மகளாகத் தந்தோம். தற்போது முறைப்படி வந்து மணந்து கொண்டோம். நீ இவ்வுலகில் இருந்துகுபேரனைப் போன்று பல இன்பங்களை அனுபவித்து நமது சிவலோகத்தை அடைவாயாக!'' என்று அருளினார்.

2710 பெண்ணினை வதுவைக் கீந்த பெருந்துறைச்
சேர்ப்பற் கன்று
தண்ணளி சுரந்து நல்கித் தருமமால் விடைமேற் றோன்றி
விண்ணிடை நின்றாள் சென்றான் வேத்திரப்
படையா னோடும்
உண்ணிறை யன்ப ரோடு முத்தர கோச மங்கை.

2711 அங்கிருந் தநாதி மூர்த்தி யாதிநான் மறைகள் ஏத்துங்
கொங்கிருங் கமலச் செவ்விக் குரைகழல்
வணங்கிக் கேட்பப்
பங்கிருந் தவட்கு வேதப் பயனெலாந் திரட்டி முந்நீர்ப்
பொங்கிருஞ் சுதைபோ லட்டிப் புகட்டினான் செவிக ளார.

வேறு

2712 அவ்வேலை யன்புடையா ரறுபதினா யிரவர்க்கும்
அளித்தப் பாச
வெவ்வேலை கடப்பித்து வீடாத பேரானந்த வீடு நல்கி
மைவேலை யனையவிழி யங்கயற்க ணங்கையொடு
மதுரை சார்ந்தான்
இவ்வேலை நிலம்புரக்க முடிகவித்துப் பாண்டியனென்
றிருந்த மூர்த்தி.

வலை வீசின படலம் முற்றிற்று.

2710. தன் புதல்வியைத் திருமணம் புரிவதற்குக் கொடுத்த பெரியநெய்தல் துறையையுடைய தலைவனுக்கு அன்று பேரருள் சுரந்து அளித்தருளித் தருமமாகிய பெரிய விடையின் மேல் விண்ணிடைத் தோன்றி நின்றான். மன்னர் பிரப்பம் படையினை உடைய திருநந்தி தேவரோடும், உள்ளத்தில் நிறைந்த அன்பினை உடைய அடியாரோடும், உத்தரகோச மங்கை என்னும் தலத்தை அடைந்தார்.

2711. அநாதி மூர்த்தியாகிய இறைவன் அத்தலத்தில் இருந்து பழைய மறைகள் துதிக்கும், தாமரை மலர் போலும் சிறப்பு வாய்ந்த வீரக் கழலணிந்த தன் திருவடிகளை வணங்கி உமாதேவியார் கேட்க, தன் ஒரு பாகத்தில் வீற்றிருந்த அவ்வம்மைக்கு வேதப் பயன் முழுவதும் ஒரு சேரத் திரட்டி கடலில் தோன்றிய அமுதம் போல் சொரிந்து செவிகள் நிறையுமாறு புகட்டி யருளினான்.

2712. இந்நிலவுலகைக் காக்க முடிசூடிச் சுந்தர பாண்டியனாக இருந்தருளிய இறைவன், அப்பொழுது மெய்யன்புடைய அறுபதினாயிரம் அடியார்களுக்கும், அப்பொருளை உபதேசித்து, ஆணவமாகிய கொடிய கடலைக் கடக்கச் செய்து அழியாத பேரின்ப வீட்டினை அருளினார். மைதீட்டிய வேல் போன்ற கண்களையுடைய அங்கயற்கண் ணம்மையாரோடும் மதுரையை அடைந்து அருளினார்.

வலை வீசின படலம் முற்றிற்று.

58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்

2713 கலைவீசு மதிச்சடையோன் கடற்றுறைவன் றலைச்சென்று
வலைவீசி யவன்பாச வலைவீசும் பரிசிதுமேல்
அலைவீசும் புனல்வாத வூரரைவந் தவிச்சைவலி
நிலைவீசிப் பணிகொண்ட நெறியறிந்த படிமொழிவாம்.

2714 தொடுத்தவறு மையு ம்பயனுந் தூக்கிவழங் குநர்போல
அறுத்தவயல் குளநி ரப்பி யறம்பெருக்கி யவனியெலாம்
உடுத்தகடல் ஒருவர்க்கு முதவாத வுவரியென
மடுத்தறியாப் புனல்வைகைக் கரையுளது வாதவூர்.

2715 விழவறா நகரெங்கும் விருந்தறா மனையெங்கும்
மழவறா மகிழ்வெங்கு மறையறா கிடையெங்கும்
முழவறா வரங்கெங்கு முகிலறா பொழிலெங்கும்
உழவறா வயலெங்கும் உடம்பறா வுயிரென்ன.

58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்

2713. ஒளிவீசும் சந்திரனை அணிந்த சோமசுந்தரக் கடவுள் நெய்தல் தலைவனிடத்துச் சென்று வலையினை வீசி அவனுடைய பாசமாகிய வலையினை அறுத்தருளிய திருவிளையாடல் இது. இனி அவ்விறைவன் குருவாக எழுந்தருளி வந்து, அலை வீசும் கடலை உடைய திருவாதவூர் அடிகளை அவரது ஆணவமலத்தினைக் கெடுத்து ஆட்கொண்டருளிய திருவிளையாடலைக் கூறுவோம்.

திருவாதவூரின் சிறப்பு

2714. ஒருவனைப் பற்றிய வறுமையினையும், அவனால் பிறர்க்கு உண்டாகும் பயனையும் ஆராய்ந்து வழங்குபவர் போல, வயல், குளம், ஏரி போன்ற நீர்நிலைகளை நிரம்பச் செய்து, அதனால் அறத்தினைப் பெருக்கி ''நிலவுலகைச் சூழ்ந்துள்ள கடலானது ஒருவருக்கும் பயன் படாத உப்பு நீரை உடையது'' எனக் கருதி அதில் பாய்ந்தறியாத வையை ஆற்றின் கரையின் மேல் 'திருவாதவூர்' என்னும் ஒரு திருப்பதி உள்ளது.

2715. உடலினின்றும் நீங்காத உயிர்போல [illegible]கரில் எப்போதும் திருவிழாக்கள் நீங்குவதில்லை. வீடுகளில் விருந்துகள் நீங்குவதில்லை. அங்கு மகிழ்வை உண்டாக்கும் பிள்ளைகள் நீங்குவதில்லை. பாடசாலைகள் எங்கும் வேதங்களின் ஒலி நீங்குவதில்லை. நாடகசாலைகள் எங்கும் மத்தள ஒலிகள் நீங்குவதில்லை. சோலைகளை விட்டு மேகங்கள் வேறெங்கும் தங்குவதில்லை. வயல்களில் உழவுத் தொழிலும் நீங்குவதில்லை.

2716 ஆயவளம் பதியதனி னமாத்தியரில் அருமறையின்
றூயசிவா கமநெறியின் றுறைவிளங்க வஞ்சனையான்
மாயனிடும் புத்தவிரு ளுடைந்தோட வந்தொருவர்
சேயவிளம் பரிதியெனச் சிவனருளா லவதரித்தார்.

2717 பேர்வாத வூரரெனப் பெற்றுத்தம் பிறங்குமறைச்
சார்வாய நூல்வழியாற் சடங்கெல்லா நிலைவெய்தி
நீர்வாய விளமதிபோ னிரம்புவார் வேதமுதற்
பார்வாயெண் ணெண்கலையும் பதினாறாண்
டினிற்பயின்றார்.

2718 இத்தகையோர் நிகழ்செய்தி யறிந்தவர்சென் றியம்பவரி
மர்த்தனபாண் டியன்கேட்டு வரவழைத்து மற்றவரைச்
சித்தமகிழ் வரிசையினாற் சிறப்பளித்துத் தன்கோயில்
வித்தகநன் மதியமைச்சின் றொழில்பூட்டி மேம்படுத்தான்.

2719 செற்றமிகுங் கருவிகளின் றிறநூலு மனுவேந்தன்
சொற்ற பெருந் தொன்னூலுந் துளக்கமற விளக்கமுறக்
கற்றறிந்தோர் ஆதலினாற் காவலற்குக் கண்போன்ற
முற்றுணர்ந்த வமைச்சரினு முதலமைச்ச ராய்நிகழ்வார்.

திருவாதவூரர் தன்மை

2716. அவ்வாறு வளம் நிறைந்த திருவாதவூரிலே, அமாத்தியர் மரபினில் அரிய வேத நெறியும் சிவாகமத் துறையும் விளங்கவும், திருமால் தன் வஞ்சனையால் இட்ட புத்தமத இருள் சிதறி ஓடவும், செந்நிறமுள்ள இளஞாயிற்றினைப்போல ஒருவர் சிவபெருமானின் திருவருளால் அவதரித்தார்.

2717. 'திருவாதவூரர்' என்று அவருக்குப் பெயரிட்டனர். வேதநூல்களில் கூறிய முறைப்படி சடங்குகள் அனைத்தும் நிறையப் பெற்று இளம்பிறை வளர்ச்சியடைவது போல் வளர்ந்தார். வேதம் முதலிய அறுபத்து நான்கு கலைகளையும் பதினாறு ஆண்டில் கற்றுணர்ந்தார்.

2718. இத்திருவாதவூரருடைய கல்வித் திறமை முதலியவற்றை அறிந்தவர் அரிமர்த்தமன பாண்டியனிடம் போய்ச் சொல்லவும், அவன் அதனைக்கேட்டு அவரைத் தன் பால் வரவழைத்து, அவர் உள்ளம் மகிழ்வடையும்படி பலவரிசைகள் அளித்து சிறப்புச் செய்து தன் அரண்மனையில் நல்ல மதிமிக்க அமைச்சர் பதவியைத் தந்தான்.

2719. சினம் மிக்க கருவி வகைக்குரிய நூல்களையும், மனு சாஸ்திரம் முதலிய நீதி நூல்களையும் ஐயம் திரிபு இல்லாமல் முழுவதும் கற்றறிந்தார். அதனால் மற்றைய மந்திரிகள் யாவருக்கும் மேலாகிச் சிறந்து முதன் மந்திரியானார்.

2720 புல்லாதார் முரணடக்கிப் பொருள்கவர்வார் என்பதெவன்
செல்லாத பல்வேறு தீபத்துச் செங்கோன்மை
வல்லாருந் தத்தமதேயத் தரியபொருள் வரவிடுத்து
நல்லாரா யொப்புரவு நட்படைய நடக்கின்றார்.

2721 அண்ணலரி மருத்தனனுக் கடல்வாத வூரமைச்சர்
கண்ணுமிடு கவசமும்போற் காரியஞ்செய் தொழுகுவார்
தண்ணளிசெய் தவனியெலாந் தங்கிளைபோற் குளிர்தூங்க
வண்ணமதிக் குடைநிழற்றி முறைசெய்து வாழுநாள்.

வேறு

2722 மெய்ம்மை யாம்பொருள் விவேகமும் வேறுபாடாய
பொய்ம்மை யாம்பொருள் விவேகமும் புந்தியுட் டோன்ற
இம்மை யாசையு மறுமையில் ஆசையு மிகந்து
செம்மையாகிய கருத்தராய்ப் பரகதி தேர்வார்.

2723 புத்த ராதியோர் புறவுரை நெறிகளும் பொய்யா
நித்த வேதநூ றமுவிய வகவுரை நெறியுஞ்
சித்த மாசறுத் தரனரு டௌிவியா வதனான்
மித்தை யாணவத் தொடக்கறா தில்லையாம் வீடும்.

2720. ஒருவரும் செல்லுதற்குரிய பல்வேறு தீவுகளில் செங்கோல் செலுத்தும் மன்னரும் தங்கள் தங்கள் நாட்டில் உள்ள அரிய பொருள்களை அனுப்பிப் பாண்டியனுடன் நட்புக் பூண்டு வாழுமாறு வாதவூரர் தம் அமைச்சுப் பணியைச் சிறப்புடன் செய்தார். எனவே பகைவரின் வலியினை அடக்கிப் பொருள் கவர்வது எவ்வாறு?

2721. வெற்றி மிக்க வாதவூரராகிய அமைச்சர் பெருமை மிக்க அரிமர்த்தன பாண்டியனுக்குக் கண்ணையும், கவசத்தையும் போல விளங்கி வினை செய்து ஒழுகினார். நிலவுலகில் உள்ள மக்கள் அனைவரும் தம் உறவினர் மகிழ்வடைவது போலத் தன் வெண்கொற்றக் குடை நிழலில் உலகைக் காத்து முறை செய்து வந்தான்.

வாதவூரர் பரகதியினை விரும்புதல்

2722. இங்ஙனம் வாதவூரர் அமைச்சராய்ச் சிறப்புடன் அரசு நடத்தி வாழும் நாளிலே ''இஃது உண்மைப் பொருள். இது பொய்மைப் பொருள்,'' என்று உள்ளபடி பகுத்தறியும் உணர்ச்சி அவர் உள்ளத்தில் தோன்றியது. இம்மை மறுமை இன்பங்களில் வெறுப்புக் கொண்டு மனத்தூய்மை உடையவராய் வீட்டினை அடையும் நெறியினையே ஆராய்வராயினர்.

2723. புத்தர் முதலானவர்களின் வேதாகமங்களுக்குப் புறம்பான முறையில் கூறப்படும் நெறிகளும் உண்மையாகிய மறை நூலைத் தழுவிய அகமாகச் சொல்லப்படும் நெறிகளும் மனதிலுள்ள அழுக்கினைப் போக்கி இறைவன் திருவருளைத் தெளிவுறுத்த மாட்டார். அதனால் சடமாகிய ஆணவப் பிடிப்பு நீங்காது. வீடும் இல்லையாகும்.

2724 பத்தி செய்தரன் அருள்பெறும் பத்தருக் கன்றி
முத்தி யெய்தரி தென்மறை மொழிவதப் பொதுநூற்
சத்தி யப்பொருட் டெளிவெலாஞ் சத்திநி பாதர்க்
குய்த்து ணர்த்துவ தாகம மென்பர்மெய் யுணர்ந்தோர்.

2725 வேத வாகமச் சென்னியில் விளைபொரு ளபேதம்
பேதமாகிய பிணக்கறுத் திருட்பிணி யவிழ்ந்து
நாத னாகிய தன்னையும் என்னையு நல்கும்
போத னாகிய குருபரன் வருவதெப் பொழுதால்.

2726 கரவி லாதபே ரன்பினுக் கெளிவருங் கருணைக்
குரவ னாரருள் அன்றியிக் கொடியவெம் பாசம்
புரையில் கேள்வியாற் கடப்பது புணையினா லன்றி
உரவு நீர்க்கடல் கரங்கொடு நீந்துவ தொக்கும்.

2727 என்றவ் வாதவூர் மறையவ ரின்பவீ டெய்தத்
துன்று மாசையாற் றொடக்குண்டு சுருதியா கமநூல்
ஒன்று கேள்வியோர் வருந்தொறு முணர்ந்தவர் இடைத்தாஞ்
சென்று காண்டொறு மளவளாய்த் தேர்க்குவா ரானார்.

2724. அன்பு செய்து இறைவன் திருவருளைப் பெற்ற அடியார்களுக்கன்றி ஏனையோர்க்கு வீடு பேறு இல்லையென்று வேதம் கூறும். அப்பொது நூலின் உண்மைப் பொருள் தெளிவு அனைத்தையும் சித்திநிபாதர்க்கு விளக்கி அறிவிப்பது சிவாகமம் என்று மெய்ப் பொருள் உணர்ந்த பெரியோர் கூறுவர்.

2725. வேதங்களும் ஆகமங்களும் ஆகிய இவற்றின் முடிவில் விளையும் பொருளாகி, அபேதம், பேதம் என்று கருதுபவர் மாறுபாட்டினை நீக்கி, ஆணவமலக் கட்டினை அவிழ்ந்து இறைவனாகிய தன்னையும் என்னையும் உணர்த்தி யருளும் முடிவில்லாதவனாகிய குருநாதன் வருவது எப்பொழுது?

2726. குற்றமற்ற பேரன்பிறகு எளிதே வந்தருளும் கருணையுடைய ஞானாசிரியனின் அருளால் அன்றி இக்கொடுமையான பாசமாகிய கடலைக் குற்றமில்லாத நூற் கேள்வியால் கடக்கக் கருதுதல், வலிய நீரினையுடைய கடலைக் கையினல் நீந்திக் கடக்கக் கருதுதலை ஒப்பாகும்.

இறைவனிடம் பேரன்பு கொள்ளுதல்

2727. என்று கருதி அவ்வாதவூரராகிய அந்தணர் பேரின்ப வீட்டை அடையவேண்டும் என்ற மிகுந்த ஆசையால் பிணிக்கப்பட்டு, வேதமும் ஆகமும் பொருந்திய நூல் வல்லோர் தம்மிடம் வரும்போது தாம் அவற்றை உணர்ந்தாரிடம் சென்று அவர்களோடு கலந்து அளவளாவி மெய்ப் பொருளை ஆராய்ந்தார்.

2728 எண்ணி லாரிடத் தளந்தளந் தறிபொருள் எல்லாம்
உண்ணி நீர்விடாய்க் குவரிநீ ருண்டவ ரொப்ப
அண்ண லாரகத் தமைவுறா தரசனுக் குயிருங்
கண்ணு மாயமைச் சுரிமையுங் கைவிடா தியல்வார்.

2729 கள்ளக் காதலன் இடத்தன்பு கலந்துவைத் தொழுகும்
உள்ளக் காரிகை மடந்தைபோ லும்பரைக் காப்பான்
பள்ளக் காரியுண் டவனிடத் துள்ளன்பு பதிந்து
கொள்ளக் காவல னிடைப்புறத் தொழிலுமுட் கொண்டார்.

2730 இன்ன செய்கையி னொழுகுவார் ஒருபொழு தேகித்
தென்னர் தம்பிரா னவையிடைச் சென்றதிர் நின்றார்
அன்ன போதடு பரிநிரை காப்பவ ராசன்
முன்னர் வந்துதாழ்ந் தொருசிறை நின்றிது மொழிவார்.

2731 மறந்த வாதவேல் வல்வநம் வயப்பரி வெள்ளத்
திறந்த வாம்பரி போகநின் றெஞ்சிய வெல்லாம்
நிறைந்த நோயவு நெடிதுமூப் புடையவும் அன்றிச்
சிறந்த வாம்பரி யொன்றிலை தேர்ந்திடி னென்றார்.

2728. இவ்வாறு அளவற்ற அறிஞரிடம் ஆராய்ந்தறிந்த பொருள்களெல்லாம், நீர் வேட்கையை நீக்கித் கொள்ளக் கடல் நீரைப் பருகியவனின் வேட்கை தணியாதவாறு போல, பெருமை மிக்க வாதவூரரின் மனத்தில் அமைவுறாமல், அரசனுக்கு உயிராகவும், கண்களாகவும் இருந்து அமைச்சுரிமையைக் கைவிடாது நடப்பாராயினார்.

2729. கள்ளக் காதலனிடம் அன்பினை அகத்தின்கண் பொருந்த வைத்து ஒழுகும் அழகிய ஒரு பெண்ணைப் போல புறத்தின் கண் நாயகனுக்குச் செய்யும் புறத் தொழிலில் வழுவாது வாழ்வது போல, தேவர்களைப் பாதுகாக்க நஞ்சினை உண்ட இறைவனிடத்து வைத்த அன்பானது உள்ளத்தின் கண் அழுந்திட, மன்னனிடத்தில் புறத் தொழிலையும் உட் கொண்டு வழுவாது ஒழுகுவாராயினர்.

2730. இச்செய்கையுடன் ஒழுகும் திருவாதவூரார், ஒருநாள் பாண்டியன் சபையில் சென்று அவன் எதிர் நின்றார். அப்பொழுது பகையினைக் கொல்லும் குதிரைப் படையினைக் காப்பவர் அரசர் முன் வந்து பணிந்து வணங்கி ஒருபுறம் ஒதுங்கி நின்று கூறத் தொடங்கினர்.

2731. ''வெற்றி மிக்க வேற்படையை உடைய அரசனே! நமது பெருமை பொருந்திய குதிரைகள் வெள்ளத்தில் இறந்துவிட்டன போக மீதியாக இருந்த குதிரைகள் அனைத்தும் நோயுடையனவாயும், வயது மிகுந்தனதாயும் உள்ளன. ஆராய்ந்து பார்க்குமிடத்துச் சிறந்த குதிரை ஒன்றேனும் இல்லை,'' என்றனர்.

2732 மன்றல் வேம்பனும் வாதவூர் வள்ளலை நோக்கி
இன்று நீர்நம தறைதிறந் திருநிதி யெடுத்துச்
சென்று வேலையந் துறையில்வந் திறங்குவ தெரிந்து
வென்றி வாம்பரி கொடுவரப் போம்என்று விடுத்தான்.

2733 உள்ளம் வேறுபட் டமைச்சிய னெறியினின் றொழுகும்
வள்ள லார்நிதி யறைதிறந் தரும்பெறல் வயமான்
கொள்ள வேண்டிய பொருளெலாங் கொண்டுதா ழிறுக்கி
வெள்ளை மாமதி வேந்தனை விடைகொடு போவார்.

2734 எடுத்த பொற்சுமை யொட்டகத் திட்டுமுன் னேக
விடுத்து விண்டொடு திண்டிமில் விடையவன் கோயில்
அடுத்த விழ்ந்தபொன் னம்புயத் தடம்படிந் தனைய
மடுத்த டங்கரைச் சித்தியைங் கரத்தனை வணங்கா.

2735 கருணை நாயகி யங்கயற் கண்ணியெம் பிராட்டி
அருண நாண்மலர்ச் செய்யசீ றடித்தலம் இறைஞ்சி
வருண னார்பெரு வயிற்றுநோய் வலிகெடுத் தாண்ட
தருண நாண்மதிச் சடையுடை யடிகண்முன் றாழா.

2732. 'அதனைக் கேட்ட மணம் மிக்க வேப்ப மாலையை அணிந்த பாண்டியனும், வாதவூரரைப் பார்த்து ''நீர் இன்று நமது கருவூலகத்தைத் திறந்து பெரும் பொருளை எடுத்துக் கொண்டு போய்க் கடல் துறையில் வந்திறங்கும் குதிரைகளில் சிறந்தனவற்றை ஆராய்ந்து வெற்றியைத் தரத் தக்கதாய் வாங்கிக் கொண்டு வருவதற்குப் போவீராக'' என்று கூறினான்.

2733. மன வேறுபாடுடன் அமைச்சர் தொழிலில் நின்று ஒழுகும் வாதவூரர், கருவூலத்தினைத் திறந்து பெறுவதற்கரிய வெற்றியினையுடைய குதிரைகளை வாங்கவேண்டிய பொருள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு தாழிட்டு, வெண்மையான சந்திரனது மரபில் தோன்றிய பாண்டிய மன்னனிடம் விடை பெற்றுச் சென்றார்.

2734. கருவூலத்தினின்றும் எடுத்த பொற்சுமைகளை ஒட்டகங்களின் மேல் ஏற்றுவித்து, அவை முன்னே செல்லுமாறு விடுத்துத் திண்ணிய திமிலையுடைய இடப ஊர்தியையுடைய வானளாவிய சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலினுள் சென்று, மலர்ந்த பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி அதன் கரையில் எழுந்தருளி இருக்கும் ஐந்து கரங்களையுடைய சித்தி விநாயகனையும் வணங்கினார்.

அம்மையப்பரை வணங்கல்

2735. அருள் சக்தியாகிய அங்கயற்கண்ணி என்னும் எம்பெருமாட்டியின் சிவந்த தாமரை மலர் போலும் சிறிய திருவடிகளை வணங்கினார். வருணனது பெரிய வயிற்றின் நோயைப் போக்கி ஆண்டருளிய இளமையாகிய பிறையினைத் தரித்த சடையினையுடைய இறைவன் திருமுன் வந்து வணங்கினார்.

2736 ஒன்று வேண்டுமிப் பொருளெலாம் உனக்குமைம் பொறியும்
வென்று வேண்டுநின் னன்பர்க்கு மாக்குக வெள்ளி
மன்று வேண்டிநின் றாடிய வள்ளலென் குறையீ
தென்று வேண்டிநின் றேத்துவார்க் கிறைவனின் னருள்போல்.

2737 ஆதி சைவனா மருச்சகன் ஒருவனே ரணைந்து
பூதி யீந்தன னமக்கிது போலிலை நிமித்தம்
ஈது நன்னெறிக் கேதுவென் றிருகையேற் றணிந்து
வேத நாதனை யிறைஞ்சினார் விடைகொடு மீண்டார்.

வேறு

2738 இன்னிய மதிர்ந்தன வெழுந்தன பதாதி
துன்னிய விணைக்கவரி துள்ளின துகிர்க்காற்
பொன்னியன் மதிக்குடை நிழன்றன பொலங்கொண்
மின்னிய மணிச்சிவிகை மேற்கொடு நடந்தார்.

2739 மற்றிவர் வழிப்படுமுன் மாறிநட மாடும்
வெற்றிவிடை யாரிவர் வினைத்தொகையின் ஒப்பும்
பற்றிய விருட்டுமல பக்குவமு நோக்கா
உற்றடிமை கொண்டுபணி கொண்டருள வுன்னா.

2736. ''வெள்ளியம்பலத்துள் ஆடி அருளிய வள்ளலே! எனக்கு ஒரு வரம் அருள வேண்டும். அதாவது செல்லும் இப்பொருள் அனைத்தும் தேவரீருக்கும். ஐம் பொறிகளையும் அடக்கித் தேவரீரையே விரும்பும் அடியார்களுக்கும் பயன்பட வேண்டும்,'' என்று வேண்டி நின்று துதித்தார். அவ்விறைவன் தம் திருவருளை ஈந்தளித்தார்.

2737. அப்போது ஆதி சைவனாகிய அருச்சுகன் ஒருவன் நேரில் வந்து திருநீறு அளித்தனன். நமக்கு இது போன்ற நன்நிமித்தம் வேறில்லை. இது நாம் அடையக் கருதும் நல்வழிக்கு ஏதுவாகும் என்று கருதி இரண்டு கைகளாலும் அத்திருநீற்றை வணங்கி நெற்றியில் தரித்து வேதநாயகனான சோமசுந்தரக் கடவுளை வணங்கி விடை பெற்று மீண்டார்.

குதிரை வாங்கப் புறப்படல்

2738. இனிய வாத்தியங்கள் ஒலித்தன. கொடிகள் மேலே எழுந்தன. இரட்டைச் சாமரங்கள் இரண்டு புறங்களிலும் துள்ளின. பவளக் காலையுடைய சந்திரவட்டக் குடைகள் நிழல் செய்தன. வாதவூரார் பொன்னால் செய்யப்பட்ட மணிகள் அழுந்திய சிவிகையின் மேல் ஏறிக் கொண்டு சென்றார்.

2739. இவ்வாறு இவர் வழி கொண்டு செல்வதற்கு முன்னரே, கால் மாறி நடித்தருளும், வெற்றியையுடைய இடபவூர்தியை உடைய சோமசுந்தரக் கடவுள் இவருடைய இருவினை ஒப்பையும், மலபரிபாகத்தையும் நோக்கி குரவனாகச் சென்று வலிய ஆட் கொண்டு தமது திருப்பணியின் கண் நிறுத்தியருளத் திருவுளம் கொண்டார்.

2740 சந்தமறை தீண்டரிய தங்கருணை யாலோர்
அந்தணர் குலக்குரவன் ஆகியடி நீங்கா
மைந்தர்பலர் தம்மொடு பெருந்துறையில் வந்தோர்
கொந்தலர் நெருங்கிய குருந்தடி யிருந்தார்.

2741 பொருங்கட லனீகமொடு போய்ப்புற வடுத்த
இருங்கட மளப்பில கடந்தெழு பிறப்பாங்
கருங்கடல் கடக்கவரு வார்கருணை வெள்ளப்
பெருங்கடல் நிறைந்துறை பெருந்துறை யடைந்தார்.

2742 அடுத்திட வடுத்திட வகத்துவகை வெள்ளம்
மடுத்திட முகிழ்த்தகைம் மலர்க்கமல முச்சி
தொடுத்திட விழிப்புன றுளித்திட வினைக்கே
விடுத்திடு மனத்தருள் விளைந்திட நடந்தார்.

2743 பித்திது வெனப்பிறர் நகைக்கவரு நாலாஞ்
சத்திபதி யத்தமது சத்தறிவு தன்னைப்
பொத்திய மலத்தினும் வெரீஇச்சுமை பொறுத்தோன்
ஒத்திழி பிணிப்புறு மொருத்தனையும் ஒத்தார்.

2744 நெருப்பிலிடு வெண்ணெயென நெஞ்சுருக வென்னை
உருக்குமித னாலெனை யொளித்தமல வாற்றல்
கருக்குமவன் ஆகியெனை யாள்கருணை வெள்ளம்
இருக்குமிட னேயிதென வெண்ணிநகர் புக்கார்.

2740. சந்தம் அமைந்த வேதம் தீண்டுவதற்கும் அரிய தமது திருக் கருணையினால் ஓர் அந்தணர் குல ஆசிரியர் வடிவம் கொண்டு தம் திருவடிகளைப் பிரியாத பல மாணவர்களோடும் திருப்பெருந்துறையின் கண் வந்து சேரும் பூங்கொத்துகள் அடர்ந்த ஒரு குருந்த மரத்தின் அடியில் இருந்தார்.

2741. கரையோடு மோதும் கடல் போன்ற சேனையோடு சென்று பிறவிக் கடலைக் கடந்தவராகிய திருவாத வூரடிகள் முல்லை நிலத்தினை அடுத்த பெரிய காடுகள் பலவற்றினைக் கடந்து சென்று பெரிய கடல் போன்ற அருள் வெள்ளம் நிறைந்த திருப்பெருந்துறையினை அடைந்தார்.

2742. அத்திருப் பெருந்துறையினை நெருங்க, நெருங்க மனதிலே மகிழ்வானது பெருகவும், தாமரை மலர் போன்ற கூப்பிய கைகளைத் தலைமேல் குவித்தும், ஆனந்தக் கண்ணீர் துளிக்கவும் இறைவன் திருத் தொண்டிற்கே தம்மைச் செலுத்தும் மனத்தின் கண் திருவருள் விளையவும் நடந்தார்.

2743. 'இவர் பித்தர்' என்று நகைக்கும்படி அதிதீவிரப் பக்குவம் எனப்படும் நாலாம் சத்தினிபாதம் (தீவிரதரம்) உண்டாகத் தமது உண்மை அறிவை மறைத்த மலத்தினுக்கு மிகவும் அஞ்சி, முன் பெரும் பாரம் தாங்கினோனையும் பின்கட்டு நீங்கியவனையும் போல ஒத்திருந்தார்.

2744. நெருப்பிலிட்ட வெண்ணெய் உருகுவது போல, நெஞ்சு உருகுமாறு அடியேனை உருக்குகின்ற இவ்வேதுவினால் என் அறிவினை மறைத்த ஆணவ மலத்தினைக் கெடுத்து, அடியேனை ஆட்கொள்ளும் கருணையங்கடல் இருக்கும் இடம் இதுவே என்று எண்ணி அந்நகரினுள் புகுந்தார்.

2745 காயிலை யடைந்தகழு முட்படை வலத்தார்
கோயிலை யடைந்துகுளிர் வான்புனல் குடைந்து
வாயிலை யடைந்துடல மண்ணுற விழுந்து
வேயிலை யடைந்தவரை மெய்ப்புகழ் வழுத்தா.

2746 ஆலய மருங்குவல மாகவரு வார்முன்
மூலமுறை யோதிமுடி யாதபொரு டன்னைச்
சீலமுனி வோர்தெளிய மோனவழி தேற்றுங்
கோலமுறை கின்றதொர் குருந்தையெதிர் கண்டார்.

வேறு

2747 வேத நூலொரு மருங்கினு மெய்வழிச் சைவப்
போத நூலொரு மருங்கினும் புராணத்துட் கிடந்த
கீத நூலொரு மருங்கினுங் கிளைகெழு சமய
பேத நூலொரு மருங்கினும் வாய்விட்டுப் பிறங்க.

2748 சுருதி கூறிய வறமுத னான்குமத் தொன்னூற்
கரிய தாங்கதிக் கேதுவென் றாகமங் காட்டுஞ்
சரியை யாதிநாற் பாதமுந் தலைதெரிந் துணர்ந்த
பெரிய மாணவர் கழகமும் வினாவிடை பேச.

2749 சரியை வல்லமெய்த் தொண்டருஞ் சம்புவுக் கினிய
கிரியை செய்யுநன் மைந்தருங் கிளர்சிவ யோகந்
தெரியுஞ் சாதகக் கேளிருந் தேசிகத் தன்மை
புரியும் போதகச் செல்வரும் அளவிலர் பொலிய.

2745. வருத்துகின்ற சூலப்படையினை வலக்கரத்தில் ஏந்திய இறைவரது திருக்கோயிலை அடைந்து அங்குள்ள சிவ தீர்த்தத்தில் நீராடித் திருவாயிலை அடைந்து உடல் மண்ணில் படும்படி விழுந்து வணங்கி மூங்கிலாலாகிய திருக்கோயிலை அடைந்த அவ்விறைவரது உண்மையான புகழினைத் துதித்தார்.

2746. அத்திருக்கோயிலை வலமாகச் சுற்றி வந்தார். அப்போது முன்னொரு காலத்தில் முதல் நூலாகிய மறையினை ஓதியும் அறிய முடியாத பொருளை, தவவொழுக்கத் தினையுடைய சனகாதி முனிவர்கள் தெளியுமாறு மௌன நெறியினால் தெளிவித்த தட்சிணா மூர்த்தியின் திருக் கோலம் எழுந்தருளப் பெற்றதாகிய ஒரு குருந்த மரத்தினை எதிரே கண்டார்.

இறைவன் குரு மூர்த்தியாய் எழுந்தருளி இருக்கும் காட்சி

2747. வேதங்கள் ஒரு பாலும், உண்மை நெறியைக் கூறும் சிவாகமங்கள் ஒரு பக்கத்தும், புராணத்துடன் கிடந்த இசைநூல் ஒரு பக்கத்தும், பல கிளைகளையுடைய வேற்றுமைப்பட்ட சமய நூல்கள் ஒரு பக்கத்திலும் வாய் விட்டு ஒலித்துக் கொண்டிருந்தன.

2748. மறைகள் கூறிய அறம் முதலிய பொருள் நான்கினையும், அம் முதன் நூலுக்கு அரியதாகிய வீடு பேற்றுக்குக் கருவி என்று ஆகமங்கள் கூறும் சரியை முதலிய பாதங்கள் நான்கினையும், சிக்கறுத்து உணர்ந்த பெரிய மாணவர் கூட்டங்களும், வினாவும் விடையுமாக ஒருபுறம் உரையாடிக் கொண்டிருந்தனர்.

2749. சரியையில் வல்ல உண்மை தாதமார்க்கத் தினரும், கிரியையினைச் செய்யும் நல்ல புத்த மார்க்கத்தினரும் விளங்கிக் கொள்ள முடியாத சிவயோகத்தினைச் சாதனையுடன் உணர்ந்த சகமார்க்கத்தினரும், ஞானசாரியத் தன்மையைப் பெற்ற ஞானச் செல்வராகிய சன்மார்க்கத்தினரும் ஒருபால் விளங்கினர்.

2750 ஒழித்த நோன்பின ராடலர் பாடலர் உலகம்
பழித்த செய்கைய ரழுகையர் நகையினர் பாசங்
கழித்த கண்ணினா லரனுருக் கண்டுகொண் டுலகில்
விழித்த கண்குரு டாத்திரி வீரரும் பலரால்.

2751 கரவி லுள்ளமாம் விசும்பிடைக் காசற விளங்கும்
பரசி லாச்சுடர்க் குதயமீ றின்மையாற் பகலும்
இரவு நேர்படக் கண்டிலர் இயன்றுசெய் நித்த
விரத மாதிநோன் பிழந்துறை விஞ்சையர் பலரால்

2752 உடையுங் கோவண முண்டியுங் கைப்பலி யுறவென்
றடையுங் கேளிரு மரனடி யார்கண்டி கலன்கண்
படையும் பாரிட மாயினும் பகலிரா முதலீ
றிடையின் றாமிடத் துறங்குவ திஃதவர் வாழ்க்கை

2753 இத்த கைப்பல தொண்டர்தங் குழாத்திடை யாலம்
ஒத்த பைங்குருந் தடியினில் யோகவா சனத்திற்
புத்த கத்தெழு தியசிவ ஞானமெய்ப் போதங்
கைத்த லந்தரித் திருப்பதோர் கருணையைக் கண்டார்.

2750. விதிவிலக்குக் கடந்த தவத்தினையுடையவராய் ஆடியும் பாடியும் உலகத்தவரால் பழிக்கப்படும் செய்கையினை உடையவராய், அழுகையை உடையவராய், நகையினை உடையவராய்ப் பாசம்நீங்கிய ஞானக் கண்ணால் இறைவன் திருவுருவை இடைவிடாது தரிசித்துக் கொண்டு உலகின்கண் திறந்த ஊனக்கண் குருடராய்த் திரிகின்ற ஞான வீரர்கள் ஒரு பக்கம் விளங்கினர்.

2751. கள்ளமில்லாத உள்ளமாகிய ஆகயாத்தில், களங்கமின்றி விளங்கும் சிவ சூரியனுக்குத் தோற்றமும் மறைவும் இல்லை. ஆதலால் பகலும் இரவும் தோன்றக் காணாதவராய் மனம் பொருந்திச் செய்யும் நித்தியக் கடன் முதலிய தவங்களை நெகிழ்ந்தொழியப் பெற்றுத் திகழ்கின்ற ஞானிகள் ஒருபால் விளங்கினர்.

2752. அவர்களுக்கு ஆடை கோவணமே. உணவு கைப்பிச்சையே. அவர்களுக்கு உறவினரும் சிவனடியார்களே. அணிகலன் உருத்திராக்க மாலையே. துயிலும் இடம் நிலமே. ஆனாலும் அவர்கள் தூங்குவது பகலும், இரவும், முதலும், நடுவும் முடிவும் இல்லாத இடத்தில். இஃதே அவர்கள் வாழ்க்கையாகும்.

திருவருள் வலையில் அகப்படல்

2753. இத்தகைய பல அடியார்கள் கூட்டத்திடையே, கல்லால மரம் போன்ற குருந்த மரத்தின் அடியில் யோகா சனத்தில் உண்மையாகிய சிவஞானபோதம் எழுதிய சுவடியினைத் திருக்கரத்திலே ஏந்தி இருக்கும் ஒரு அருள் வடிவத்தைத் திருவாதவூரடிகள் கண்டார்.

2754 மன்றுள் ஆடிய வானந்த வடிவமும் வடவால்
ஒன்றி நால்வருக் கசைவற வுணர்த்திய வுருவும்
இன்று நாயினேற் கெளிவந்த விவ்வுரு வென்னா
அன்று நாயகன் குறிப்புளத் துணர்த்திட வறிந்தார்.

2755 முன்ப ணிந்தன ரணிந்தனர் அஞ்சலி முடிமேல்
என்பு நெக்கிட வுருகின ரினியரா யெளிவந்
தன்பெ னும்வலைப் பட்டவ ரருள்வலைப் பட்டார்
துன்ப வெம்பவ வலையறுத் திடவந்த தொண்டர்.

2756 கால முங்கனாக் காட்சியு நிமித்தமுங் கடிந்தார்
சீல மாணவர் செவ்விதேர் தேசிகன் என்ன
மூல வாகம மோதினான் முறுக்கவிழ் கமுநீர்
மாலை சாந்தணிந் தடியின்மேல் வன்கழல் வீக்கி.

2757 அண்ணல் வேதிய ரொழுக்கமும் அன்புங்கண் டியாக்கை
உண்ணி லாவுயிர் பொருள்புன லுடன்கவர்ந் துள்ளக்
கண்ணி னான்மலங் கழீஇப்பத கமலமுஞ் சூட்டி
வண்ண மாமலர்ச் செங்கரஞ் சென்னிமேல் வையா.

2754. அவ்வாறு கண்டபொழுது இறைவனின் திருவருள் குறிப்பு உள்ளத்தின் கண் உணர்த்தியருளுதலால், 'இன்று எளியேனுக்கு எளிவந்த இக்கருணை வடிவமானது அம்பலத்துள் திருக்கூத்தாடிய இன்ப வடிவமும் கல்லால மரத்தின் கீழ்இருந்து சனகாதி முனிவர் போன்ற நால்வருக்கு மன அசைவு நீங்குமாறும் உணர்த்தியருளிய வடிவமே' என்று உணர்ந்தார்.

2755. துன்பமாகிய கொடிய பிறவி வலையினை அறுத்தற்கு வந்த தொண்டராகிய வாதவூரடிகள் இறைவன் திருமுன்னர் சென்று வணங்கி, தலைமேல் கைகளைக் குவித்து என்பு நெக்குவிட உருகி இனியராகி எளிவந்து அடியாரின் அன்பாகிய வலையில் பட்ட அவ்விறைவரது அருளாகிய வலையில் அகப்பட்டார்.

வாதவூரர் உபதேசம் பெறுதல்

2756. தீக்கைக்குரிய நல்லோரையும், கனாத் தோற்றமும், நன்னிமித்தங்களாகிய இவற்றை அறிந்து செய்தற்குரிய பக்குவத்தினை நீங்கியவராகிய ஞானஒழுக்கத் தினையுடைய மாணவரது பக்குவத்தினை நன்கு உணரவல்ல ஞானாசிரியர் என்று அறிஞர் கூறுமாறு மூலாகமங்களை அருளிச் செய்த அவ்விறைவன் கட்டவிழந்த செங்கழு நீர் மாலையையும், சந்தனத்தையும் அணிந்து திருவடியில் வீரக் கழலைக் காட்டினார்.

2757. பெருமை மிக்க வாதவரடிகளின் ஒழுக்கமும் அன்பும் கண்டு, உடலையும் அதனுள் உலாவும் உயிரையும் பொருளையும் தான நீருடன் ஏற்று, ஞானக் கண்ணினால் மும்மலங்களையும் போக்கித் திருவடித் தாமரையையும் முடிவில் சூட்டி, அழகிய தாமரை மலர் போன்ற சிவந்த திருக்கரத்தினை அவர் சிரசின் மீது வைத்தார்.

2758 சூக்க மாகுமைந் தெழுத்தினிற் சுற்றிய பாச
வீக்க நீக்கிமெய் யானந்தம் விளைநிலத் துய்த்துப்
போக்கு மீட்சியுட் புறம்பிலாப் பூரண வடிவம்
ஆக்கி னானொரு தீபகம் போல்வரும் அண்ணல்.

2759 பார்த்த பார்வையால் இரும்புண்ட நீரெனப் பருகுந்
தீர்த்தன் றன்னையுங் குருமொழி செய்ததுந் தம்மைப்
போர்த்த பாசமுந் தம்மையு மறந்துமெய்ப் போத
மூர்த்தி யாயொன்று மறிந்திலர் வாதவூர் முனிவர்.

2760 தேனும் பாலுந்தீங் கன்னலு மமுதுமாய்த் தித்தித்
தூனு முள்ளமு முருக்கவுள் ளொளியுணர்ந் தின்பம்
ஆன வாறுதேக் கிப்புறங் கசிவதொத் தழியா
ஞான வாணிவந் திறுத்தனள் அன்பர்தந் நாவில்.

2761 தொழுத கையினர் துளங்கிய முடியினர் துளும்ப
அழுத கண்ணினர் பொடிப்புறு மியாக்கையர் நாக்குத்
தழுத முத்தவன் புரையினர் தமையிழந் தழல்வாய்
இழுதை யன்னமெய் யினர்பணிந் தேத்துவார் ஆனார்.

2762 பழுதி லாதசொன் மணியினைப் பத்திசெய் தன்பு
முழுது மாகிய வடத்தினான் முறைதொடுத் தலங்கல்
அழுது சாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந் தையர்
வழுவி லாதபேர் மாணிக்க வாசகன் என்றார்.

2758. சூக்குமமென்னும் திருவைந்தெழுத்தின் உபதேசத்தினால் வாதவூரரைப் பந்தித்த பாசக் கட்டினைப் போக்கி, அழியாத இன்பம் விளையும் நிலத்தில் செலுத்திப் போக்கும் வரவும் உள்ளும் புறமும் இல்லாத வியாபக வடிவமாகச் செய்தனன், தன் பார்வை யொன்றால் இறைவன்.

உபதேசம் பெற்ற ஆனந்தநிலை

2759. திருவாதவூரடிகள், இறைவனின் அருள் திருநோக்கினாலே, பழுக்கக் காய்ச்சிய இரும்பு நீரினைப் பருகினாற் போலத் தூயவனாகிய அவ்வாசிரியனையும் அக்குரவன் உபதேசமொழி அருளியதையும் தம்மை மறைத்த பாசத்தையும் தம்மையும் மறந்து விட்டார். மெய்ஞ்ஞான வடிவினராய் ஒன்றையும் அறியாதவராயினார்.

2760. தேனும், பாலும், கருப்பஞ்சாறும் அமுதுமாகத் தித்தித்து உடலையும் உள்ளத்தையும் உருக்க, அகத்தில் தோன்றிய அருள் ஒளியை உணர்ந்து, இன்பமாகிய ஆறு தேக்கப்பட்டுப், புறத்தில் கசிவது போல, அழியாத ஞானக் கலைமகள் தானே வந்து அவ்வன்பருடைய நாவின்கண் தங்கினாள்.

2761. தொழுத கையினர், நடுங்கிய தலையினர், நீர் ததும்ப அழுத கண்ணின், புளகித்த உடலை உடையவர். நாதழுதழுத்த அன்பு மொழியினர், தம்மை இழந்து நெருப்பிடைப்பட்ட நெய் போன்ற உடலையுடையவராய் வணங்கித் துதிப்பாராயினர், மாணிக்கவாசர்.

மாணிக்கவாசகர்

2762. குற்றமற்ற சொல்லாகிய மாணிக்கங்களை வரிசைப்படுத்தி அன்பு முழுவதும் ஆகிய நாணினால் முறையாகக் கோத்த மாலையை அழுது சூட்டிய உண்மை அன்பராகிய அவ்வாதவூரருக்கு ஆசிரியர் மனமகிழ்ந்து ''மாணிக்கவாசகன்'' என்று பெயர் கூறி அருளினார்.

2763 பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீர்
ஆட்டிச் சொன்மலர் அணிந்துதற் போதவின் னமுதை
ஊட்டித் தற்பர ஞானமா மோமவெங் கனலை
மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சிய ரானார்.

2764 ஆசை வெம்பவ வாசனை யற்றுமா ணிக்க
வாச கப்பிரான் றேசிகன் மாணவர் ஓதும்
ஓசை யாகம வுபநிடப் பொருளெலாங் கேட்டு
நேச மங்குவைத் திருந்தன ரதுகண்டு நிருத்தன்.

வேறு

2765 தித்திக்கு மணிவார்த்தை யின்னஞ் சின்னாட் டிருச்
செவியி லருந்தவுங் கைச் செம்பொன் எல்லாம்
பத்திப்பே ரன்பளித்துக் கவர்ந்து வேண்டும்
பணிகொடுபாண் டியனையிவர் பண்பு தேற்றி,
முத்திக்கே விடுத்திடவும் புத்தை வாது
முடித்திடவுந்திருவுள்ள முன்ன மெய்தி
எத்தித்தொண் டரைக்கருமஞ் சிறிதுண் டிங்கே
யிருத்தியென வுருக்கரந்தா னடிய ரோடும்.

ஞான பூசை புரிதல்

2763. பாட்டிற்கு மகிழும் குருநாதருடைய திருவடிமேல் ஆனந்தக் கண்ணீரால் திருமஞ்சனமாட்டி, சொல்லாகிய மலரைச் சூட்டி, சிவபோதமாகிய இனிய அமுதத்தினை உண்பித்து, சிவஞானமாகிய ஓமாக்கினியை மூட்டி ஞான பூசையைப் புரியலானார்.

2764. ஆசையினால் வரும் கொடிய பிறவிவாசனை நீங்கி, மாணிக்கவாசகப் பெருமான், ஞானாசாரியரது மாணாக்கர்கள் அவ்விடத்தே ஓதுகின்ற ஆகமப் பொருளும் உபநிடதப் பொருளும் ஆகிய அனைத்தையும் கேட்டு அதில் பெரு விருப்புடையவராய் இருந்தார். ஆசிரியனாகிய கூத்த பிரான் அதனைக் கண்டார்.

ஞானாசாரியர் சில பணிகளை இடல்

2765. இனிக்கின்ற மாணிக்கம் போலும் வாசகத்தை இன்னும் சில நாட்கள் வரையிலும் நமது திருச்செவி கேட்கவும் தம் கையில் உள்ள செம்பொன் அனைத்தையும் பக்தி என்னும் தலையன்பினைத் தந்து, கொள்ளை கொண்டு தாம் விரும்பும் பணியை ஏற்றுக் கொண்டு. பாண்டியனுக்கு இவர் பண்பினை அறிவித்து முக்தியினை அடையச் செய்யவும், புத்தர்களை வாதின்கண் வென்று அழிக்கவும் திருவுளம் கொண்டு மாணிக்கவாசகரை ''சிறிது காரியம் உளது ஆதலால் நீ சிலகாலம் இங்கிருப்பாயாக'' என்று கூறி அடியவர்களோடு மறைந்தருளினார்.

2766 கனவில்வருங் காட்சியெனக் கருணை மூர்த்தி
காட்டிமறைத் தலுமன்பர் கலக்கத் தாழ்ந்து
நனவுகொல்லோ கனவுகொல்லோ வின்று நாதன்
ஞமலிக்குத் தவிசிட்ட நலம்போல் என்னை
நினைவரிய திருமேனி காட்டி யாண்டு
நீத்ததையென் றையுற்று நெஞ்சந் தேறி
இனவடியா ருடன்கூட்டா தேகினாயோ
வென்னையுமென் வினையையுமிங் கிருத்தி யெந்தாய்.

2767 வஞ்சவினைக் கொள்கலனாம் உடலைத் தீவாய்
மடுக்கிலேன் வரையுருண்டு மாய்ப்பே னல்லேன்
நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பே னல்லே
னாதனே யதுவுநின துடைமை யென்றே
அஞ்சினேன் றானேயு மழியா தாவி
யையனே நினைப்பிரிந்து மாற்ற கில்லேன்
என்செய்கோ வெந்தாயோ வெந்தா யோவென்
றிரங்கினார் புரண்டழுதா ரினைய சொல்வார்.

2768 வறியவனாம் ஒருபிறவிக் குருடன் கையில்
வந்தபெரு விலைமணிபோன் மழலை தேறாச்
சிறியவனா மொருமதலை கையிற் கொண்ட
செம்பொன்மணி வள்ளம்போற் றேவர் யார்க்கும்
அறிவரியாய் சிறியோனை யெளிவந் தாண்ட
வருமையறி யேன்றுன்பத் தழுவத் தாழப்
பிறிவறியா வன்பரொடு மகன்றாய் கல்லாப்
பேதையேன் குறையலதெம் பிரானா லென்னே.

மாணிக்கவாசகர் இறைவனைப் பிரிந்து வருந்துதல்

2766. கனவில் தோன்றிய தோற்றம் போல் அருள்வடி வினராகிய இறைவர் தமது உருவைக் காட்டி மறைத்த அளவில் வாதவூரடிகள் துன்பக் கடலுள் அழுந்தி, ''இன்று தவிசிட்டது போல நாயேனுக்கு இன்று நினைத்தற்கும் அரிய திருமேனியை இறைவன் காட்டி, என்னை அடிமைகொண்டு எம்பெருமான் மறைத்து அருளியது நனவோ அல்லது கனவோ'' என்று ஐயுற்றார். பின் நனவே என ஒருவாறு மனம் தெளிவடைந்து ''எந்தையே! உம்முடைய அடியாரோடு கூட்டாது அடியேனையும், அடியேனுடைய வினையையும் இங்கு இருத்தி மறைந்தீரோ''

2767. ''வஞ்சம் நிறைந்த வினைகளை யுடைய பாண்ட மாகிய இவ்வுடலைத் தீயின்கண் வீழ்த்திலேன். மலையினின்றும் உருண்டு மாய்த்தேன் அல்லேன். நஞ்சுடைய வாளினாலும் வெட்டிக் குறைக்கின்றிலேன். இறைவனே! அதுவும் உனது உடமையென்றே கருதிக் கொல்ல அஞ்சினேன். உயிர் தானேயும் அழியாது. ஐயனே! தேவரீரைப் பிரிந்தும் பொறுக்க கில்லேன்! என் செய்வேன்! எந்தாயோ எந்தாயோ!'' என்று புலம்பிப் புரண்டு அழுது வருந்தினார்.

வரதவூரர் புலம்புதல்

2768. ''தேவர் அனைவர்க்கும் அறிதற்கும் அரியவனே! பிறவிக் குருடனாகிய ஒருவறியவன் கையில் தானே வந்து கிடைத்த பெரு விலையினையுடைய மாணிக்க மணியைப் போலவும், மதலைச் சொல் தெளியாத ஒரு மழலை தனது கையில் கொண்ட சிவந்த பொன்னாலாகிய மணிகள் பதித்த கிண்ணத்தைப் போலவும், சிறியேனாகிய என்னை எளிவந்து ஆட்கொண்டருளிய அருமையை அறியேன். ஆதலால் நான் துன்பக் கடலுள்மூழ்கப் பிரிவினை அறியாத அடியார்களோடும் மறைந்தருளினீர். கல்லாத புல்லறிவினேனது குறையேயன்றி எம்பெருமானால் யாது குறையுளது?

வேறு

2769 மண்ணாதி யாறாறு மனந்துழாவித் தடுமாறிப்
புண்ணாகி யெனைக்காணா துழல்கின்றேனைப் போதவருட்
கண்ணால் அவைமுழுதுங் கரையநோக்கி யான்யானென்
றெண்ணா வெனைத்தாத்தா யெங்குற்றாயோ வெந்தாயோ.

2770 வானாதி யைந்துமுதல் வகுத்தவோசை முதலைந்தும்
ஆனாதி யங்குமன மாதிநான்கும் வாயடைப்பத்
தேனாதி யறுசுவையுங் கழியவூறுந் தெள்ளமுதம்
யானார நல்கினையால் எங்குற்றாயோ வெந்தாயே.

2771 மாசாய் மறைக்குமல வலியும்நானும் வேறின்றி
ஆசா விகாரமல மாயினேனைப் பொருட்படுத்திப்
பேசாத வின்புருவி னின்னொடென்னைப் பின்வைத்த
ஈசா வெனையிங்கிட் டெங்குற்றாயோ வெந்தாயே.

வேறு

2772 என்று வாய்திறந் தரற்றினார் இரங்கினார் புனிற்றுக்
கன்று நீங்கிய வானெனக் கரைந்தநெஞ் சினராய்ச்
சென்று கோபுர வாயிலின் புறம்புபோய்த் திரண்டு
நின்ற காவலன் றமர்களை நேர்ந்தனர் நோக்கா.

2769. மண் முதலிய முப்பத்தாறு தத்துவங்களையும் மனத்தால் ஆராய்ந்து காண இயலாது கலங்கி வருந்திச் சுழலும் என்னை, ஞான அருள் நோக்கினால் அத்தத்துவங்கள் முற்றும் கரையும்படி நோக்கியருளி, யான்; யான் என்று கருதாத என்னைக் காட்டினையோ? எந்தையே எங்குச் சென்றனையோ!

2770. வான் முதலிய பூதங்கள் ஐந்தும் அவை தோன்றுவதற்குக் காரணமாகிய ஓசை முதலிய தன் மாத்திரைகள் ஐந்தும் நீங்காது அலையும் மனம் முதலிய அந்தக் காரணங்கள் நான்குமாகிய இவற்றின் வழி அடைபடத் தேன் முதலிய அறுவகைச் சுவைப் பொருளினும் சுவைமிக ஊறும் சிவானந்த அமுதினை யான் உண்ணுமாறு நல்கி அருளினையோ? எந்தையே! எங்குச் சென்றாயோ?

2771. மாசு பொருந்தி ஆணவ வலிமையினின்றும் வேறுபடாத என்னையும் ஒரு பொருளாகக் கருதிப் பேசுதற்கரிய பேரின்ப வடிவினையுடைய நின்னோடு என்னைப் பின்னே வைத்தருளிய இறைவனே! எந்தையே! அடியேனை இன்று வைத்து எங்குச் சென்றருளினீரோ!'' என்று வாய்திறந்து அரற்றிக் கதறி அழுதார்.

வாதவூரர் பரிசனங்களைப் போகும்படி அனுப்புதல்

2772. இவ்வாறு வாய் திறந்து கதறி அழுது பின் இளம் கன்று நீங்கின பசுவைப் போலக் கரைந்த நெஞ்சினராய்ச் சென்று கோபுர வாயிலுக்கு வெளியே போய் அங்குக் கூடிநின்ற அரச பரிவாரங்களை நேரில் பார்த்தார்.

2773 துங்க வாரியிற் கடும்பரித் தொகையெலா மாடித்
திங்க ளின்றலை வருமென முன்புபோய்த் தென்னர்
புங்க வன்றனக் குணர்த்துமின் போமென விடுத்தார்
அங்க ணாயகன் பெருந்துறை நாயகன் அன்பர்.

2774 புரசை மாவயப் புரவிதேர்ப் பொருநர்போய்ப் பொறிவண்
டிரைசெய் தார்முடி வேந்தன்மு னிறைஞ்சினா ருள்ள
துரைசெய் தாரது கேட்டொன்று முரைத்தில னிருந்தான்
நிரைசெய் தார்ப்பரி வரவினை நோக்கிய நிருபன்.

2775 வள்ளல் வாதவூர் முனிகளு மன்னவன் பரிமாக்
கொள்ள நல்கிய பொருளெலாங் குருந்தில்வந் தாண்ட
பிள்ளை வாண்மதிச் சடைமுடிப் பெருந்துறை மறையோர்க்
குள்ள வாதரம் பெருகமுன் வேண்டியாங் குய்ப்பார்.

2776 சிறந்த பூசைக்குந் திருவிழா சிறப்புக்குஞ் செல்வம்
நிறைந்த வாலயத் திருப்பணித் திறத்துக்கு நிரப்பி
அறந்த வாதபே ரன்பர்க்குஞ் செலுத்தியத் தலத்தே
உறைந்த, வாவற வின்னணம் ஒழுகுநாள் கழிப்பார்.

2773. ''விரைந்த வேகமுடைய குதிரைக் கூட்டங்களெல்லாம் ஆடி மாதத்தில், கடற்கரையில் வந்திறங்கு மென்று முன்னர் சென்று பாண்டியர் பெருமானுக்குக் கூறுங்கள், ''போமின்''- என்று கூறி அனுப்பினார், பெருமைமிக்க அருட்பார் வையையுடைய பெருந்துறை நாதனுக்கு அன்பராகிய மாணிக்கவாசகர்.

2774. யானைகளையும், குதிரைகளையும் தேர்களையும் உடைய வீரர்கள் முன் சென்று, பொறிகளையுடைய வண்டுகள் ஒலிசெய்யும் மாலையை அணிந்த அரிமர்த்தன பாண்டியனிடம் வணங்கி நடந்ததைக் கூறினர். அதனைக் கேட்டுப் பாண்டியன் ஒன்றும் கூறாமல் கிண்கிணி மாலையணிந்த குதிரைகளின் வரவை எதிர்ப்பார்த்திருந்தான்.

குதிரை வாங்கக் கொண்டுவந்த பொருளைச் செலவிடல்

2775. வள்ளலாகிய வாதவூரடிகள் பாண்டிய மன்னன் குதிரை வாங்கக் கொடுத்த பொருள் முழுவதையும் குருந்த மரத்தின் அடியில் வந்தமர்ந்து ஆண்டருளிய, திங்களைச் சூடிய சடையினையுடைய பெருந்துறையில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு உள்ளன்பு பெருக முன் வேண்டிக் கொண்டது போலவே செலுத்துவாராயினார்.

2776. சிறப்புடைய பூசைக்கும், திருவிழாவிற்கும் செல்வம் நிறைந்த ஆலயத் திருப்பணிக்கும் நிரம்பக் கொடுத்து அற நெறியினின்று நீங்காத பெரிய அன்பர்கட்கும் செலவிட்டு விட்டார். அப்பதியினிடத்திலேயே தங்கி இருந்து, ஆசை என்பதில்லாமல் நாட்களைக் கழித்து வரலானார்.

2777 எல்லை கூறிய குளிர்மதி யடுக்கவந் தெய்த
வல்லல் யானையா னின்னமும் வயப்பரி வந்த
தில்லை யாலிது வென்னென வோலையு மெழுதிச்
செல்ல வுய்த்தனன் வாதவூர் அமைச்சர்தந் திருமுன்.

2778 மன்ன வன்றிரு முகங்கண்டு முறைமையால் வாங்கி
அன்ன வாசகந் தெரிந்துகொண் டாதியீ றில்லா
முன்ன வன்றிரு வருட்கடன் மூழ்கிய முனிவர்
என்னை வேறினிச் செய்யுமா றென்றுநின் றயர்வார்.

2779 சிந்தை யாகிய செறுவினுட் சிவமுதல் ஓங்கப்
பந்த பாசம்வே ரறக்களைந் தருட்புனல் பாய்ச்சி
அந்த மாதியின் றாகிய வானந்த போகந்
தந்த தேசிக வுழவன்றன் கோயிலைச் சார்ந்தார்.

வேறு

2780 என்னா யகனே பொன்னாட ரேறே யேறு கொடியுயர்த்த
மன்னா தென்னா பெருந் துறையெம் மணியே வழுதி
பொருளெல்லாம்
நின்னா லயத்து நின்னடியார் இடத்துஞ் செலுத்து
நெறியளித்தாய்
பின்னா னவனுக் கெனகொண்டு பரிமாச் செலுத்தப்
பெறுமாறே.

அரசன் ஓலை அனுப்பல்

2777. அவர் குறிப்பிட்டுக் கூறிய நாளான ஆடிமாதம் வந்தது. மதம் மிக்க யானையை உடைய பாண்டியன், ''இன்னும் வெற்றி பொருந்திய குதிரைகள் வரவில்லையே? இதற்குக் காரணம் என்ன?'' என்று ஓலையும் வரைந்து வாதவூரராகிய அமைச்சருக்கு அனுப்பி வைத்தான்.

வாதவூரர் இறைவனை வேண்டுதல்

2778. பாண்டிய மன்னனின் ஓலையைப் பார்த்து அதை மரியாதையுடன் வாங்கி, அதில் உள்ள செய்தியைத் தெரிந்து கொண்டு, முதலும் முடிவும் இல்லாத முன்னவனான இறைவனது திருவருட்கருணையில் மூழ்கிய முனிவராகிய மாணிக்க வாசகர் ''இனிச் செய்யும் செயல் வேறு என்ன?'' என்றெண்ணிச் சோர்வடைந்தார்.

2779. உள்ளமாகிய விளைநிலத்துள், அன்பாகிய முளைவர, பந்தபாசமென்னும் களையினை வேரறக் களைந்து, அருள் என்னும் நீரைப் பாய்ச்சி, முதலும் முடிவும் இல்லாத சிவானந்தமாகிய விளைவினைப் புசிக்குமாறு தந்தருளிய குரவனாகிய உழவனது திருக்கோயிலைச் சென்றடைந்தார்.

2780. இறைவனின் திருமுன் வணங்கி நின்று, ''எனது தலைவனே! தேவர்கள் சிங்க ஏறே! இடபத்தைக் கொடியின் கண் உயர்த்தி அருளிய மன்னா! சுந்தர பாண்டியனே! திருப்பெருந்துறையில் எழுந்தருளிய என் அருமை மணியே! பாண்டியன் தந்த பொருளை எல்லாம் நின் திருக்கோயிலின் திருப் பணியிலும், அடியார் திறத்திலும் செலவிடும் நெறியினைத் தந்தருளினீர்! இனி அடியேன் பாண்டியனுக்கு எதனைக் கொண்டு குதிரை வாங்கிக் கொடுப்பது?''

2781 என்னா விறைஞ்சி யெழுந்தேத்தி யிரந்தார் எதிரே
பெருந்துறையின்
மின்னார் சடைமேற் பிறைமுடித்தோன் விசும்பி னிறைந்த
திருவாக்கான்
மன்னா னவற்குப் பரியெல்லாம் வருமென் றோலை
விடுதியெனச்
சொன்னா னதுகேட் டகத்துவகை துளும்பி வரைந்து
சுருள்விடுத்தார்.

2782 அந்த வோலைப் பாசுரமு மறையக் கேட்டு நின்றாங்கோர்
சிந்தை யானா மகிழ்சிறப்ப விருந்தான் புரவித் தேரோடும்
வந்த வாதிச் செங்கதிரோன் மறைந்தா னவனால்
வையமெலாம்
வெந்த வேடை தணிப்பான்போன் முளைத்தா னாதி
வெண்கதிரோன்.

2783 அன்று துயிலும் வாதவூ ரடிகள் கனவிற் சுடர்வெள்ளி
மன்று கிழவர் குருந்தடியில் வடிவங் காட்டி யெழுந்தருளி
வென்றி வேந்தன் மனங்கவரும் விசயப் பரிகொண்
டணைகின்றோம்
இன்று நீமுன் னேகுதியென் றருளிச் செய்ய
வெழுந்திருந்தார்.

2784 கனவி னிடத்துந் தேவர்க்குங் காண்டற் கரிய கருணையுரு
நனவி னிடத்துங் கனவிடத்து மெளிதே யன்றோ
நமக்கென்ன
நினைவி னிடைக்கொண் டிருக்கின்றார் நிருத்தா னந்தச்
சுடருள்ளத்
தினவி ருளைத்தின் றெழுவதென வெழுந்தா னிரவி
இரவொதுங்க.

இறைவன் அசரீரி

2781. என்று கூறிக் கீழே விழுந்து வணங்கி எழுந்து நின்று பலவாறாகத் துதித்த மாணிக்கவாசகர் எதிரே, திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள, மின் போன்ற சடையில் பிறையினை முடித்தருளிய இறைவன், ஆகாயத்தில் நின்று அசரீரியாக, ''பாண்டியனுக்குக் குதிரைகள் எல்லாம் வரும் என்று ஓலை எழுதி அனுப்புக'' என்று கூறி மறைந்தருளினார். அதனைக் கேட்ட மாணிக்க வாசகர் மகிழ்வோடு அவ்வாறே ஓலை எழுதி அனுப்பினார்.

2782. அவ்வோலையின் வாசகத்தை ஒருவன் படிக்க, கருத்துடன் நின்று கேட்டு அதனை அறிந்த பொழுதே மனதிலே மகிழ்வு மேலோங்க இருந்தனன். குதிரைகள் பூட்டிய தேரில் வந்த சூரியன் மறைந்தான். அச்சூரியனால் நிலவுகில் உண்டான கொடுமையான வெப்பத்தை தணிவிப்பதுபோலச் சந்திரன் கீழ்த்திசையில் தோன்றினான்.

கனவில் தோன்றுதல்

2783. அன்று இரவு துயில்கின்ற மாணிக்கவாசகரின் கனவில், வெள்ளியம் பலத்துக்குரிய சோமசுந்தரப் பெருமான் குருந்த மரத்தின் அடியில் ஆட்கொண்ட ஆசிரியக் கோலம் காட்டி எழுந்தருளி ''வெற்றி வேந்தனின் மனதைக் கவரத் தக்க வெற்றியைத் தரும் குதிரைகளை வாங்கிக் கொண்டு வருவோம். நீ முன்னே செல்வாயாக'' என்று அருள் புரிய வாதவூரடிகள் கண் விழித் தெழுந்தார்.

2784. 'கனவிலேனும் தேவர்களுக்குக் காண்பதற்கரிய எம்பெருமானுடைய அருள்வடிவம் நமக்குக் கனவிலும், நனவிலும் எளிதாயிற்றே!' என்று வாதவூரர் நினைத்துக் கொண்டிருந்தார். அவ்வடிகளது உள்ளத்தின் கண் செறிந்த ஆணவமலமாகிய இருளை ஆனந்தக் கூத்தினையுடைய இறைவன் என்னும் ஞான சூரியன் தின்று எழுந்தாற் போல இருள் நீங்கச் சூரியன் தோன்றினான்.

2785 எழுந்தா ருடைய பெருந்துறையா ரிருதாள் பணிந்தார்
இனிப்பிறப்பில்
அழுந்தார் வழிக்கொண் டாரடைந்தா ரகன்றார் நெறிக
ளவிர்திங்கட்
கொழுந்தார் சடையார் விடையார்தென் கூட லணைந்தார்
பாடலிவண்
டுழுந்தவர் வேந்தன் பொற்கோயி லுற்றார் காணப்
பெற்றாரால்.

2786 மன்னர் பெருமான் எதிர்வந்த மறையோர் பெருமான்
வழிபாடு
முன்னர் முறையாற் செய்தொழுகி முன்னே நிற்ப
முகநோக்கித்
தென்னர் பெருமா னெவ்வளவு செம்பொன் கொடுபோ
யெவ்வளவு
நன்ன ரிவுளி கொண்டதெனக் கேட்டான் கேட்ட
நான்மறையோர்.

2787 பொன்னு மளவோ விலைகொண்ட புரவித் தொகையு
மனைத்தவைதாம்
பின்னர் வரக்கண் டருளுதியெம் பெருமா னிதனாற்
றுரங்கபதி
என்னும் நாமம் பெறுதிமதி யென்றா ரென்ற மந்திரர்க்குத்
தென்னன் சிறந்த வரிசைவளஞ் செய்து விடுப்பச்
செல்கின்றார்.

2785. அப்போது, இனிப் பிறவிக் கடலில் அழுந்தாத வராகிய மாணிக்க வாசகர் எழுந்து தம்மை ஆட் கொண்டருளிய திருப் பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, அவ்விடத்தினின்றும் நீங்கினார். அநேக காத வழிகளைக் கடந்து, இளம் சந்திரனை சடையில் அணிந்தவரும் இடபவூர்தியை உடையவருமான சோமசுந்தரக் கடவுளின் மதுரை நகரை அடைந்தார். இசை பாடும் வண்டுகள் உடைய வேப்ப மலர் மாலையை அணிந்த பாண்டியனது பொன்மயமான அரண்மனையை அடைந்து அவ்வரசனைக் கண்டார்.

பாண்டியன் அவையை அடைதல்

2786. மன்னர் மன்னனாகிய பாண்டியனுக்கு முன்னே வந்த வாதவூரடிகள், முறைப்படியே மன்னனை வணங்கி வழிபாடு செய்தார். அப்பாண்டியர் தலைவன் அவர் முகம் நோக்கி, ''எவ்வளவு செம்பொன் கொண்டு போய், குதிரைகள் வாங்கினீர்?'' என்று கேட்டான். அதனைக் கேட்ட வாதவூரடிகள் சொன்னார்.

2787. ''அரசே! எடுத்துச் சென்ற பொன்னும் அளவில்லை வாங்கிய குதிரைகளும் அளவில்லை. அக் குதிரைகள் பின்னே வந்து கொண்டிருக்கின்றன. எம் தலைவனே! இக்காரணத்தினால் 'துரங்பதி' என்னும் பெயரைப் பெற்று விளங்குவீர்'' என்று கூறினார். இவ்வாறு கூறிய அமைச்சருக்கு அரிமர்த்தன பாண்டியன் வளம் மிக்க பல வரிசைகள் நல்கி அவரை மாளிகைக்கு அனுப்பினான்.

2788 பொன்னங் கமலத் தடம்படிந்து புழைக்கை மதமா
முகக்கடஃ!
டன்னங் கமல சரணிறைஞ்சித் தனியே முளைத்த
சிவக்கொழுந்தை
மின்னங் கயற்கட் கொடிமருங்கில் விளைந்த தேனை
முகந்துண்டு
முன்னங் கருத்து மொழியுடம்பு மூன்றும் அன்பாய்த்
தோன்றினார்.

2789 மன்னே யென்னை யாட்கொண்ட மணியே
வெள்ளி மன்றாடும்
அன்னே யடியேன் வேண்டியவா றரச னீந்த நிதியெல்லாம்
முன்னே கொண்டென் பணிகொண்டாய் முனியா
தாரச னனிமகிழ
என்னே புரவி வரும்வண்ணம் என்று வேண்டி
நின்றிடினும்.

2790 மெய்யன் புடையா யஞ்சலைநீ வேட்ட வண்ணம்
விண்ணிரவி
வையம் பரிக்கும் பரியனைய வயமாக் கொண்டு
வருதுமென
ஐயன் றிருவாக் ககல்விசும்பா றெழுந்த தாக வதுகேட்டுப்
பொய்யன் பகன்றார் சிவன்கருணை போற்றி
மனையிற் போயினார்.

சோம சுந்தரக் கடவுளைத் தரிசித்து வேண்டுதல்

2788. மாணிக்க வாசகர் பொற்றாமரைத் தீர்த்தத்திலே நீராடி யானை முகமுடைய சித்தி விநாயகரின் தாமரை சிவக் கொழுந்தை, மின் போன்ற அங்கயற் கண்ணம்மை என்னும் கொடியின் பக்கத்தில் விளைந்த தேனைக் கண்ணாகிய வாயினால் பருகி, அவர் திருமுன்னர் உள்ளமும் உரையும் உடலும் ஆகிய மூன்று கரணங்களும் தோன்றிட நின்றார்.

2789. ''என் இறைவனே! என்னை ஆட்கொண்டருளிய மாணிக்கமே! வெள்ளியம்பலத்துள் திருக்கூத்தாடியருளும் அன்னையே! அடியேன் வேண்டிக் கொண்ட வண்ணமே அரசன் அளித்த பொருள் முழுவதையும் முதலில் ஏற்றுக்கொண்டு, சினம் கொள்ளாது மிகவும் மகிழ்ச்சி அடையும்படி குதிரைகள் வருவது எங்ஙனம்?'' என்று வேண்டி நின்றார்.

இறைவன் அசரீரி

2790. ''மெய்யன்புடையாய்! அஞ்சேல்! நீ விரும்பிய படி வானில் உள்ள சூரியனின் தேரை இழுத்துச் செல்லும் குதிரைகளை ஒத்த வெற்றியையுடைய குதிரைகளைக் கொண்டு வருகின்றோம்,'' என்று இறைவனின் திருவாக்கு அகன்ற வானின் வழியாக அசிரீரியாக எழுந்தது. அதனை கேட்டு மகிழ்ந்த வாதவூரடிகள் இறைவனின் திருவருளைத் துதித்துத் தம் மாளிகைக்குச் சென்றார்.

வேறு

2791 கடிமனை யடைந்த வெல்லை வாதவூர்க் காவ லோரை
மடிமையில் சுற்றத் தோருங் கேளிரு மாண்ட காதல்
அடிமையுள் ளாரு மேதி லாளரும் பிறரும் ஈண்டி
இடிமழை வாய்விட் டென்னப் புந்திக ளினைய சொல்வார்.

2792 மந்திரக் கிழமை பூண்டு மன்னவர் கருமஞ் செய்வ
தந்தணர்க் கறனே யல்ல வமைச்சியல் அறத்து நின்றால்
வெந்திற லரசர்க் கேற்ற செய்வதே வேண்டு மென்னத்
தந்திர மநுநூல் வல்லோர் சாற்றுவா ரன்றோ வையா.

2793 அரைசிய லமைச்சு நீதி யாய்ந்தநுங் கட்கு நாங்கள்
உரைசெய் தெவனீர் செய்வ தொன்றுநன் றாவ தில்லை
விரைசெறி தாராற் கின்று வெம்பரி வருவ தாக
வரையறை செய்தீர் நாளை யென்சொல வல்லீ ட்ஐயா

2794 தழுவிய கிளைஞர் நட்டோர் சார்வுளோர் தக்க சான்றோர்
குழுவினைக் காக்க வேண்டுங் குறிப்பிலீர் போலு நீவிர்
ஒழுகுறு செயலி னாலே யுஞ்செயல் உமக்கே சால
அழகிது போலு மென்னக் கழறினா ரதுகேட் டையன்.

உறவினர் முதலியோர் இடித்துக் கூறுதல்

2791. திருவாதவூரார் தம் மாளிகையை அடைந்த போது அவரைச் சோர்வுற்ற சுற்றத்தாரும், நட்பினையுடையவரும், அன்புடைய பணியாளர்களும், அயலார்களும் பிறரும் வந்து நெருங்கி இடிக்கும் மேகம் வாய் திறந்தாற் போல புத்திகளைச் சொல்வாராயினார்.

2792. ''அமைச்சுத் தொழில் பூண்டு, அரசரது பணிபுரிதல் அந்தணர்க்கு உரிய தருமம் அன்று, அமைச்சியலுக் குரிய அறநெறியில் நின்றால், அரசர்க்குரிய வினைகளையே செய்ய வேண்டும் என, ஐயனே! தந்திரமாகிய மனுநூல் வல்லார், கூறுவார் அல்லவா?

2793. ''அரசியலையும் அமைச்சுநீதியையும் ஆராய்ந்து அறிந்த நுமக்கு நாங்கள் சொல்ல வேண்டியது யாது? தாங்கள் செய்யும் காரியம் சிறிதும் அழகில்லை. மணம்மிக்க வேப்பம்பூ மாலையை அணிந்த பாண்டியனுக்கு விரும்பத்தக்க குதிரைகள் இன்று வருமென நாள் வரையறுத்தீர்! ஐயனே! குதிரைகள் வராவிடில் நாளை என்ன சொல்வீரோ?

2794. ''நீங்கள் அரசனிடம் நடந்து கொள்ளும் விதத்தினாலே, சூழ்ந்துள்ள சுற்றத்தாரும், நட்பினரும் சார்ந்தவர்களும் தகுதி வாய்ந்த பெரியோருமாகிய கூட்டத்தைக் காக்க வேண்டும் என்று குறிப்பிடீர் போலும்! உமது செய்கை உமக்கே மிக அழகுடையது போலும்!'' என்று இடித்துக் கூறினர். அடிகள் அதனைக் கேட்டார்.

2795 சுற்றமுந் தொடர்பு நீத்தேந் துன்பமும் இன்பு மற்றேம்
வெற்றுடன் மானந் தீர்ந்தேம் வெறுக்கைமேல் வெறுக்கை வைத்தேஞ்
செற்றமுஞ் செருக்குங் காய்ந்தேந் தீவினை யிரண்டுந் தீர்ந்தேங்
கற்றைவார் சடையான் கோலங் காட்டியாட் கொண்ட வன்றே.

2796 தந்தைதாய் குரவன் ஆசான் சங்கர னிராசை பெண்டிர்
மைந்தர்பால் லுயிருஞ் சுற்ற மாசிலா வீச னன்பர்
அந்தமில் பிறவி யேழு மடுபகை யென்ப தோர்ந்தேம்
எந்தையார் கருணை காட்டி யெம்மையாட் கொண்ட வன்றே.

2797 ஊரெலா மட்ட சோறு நம்மதே யுவரி சூழ்ந்த
பாரெலாம் பாய றுன்னற் கோவணம் பரிக்கு மாடை
சீரெலாஞ் சிறந்த சாந்தந் தெய்வநீ றணிபூண் கண்டி
நீரெலாஞ் சுமந்த வேணி நிருத்தனாட் கொண்ட வன்றே.

வேறு

2798 இறக்கினும் இன்றே யிறக்குக வென்று மிருக்கினு மிருக்குக வேந்தன்
ஒறுக்கினு மொறுக்க வுவகையு முடனே யூட்டினு மூட்டுக வானிற்
சிறக்கினுஞ் சிறக்க கொடியதீ நரகஞ் சேரினுஞ் சேருக சிவனை
மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தான் மாற்றுவார் யாரென மறுத்தார்.

வாதவூரடிகளுக்குபதேசித்த படலம் முற்றிற்று.

வாதவூரரின் மனத்தெளிவு

2795. பின், நீண்ட சடையை உடைய இறைவன் தன் அருட் கோலத்தைக் காட்டி அடிமை கொண்ட அப்பொழுதே சுற்றத்தையும் ஏனைத் தொடர்புகளையும் துறந்தேன்; துன்பத்தையும் இன்பத்தையும் ஒழித்தேன்; பயனற்றவுடம்பின் பற்றினையும் நீங்கினேன்; பொருளின் மேல் வெறுப்பு வைத்தோம் கோபத்தையும் செறுக்கையும் கெடுத்தோம் நல்வினை தீவினை என்ற இரண்டையும் நீங்கினோம்.

2796. ''எம்பெருமானார் தமது அருள் கோலம் காட்டி எம்மை அடிமை கொண்டருளிய அப்பொழுதே அப்பனும், அம்மையும், ஞானாசிரியனும், போதகாசிரியனும் அவ் விறைவனே என்பதையும் மனைவி நிராசையே என்பதையும், மக்கள் பல உயிர்கள் என்பதையும், சுற்றத்தார் குற்றமில்லாத சிவனடியாரே என்பதையும், எழுவகைப் பிறப்பே கொல்லும் பகை என்பதையும் அறிந்தோம்.

2797. ''கங்கைநீர் முற்றும் தாங்கிய சடையினை உடைய திருக் கூத்தனாகிய இறைவன், ஆட்கொண்ட அன்றே ஊர் முழுவதும் சமைத்த சோறு நம்முடையதே, கடல் சூழ்ந்த நிலவுலகம் முற்றும் நமது படுக்கையே, தைத்த கோவணம் நாம் உடுக்கும் ஆடையே. சீர் அனைத்திலும் சிறந்த சந்தனம் தெய்வத் தன்மைப் பொருந்திய திருநீறே. அணியும் அணி உருத்திராக்க மாலையே!

2798. நாம் இன்றைக்கே இறந்தாலும் இறக்கக் கடவேம். என்றும் அழியாமல் இருந்தாலும் இருப்போம். மன்னவன் தண்டித்தாலும் தண்டிப்பன். அவன் உடனே நமக்கு மகிழ்ச்சியை உண்டாக்கினாலும் உண்டாக்கக் கடவன். நாம் சுவர்க்கத்திற்குச் சென்று சிறப்படையினும் அடையக் கடவேம். கொடிய நரகம் கிட்டினும் கிட்டும். நாம் இவனை மறவோம். பண்டைப் பழவினைப் பயன் அனுபவிக்க வேண்டி வந்தால் அதனைத் தவிர்க்க வல்லவர் யாவர்?'' என்று அனைவரின் கூற்றையும் மறுத்துக் கூறினார்.

வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் முற்றிற்று.

59. நரி பரியாக்கிய படலம்

2799. அரிகணை தொடுத்து வேழ மட்டவன் செழியன் வாயிற்
றெரிகலை யமைச்சர் ஏற்றைத் தேசிக வடிவத் தீண்டி
வரிகழல் சூட்டி யாண்ட வண்ணமிவ் வண்ண மையன்
நரிகளைப் பரிக ளாக்கி நடத்திய வாறுஞ் சொல்வாம்.

2800 சுற்றமாம் பாச நீவித் துகளறுத் திருந்தார் தம்மை
மற்றைநாள் அழைத்து வேந்தன் வந்தில போலு மின்னங்
கொற்றவாம் பரிசு ளென்னக் குறமதி முடித்தா னன்பர்
இற்றைநாண் முதனான் மூன்றி லீண்டுவ விறைவ
வென்னா.

2801. சிந்துர நுதன்மால் யானைச் செல்வவப் பரிக்கு வேறு
மந்துரை யகன்ற வாக வகுக்கசூழ் தண்ணீ ரூட்ட
நந்துறை தடங்கள் வேறு தொடுகநீ ணகர மெங்கும்
இந்துறை மாட மெல்லாம் அழகுசெய் திடுக வென்றார்.

59. நரி பரியாக்கிய படலம்

2799. நரசிங்க பாணத்தை விடுத்து யானையைப் அழித்த சோமசுந்தரக்கடவுள், பாண்டியன் வாயிலில் உள்ள, கலைகளை ஆராய்ந்த ஆண்சிங்கம் போன்ற அமைச்சரான வாதவூரடிகளை, குருவடிவத்துடன் வந்து திருவடியை அவர் முடியில் சூட்டி ஆட்கொண்டருளிய திருவிளையாடல் இது. அச் சோமசுந்தரக் கடவுள், நரிகளைக் குதிரைகளாக்கி நடத்திய திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

குதிரை வரும் நாளை எதிர்நோக்கல்

2800. சுற்றமாகிய பாசத்தினின்றும் நீங்கி, ஆணவமலத்தை அறத்துச் சிவயோகத்தில் இருந்த வாதவூரடிகளை அரிமர்த்தன பாண்டியன் தன்னிடம் அழைத்து, ''வெற்றியுடைய தாவும் குதிரைகள் இன்னும் வந்திலை போலும்''- என்று வினவ, பிறை முடியினை உடைய இறைவரின் அடியாராகிய மாணிக்கவாசகர், ''அரசரே! இன்று முதல் மூன்று நாள்களுக்குள் குதிரைகள் வந்து விடும்.

2801. ''சிந்துர நுதலும் மதமயக்கமும் உடைய யானையை உடைய செல்வனே! அங்ஙனம் வரும் குதிரைகளுக்கு அகன்றதாக வேறு குதிரைப் பந்திகளை (லாயத்தை) அமைப்பிக்க! அவைகட்குத் தண்ணீர் ஊட்டுதல் பொருட்டுச் சங்குகள் உறையும் தடாகங்கள் வேறு தோண்டுக! நீண்ட நகரின் எல்லா இடங்களிலும் உள்ள சந்திரன் தவழும் மாளிகைகள் அனைத்தையும் ஒப்பனை செய்க!'', என்று கூறினார்.

2802 காவலன் கருமஞ் செய்வோ கந்துகப் பந்தி யாற்றி
ஓவற நகர மெங்கும் ஒளிபெற வழகு செய்யத்
தாவுதெண் கடலேழ் கண்ட சகரர்போல் வைகன் மூன்றில்
வாவியுங் குளனுந் தொட்டார் மண்டொரு கருவி மாக்கள்.

2803 வரையறை செய்த மூன்று வைகலுங் கழிந்த பின்னா
கரையறு பரிமா வீண்டக் கண்டிலம் இன்ன மென்னா
விரையறை வண்டார் தண்டார் மேம்பனும் விளித்து வந்த
உரையறை நாவி னாரை யொறுப்பவ னொத்துச் சீறா.

2804 என்னிவன் பரிமாக் கொண்ட தென்றவை வருவ தென்னாத்
தன்னெதிர் நின்ற வஞ்சத் தறுகணார் சிலரை நோக்கிக்
கொன்னுமிக் கள்வன் றன்னைக் கொண்டுபோய்த்
தண்டஞ் செய்தெம்
பொன்னெலா மறுவு கொண்டு வாங்குமின் போமின்
என்றான்.

2805 கற்றிணி தோளான் சீற்றங் கண்டெதிர் நில்லா தஞ்சிச்
சுற்றிய பாசம் போலத் தொடர்ந்துகொண் டேகி மள்ளர்
எற்றினி வகைதான் பொன்னுக் கியம்புமென் றதிர்த்துச் சீறிச்
செற்றமில் சிந்தை யார்மேற் செறிந்தகல லேற்றினாரே.

2802. மன்னன் ஆணைப்படி ஏவலாளர் குதிரைப் பத்தி அமைத்தனர். நகரமனைத்தும் ஒளிவீசும்படி அலங்காரம் செய்தனர். மண் தோண்டும் கருவியினையுடைய மக்கள் அலைகள் தாவும் தெள்ளிய ஏழு கடலையும் சகரர்கள் போல மூன்று நாட்களில் பல வாவிகளையும் குளங்களையும் தோண்டினர்.

2803. வண்டுகள் ஒலிக்கும் மணம் நிறைந்த தண்ணிய வேப்ப மாலையை அணிந்த பாண்டியனும், வாதவூரடிகள் வரையறுத்துக் கூறிய மூன்று நாளும் கழிந்த பின், ''இன்னும் குதிரைகள் வரக் காணோம்''- என்று கருதி அவரை அழைத்தான். மாணிக்கம் போலும் சொற்களைக் கூறும் நாவினையுடைய அவ்வமைச்சரைத் தண்டிப்பவன் போல் சினந்தான்.

அரசன் வாதவூரரைத் தண்டிக்கச் சொல்லல்

2804. ''இவன் குதிரைகள் வாங்கியவாறு என்னே! அவை வருதல் எப்பொழுதோ?'' - என்று கூறித்தன்னெதிரே நின்ற வஞ்சக மனமுடைய தறுகண்மையுடைய தண்டலாளர் சிலரைப் பார்த்து, அச்சத்தைத் தரும் இத்திருடனைக் ''கொண்டுபோய்த் தண்டித்து எமது பொன் முழுவதையும் அறுதியாக வாங்குங்கள், போங்கள்'' என்று கட்டளை இட்டான்.

தண்டலர் துன்புறுத்தல்

2805. மலை போன்ற தோளையுடைய மன்னனது சினத்தினை ஏவலாளர் கண்டு பயந்து அவன் எதிர் நில்லாமல், விடாது பாசம் சூழ்ந்தாற்போல் சூழ்ந்து தொடர்ந்து சென்று, ''இனிப் பொன் கொடுப்பதற்கு வகையாது? கூறும்'' என்று சினத்துடன் கூறி, அருள் உள்ளமுடைய அடிகளார் மேல் பாரஞ்செறிந்த கல்லை ஏற்றினார்கள்.

2806 பொன்னெடுஞ் சயிலங் கோட்டிப் புரம்பொடி படுத்த வீரர்
சொன்னெடுந் தாளை யுள்கி நின்றனர் சுமந்த பாரம்
அந்நெடுந் தகையார் தாங்கி யாற்றினார் அடைந்த வன்ப
தந்நெடும் பார மெல்லாந் தாங்குவா ரவரே யன்றோ

2807 சிலையது பொறைதோற் றாது சிவனடி நிழலி னின்றார்
நிலையது நோக்கி மாய நெறியிது போலும் என்னாக்
கொலையது வஞ்சா வஞ்சர் கொடுஞ்சினந் திருகி வேதத்
தலையது தெரிந்தார் கையுந் தாள்களுங் கிட்டி யார்த்தார்.

2808 அக்கொடுந் தொழிலும் அஞ்சா திருந்தன ரரனை யுள்கி
இக்கொடுந் தொழிலி னார்தா மினிநனி யொறுப்ப
ரென்னாப்
புக்கது காண்டற் குள்ளம் பொறானென விரவிப் புத்தேள்
மிக்கதன் னொளிகண் மாழ்கி விரிகட லழுவத் தாழ்ந்தான்.

2809 சுந்தர விடங்க ரன்பர் சூழ்துயர் அகற்ற நேரே
வந்தெழு காட்சி போல வந்தது செக்கர் வானம்
இந்தவர் மார்பந் தூங்கு மேனவெண் கோடு போன்ற
தந்தர வுடுக்க ளெல்லா மயன்றலை மாலை யொத்த.

2806. நெடிய பொன்மலையை வில்லாக வளைத்து, முப்புரங்களையும் எரித்த வீரராகிய சிவபெருமானின் திருவடியை மனதின்கண் நினைத்த வாதவூரடிகளின் அப்பெரிய சுமை அனைத்தையும் இறைவர் தாங்கிச் சுமந்தனர். தம்மை அடைந்தவர்களின் பெரிய துன்பங்களை எல்லாம் தாங்குபவர் அவர் அல்லவா?

2807. இறைவர், சுமையைத் தாங்கியமையால் கல்லின் பாரம் தோன்றாமல், சிவபெருமானின் திருவடி நிழலில் தங்கிய வாதவூரடிகளின் தன்மையைப் பார்த்து இது ஒரு மாய வழிபோலும் என்று கருதினர். கொலையினைப் பற்றிச் சிறிதும் அஞ்சாத அக்கொடிய தறுகணாளர், கோபம் கொண்டு, வேதம் உணர்ந்த அடிகளாரின் கைகளிலும் கால்களிலும் கிட்டி கட்டினார்.

மாலைக்காலம் முதலிய வருணனை

2808. அடிகளாரோ அக்கொடிய செய்கைக்கும் அஞ்சாமல் இறைவனை எண்ணித் துன்பமின்றி இருந்தார். இக்கொடிய தண்டலாளர் இனி மிகவும் தண்டிப்பர் என்று கருதி அதனைப் பார்ப்பதற்கு உள்ளம் பொறுக்கலாற்றாதவனைப் போலச் சூரியன் தன்னுடைய மிகுந்த கிரணங்கள் கெட்டு, விரிந்த கடலின் உள்சென்று மறைந்தான்.

2809. அழகிய சோமசுந்தரக் கடவுள் அன்பருக்குச் சூழ்ந்த துன்பத்தைத் தீர்ப்பதற்கு நேரே வந்து எழுந்த தோற்றம் போன்று செவ்வானம் தோன்றியது. மதியானது அவரது மார்பின் கண் கிடந்து அசையவும் பன்றியினது கொம்பினை ஒத்தது. பிரமனது தலை மாலையைப் போன்று நட்சத்திரங்கள் காட்சி அளித்தன.

2810 சுழிபடு பிறவித் துன்பத் தொடுகட லழுவத் தாழ்ந்து
கழிபடு தனையுங் காப்பான் கண்ணுதன் மூர்த்தி பாதம்
வழிபடு மவரைத் தேரான் வன்சிறைப் படுத்த தென்னன்
பழிபடு புகழ்போல் எங்கும் பரந்தது கங்கு லீட்டம்.

2811 கங்குல்வந் திறுத்த லோடுங் கருஞ்சிறை
யறையிற் போக்கிச்
சங்கிலி நிகளம் பூட்டித் தவத்தினைச் சிறையிட் டென்னச்
செங்கனல் சிதற நோக்குஞ் சினங்கெழு காவ லாளர்
மங்குலின் இருண்ட கண்டர் தொண்டரை
மறுக்கஞ் செய்தார்

2812 மிடைந்தவர் தண்டஞ் செய்ய வெஞ்சிறை
வெள்ளத் தாழ்ந்து
கிடந்தவர் கிடந்தோன் பூமேல் இருந்தவன் றேடக் கீழ்மேல்
நடந்தவர் செம்பொற் பாத நகைமலர் புணையாப் பற்றிக்
கடந்தணர் துன்ப வேலை புலர்ந்தது கங்குல் வேலை.

2813 அந்தமில் அழகன் றன்னை யங்கயற் கண்ணி யோடுஞ்
சுந்தர வமளிப் பள்ளி யுணர்ந்துவான் றொண்டர் சூழ
வந்தனை செய்யு மார்ப்பு மங்கல சங்க வார்ப்பும்
பந்தநான் மறையி னார்ப்பும் பருகினார் செவிக ளார.

2810. சுழிந்து வரும் பிறவித் துன்பமாகிய கடலிலே, அழிந்து வீணே கழிகின்ற தன்னையும் காத்தல் பொருட்டு, நெற்றிக்கண்ணையுடைய இறைவன் திருவடியை வணங்கும் வாதவூரடிகளை, அறியாதவனாய் வலிமையாகச் சிறைப் படுத்திய பாண்டியனது பழிபட்ட புகழ் பரவியது போன்று இருள் எங்கும் பரவியது.

வாதவூரரைச் சிறையிடல்

2811. இருள் வந்து சூழ்ந்தவுடன், பெரிய சிறைச் சாலையில் தவதத்தினை விலங்கிட்டுச் சிறைப்படுத்தியது போலச் சிவந்த நெருப்புப் பொறி சிதறியது போன்று சினம்மிக்க தண்டலாளர், இருள் போலும் திருமிடற்றினையுடைய இறைவனது அடியாராகிய வாதவூரடிகளைத் துன்பம் செய்தனர்.

சூரியன் தோன்றுதல்

2812. அத்தண்டலாளர் அங்ஙனம் நெருங்கித் துன்பம் செய்ய, கொடிய சிறையாகிய கடலில் அழுந்திக் கிடந்த வாதவூரடிகள் பாற்கடலில் கிடந்த திருமாலும், தாமரை மலரில் இருந்த பிரமதேவனும் முறையே கீழும் மேலும் தேடி நிற்க, நீண்டவரது சிவந்த பொன் பொன்ற திருவடி மலரை புணையாகப் பிடித்துத் துன்பமாகிய கடலைக் கடந்தனர். இராக்காலம் விடிந்தது.

2813. அளவில்லாத பேரழகனாகிய சோமசுந்தரக் கடவுள், அங்கயற்கண்ணம்மையுடன் அழகிய படுக்கையிலிருந்து துயில் எழுவதற்காக அடியார்கள் நெருங்க அவர்கள் வழிபடும் ஒலியும், சங்குகளின் ஒலியும், நான்கு வேதங்களின் ஒலியும் ஆகிய இவற்றைச் செவிகள் நிறையுமாறு வாதவூரடிகள் கேட்டறிந்தார்.

2814 போதவா நந்தச் சோதி புனிதமெய்த் தொண்டர்க் காக
நாதமா முரச மார்ப்ப நரிப்பரி வயவர் சூழ
வேதவாம் பரிமேற் கொண்டு வீதியில் வரவு காணுங்
காதலான் போலத் தேர்மேற் கதிரவன் உதயஞ் செய்தான்.

2815 கயனெடுங் கண்ணி யோடுங் கட்டவிழ் கடிப்பூஞ் சேக்கைத்
துயிலுணர்ந் திருந்த சோம சுந்தரக் கருணை வெள்ளம்
பயினெடுஞ் சிகர நோக்கிப் பங்கயச் செங்கை கூப்பி
நயனபங் கயநீர் சோத நாதனைப் பாடல் உற்றார்.

வேறு

2816 எந்தா யனைத்துலகும் ஈன்றா யெத் தேவர்க்குந்
தந்தாய் செழுங்குவளைத் தாராய் பெருந்துறையில்
வந்தாய் மதுரைத் திருவால வாயுறையுஞ்
சிந்தா மணியே சிறியேற் கிரங்காயோ.

2817 மூவா முதலாய் முதுமறையா யம்மறையுந்
தாவாத சோதித் தனிஞான பூரணமாய்த்
தேவாதி தேவாய்த் திருவால வாயுறையும்
ஆவார் கொடியா யடியேற் கிரங்காயோ.

2814. ஞானானந்த ஒளிப் பிழம்பாகிய இறைவன், தூய உண்மைத் தொண்டருக்காகத் தத்துவமாகிய முரசு ஒலிக்கவும் நரியாகிய குதிரையின் வீரர் சூழவும் வேதமாகிய குதிரையின் மேல் ஏறியருளி மதுரைத் திருவீதியின்கண் வருதலைக் காணும் விருப்பமுடையவன் போலச் சூரியன் கீழ்த்திசையில் உதயமானான்.

சோமசுந்தரக் கடவுளைத் துதித்தல்

2815. மிக்க மணம் பொருந்தி மலர்ப் பள்ளியினின்றும், கயல் போலும் கண்களையுடைய பிராட்டி யோடும் துயில் நீங்கியிருந்த சோமசுந்தரராகிய அருள் வெள்ளம் எழுந்தருளிய நீண்ட விமானத்தை நோக்கி, தாமரை மலர் போலும் சிவந்த கரங்களைக் குவித்துக் கண்ணாகிய தாமரையினின்று ஆனந்தக் கண்ணீர் ஒழுக வாதவூரடிகள் இறைவனைப் பாடத் தொடங்கினார்.

2816. ''எமது தந்தையே! உலகமனைத்தையும் பெற்றவனே! எல்லாத் தேவர்களுக்கும் தந்தையே! செழிய குவளை மலர் மாலையை அணிந்தவனே! அவ்வாறு மாலை அணிந்து அடியேனை ஆட்கொள்ளும் பொருட்டுத் திருப்பெருந் துறைக்கு வந்தருளியவனே! மதுரை என்னும் திருவாலவ்ாயில் வீற்றிருக்கும் சிந்தாமணியே! சிறியேனாகிய என்கடு இரங்கி அருளாயோ?

2817. ''கெடாத முதலாகியும், பழைய வேதமாகியும் அவ்வேதமும் தாவாத ஒளியுருவாகிய ஒப்பற்ற ஞான நிறைவாகியும், தேவாதி தேவனாகியும் திருவாலவாயின் கண் எழுந்தளிய நீண்ட இடபக் கொடியை உடையவனே! அடியேனாகிய எனக்கு இரங்கி அருளாயோ?

2818 முன்னா முதுபொருட்கு முன்னா முதுபொருளாய்ப்
பின்னாம் புதுமைக்கும் பின்னாகும் பேரொளியாய்த்
தென்னா மதுரைத் திருவால வாயுறையும்
என்னா யகனே யெளியேற் கிரங்காயோ.

2819 மண்ணாய்ப் புனலாய்க் கனலாய் வளியாகி
விண்ணாய் இருசுடரா யித்தனையும் வேறாகிப்
பண்ணா யிசையாய்ப் பனுவலா யெங்கண்ணுங்
கண்ணானா யென்றுகண் காணாவா றென்கொலோ

2820 பொங்குஞ் சினமடங்கல் போன்றுருந்து வெங்கூற்றம்
அங்கும் புரியா வருந்துன்பத் தாழ்ந்துநான்
மங்கும் படியறிந்தும் வந்தஞ்ச லென்கிலையால்
எங்குஞ் செவியுடையாய் கேளாயோ வென்னுரையோ.

2821 பூட்டியருட் பாசமிரு பாதம் பொறித்துடலிற்
கூட்டி யடியாருள் அகப்படுத்தாட் கொண்டருமை
காட்டியவோ வின்றென்னைக் கைவிட்டாய் வெய்யரெனை
ஆட்டி யொறுக்குமிடத் தாரேனென்று கொள்வாரே.

2822 ஊரா ருனைச்சிரிப்ப தோராயென் றுன்னடிமைக்
காரா யடியே னயர்வேன் அஃதறிந்த
வாரா யரசன் றமரிழைக்கும் வன்கண்ணோய்
பாரா யுன்றன்மை யிதுவோ பரமேட்டி.

2818. ''முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பின்னாகும் பேரொளியாய், தெற்கின்கண் உள்ளதாகிய மதுரை என்னும் திருவாலவாயின்கண் எழுந்தருளிய என் நாயகனே! எளியேனாகிய எனக்கு இரங்கி அருளாயோ?

2819. ''நிலனாகியும், நீராகியும், நெருப்பாகியும், காற்றாகியும் வானாகியும் இரண்டு சுடராகியும், பண்ணாகியும் இசையாகியும் பாட்டாகியும் எவ்விடத்தும் நிறைந்தவனே! எனது துன்பத்தை நீ காணாதது எவ்வாறோ? அறியேன்.

2820. ''கொடிய கூற்றுவன் சினம் மிக்க ஊழித் தீ போன்று கொதித்து, அவன் உலகத்திலும் செய்யாத பொறுத்தற்கரிய துன்பக் கடலுள் அடியேன் அழுந்தி மங்கும் தன்மையை அறிந்திருந்தும் வந்து, ''அஞ்சாதே' என்று அருளிச் செய்ய வில்லை. எங்கும் காதுடையவனே! எனது முறையீட்டினைக் கேட்டருளாயோ?

2821. ''அருளாகிய பாசத்தால் பிணித்து, முடியில் இரண்டு திருவடிகளையும் சூட்டி, அடியாருள் ஒருவனாக்கி, ஆட்கொண்டு அருளைக் காட்டியவனே! இன்று என்னைக் கைவிட்டாய். கொடிய இந்தண்டலர்கள் என்னைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும்போது தாங்குபவர் யார்?

2822. ''ஊரில் உள்ளவர் உன்னை எள்ளி நகையாடிக் கொண்டிருப்பதை அறியாமல் இருக்கின்றாய் என்று கருதி உன் அடிமைக்கு ஆராகியோ? அடியேன் அயர்கின்றேன். அஃது அறிந்தும் வரவில்லை. மன்னனுடைய ஏவலர் செய்யும் கொடிய துன்பத்தைப் பார்த்தாய் இல்லை. பரமனே இதுவோ உனது தன்மை?''

வேறு

2823 என்றி ரங்குவோ ரிரங்கொலி யிளஞ்சிறார் அழுகை
சென்று தாயர்தஞ் செவித்துளை நுழைந்தெனச் செல்லக்
குன்றி ருஞ்சிலை கோட்டிய கூடனா யகன்கேட்
டன்று வன்சிறை நீக்குவான் றிருளவுத் தமைத்தான்

2824 நந்தி யாதியாம் பெருங்கண நாதரை விளித்தான்
வந்தி யாவரும் பணிந்தனர் மன்னவற் கின்று
முந்தி யாவணி மூலநாள் வந்தது முனிவு
சிந்தி யாமுனம் பரியெலாஞ் செலுத்துவான் வேண்டும்

2825 யாவ ரும்புனத் தியங்குறு நரியெலா மீட்டித்
தாவ ரும்பரி யாக்கியத் தாம்பரி நடாத்துஞ்
சேவ கஞ்செய்வோர் ஆகிமுன் செல்லுமுன் யாமும்
பாவ கம்பட வருதுமப் படியெனப் பணித்தான்.

2826 ஏக நாயக ணாணைபூண் டெழுகணத் தவரும்
நாக நாடரும் வியப்புற நரியெலாந் திரட்டி
வேக வாம்பரி யாக்கியவ் வெம்பரி நடாத்தும்
பாக ராயினார் அவர்வரும் பரிசது பகர்வாம்.

2823. என்று கூறி வருந்தும் வாதவூரடிகளின் முறையீட்டொலி, இளம் சிறுவர்களின் அழுகை ஒலிபோல் தாயரின் காதுகளில் நுழைந்தாற்போல, இறைவனின் திருச் செவியில் நுழைய, மேருமலையைப் பெரிய வில்லாக வளைத்த கூடல் நாயகன் அதனைக் கேட்டு அப்போது வலிய சிறையை நீக்க வேண்டும் என்று திருவுள்ளத்தில் நினைத்தான்.

இறைவர் கண நாதர்களை அழைத்தல்

2824. இறைவன் திருநந்திதேவர் முதலிய பெரிய கணத் தலைவர்களை அழைத்தான். அனைவரும் வந்து வணங்கினர். ''ஆவணித் திங்கள் மூல நாள் முற்பட்டே வந்து விட்டது, மன்னன் சினம் கொள்ளும் முன்னே அவனுக்குக் குதிரைகள் எல்லாம் கொண்டுபோய்க் கொடுத்தல் வேண்டும்.

2825. ''நீவிர் அனைவரும் காட்டில் உலவும் நரிகள் அனைத்தையும் கொண்டு வந்து தாவிச் செல்லும் குதிரைகளாக்கி, நீங்கள் அக் குதிரைகளை நடத்தும் சேவகராகி, அவற்றின் மீது ஏறிக் கொண்டு முன்னே செல்லுங்கள். நாமும் நோக்குவோர்க்கு குதிரைச் சேவகர் என்ற கருத்து உண்டாக அவ்வாறே வருகின்றோம்'' என்று அருளிச் செய்தார்.

2826. ஒப்பற்ற இறைவனது இவ்வாணையை ஏற்றுக் கொண்டு எழுந்த கணத் தலைவரும் தேவர்களும் வியப்படையும்படி நரிகள்ள எல்லாம் ஒன்றாக ஓரிடத்தில் சேர்த்து, விரைவாய்த் தாவும் குதிரைகளாக மாற்றி, அக் குதிரைகளை நடத்துகின்ற பாகராயினர். இனி அப்பாகர் வரும் தன்மையைக் கூறுவோம்.

2827 தூக்கி யார்த்தசெம் பட்டினர் சுரிகையர் தொடுதோல்
வீக்கு காலின ரிருப்புடற் காப்பினர் வெருளின்
நோக்கு பார்வையர் புண்டர நுதலினர் அடியிற்
றாக்கி யார்ப்பெழு நகையினர் தழன்றெழு சினத்தோர்.

2828 வட்டத் தோல்வரி புறங்கிடந் தசையவை வடிவாள்
தொட்ட கையினர் சிலர்நெடுந் தோமரஞ் சுழல
விட்ட கையினர் சிலர் வெரிநிடை நெடுக விசிக
புட்டில் வீக்கிவிற் றூக்கிப் புயத்தினர் சிலரால்.

2829 செம்ப டாஞ்செய்த போர்வையர் சிலர்பசும் படத்தான்
மொய்ம்பு வீக்கிய கவயத்தர் சிலர்கரு முகில்போல்
அம்பு யம்புதை காப்பினர் சிலர்சிலர் அவிரும்
பைம்பொன் வாணிறப் படாஞ்செய்குப் பாயத்தர் சிலரால்.

2830 பிச்ச வொண்குடை யார்பலர் கவரிபால் பிறங்கத்
தைச்ச தண்குடை யார்பலர் கல்லிசூழ் நாற்றி
வைச்ச வண்குடை யார்பலர் வாணிலா முத்தம்
மொய்ச்ச வெண்குடை யார்பலர் மொய்ம்பினர் இவருள்.

கணநாதராகிய குதிரை வீரர்கள்

2827. அக் குதிரைச் சேவர்கள் எல்லாம் செம்பட்டாடையைத் தூக்கிக் கட்டி இருந்தனர். உடைவாளை அணிந்திருந்தனர். காலில் செருப்பினையும், உடலில் கவசத்தையும் தரித்தனர். கண்டவர்கள் அஞ்சத் தகுந்த கண்ணையுடையவர். திரு நீற்றினை முப்பட்டையாக நெற்றியில் அணிந்தனர். இடிபோலும் தாக்கி ஒலி எழும் நகையினையும், கொதித்து எழும் சினத்தையும் உடையவர்.

2828. அவர்களுள் சிலர் வட்டமாகிய கேடகத்தை முதுகில் அணிந்திருந்தனர். கூரிய வாட்படையை உடைய கையினர் சிலர். சிலர் தம் கையில் நீண்ட தண்டத்தைச் சுழல விட்டிருந்தனர். முதுகில் நீண்ட அம்புக் கூட்டினைக் கட்டி வில்லைத் தொங் விட்ட தோளினர் சிலர்.

2829. சிவந்த ஆடையாற் செய்த போர்வையினை உடையவர் சிலர். பசிய ஆடையால் தோளில் இறுக்கிக் கட்டிய கவசம் உடையவர் சிலர். கரிய மேகம் போல அழகிய தோளை மறைத்த கவசம் உடையவர் சிலர். பொன்போன்ற ஒள்ளிய நிறத்தையுடைய ஆடையாற் செய்த சட்டையை உடையார் சிலர்.

2830. பீலிக்குஞ்சம் கட்டிய குடையினை உடையவர் பலர். கவரிமானின் வாலால் தைத்த குளிர்ந்த குடையினையுடையவர் பலர். சுற்றிலும் சல்லி தொங்கத் தைக்கப்பட்ட குடையினர் பலர். ஒளியையுடைய முத்துக்கள் நெருக்கமாக அமைக்கப்பட்ட வெண்குடையினர் பலர். வலிமை மிக்க இவர்களுக்கு நடுவே,

2831 தரும மாதினாற் பொருளெனுந் தாளது ஞான
கரும காண்டமாஞ் செவியது காட்சியைக் கடந்த
ஒருமை யாம்பர மபரமாம் உணர்வெனுங் கண்ண
தருமை யாம்விதி முகத்தது நிடேதவா லதுவால்.

2832 தந்தி ரங்களாற் புறவணி தரித்தது விரித்த
மந்தி ரங்களாற் சதங்கைதார் மணிச்சிலம் பணிந்த
தந்த ரஞ்சுழல் சோமனும் அருக்கனு மிதிக்குஞ்
சுந்த ரப்பதம் பொறைகொளத் தூங்கிரு புடைத்தால்.

2833 மாண்ட தாரகப் பிரமமாங் கலினம்வாய் கிழியப்
பூண்ட தாற்புறச் சமயமாம் பொருபடை முரிய
மூண்டு போரெதில் விளைத்திகன் முடிப்பது முளரி
ஆண்ட கோமுக மந்துரை யாகமே வியதால்.

2834 அண்ட கோடிகள் அனைத்து மோர் பிண்டமாவடுக்கி
உண்ட நீரதா முதுகின்மே லுபநிடக் கலணை
கொண்ட வாலிய வைதிகப் புரவிமேற் கொண்டான்
தொண்டர் பாசவன் றொடரவிழ்த் திடவருஞ் சோதி.

2835 ஆன மந்திரக் கிழார்பொருட் டன்றியும் வென்றி
மீன வன்பிறப் பறுக்கவும் வார்கழல் வீக்கி
வான நாயகன் ஏந்திய மறையுறை கழித்த
ஞான வாள்புற விருளையு நக்கிவா ளெறிப்ப.

இறைவன் மறைப்பரி வீரராக எழுந்தருளல்

2831. தருமம் முதலிய நான்கு பொருளாகிய நான்கு கால்களையுடையது. ஞான கண்டமும் கரும காண்டமும் ஆகிய இரண்டு காதுகளை உடையது. காட்சியைக் கடந்த ஒருப்பாடாகிய பரஞானமும் அபர ஞானமுமாகிய இரண்டு கண்களையுடையது. அருமையான விதியாகிய முகமுடையது. (விதி) விலக்காகிய வாலினையுடையது.

2832. ஆகமங்களால் புறத்தில் அணியும் அணியைப் பூண்டது. அவ்வாகமங்கள் விரித்த மந்திரங்களால் சதங்கை மாலையும் கிண்கிணி மாலையும் மணிகள் அமைந்த சிலம் பினையும் அணிந்தது. மிதிக்கின்ற அழகிய திருவடிகளைத் தாங்க வானில் சுழலும் சந்திரனும் சூரியனுமாகிய அங்கவடிகள் தொங்குகின்ற இரு மருங்கினையுடையது.

2833. பெருமையான பிரணவமாகிய கடிவாளத்தை வாய் கிழியப் பூண்டது. புறச் சமயங்களாகிய போர் செய்யும் படைகள் புறம் கொடுக்குமாறு சினத்துடன் எதிர் நின்று போர் செய்து பகையை முடிப்பது. தாமரை மலரைத் தவிசாக ஆண்ட பிரமனது நான்கு முகங்களையும் பந்தியாகக் கொண்டு பொருந்தியது.

2834. அண்ட கோடிகள் அனைத்தையும் ஒரு பிண்டமாக அடுக்கிய தன்மையுடையதாகிய முதுகின் மேல் உபநிடதக் கலணையினைக் கொண்ட தூய வேதமாகிய குதிரையின்மேல் ஏறியருளினான், அடியாருடைய பாசக் கட்டினை அவிழ்க்க எழுந்தருளி வரும் பரம்சோதியாகிய கடவுள்.

2835. அவ்வாறு ஏறிவரும் சோமசுந்தரக் கடவுள், அமைச்சரான வாதவூரடிகள் பொருட்டல்லாமலும் வெற்றியை யுடைய அரிமர்த்தன பாண்டியன் பிறப்பினை அறுக்கும் பொருட்டும், வீரக்கண்டையைக் கட்டி, திருக்கரத்தில் ஏந்திய வேதமாகிய உரையினின்றும் கழித்த ஞானமாகிய வாள், அகவிருள் அன்றிப் புற இருளையும் போக்கி ஒளி வீசும்.

2836 சாய்ந்த கொண்டையுந் திருமுடிச் சாத்தும்வாள் வைரம்
வேய்ந்த கண்டியுந் தொடிகளுங் குழைகளும் வினையைக்
காய்ந்த புண்டர நுதலும்வெண் கலிங்கமுங் காப்பும்
ஆய்ந்த தொண்டர்த மகம்பிரி யாதழ கெறிப்ப.

2837 பிறக்கு மாசையோர் மறந்துமிங் கணுகன்மின் பிறப்பை
மறக்கு மாசையோர் இம்மென வம்மினன் பரைவேந்
தொறுக்கு நோய்களை வானென வொருவனும் பிறவி
அறுக்க வந்தன னென்பபோற் பரிச்சிலம் பலம்ப.

2838 கங்கை யைச்சடை முடியின்மேற் கரந்தனை யவள்போல்
எங்க டம்மையுங் கரந்திடென் றிரந்து காவேரி
துங்க பத்திரை யாதியா நதிகளுஞ் சூழப்
பொங்க வீழ்வபோல் ஒலியலுங் கவரியும் புரள.

2839 வாவி நாறிய வாலிதழ்த் தாமரை மலரோன்
நாவி நாளுமை நாயக னான்மறை பரியா
மேவி னானெனத் தானொரு வெண்குடை யாகிப்
பாவி னாலென முடியின்மேற் பானிலாக் கால.

2830 முறையி னோதிய புராணமூ வாறுநா மொழியும்
இறைவ னாமிவன் படைத்தளித் தழிப்பவன் இவனே
மறையெ லாமுறை யிடுபரம் பொருளென வாய்விட்
டறையு மாறுபோ லியங்களி ரொன்பது மார்ப்ப.

2836. புறம் சாய்ந்த கொண்டையும், திருமுடிப் பாகையும், வைரம் பதித்த கண்டிகைகளும், வீர வளைகளும் குண்டலங் களும், வினைகளைப் போக்கும் திருநீற்றினை மூன்று கீற்றுகளாக அணிந்த நெற்றியும், வெள்ளாடையும், கவசமும், ஆராய்ந்து அறிந்த தொண்டர்கள் மனத்தில் என்றும் நீங்காது அழகினை வீசும்.

2837. 'பிறக்கும் ஆசையுடையவர் மறந்து கூட இங்கு வரவேண்டாம். பிறப்பினைப் போக்கும் விருப்பம் உடையவர் விரைந்து வாருங்கள். மாணிக்க வாசகரைப் பாண்டியன் தண்டிக்கும் துன்பத்தினைப் போக்கும் பொருட்டு வருதல் போல இறைவன் நம் பிறவியைப் போக்க வந்தனன்'' என்று சொல்லுவது போல் குதிரைச் சிலம்புகள் ஒலித்தன.

2838. 'கங்கையைச் சடையிலே ஒளித்து அருளினை, அவளை மறைத்தது போல் எங்களையும் மறைத்து அருள் வாயாக' என்று வேண்டிக் காவிரி துங்கபத்திரை முதலிய நதிகளும் சூழப் பொங்கி வருவது போல மேலாடையும் சாமரையும் புரண்டன.

2839. தடாகத்தில் தோன்றிய தூய இதழ்களையுடைய தாமரை மலரில் தோன்றியிருப்பவனாகிய பிரமனது நாவில் வசிக்கும் கலைமகள், உமைகணவனாகிய சோம சுந்தரக்கடவுள் நான்கு மறைகளையும் குதிரையாகக் கொண்டு வந்தனன் எனக்கருதித் தான் ஒரு குடையாகிக் கவிந்தாற் போலத் திருமுடியின் மேல் வெண் கவிகை பால் போன்ற நிலவினை வீசியது.

2840. முறைப்படி ஓதிய புராணங்கள் பதினெட்டும் ''இவன்தான் நாங்கள் கூறும் இறைவன் ஆவான். படைத்துக் காத்து அழிப்பவனும் இவனேதான், வேதங்கள் எல்லாம் முறையிடும் பரம்பொருளும் இவனேதான்'' என்று வாய்விட்டுக் கூறுவன போலப் பதினெட்டு வகை வாத்தியங்கள் முழங்கின.

2841 மிடைந்த மாயவாம் பரித்திரள் மேற்றிசை நோக்கி
நடந்த நாயக னான்மறைப் புரவியு நாப்பண்
அடைந்த தாலெழுந் தூளிகள் அண்டமுந் திசையும்
படர்ந்த போம்வழி யாதென மயங்கினான் பரிதி.

2842 பள்ள மாக்குவ திடரினைப பள்ளத்தை மேடு
கொள்ள வாக்குவ பாரெலாம் விலாழிகொப் பளித்து
வெள்ளம் ஆக்குவ தூளியால் வெள்ளத்தை வெறிதாய்
உள்ள தாக்குவ புள்ளுவ வுருக்கொண்ட பரிமா.

2843 கொய்யு ளைப்பரி யெழுந்ததூள் கோப்பவான் கங்கை
வையை யொத்ததேழ் பசும்பரி செம்பரி மாவாச்
செய்த தொத்தது சிந்துரந் திசைக்கய முகத்துப்
பெய்த தொத்ததால் ஒத்தது பெரும்பகன் மாலை.

2844 விளம்பு கின்றவச் சம்புவெம் பரித்திரண் மிதிக்குங்
குளம்பு கிண்டிய வெழுந்ததுள் குன்றிற் கரிந்தோன்
வளம்பு குந்தடை வார்குர வழிபுரி வேள்விக்
களம்பு கைந்தெழு தோற்றமே யல்லது கடாதால்.

2845 மட்பு லந்திசை வான்புதை பூழியுண் மறைந்து
கொட்பு றும்பரி சதங்கைதா ரொலியினுங் குளிர்வான்
பெட்பு றுங்குரல் ஒலியினுஞ் செவியினிற் பிறிது
கட்பு லங்களாற் கண்டிலர் வழிவரக் கண்டோர்.

மாயக்குதிரை திரண்டு வரும் தோற்றம்

2841. மாயமாகிய குதிரைக் கூட்டங்கள் மேற்குத் திசையினை நோக்கி நடந்தன. இறையவர் ஏறிய வேதமாகிய குதிரை இவற்றின் நடுவே வந்தது. குதிரைகளின் செலவால் மேலெழுந்த புழுதிகள் அண்டங்களிலும் எல்லாத் திக்குகளிலும் பரவின. அதனால் சூரியன், தான் செல்லும் வழியை அறியாது மயக்கமுற்றான்.

2842. வஞ்சக வடிவம் கொண்ட குதிரைகள் மேட்டினைப் பள்ளம் ஆக்குவன. பள்ளத்தை மேடாக்கின. பார் முழுவதும் வாய் நுரையைக் கொப்பளித்தலால் வெள்ள மாக்குவன. குளம்பிலிருந்து எழும் புழுதி அவ்வெள்ளத்தை வற்றச் செய்து நிலமாக்கியது.

2843. கொய்த புற மயிரியனையுடைய குதிரைகளால் எழுந்த புழுதி எங்கும் பரவியதால் ஆகாய கங்கை வையை ஆற்றினை ஒத்தது. சூரியனின் ஏழு பச்சைக் குதிரைகளும் சிவந்த குதிரைகளை ஒத்தன, திக்கு யானைகள் தம் முகத்தில் சிந்தூரம் அப்பியதைப் போலத் திகழ்ந்தன. நடுப்பகல் மாலைப் பொழுதை ஒத்தது.

2844. நரியாகிய அச் சிறப்புமிக்க குதிரைகளின் குளம்புகள் மிதித்துக் கிண்டுதலால் எழுந்த புழுதியின் தோற்றம், மலைகளின் சிறகுகளை அரிந்த இந்திரனின் பதவியை அடைய விரும்புவோர் செய்கின்ற வேள்விச் சாலையினின்று புகை, புகைந்து எழும் தோற்றம் ஒத்திருந்தது.

2845. நிலவுலகையும், திக்குகளையும், வானுலகையும் மூடிய புழுதியுள் மறைந்து சுழன்று வரும் குதிரைகள் வழியிலே வருதலை, அவற்றின் சதங்கை மாலை, கிண்கிணி மாலைகளின் ஒலியாலும், கனைப் பொலியாலுமே மக்கள் அறிந்தனர். கண்களால் காணாதவராயினர்.

வேறு

2846 தரங்கமெறி முத்திவை விலாழியல தார்மா
இரங்குமொலி யல்லதிரை யோங்குமொலி யின்ன
துரங்கமல மற்றிவை சுரர்க்கரச னின்றும்
புரங்கொல விடுத்திட வரும்புணரி யென்பார்.

2847 இம்பருல குள்ளவல பண்டினைய பாய்மா
உம்பருல காளிபரி யேகொலது வொன்றே
வெம்பரிதி வெம்பரிகொ லேழவைக ளேழும்
பைம்பரிகள் யாவினைய பாய்பரிகள் என்பார்.

2848 வெம்பணிக ளைப்பொர வெகுண்டெழுவ தேயோ
பைம்புனல் உடுத்தமுது பார்முதுகு கீறும்
உம்பருல கைப்பொர வுருத்தெழுவ தேயோ
அம்பர முகட்டன வடிக்குர மழுத்தும்.

2849 உத்தர திசைப்புரவி தெற்கடையு மாறும்
அத்தகைய தெற்குள் வடக்கடையு மாறும்
அத்தகை குடக்கொடு குணக்கடையு மாறுஞ்
சித்தர்விளை யாடலின் வெளிப்படுதல் செய்யா.

கண்டவர் கூற்று

2846. ''இவை வாய் நுரைகள் அல்ல. கடல் அலைகள் வீசும் முத்துக்கள்'' என்றும், ''இவை கிண்கிணி மாலை அணிந்த குதிரைகளின் கனைப்பொலி அல்ல, கடல் அலைகள் ஒலிக்கும் ஒலி அலையாம்'', என்றும், இங்கு வருபவை குதிரைகள் அல்ல, தேவேந்திரன் இப்போது இந்நகரத்தை அழித்தற் பொருட்டு விடும் கடலாகும்'' - என்றும் கூறுவர்.

2847. இக்குதிரைகள் இதற்குமுன் இந்நிலவுலகில் உள்ளன அல்ல; மேலுலகை ஆளும் இந்திரன் குதிரையோ? எனின், அஃது ஒன்றே ஆதலின் அதுவும்அல்ல. வெம்மையையுடையை சூரியனின் குதிரைகளோ எனின் அவை ஏழு; அவ்வேழும் பச்சைக் குதிரைகள் ஆதலின் அவையும் அல்ல. ஆதலால் இக்குதிரைகள் யாவை? என ஒருவரை ஒருவரை வினவுவார்.

2848. கரிய கடலினை ஆடையாக உடுத்த பழைய நிலமகளின் முதுகினைக் குளம்பாற் கிழிக்கும் தன்மையோடு வெகுண்டு எழுந்து வருதல் பாதாலத்தில் வசிக்கும் அனந்தன் முதலிய பாம்புகளைப் பொருது அழிப்பதற்கோ? அல்லது வானின் முடிவரையும் அடிக்குளம்பினால் அழுத்துவது வானுலகைப் பொருது அழிப்பதற்கோ? அறியோம்.

2849. சித்தருடைய விளையாட்டுப் போல வடதிசையில் உள்ள குதிரைகள் தென் திசையை அடையும் வகையும் தெற்கின் கண் சென்றுள்ள அவை வடக்கின் கண் அடையும் வகையும், அவ்வாறே கிழக்கிலிருந்து மேற்கிலும் மேற்கிலிருந்து கிழக்கிலும் செல்லும் தன்மையும் தோன்றவில்லை.

2850 மறைமரபு சாலவரும் வன்னியிவை பொன்னித்
துறைவனுள முஞ்சுடு மிரும்பனை தொடுக்கும்
அறைவனுள முஞ்சுடும் அமைச்சரை யொறுக்கும்
இறைவழுதி யுள்ளமு மினிச்சுடுவ தென்பார்.

2851 முந்தையொரு மந்திரி பொருட்டரசன் முன்னா
அந்தமி லனீகமொ டரும்பரியில் வந்தாங்
கிந்தமறை மந்திரி யிடும்பைதணி விப்பான்
வந்தணர்கொ லிப்பரி வரும்பொருநர் என்பார்.

2852 காமனிவ னேகொலறு காலுமு கடப்பந்
தாமனிவ னேகொல்பொரு தாரகனை வென்றோன்
மாமனிவ னேகொன்மலை வன்சிற கரிந்த
நாமனிவ னேகொலென நாரியர் அயிர்த்தார்.

2853 அடுத்திடுவர் கண்ணிறைய வண்ணலழ கெல்லாம்
மடுத்திடுவர் கைவளையை மாலைவிலை யென்னக்
கொடுத்திடுவர் மாலைகள் கொடுத்திடுதி யன்றேல்
எடுத்திடுதி யெங்கள்வளை யெங்கள்கையில் என்பார்.

2850. பரிநூலின் இலக்கணத்தை உடைய இக்குதிரைகள் ஆகிய நெருப்பு, காவிரி நீர்த் துறையினையும் சோழன் மனத்தையும் சுடும். பனையின் மலராற்றொடுத்த மாலையணிந்த சேரன் உள்ளத்தையும் சுடும். வாதவூரடிகளையும் தண்டிக்கும். பாண்டிய மன்னனின் உள்ளத்தையும் சுடும் என்று கூறுவாராயினர்.

2851. முன்னொரு காலத்தில் சௌந்தர சாமந்தன் என்னும் ஒரு சேனைத் தலைவன் பொருட்டு, பாண்டியன் முன்னே, அளவற்ற சேனைகளோடு, குதிரைமீது இறைவன் வந்தது போல, இக்குதிரையில் வரும் வீரர், இன்று இம் மந்திரியின் துன்பத்தை நீக்கும் பொருட்டு வந்தனரோ'' என்று பலவாறு கூறுவர்.

பெண்கள் கூறும் கூற்று

2852. பெண்கள், வேதமாகிய குதிரையின் மீது வரும் வீரனாகிய பேரழகனைக் கண்டு, ''இவன் மன்மதனோ?'' அன்றி வண்டுகள் மொய்க்கும் கடப்ப மாலையை அணிந்த முருகனோ? அன்றி, போர் புரிந்து தாரகனைக் கொன்ற அம்முருகப் பெருமானின் மாமனான திருமாலோ? அன்றி மலைகளின் வலிய சிறகை அரிந்த இந்திரனோ?'' என்று ஐயுற்றனர்.

2853. அப்பெண்களுள் சிலர், அப்பேரழகனின் பக்கத்தில் நின்று, அவன் அழகு அனைத்தையும் கண்ணாகிய வாயினால் பருகினர். கைவளைகளை மாலைக்கு விலையெனக் கொடுப்பர். ''மாலை கொடாயேல் அவற்றின் விலையாகக் கொடுத்த எங்கள் வளைகளை எடுத்து எங்கள் கையில் இடுவாயாக'' என்றனர்.

2854 ஏந்தன்முடி மாலைமலர் சிந்தினவெ டுத்துக்
கூந்தலின்மி லைந்துமதன் வாகைமலர் கொள்வார்
சாந்தனைய சிந்தின தனந்தடவி யண்ணற்
றோய்ந்தளவி லாமகிழ்பு துளும்பினவர் ஆவார்.

2855 பொட்டழகன் மார்பிலிடு போர்வைகவ சப்பேர்
இட்டதுமெய் நம்முயிர்த டுத்தமையின் என்பார்
கட்டழகன் மாலையது கண்ணியென வோதப்
பட்டதுமெய் நம்முயிர் படுத்தமையி னென்பார்.

வேறு

2856 இச்சை யால்வடி வெடுப்பவ னிந்திர சால
விச்சை காட்டுவான் எனப்பரி வீரனி லுலகைப்
பிச்ச தேற்றிட மயக்கியுங் காமனிற் பெரிது
நச்சு மாதரை மயக்கியு மிங்ஙன நடந்தான்.

2857 தாவு கந்துகம் இந்திய மொத்தன சயமா
வாவு திண்கண மள்ளர்கண் மனங்களை யொத்தார்
மேவி யம்மனந் தொறுமிடை விடாதுநின் றியக்கும்
ஆவி யொத்தது நடுவரு மருமறைப் பரியே.

2858 துன்னு மின்னிய முழக்கமுந் துரகத வொலியும்
அன்ன வீரர்வா யரவமுந் திசைசெவி டடைப்பக்
கன்னி மாமதில் சூழ்கடி நகர்க்கரைக் காதம்
என்ன வெய்தினான் மறைப்பரிப் பாகனவ் வெல்லை.

2854. இறைவன் திருவடியின் கண் உள்ள மாலையிலிருந்து சிந்தும் மலர்களை எடுத்துச் சிலர் தங்கள் கூந்தலில் சூடி, மதவேளை வென்று வெற்றி மாலை கொள்வர். சிலர் அண்ணலின் திருமார்பில் இருந்து சிந்திய சாந்தினைத் தங்கள் கொங்கைகளில் பூசி அவனைக் கூடியது போன்ற மகிழ்வில் திளைத்தனர்.

(திருவடி மலர்களைச் சூடியதால் காமம் ஒழியப் பெற்றதால் மன்மதனை வென்றனர் என்றார்).

2855. ''பொட்டினை அணிந்த இவ்வழகன் மார்பிலணிந்த போர்வை நம் உயிரை அம்மார்பு கவராது தடுத்ததினால் அதற்குக் கவசம் என்று பெயர் இட்டது சரியே'' என்று சிலர் கூறுவர். ''இப்பேரழகனின் மாலை நமது உயிரை அகப்படுத்தினமையால் அது கண்ணி என்று சொல்லப்பட்டது உண்மையே'' என்று சிலர் கூறுவர்.

2856. தனது இச்சையால் திருவுருவம் எடுக்கும் இறைவன் இந்திரசால வித்தை காட்டுபவனைப் போல, குதிரை வீரனைப் போலத் தன்னைக் காட்டி உலகினர் பித்தை ஏற்குமாறு, அவரை மயக்கியும், மதவேள் போல் காணப் பட்டு மகளிரை மயக்கியும் நடந்தருளினார்.

2857. தாவி வரும் குதிரைகள் ஐம்பொறிகளை ஒத்தன. வெற்றி மிக்க அக் குதிரைகளை நடத்தி வரும் வீரர்களாகிய சிவகணத்தவர், மனங்களை ஒத்தனர். அம்மனங்கள் தொறும் பொருந்தி நின்று இடையறாமல் இயங்கும் உயிர், நடுவே வரும் அரியவேதமாகிய குதிரையினை நடத்தும் இறைவனை ஒத்தது.

2858. நெருங்கிய வாத்தியங்களின் பேரொலியும், குதிரைகளின் கனைப் பொலியும், அக்குதிரை வீரர்களின் வாய் ஒலியும் திக்குகளைச் செவிடாக்க, வேதக் குதிரையின் பாகமாகிய இறைவன் அழியாத பெருமதில் சூழ்ந்த காவலையுடைய அம் மதுரைக்கு அரைக்காக தூரத்தில் வந்தருளினார்.

வேறு

2859 கண்டவர் கடிதோடிக் கடிநகர் குறுகிக்கார்
விண்டவழ் மணிமாடத் தடுசிறை மிடைகின்ற
கொண்டலின் அனையார்முன் குறுகினர் மலர்செவ்வி
முண்டக வதனத்தார் முகிழ்நகை யினர்சொல்வார்.

2860 மன்னவ னெறிகோடா மந்திரர் அடலேறே
பன்னிற வெழுமுந்நீர்ப் பரவைகள் வருமாபோற்
றுன்னின வருகின்ற துரகத முளவெல்லாம்
பொன்னெயின் மணிவாயில் புகுவன விதுபோதில்.

2861 ஒல்லையி லதுமன்னற் குரையுமின் எனமேரு
வில்லவ னருள்பெற்ற வேதியர் பெருமான்போய்ச்
செல்லது தளையிட்ட திருமக னருகெய்தி
மல்லணி திணிதோளாய் வருவன பரியென்றார்.

2862 மருத்தென வருகின்ற மாக்கடல் எனமன்னன்
திருத்தணி கடகப்பூண் டெறித்திட வுடல்வீங்கிப்
பெருத்தெழு மகிழ்தூங்கிப் பெருவிலை மணியாரம்
அருத்திகொள் கலைநல்கி யமைச்சரை மகிழ்வித்தான்.

குதிரை வருவதை அமைச்சரிடம் கூறுதல்

2859. குதிரையின் வரவைக் கண்ட சிலர் வேகமாக ஓடி, காவலையுடைய நகரினை அடைந்து, வானின் கண் திகழும் முகில்கள் தவழும் மாடத்தையுடைய, வருத்தும் சிறையின்கண் உள்ள திருவாதவூரர் திருமுன் சென்று மலர்ந்த சிவந்த தாமரை மலர் போன்ற முகமுடையவராய்' நகைப்போடு இதனைக் கூறத் தொடங்கினர்.

2860. ''பாண்டியனது வெற்றி பொருந்திய அமைச்சர் களுள் ஆண் சிங்கம் போன்றவரே! அரசியல் நெறியில் இருந்து வழுவாதவரே! பல நிறமுள்ள ஏழுகடல்களும் வரும் தன்மையைப் போல உலகில் உள்ள குதிரைகள் யாவும் நெருங்கி வருகின்றன. இப்பொழுது மதில் வாயிலில் நுழைந்திருக்கும்''.

வாதவூரகடிள் மன்னனிடம் கூறல்

2861. ''அதனை விரைந்து அரசனுக்கு விளம்பு வீராக'', என்று கூறினார். மேருமலையை வில்லாக உடைய இறைவனுடைய திருவருளைப் பெற்ற மறையவர் தலைவராகிய வாதவூரடிகள், முகிலை விலங்கு பூட்டிய பாண்டியன் வழித் தோன்றலை அடைந்து, ''மற்போர் உடைய அழகிய திண்தோள் மன்னா, குதிரைகள் வருகின்றன!

2862. குதிரை வெள்ளம் காற்றைப்போல விரைந்து வருகின்றது!'' என்று கூறினார். மன்னன், திருத்திய அணி கடகப்பூண் தெறிக்குமாறு உடல் பூரித்து, மகிழ்ந்து பெரிய விலையுள்ள முத்து மாலைகளையும், விரும்பத்தக்க ஆடை களையும் கொடுத்து மந்திரியாகிய வாதவூரடிகளை மகிழ்வித்தனன்.

2863 ஏந்தரி யணைநீங்கி யெழுதிய தலைவாயிற்
போந்தரு கொளிர்மாடம் புகுந்தரி யணைமேவிக்
காந்தளின் விரனல்லார் கவரிகள் புடைவீச
ஆய்ந்தவர் புறஞ்சூழ வடுபரி வரவேற்பான்.

2864 பரனருள் விளையாடல் காட்டிய பரிவெள்ளம்
வருவன சிறுகாலந் தாழ்த்தலு மதிவேந்தர்
புரவலன் மனம்வெள்கிப் பொய்யிது வெனவுள்கி
அருகணை யுழையோரைக் குறித்தனன் அழல்கண்ணான்.

2865 மன்னவர் னினைவற்றான் மந்திரர் பெருமானைத்
துன்னினார் கொடுபோயத் தோள்வலி மறமள்ளார்
உன்னரி தெனவஞ்சா தொறுத்தனர் உரவோர்தந்
தென்னவர் தமையுள்கிச் சேவடி துதிசெய்வார்.

2866 பூவார் முளரிப் புத்தேள் அறியா நெறிதந்தாய்
பாவார் தென்சொற் பனுவன் மாலைப் பணிகொண்டாய்
தேவா தேவர்க் கரசே சிறியே னுறுதுன்பம்
ஆவா வென்னா யஞ்சே லென்னா யறனேயோ.

அரசன் எதிர் கொள்ளல்

2863. சிங்கம் சுமந்த ஆசனத்தில் இருந்து எழுந்து சித்திரம் எழுதிய தலைவாயிலில் வந்து அதனருகில் ஒளி வீசும் மாடத்தில் புகுந்து அங்குள்ள சிங்காதனத்தில் அமர்ந்து செங்காந்தாள் மலர் போன்ற விரல்களையுடைய பெண்கள், இரண்டு பக்கமும் கவரி வீசவும், நூலாய்ந்த நல்லமைச்சர் பக்கத்தில் இருக்கவும் வெற்றி மிகுந்த குதிரைகளை எதிர் கொள்வானானான்.

மீண்டும் அரசன் வாதவூரரைத் தண்டிக்கச் சொல்லல்

2864. சோமசுந்தரக் கடவுள் தமது திருவிளையாடலைக் காட்டும் போருட்டுத் திருவுள்ளம் கெணாடு குதிரைகளின் வரவை சிறிது நேரம் காலம் தாழ்த்தினார். சிறந்த அறிவுடைய அரிமர்த்தன பாண்டியன் மனம் வெஃகி ''இது பொய்'' என்று கருதிக் கோபம் கொண்டு அங்கிருந்து தண்டலரை நெருப்புப் போலும் சிவந்த விழிகளால் நோக்கினான்.

2865. பாண்டியன் எண்ணப்படி, தோள் வலிமையும் கொலைத் தொழிலையும் உடைய அத்தண்டலாளர், அமைச்சர் பெருமானாகிய அடிகளைக் கொண்டு போய், சிறிதும் பழிபாவங்களுக்கு அஞ்சாமல், கண்டோர் நினைவிற்கும் எட்டாத வகையில் தண்டிக்கலாயினர். சிவஞானச் செம்மலாகிய அடிகள், சோமசுந்தரக் கடவுளை நினைத்து அவர் சிறந்த திருவடியைத் துதிப்பாராயினர்.

வாதவூரடிகள் முறையீடு

2866. ''தாமரை மலரில் உள்ள பிரமனும் அறியாத நெறி அளித்தாய்! பாமாலையால் அமைந்த தமிழாற் றொடுத்த பாமாலையைச் சாத்தும் பணியை அடியேனுக்கு அளித்தாய்! தேவ தேவர்க்கரசனே! சிறியேன் படும் துன்பத்திற்கு 'ஐயோ' என்று இரங்குகின்றாயில்லை! அவ்வாறு இரங்கி 'அஞ்சேல்' என்று கூறி அருளுகின்றாயில்லை! இது உனக்குத் தருமமோ?

2867 நெஞ்சே யுரையே செயலே யெல்லா நினவென்றாய்
வஞ்சே போலு மஃதேல் இன்று வாராயோ
பஞ்சே ரடியாள் பாகா கூடற் பரமேட்டீ
அஞ்சே லென்னா யிதுவோ வருளுக் கழைகயா.

2868 காவி நேருங் கண்டா நாயிற் கடையான
பாவி யேனைப் பொருளாக் கொண்டென் பணிகொண்டாய்
ஆவி யோடிவ் வுடலு நினதே யன்றோவின்
றோவி வாளா திருந்தால் யாரேன் உடையானே.

வேறு

2869 என்றிரந் திரங்கு மன்பர் இருசெவி யூடே யேங்குங்
கன்றிளஞ் செவியி னல்லான் கனைகுர லோசை போல
ஒன்றிய சின்னங் காளங் காகள மொலிக்கு மோசை
வென்றிகொள் புரவிச் செந்தூ டிசையெலாம்
விழுங்கக் கண்டார்.

2870 வழுதியும் அறிந்து வாத வூரரை விளித்து வந்த
தொழுகுல வமைச்சர் தம்பாற் றுகடவி ரன்பு கூர்ந்தெம்
பழுதறு கரும நும்போற் பரிக்குநர் யாரை யென்னா
எழுதரு மகிழ்ச்சி மேற்கொண் டளவளா யிருக்கு மெல்லை.

2867. உள்ளமும் உரையும் உடலுமாகிய அனைத்தும் உன்னுடையதே எனறு கூறி அருளினை! அது பொய்யே போலும்! அஃது உண்மையானால் இப்போது வாரா திருப்பாயோ? செம்பஞ்சுக்குழம்பு பூசிய திருவடியை உடைய பிராட்டியாரை ஒரு பாகத்தில் உடையவனே! கூடல் தலைவனே! 'அஞ்சற்க' என்று அருளாய் இல்லை! 'ஐயனே' இங்ஙனம் வாளா இருப்பது நின் அருளுக்கு அழகாகுமோ?

2868. நீலோற்பல மலரைப் போன்ற திருமிடற்றினை யுடையவனே! நாயினும் கடைப்பட்ட பாவியேனை ஒரு பொருளாகக் கொண்டு என் பணியையும் ஏற்றுக் கொண்டருளினை! இவ்வுயிரும் உடலும் நின்னுடையது அல்லவோ? இன்று என்னை நீங்கி நீ வாளா இருப்பாயேல் என்னை உடையானே! என்னைக் காப்பவர் வேறுயார்? ஒருவருமில்லை!''

குதிரைகளின் வரவு

2869. இவ்வாறு குறையிரத்து வருந்தும் வாதவூரடிகள் தன் இரண்டு செவிகளுள்ளும் தாயைப் பிரிந்து வருந்தும் இளம் கன்றின் காதில் தாய்ப் பசுவின் ஒலி சென்றடைதல் போல சின்னமும், காளமும், காகளமும் (ஊதும் எக்காள வகைகள்) எழுப்ம் ஒலி சென்று விழுந்தது. குதிரைகளின் காலடியால் மேலெழுந்த சிவந்த புழுதி, திசைகள் எல்லாம் விழுங்கவும் கண்டார்.

குதிரை வரவை அறிந்து பாண்டியன் மகிழ்தல்

2870. பாண்டியனும் குதிரைகளின் வரவை அறிந்து வாதவூரடிகளை அழைப்பித்து, அவரிடம் குற்றமற்ற அன்பு பாராட்டி, ''எமது குற்றமற்ற அரசியல் வினைகளை நும்மைப் போல் ஏற்றுச் செய்துமுடிப்பவர்யார்?'' என்று கூறி அடங்காத மகிழ்ச்சியோடு அவரோடு அளவளாவி இருந்தான்.

2871 பாயிருட் படலங் கீறிப் பல்கதிர் பரப்பித் தோன்றுஞ்
சேயிளம் பரிதி வானோன் அனையராய்ச் சிறந்த காட்சி
மேயின பாக ரோடும் விலாழியாற் பரவை செய்யும்
வாயின வாகிவந்த மாயவாம் பரிக ளெல்லாம்.

2872 வண்டுமு தாரி னான்றன் மரபின்மன் னவரு முன்னாட்
கண்டறி யாத காட்சிக் கவனவாம் பரியை நோக்கி
அண்டர்நா யகன்போ னாமு மாயிரங் கண்பெற்றாலும்
உண்டமை யரவென் றுள்ளக் குறிப்பொடும்
உவகை பூத்தான்.

2673 தானெென மகிழச்சி யென்னத் தலைதடு மாறி வேந்தன்
மானவெம் பரிமேல் வந்த வயவரை வியந்து மிக்கார்
ஆனவர் இவருள் யாரென் றமைச்சரை வினவ வையா
யானது வறியே னென்றார் யாவையு மறிய வல்லார்.

2874 அண்டமெலா மாதார மாகத்தாங்கு
மானந்தத் தனிச்சோதி யண்டந்தாங்குஞ்
சண்டமறைப் பரிதனக்கா தார மாகித்
தரிக்கவொரு காலத்து மசைவிலாத
புண்டரிகத் தாளசையப் பாச நீங்கும்
புனைகரத்தாற் பரிபூண்ட பாசம் பற்றிக்
கொண்டரசன் எதிர்போந்து மன்னா வெங்கள்
குதிரையேற் றஞ்சிறிது காண்டி யென்றார்.

2871. மாயமாகிய குதிரைகள் அனைத்தும், பரந்த இருள் படலத்தைக் கிழித்துப் பல கிரணங்களைப் பரப்பித் தோன்றுகின்ற இளம் சூரியனைப் போன்ற சிறந்த தோற்றத்தையுடைய பாகர்களோடும், தன் வாய் நுரையால் கடலை உண்டாக்கும் தன்மையுடையனவாய் வந்தன.

2872. வண்டுகள் மொய்க்கும் வேப்ப மலர்மாலையை அணிந்த பாண்டியன், தன் மரபில் தோன்றிய முன்னவர்களும் பார்த்தறியாத தோற்றத்தையுடைய விரைந்த வேகமுடைய தாவும் குதிரைகளைப் பார்த்து, ''நாமும் தேவேந்திரனைப் போல ஆயிரம் விழிகளைப் பெற்றாலும் அவற்றால் இவற்றின் பொலிவு களைப் பார்க்க முடியாது'' என்ற உள்ளக் குறிப்போடு மிகழ்ச்சியுடன் இருந்தான்.

2873. பாண்டியன், தான் என்றும், மகிழ்ச்சி என்றும் பாகுபடுத்தி உணர முடியாமல் பெருமை பொருந்திய குதிரைகளின் வீரரைப் பார்த்து வியப்படைந்து ''இவருள் தலைவர் யார்?'' என்று மந்திரியாகிய அடிகளைப் பார்த்துக் கேட்க, அனைத்தையும் அறியவல்ல அடிகள், ''ஐயனே!, நானும் அதனை அறியேன்'', என்று கூறினார்.

இறைவர் குதிரையை நடத்திக் காட்டல்

2874. அப்போது அண்டங்கள் அனைத்தையும் ஆதாரமாக நின்று தாங்கி அருளும் இன்பப் பேரொளியார், தமக்கு வேதப் புரவியை ஆதாரமாகக் கொண்டு, ஒரு காலத்திலும் அசையாத தாமரை மலர் போன்ற திருவடிகள் அசைய, உயிர்களின் பாசத்தைப்போக்கும் அழகிய திருக்கைகளினால், குதிரையில் பூண்ட பாசத்தைப் பிடித்துக் கொண்டு அரசன் எதிரே போய், ''மன்னா! எங்கள் குதிரை ஏற்றத்தைச் சிறிது காண்பாயாக'' என்று கூறியருளினார்.

வேறு

2875 இசைத்தவைங் கதியஞ் சாரி யொன்பதிற் றிரட்டி யான
விசித்திர விகற்புத் தோன்ற வேந்தனும் அவையு மன்றித்
திசைப்புலத் தவரு மேலைத் தேவரு மருள மேற்கொண்
டசைத்தன ரசைவற் றெல்லா வுலகமு மசைக்க வல்லார்.

2876 ஆண்டகை யவர்போ னின்ற வடுகணத் தவருந் தத்தங்
காண்டகு புரவி யெல்லா நடத்தினர் காட்டக் கண்டு
பாண்டியன் அவரை நோக்கி நுங்களிற் பதியாந் தன்மை
பூண்டவர் யாவ ரென்றா னிவரென்றார் புரவி வீரர்.

2877 சுட்டுதற் கரிய சோதி சுருதிவாம் புரவி யோடு
மட்டவிழ் தாரினான்முன் வருதலுங் கருணை நாட்டம்
பட்டுள மயங்கித் தன்னை மறந்தெழீஇப் பாண்டி வேந்தன்
தட்டவிழ் கமலச் செங்கை தலைமிசைக் கூப்பி நின்றான்.

2878 பின்னவ னாணை யாலே மறைப்புண்ட பெருநீர்க் கூடன்
மன்னவன் அறிவு தோன்ற வின்றொரு வயமா வீரன்
றன்னைநாங் கண்டெ ழுந்து தடங்கரங் கூப்பி நின்ற
தென்னெனத் தவிசின் மீள விருந்திட நாணி நின்றான்.

2875. பரிநூலில் கூறிய மல்லகதி முதலிய ஐந்து கதிகளும் பதினொட்டாகிய விசித்திர நடை விகற்பங்களும் தோன்ற மன்னனும் அவன் அவையில் உள்ளாரும் அல்லாமல் திசைக் காவலரும் விண்ணுலகில் உள்ள தேவர்களும் கண்டு அச்சம் கொள்ளும்படி, தான் அசைதல் இன்றி, உலகனைத்தையும் அசைக்க வல்லவராகிய அவ்விறைவன் குதிரையில் மேல் ஏறி அதனை நடத்திக் காட்டினார். (மல்லகதி, மயூரகதி, வானரகதி வில்லியகதி, சரகதி (அல்லது இமகதி) என்று ஐந்து கதிகள்).

2876. ஆண் தன்மையுள்ள அவ்விறைவர் நடத்திக் காட்டிமை போல், சூழ்ந்து நின்ற வெற்றிமிக்க சிவகணத்தவராகிய குதிரை வீரரும் தங்கள் தங்கள் அழகிய குதிரைகள் அனைத்தையும் நடத்திக் காட்ட, பாண்டியன் அதனைக்கண்டு அவர்களைப் பார்த்து, ''உங்களுக்குத் தலைவன் யார்?'' என்று கேட்டான். குதிரவைீரர்கள் சோம சுந்தரராகிய குதிரை வீரரை, ''இவர்,'' என்று காட்டினர்.

2877. சுட்டுதற்கரிய பரஞ்சோதியாகிய இறைவன், வேதமாகிய குதிரையை நடத்திக்கொண்டு, மணமுடைய வேப்பம்பூ மாலையை அணிந்த பாண்டியன் முன் வந்த அளவில் அவருடைய அருட் பார்வை படுதலால் மனம் மயங்கித் தன்னை மறந்து எழுந்த அப்பாண்டி மன்னன் தன் சிவந்த தாமரை மலர் போன்ற கரங்களைத் தலையின் மேல் குவித்து நின்றான்.

2878. பின் அவ்விறைவன் ஆணையால் மறைக்கப் பட்ட வையையாறு சூழ்ந்த நான்மாடக்கூடலின் தலைவனாகிய பாண்டியன், தன்னறிவு தோன்ற ''இப்பொழுது நாம் ஒரு குதிரை வீரனைப் பார்த்து எழுந்து நின்று கை குவித்து வணங்கி நின்ற நிலை என்னே!'' என்று கருதி மீண்டும் அவ்வாசனத்தில் அமருவதற்கு வெள்கி நின்றான்.

2879 நிற்கின்றான் முகத்தை நோக்கிநேர் நின்ற மறைமா வீரர்
பொற்குன்றாம் புயத்தா யுன்றன் பொருளெலாங்
கொண்டு போந்துன்
சொற்குன்றா வமைச்சன் றானே நமக்குநஞ் சூழ னீங்கா
மற்குன்றா நமர்க்கு மார வழங்கினான் வழங்க லாலே.

2880 வானவர் தமக்கே யன்றி மனிதருக் கிசையத் தக்க
வானவன் றறிஞ ரிட்ட விலைவரம் பகன்ற நூலின்
மானமுள் ளனவாய் நல்ல வாசிக ளுனக்கு வந்த
ஊனமில் பரிமா விற்கும் வாணிக முரைப்பக் கேட்டி

2881 இன்னவாம் பரிக ளென்பால் இன்றுநீ கயிறு மாறி
நின்னவாக் கொள்ளு நீரா னின்னவாம் பரியே நாளை
என்னவா யிருந்த வேனு மெனக்குமுன் றனக்குங் கொண்டு
மன்னவா கரும மில்லை பரிவிலை வழக்கீ தென்றார்.

2882 அப்பொழு தரசன் றானும் அகமகிழ்ந் ததற்கு நேர்ந்தெம்
மெய்ப்புக ழமைச்சர் தம்மின் மேம்மடு வாத வூரர்
ஒப்பருந் திறத்த ராகி யும்மிடை நட்பான் மிக்க
துப்புர வுடைய ரானா ரெனநனி சொல்லி னானே.

குதிரை வீரர் அரசனுக்கு வணிக முறையைக் கூறல்

2879. அவ்வாறு நிற்கும் பாண்டியனின் முகத்தைப் பார்த்து, அவன் எதிரே நின்ற வேதப் பரியினையுடைய வீரர், ''பொன்மலை போலும் தோளையுடையாய்! உன் பொருளை எல்லாம் கொண்டு வந்து உனது சொல்லைக் கடவாதவராகிய வாதவூரடிகள் தாமாகவே எமக்கும், எம்மை விட்டு நீங்காத வலிமையுடைய பரிசனங்களுக்கும் நிறைய வழங்கினர்.

2880. ''தேவர்களுக்கே அல்லாமல் மனிதர்களுக்குக் கிடைத்தற்கு அரியனவும், பரிநூற் புலவனாற்கூட விலை மதிக்க முடியாதனவும், பரிநூல் இலக்கணக் குறைபாடு சிறிதும் இல்லாதனவுமான நல்லகுதிரைகள் உனக்கு வந்தன. குற்றமில்லாத குதிரைகளை விற்கும் வாணிக முறையினைச் சொல்லக் கேட்பாயாக:

2881. ''இந்தத் தாவும் குதிரைகளை இப்பொழுது நீ என்னிடத்தில் கயிறுமாறி நின்னுடையனவாக ஏற்றுக் கொள்ளும் முறையினால் இக் குதிரைகள் நின்னுடையனவே ஆகும். ஆகவே நாளை என்ன தன்மையை அடைந்தன வேனும் எனக்கும் உனக்கும் அதுபற்றி யாதொரு வழக்கும் இல்லை.'' இது குதிரை வாணிபத்தின் வழக்கம் என்றார்.

2882. அப்போது அரசன் தானும் அகமகிழ்ந்து அதற்கு உடன்பட்டு, ''எமது உண்மைப் புகழுடைய அமைச்சருள் சிறப்பெய்திய திருவாதவூரார் ஒப்பற்ற திறமையுடையராய் எம்மிடத்துப் பூண்ட நட்பினால் மிகவும் தூய்மையுடைய வரானார்.'' என்று பெரிதும் பாராட்டிக் கூறினான்.

2883 உரகத வாரந் தோற்றா துயர்மறைப் பரிமேல் வந்தார்
மரகத நிறத்து நிம்ப மாலைதாழ் மார்பி னாற்குக்
குரகதங் கயிறு மாறிக் கொடுப்பவர் பொருமை யாய
துரகத விலக்க ணங்கள் சொல்லுவான் றொடங்கி னாரே.

2884 காயும்வேன் மன்ன வோரிக் கடும்பரி யமையம் வந்தான்
ஞாயிலுந் தாண்டிச் செல்லு நாட்டமு நுழையாச் சால
வாயிலுந் நுழையுங் கண்ட வெளியெலாம் வழியாச் செல்லுந்
தீயவெம் பசிவந் துற்றாற் றின்னாத வெனினுந் தின்னும்.

வேறு

2885 பொருவில்சீர் இலக்கணப் புரவி யொன்றுதான்
ஒருவன திடைவதிந் துறையி னொல்லென
மருவுறுந் திருமகண் மல்லற் செல்வமும்
பெருகுறுங் கீர்த்திகள் பல்கும் பெற்றியால்.

2886 நெய்த்திடு மாந்தளிர் நிறத்த நாவின
வைத்திடு குளம்புகள் உயர்ந்த வார்ந்துநேர்
ஒத்திடு மெயிற்றின் வுரமுங் கண்டமும்
பைத்திடு மராப்படம் போன்ற பாடலம்.

2883. பாம்பணியைப் காட்டாமல் மறைத்துச் சிறந்த வேதக் குதிரையில் வந்த இறைவர், மரகதம் போன்ற நிறத்தையுடைய வேப்ப மலர் மாலை தொங்கும் மார்பினை யுடைய பாண்டியனுக்குக் குதிரைகளைக் கயிறுமாறி கொடுப் பதற்குத் தொடங்குகின்றவர், பொதுவாகிய குதிரை இலக்கணங் களைச் சொல்லத் தொடங்கினார்;

குதிரை இலக்கணம்

2884. ''பகைவரைச் சினக்கும் வேற்படையை உடைய வேந்தனே! ஒப்பற்ற வேகமுடைய இக்குதிரைகள், போர் புரியும் சமயம் வரின் மதில் உறுப்பையும் தாவிச் செல்லும்; பார்வையும் நுழைய முடியாத பலகணி வாயிலிலும் நுழைந்து விடும்; வெளி இடங்கள் அனைத்தையும் வழியாகக் கொண்டு செல்லும்; கொடிய பசி வந்து விட்டால் தின்னக் கூடாத வைக்கோலையும் தின்னும்.

2885. ''சிறந்த இலக்கணம் உடைய ஒரு குதிரை ஒருவனிடம் இருக்குமாயின் விரைந்து அவனிடம் திருமகள் வந்து சேர்வாள். வளம் மிக்க செல்வம் பெருகும். புகழ்களும் மேலோங்கும்.

2886. ''பசையினையுடைய மாந்தளிர் போன்ற நிறமுடைய நாவினையுடையனவாய், நிலத்தில் வைக்கும் குளம்புகள் உயர்ந்தனவாய், நீண்டு தம்முள் ஒத்த பற்களையும் பாம்பின் படம் போன்ற மார்பினையும், கழுத்தினையும் கொண்டது 'பாடலம்' என்னும் பெயர் பெறும்.

2887 அகலிய நுதலின் வாய்ந்த குஞ்சிபோல்
நிகரறு கொய்யுளை நிறமொன் றாயின
புகரறு கோணமூன் றாகிப் பொற்புறு
முகமுடை யனவய மொய்கொள் கோடகம்.

2888 முட்டிய சமரிடை முகத்தில் வாளினால்
வெட்டினு மெதிர்ப்பதாய்க் குரங்கு வேங்கை தோல்
பட்டிமை நரியரி சரபம் பாய்முயல்
எட்டிய கதியின விவுளி யென்பவே.

2889 உன்னத நீளமுண் டாகிச் சங்குவெண்
கன்னலின் வாலிய விலாழி கால்வதாய்ப்
பின்னமா கியதனி வன்னம் பெற்றுமை
வன்னமும் உடையது வன்னி யாவதே.

2890 திணிதரு கழுத்தினிற் சிறந்த தெய்வத
மணியுள தாகியெண் மங்க லத்ததாய்
அணிதரு பஞ்சகல் யாண முள்ளதாய்க்
குனிதரு நீரது குதிரை யாவதே.

2891 குங்குமங் கருப்புரங் கொழுந்திண் காரகிற்
பங்கமான் மதமெனக் கமழும் பாலதாய்ச்
சங்கமு மேகமுஞ் சரப முங்கொடுஞ்
சிங்கமும் போலொலி செய்வ தாம்பரி.

2887. ''அகன்ற நெற்றியையும், சிக்கலற்ற ஒப்பற்ற புறமயிரும் ஒரே நிறமுடையனவாய். மூன்று கோணமுடையன வாய், அழகு பொருந்திய முகத்தினை யுடையனவாய் விளங்கும் குதிரைகள் வெற்றியும் வலியும் உடைய 'கோடகம்' எனப்பெயர் பெறும்.

2888. ''நெருங்கிய போரில் முகத்தில் வாளினால் வெட்டினாலும், எதிர்த்துப் போர்புரியும் வல்லமையும், குரங்கு, புலி, யானை, நரி, சிங்கம், முயல், முகில் இவற்றின் நடையி னையுடைய குதிரைகளை 'இவுளி' என்று கூறுவர்.

2889. ''உயரமும் நீளமும் உடையதாய், சங்கும் வெள்ளைச் சருக்கரையும் போல வெண்மையான வாய் நுரையினைக் கக்குவதாய், பிங்கல நிறம் பெற்று, அத்துடன் கருநிறம் பெற்ற தன்மையுடையது 'வன்னி' என்று சொல்லப் படுவதாகும்.

2890. ''திண்ணிய கழுத்தில் சிறந்த தெய்வமணி உள்ள தாய் எட்டு மங்கலம் உடையதாய், அழகிய பஞ்ச கல்யாணம் உள்ளதாய், இவ்வாறு வரையறுத்த சிறப்புடையது 'குதிரை' என்னும் பெயரையுடையது:

2891. ''பரி'' என்பது குங்குமப்பூ, கற்பூரம், அகிற்குழம்பு, கஸ்தூரி, ஆகிய இவற்றுள் ஒன்றன் மணத்தினையும், சங்கு, மேகம், சரபம், சிங்கம் ஆகிய இவற்றுள் ஒன்றன் ஒலி போன்ற கனைப்பினையும் கொண்டதாகும்.

2892 நாலுகால் களுங்கடைந் தெடுத்து நாட்டினாற்
போல்வதாய்க் கொட்புறும் போது சுற்றுதீக்
கோலலை யொப் பாகிமேற் கொண்ட சேவகன்
காலினுள் அடங்குவ தாகுங் கந்துகம்.

2893 அரணமுந் துருக்கமு மாறுந் தாண்டிடும்
முரணது வாகியிம் முற்றி லக்கணப்
புரணமெல் லாநிறை புரவி போந்தன
இரணவே லாய்வய தெட்டுச் சென்றவால்.

2894 பகைத்திற முருக்குமிப் பரிகண் மன்னநீ
உகைத்திடத் தக்கவென் றோதி வேதநூற்
சிகைத்தனிச் சேவகர் திரும்பித் தம்மனோர்
முகத்தினை நோக்கினார் மொய்த்த வீரரும்.

2895 வாம்பரி மறைக்கெலாம் வரம்பு காட்டுவ
தாம்படி கண்டவர் அறிவும் பிறப்படப்
போம்படி முடுக்கினார் புரவியாவையும்
வேம்பணி தோளினான் வியப்பு மெய்தியே.

2896 ஆத்தராய் மருங்குறை யமைச்சர் யாரையும்
பார்த்தசை யாமுடி யசைத்துப் பைப்பயப்
பூத்தவா ணகையொடு மகிழ்ச்சி பொங்கினான்
தீர்த்தனு நடத்தினான் றெய்வ மாவினை.

2892. ''நான்கு கால்களும் கடைந்து எடுத்து நாட்டி வைத்தாற் போலவும், சுழலும் போது கொள்ளி வட்டம் போலவும், ஏறிய வீரனின் காலில் அடங்கும் தன்மையினைக் கொண்ட தாகவும் உள்ளது 'கந்துகம்' என்னும் பெயரையுடையது.

2893. ''மதிலும், மலைமேல் கோட்டையும், நதியும் ஆகிய இவற்றைத் தாண்டிடும் வலிமையுடையனவாய், முழு இலக்கணமும் ஒளியும் நிறைந்த குதிரைகள் வந்துள்ளன' பகைவரைப் புண்படுத்தும் வேலையுடைய பாண்டியனே! இவைகள் எட்டு வயதினை உடையவை.

2894. ''வலிமைமிக்க பகைவரைக் கொல்லும் இக் குதிரைகள் நீ செலுத்தத்தக்கவை! மணியோ!'' என்று சொல்லி, உபநிடத்தின் உட்பொருளாகிய இறைவர் தமது கணங்களின் முகத்தைத் திரும்பிப் பார்த்தார். சூழ்ந்துள்ள குதிரை வீரரும்,

குதிரையை நடத்திக் காட்டல்

2895. குதிரைகளின் இலக்கணங்களைக் கூறும் நூல்கள் அனைத்திற்கும் எல்லைகாட்டுவது போலக் கண்டவர் மனமும் பிற்படக் குதிரைகள் அனைத்தையும் விரைந்து ஓடும்படி செலுத்தினார்கள். வேப்பம்பூ மாலையை அணிந்த பாண்டியன் மகிழ்வோடு வியப்பும் அடைந்தான்.

2896. தனக்கு உறுதியுடைய மந்திரிகள் அனைவரையும் பார்த்து, முடி அசைத்து மெல்ல மெல்ல அரும்பிய புன்னகையுடன் பாண்டியன் மகிழ்ச்சியடைந்தான். தெய்வத் தன்மையுடைய குதிரையை இறைவன் நடத்தியருளினான்.

2897 இருவகைச் சாரியு மெதிர்ந்து வட்டமாய்
வருவழி ஞெகிழிபோன் மறுகெ லாமொரு
துரகத மேநிலை நின்ற தோற்றமொத்
தொருவற நடத்தினான் ஒருக ணத்தினே.

2898 இந்நிலை யலமரும் இவுளி மேலொரு
மின்னிலை வேலினான் வினவத் தங்கையின்
மன்னிய கங்கணம் விடுத்து மாநகர்
தன்னிலை காட்டிய தன்மை யொத்ததே.

2899 பின்னிறை முடையவாம் பரியும் வீதியுட்
பின்னிய வாவெனப் பின்னி வட்டமாய்த்
தன்னிகர் மதுரையாத் தையல் கையணி
துன்னிய பன்மணித் தொடியும் போன்றவே.

2900 இந்திய னுதலினார் இடித்த பொற்சுணஞ்
சிந்திய மறுகிடை நடக்குந் திண்பரிப்
பந்தியி னெழுந்ததூள் சுவணப் பாரின்மா
உந்திய வெழுந்தபொற் பூழி யொத்ததே.

2901 தேவரு மனிதருந் திருந்து கூடலார்
யாவரும் உவப்புற விவுளி விட்டுமண்
காவலன் முன்குறீஇக் கருணை மாக்கடல்
மாவருந் திறனெல்லாம் வகுத்துத் தேற்றுமால்.

2897. இடசாரியும் வலசாரியுமாகக் கொண்டு கொள்ளி வட்டம் போல் வட்டமாக வருமிடத்து வீதியனைத்தும் ஒரு குதிரையே நின்ற தோற்றம் போன்று ஒரு கணப்பொழுதில் நடத்திக் காட்டினார்.

2898. இவ்வாறு சுற்றிவரும் குதிரையின் தன்மை முன்னாளில் மின் போன்ற தகட்டு வடிவினையுடைய வேற்படையேந்திய வங்கிய சேகர பாண்டியன் இரந்து கேட்க இறைவன் தமது திருக்கரத்தில் உள்ள பாம்பினை விடுத்துப் பெரிய நகரின் பழைய எல்லையைக் காட்டிய தன்மையை ஒத்தது.

2899. பல நிறங்களையுடைய குதிரைகள் வீதியில் பின்னிய பாம்புபோல வட்டமாய் பின்னிச் செல்லும் காட்சி மதுரை என்னும் தனக்குத்தானே ஒத்த மங்கையின் கையில் அணிந்த பலநிற மணிகள் பதித்த வளையல்கள் போன்றன.

2900. சந்திரனை ஒத்த நெற்றியையுடைய பெண்கள், இடித்த பொற்சுண்ணம் சிந்திய வீதியின்கண் தாவிச் செல்லும் குதிரைகளின் வரிசையினின்றும் எழுந்த புழுதி, பொன்னுலகத் திலே குதிரைகள் உந்திச் செல்லும் பொழுது மேலெழுந்த பொற் புழுதியை ஒத்தது.

2901. இவ்வாறு தேவர்களும் மனிதரும் கூடல் நகரத் தாருமாகிய அனைவரும் மகிழுமாறு குதிரையைச் செலுத்தி, பெருங் கருணைக் கடலாகிய இறைவர், நிலவுலகைக் காப்பவனாகிய பாண்டியனின் முன் சென்று குதிரைகள் வரும் வகைகள் அனைத்தும் தெரிவிப்பாராயினார்:

வேறு

2902 வளங்கொள் காம்போசம் இப்பரி யிம்மா மந்தர
மிந்தவாம் புரவி
விளங்கு காந்தார மிக்குரங் களைவான் மீகமிக்
கந்துகஞ் சிந்து
துளங்கில் பாஞ்சால மிக்கன வட்டந் துளுவமிக்
குதிரையித் துரகங்
களங்கமி லிமயம் பருப்பத மிந்தக் கற்கியிம்
மண்டிலங் கலிங்கம்.

2903 ஆரிய மிந்தப் பாடலம் இந்த வச்சுவங் கூர்ச்சர மிந்தச்
சீரிய துரங்கள் கேகய மிந்தத் திறலுறு கொய்யுளை யவனம்
வேரியம் பணைசூழ் மக்கமிக் கொக்கு விரிபொழில்
வனாயுச மிந்தப்
போரிய லிவுளி பல்லவ மிந்தப் பொலம்புனை
தார்நெடும் பாய்மா

2904 கற்றவர் புகழ்சவ் வீரமிக் கோரங் கன்னிமா
ராட்டம் இவ்வன்னி
கொற்றவர் பயில்வா சந்திக மிந்தக் கோடகங்
காடகங் கன்னல்
உற்றகான் மீர மிவ்வய மிந்த வுத்தகம கோணமா ளவமிவ்
வெற்றிசேர் குந்தங் கந்தர மிந்த விறல்புனை
யரிசவு ராட்டம்.

குதிரைகளின் நாடுகளைக் கூறல்

2902. ''இக்குதிரைகள் வளம் பொருந்திய காம்போச நாட்டிலுள்ளவை. இக்குதிரைகள் மந்திர மலையில் உள்ளவை. பொலிவுடைய இவை காந்தார நாட்டில் உள்ளவை. இந்த வளைந்த பிடரிமயிரை உடையவை வான்மீகத்தைச் சார்ந்தவை. இக்குதிரைகள் சிந்து நாட்டில் உள்ளவை. இக்குதிரைகள் பாஞ்சால நாட்டிலுள்ளவை. இக்குதிரைகள் துளு நாட்டில் உள்ளவை. இவை இமயத்துள்ளவை. இக்குதிரைகள் ஸ்ரீசைலத்துள்ளவை. இக் குதிரைகள் திருப்பருப்பதத்தில் உள்ளவை. இக்குதிரைகள் கலிங்க நாட்டிலுள்ளவை.

2903. ''இக்குதிரைகள் ஆரிய நாட்டில் உள்ளவை. இக்குதிரைகள் கூச்சர நாட்டிலுள்ளவை. இவை கேகய நாட்டிலுள்ளவை. இவை யவன நாட்டிலுள்ளவை, இக் குதிரைகள் அழகிய வயல்கள் சூழ்ந்த மக்க நாட்டில் உள்ளவை. போர் புரியும் தன்மையுடைய இக்குதிரைகள் பொழில்கள் சூழ்ந்த வனாயுச நாட்டில் உள்ளவை. இப் பொன்னாலாகிய அழகிய கிண்கிணி அணிந்த குதிரைகள் பல்லவ நாட்டில் உள்ளவை.

2904. ''இக்குதிரைகள் புலவர்புகழும் சவ்வீர நாட்டில் உள்ளவை. இக்குதிரைகள் மகாராஷ்டிர நாட்டிலுள்ளவை. இக்குதிரைகள் மன்னர்கள் வாழும் வாசந்திக நாட்டில் உள்ளவை. இக்குதிரைகள் கரும்புகள் நிறைந்த கான்மீர நாட்டிலுள்ளவை. இம்மேலான குதிரைகள் மாளவ நாட்டில் உள்ளவை. இவ்வெற்றி மிக்க குதிரைகள் காந்தார நாட்டில் உள்ளவை. இக்குதிரைகள் சௌராஷ்ட்டிர நாட்டில் உள்ளவை.

2905 விரிபொழிற் சாலி வேய்மிகு கிள்ளை வேறுதீ
வாந்தர மிந்தத்
துரகத மிந்தக் குரகதங் கொண்டல் சூழ்குருக்
கேத்திரம் இன்ன
பரவுபல் வேறு தேயமு முள்ள பரியெலா
மிவன்றரு பொருளின்
விரவிய நசையாற் கொணர்ந்திவர் வந்தார் வேந்தகே
ளிந்தவாம் பரியுள்.

2906 வெண்ணிறஞ் சிவப்புப் பொன்னிறங் கறுப்பு வேற்ற
விரவிய நான்கு
வண்ணமுள் ளனவும் வேறுவே றாய மரபுமை
வண்ணமும் வந்த
எண்ணிய விவற்றின் சிறப்பிலக் கணத்தை யியம்புதுங்
கேளென விகல்காய்
அண்ணலங் களிற்றாற் கருமறைப் பரிமே லழகியார்
அடைவுற விரிப்பார்.

2907 வெள்ளிநித் திலம்பால் சந்திரன் சங்கு வெண்பனி
போல்வது வெள்ளைத்
துள்ளிய புரவி மாதுளம் போது சுகிர்ந்த செம்
பஞ்சியின் குழம்பிற்
றெள்ளிய நிறுத்த செம்பரி மாமை சிறைக்குயில்
வண்டுகார் முகில்போல்
ஒள்ளிய கரிய பரியெரி யழலா னுரோசனை
நிறத்தபொற் பரியே.

2908 தெரிதர வகுத்த விந்நிற நான்குஞ் செறிந்தது மிச்சிர
மெனப்போர்
உரைசெய்வர் முகமார் புச்சிவால் காலென் றுரைத்தவெட்
டுறுப்பினும் வெண்மை
விரவிய தட்ட மங்கலந் தலைவால் வியனுரம்
என்றவிம் மூன்றும்
ஒருவிய வுறுப்போ ரைந்திலும் வெள்ளை யுள்ளது
பஞ்சகல் யாணி.

2905. '' ஒப்பனை மிக்க இக்குதிரைகள் சாலி நாட்டில் உள்ளவை. இக்குதிரைகள் வேறு தீவாந்திரங்களில் உள்ளவை. இக்குதிரைகள் மேகம் சூழ்ந்த குருக்கேத்திரத்தில் உள்ளவை. இவ்வாறு பல்வேறு நாடுகளில் உள்ள குதிரைகளை யெல்லாம் இவ்வாதவூரர் கொடுத்த பொருளின் விருப்பத்தாலே இவர்கள் கொண்டுவந்தனர். மன்னனே! கேட்பாயாக! இந்தத் தாவும் குதிரைகளுள்,

குதிரைகளின் நிறம்

2906. ''வெண்மை, சிவப்பு, கருமை, பொன்னிறம் என்ற நான்கு நிறங்களும் வேறுபாடின்றிக் கலந்த நிறத்தையுடைய குதிரைகளும், அந்நிறங்களைத் தனித்தனியாக உடைய குதிரைகளும், ஐந்து நிறங்களையுடைய குதிரைகள் வந்தன. இக்குதிரைகளின் சிறப்பு இலக்கணம் கூறுவேன் கேட்பாயாக!'' என்று, பெருமையும் அழகும் உடைய யானையை உடைய பாண்டியனுக்கு அரிய வேதப் பரிமேல் வந்தருளிய பெருமான் விரிவாகக் கூறினார்.

2907. ''வெள்ளி, முத்து, பால், சந்திரன், சங்கு, வெண்பனிபோன்றவை வெள்ளைக் குதிரையாகும். மாதுளம் பூவும், செம்பஞ்சின் குழம்புபோலவும் தெளிந்த நிறத்தினையுடையவை சிவப்புக் குதிரையாகும். மை, குயில், வண்டு, முகில் போன்ற நிறம் உடையவை கருங் குதிரைகளாகும். அனல், கோரோசனை போன்ற நிறமுடையன பொன்னிறக் குதிரையாகும்.

2908. ''தெரியுமாறு இந்நான்கு நிறங்களும் கலந்து செறிந்த குதிரைக்கு 'மிச்சரம்' என்று பெயர். முகம், மார்பு, உச்சி, வால், நான்கு கால்கள் என்னும் எட்டு உறுப்புகளிலும் வெண்மைகலந்த குதிரை 'அட்டமங்கலம்' என்னும் பெயர் பெறும். தலையும், வாலும், மார்பும் இவை மூன்றும் நீங்கப் பெற்று (நான்கு கால்களும் முகமும்) ஐந்து உறுப்புகளிலும் வெண்மை உள்ளது 'பஞ்ச கல்யாணி' ஆகும்.

2909 அணிகிளர் கழுந்தில் வலஞ்சுழிந் திருந்தால் அறிந்துவ
ரதனையே தெய்வ
மணியென விசைப்பர் முகந்தலை நாசி மார்பமிந்
நான்குமிவ் விரண்டு
பணிதரு சுழிவு நுதனடுப் பிள்ளைப் பக்கமு
மொவ்வொரு சுழியுந்
துணிதர விருப்ப திலக்கண முளதிச் சுழியில
திலக்கண வழுவே.

2910 பிரிவுற வுரத்தில் ஐஞ்சுழி யுளது பேர்சிரீ வற்சமா நுதலில்
இருசுழி யாதன் முச்சுழி யாத லிருக்கினு நன்றது வன்றேல்
ஒருவற நான்கு சுழிவலம் புரியா வுள்ளது நல்லது வன்றி
இருசுழி முன்னங் கால்களின் மூலத் திருக்கினு
நல்லதென் றிசைப்பார்.

2911 களநடு விரட்டைச் சுழியுடைப் பரிதன் கருத்தனுக்
கறமிடி காட்டும்
அளவறு துன்ப மரணமுண் டாக்கும் அவைகணைக்
காலுள வாகில்
உளபயந் துன்ப நிகளபந் தனமே லுதடுமுற்
காலடி கபோலம்
வளர்முழந் தாளிந் நான்கினுஞ் சுழிகண் மன்னினுந்
தலைவனை வதைக்கும்.

2912 இச்சுழி யுடைய புரவிபந் தியில்பாத் திருக்கினும்
பழுதிவை கிடக்க
அச்சமில் பரிக்குப் பிராயநா லெட்டாம் அவத்தைபத்
தாகுமொவ் வொன்றில்
வைச்சது மூன்று வருடமு மிரண்டு மதியமும்
பன்னிரு நாளும்
நிச்சயித் தளந்தா ரின்னமு மொருசார் நிகழ்த்திடு
மிலக்கண மதுகேள்.

சுழியும் பயனும்

2909. ''குதிரையின் கழுத்தில் வலஞ்சுழி இருந்தால் அதனைப் பரிநூலினைக் கற்றுணர்ந்தோர் 'தெய்வமணி' என்று கூறுவர் முகம், தலை, நாசி, மார்பு இந்நான்கு உறுப்புகளிலும் இரண்டிரண்டு சுழியும் நெற்றி நடுவிலும், பின்பக்கத்திலும் ஒவ்வொரு சுழியும் இருப்பது நல்ல இலக்கணம் வாய்ந்த குதிரையாகும். இச்சுழிகள் இல்லாதது இலக்கணக் குற்ற முடையதாகும்.

2910. ''ஒன்றோடொன்று, நெருங்காமல் பிரிந்து மார்பின்கண் ஐந்து சுழியுள்ள 'குதிரை சிரீவற்சம்' என்னும் பெயரையுடையதாகும். நெற்றியில் இரண்டு சுழியாவது மூன்று சுழியாவது இருப்பது நலமாகும். அவ்வாறு இல்லை யென்றால் ஒன்றோடொன்று தொடர்ந்து நான்கு சுழி வலம் புரியாக இருப்பதும் நன்மையாகும். அல்லது முன் கால்களின் அடியில் இரண்டு சுழி இருந்தாலும் நலமென்று கூறுவர்.

2911. ''கழுத்து நடுவில் இரட்டைச் சுழி உடைய குதிரைகள் தலைவனுக்கு மிகவும் வறுமையை உண்டாக்கும். அளவற்ற துன்பத்தையும் மரணத்தையும் உண்டாக்கும். அச்சுழிகள் கணைக்காலில் உள்ளனவாயின் அச்சமும் துன்பமும் விலங்கு பூணுதலும் உளவாகும். மேல் உதடும், முன் காலின் அடியும், கபாலமும், வளர்ந்த முழந்தாளும் ஆகிய இரு நான்கினும் சுழிகள் இருந்தாலும் தலைவனைக் கொல்லும்.

2912. ''இந்தக் குற்றமுடைய சுழியினை உடைய குதிரைகள், பந்தியில் கட்டப்பட்டிருப்பனும் தீங்கு விளையும். இவை நிற்க. போரின்கண் அஞ்சுதல் இல்லாத குதிரைக்கு வயது முப்பத்திரண்டு ஆகும். பருவம் பத்தாகும். ஒவ்வொரு பருவத்திலும் வைத்த கால அளவு மூன்றாண்டும் இரண்டு திங்களும் பன்னிரண்டு நாளும் என்று துணிந்து வரையறை செய்தனர். இன்னமும் ஒரு வகையாகப் பரிநூலார் கூறும் இலக்கணத்தைக் கேட்பாயாக.

வேறு

2913 எவ்வண்ண பேதமிகுந் திருந்தாலும் வெள்ளைகலந்
திருந்த தானால்
அவ்வண்ணப் பரிநன்று கரும்புரவிக் ககடேனு
மகன்மார் பேனுஞ்
செவ்வண்ணம் இருக்கினது சயமுளதப் படிவெண்மை
சேர்ந்தா லந்த
மைவ்வண்ணப் பரியின்பேர் வாருணமாஞ் சயங்கொடுக்கு
மாற்றார் போரில்.

2914 மகவளிக்கும் பிடர்வெளுப்பு மகிழ்வளிக்கு முரவெளுப்பு
மணிதார்க் கண்டத்
தகவெளுப்புப் பொருள்கொடுக்கு முகவெளுப்புச்
சயங்கொடுக்கு மதன்பின்பக்கத்
தகவெளுப்புச் சுகம்பயக்கு மிடவெளுப்புச் சந்தானந்
தழைக்குஞ்செல்வம்
மிகவளர்க்கந் தனம்பலதா னியநல்கும் வலப்புறத்து
வெள்ளை மாதோ.

2915 நற்புறம்வான் முகமூன்றும் வெளுத்தபரி வென்றிதரு
நாபி தொட்டு
முற்புறமே லாம்பரிதி யெனச்சிவந்து மதியெனப்பின்
முழுதும் வெள்கும்
பொற்புடைய வயப்பரிக்குப் பகல்விசய மதியென முற்
புறம்பு வெள்கிப்
பிற்புறமெல் லாங்கதிர்போற் சிவந்தபரிக் கிராவிசயம்
பெருகும் அன்றே.

2916 வந்தனவால் இவ்விரண்டு வகைப்பரியும் புரவியடி
வைத்தா லொத்த
பந்தெனவு நின்றாலோ மலையெனவு மொலித்தாலோ
பகடு சீறும்
வெந்தறுக ணரியெனவும் வேகத்தாற் காற்றெனவு
மிதிக்குங் கூத்தாற்
சந்தநட மகனெனவு நடக்கிலரி களிறெனவுந் தகைய தாகி.

பரிநூலார் இலக்கணம்

2913.''எந்த நிலத்தின் வகை மிக்கு இருந்தாலும் அதில் வெண்மை கலந்திருக்குமாயின் அக்குதிரை நல்லது. கரிய குதிரைக்கு வயிற்றிலேனும் அகன்ற மார்பிலேனும் செந்நிறம் இருக்கமாயின் அது வெற்றியுடையது. அப்படி வெண்மை சேர்ந்தால் அம் மைவண்ணக் குதிரைக்கு 'வாருணம்' என்ற பெயராகும். அது பகைவருடன் புரியும் போரில் தன் தலைவனுக்கு வெற்றியைக் கொடுக்கும்.

2914.''பிடர்வெளுப்புள்ள குதிரை தன் தலைவனுக்கு மகப் பேற்றினைக் கொடுக்கும். மார்பு வெளுப்புள்ள குதிரை மகிழ்ச்சியைக் கொடுக்கும். வெண்மையுள்ள குதிரை பொருளைக் கொடுக்கும். முக வெளுப்புள்ள குதிரை வெற்றியைப் கொடுக்கும். அம்முகத்தின் பின்பக்கத்தில் வெளுப்பமைந்த குதிரை இன்பத்தைக் கொடுக்கும். இடப் பக்கத்தில் வெண்மையுள்ள குதிரை மகப் பேற்றை அதிகம் கொடுக்கும். வலப்பக்கத்தில் வெண்மையுள்ள குதிரை செல்வத்தையும் விளை பொருளையும் அளிக்கும்.

2915.''முதுகு, வால், முகம் இம்மூன்றிலும் வெண்ணிற முள்ள குதிரை தன் தலைவனுக்கு வெற்றியைத் தரும். நாபியிலிருந்து முன்புறமெல்லாம் சூரியனைப் போல், செந் நிறமும், பின் புறமெல்லாம் சந்திரனைப் போல் வெண்ணிறமும் உள்ள குதிரை பகற்போரில் வெற்றியை உண்டாக்கும். முன்புறம் முழுவதும் சந்திரனைப் போல் வெண்ணிறம் பெற்று, பின்புற மெல்லாம் சூரியனைப் போல்சிவந்துள்ள குதிரை இரவுப் போரில் வெற்றியைத் தரும்.

2916.''இந்த இரண்டுவகைக் குதிரைகளும் வந்துள்ளன. குதிரை அடிவைத்தால் ஒத்த பந்து போலவும், நின்றால் மலை போலவும், கனைத்தால், யானையைச் சீறிக் கொல்லும் கொடிய சிங்கம் போலவும், வேகத்தால் காற்றைப் போலவும், மிதித்து நடிக்கும் கூத்தினால் கூத்தாடுபவனைப் போலவும் நடந்தால் சிங்கமும் யானையும் போன்ற தன்மையுடையதாகவும் விளங்கும்.

2917 குலமகள்போற் கவிழ்முகமுங் கருநெய்தல் எனக்கண்ணுங்
கொண்டுகார்போல
நிலவியசீர் வண்ணமுங்கார் நெய்தலெனக் கடிமணமு
நிறைந்து நாற்ற
மலரகில்சந் தெரிமணிப்பூ ணலங்கரிக்கி லானாத
மகிழ்ச்சி யெய்தி
இலகுவதுத் தமவாசி யென்றுரைப்பர் பரிவேத
மெல்லை கண்டோர்.

2918 நூறுவிரல் உத்தமவாம் பரிக்குயரிவீ ரெட்டுவிர
லூற நீக்கிக்
கூறுவிரன் மத்திமமாம் பரிக்கறுபத் தொன்றதமக்
குதிரை கென்ப
ஈறில்புக ழாய்பொருந ரிப்பரியைப் பூசனஞ்செய்
திறைஞ்சிப் பாசம்
மாறுவார் எனமணித்தார் சதங்கைசிலம் பணிவித்து
மதிக்கோ மாறன்.

2919 கொத்தவிழ்தார் நறுஞ்சாந்தங் கொண்டுசெழும் புகைதீபங்
கொடுத்துப் பூசை
பத்திமையாற் செய்திறைஞ்சி யெதிர்நிற்ப வாலவாய்ப்
பரனை நோக்கிக்
கைத்தலந்தன் சிரமுகிழ்த்து வாழியெனப் பரிகொடுத்தான்
கயிறு மாறி
முத்தொழிலின் மூவராய் மூவர்க்குந் தெரியாத
முக்கண் மூர்த்தி.

உத்தமக் குதிரையின் இலக்கணம்

2917.''உயர் குடியில் பிறந்த கற்புடைய மகள்போலக் கவிழ்ந்த முகத்தையும், கருங்குவளை மலர்போலக் கண்ணையும் கொண்டு, கருமுகில் போல் விளங்கும் சிவந்த நிறமும் கருநெய்தல் போன்ற மணமும் நிறைந்ததும், மணம்மிக்க மலர், அகில் குழம்பு, சந்தனக் குழம்பு, மணிப்பூண் அணிகள் இவற்றால் அழகு செய்யின் மகிழ்வுடன் திகழ்வதுமாக இருப்பது 'உத்தமக் குதிரை'- என்று பரிநூலின் இலக்கணம் கண்டோர் உரைப்பர்.

2918.''தாவுகின்ற இவ்வுத்தமக் குதிரைக்கு உயரம் நூறு விரலளவாகும் மத்திம குதிரைக்கு உயரம் அந்நூறு விரலளவில் பதினாறு விரல் உயரம் குறைத்து மீதமுள்ள எண்பத்து நான்கு விரலளவாகும். அதமக் குதிரைக்கு உயரம் அறுபத்தொரு விரலாகும். அழிவில்லாத புகழுடைய மன்னனே! வேந்தர்கள் இக்குதிரையைப் பூசித்து வணங்கிக் கயிறு மாற்றுவார்கள்'', என்று கூறியருளினார். அதனைக் கேட்ட பாண்டியன் அக்குதிரைகளுக்கு அழகிய கிண்கிணி மாலையும், சதங்கை மாலையும், சிலம்பும் அணிவித்தான்.

கயிறு மாறுதல்

2919.கொத்தோடு மலர்ந்த மலர்களால் தொடுத்த மாலையும், நறிய சந்தனமும் கொண்டு செழுமையான தூபமும் தீபமும் கொடுத்துப் பூசை செய்து வணங்கி எதிரே நிற்க, மூன்று தொழில்களையுடைய மூன்று தேவராகியும், மூவர்க்கும் தெரியாத அம்முக்கண் மூர்த்தி, திருவால வாயில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளை நோக்கிக் கைகளைச் சிரமேற் குவித்து, ''மன்னன் வாழ்க''- என வாழ்த்தி, கயிறுமாறிக் கொடுத்தான்.

வேறு

2920 உவநிடக் கலணை வாசி யொன்றலா னின்ற மாயக்
கவனவாம் புரவி யெல்லாங் கொடுத்திடக் கவர்ந்து வீறு
தவனனில் விளங்குந் தென்னன் றன்பெருங்
கோயில் உய்ப்பப்
பவனமுங் கடலும் போலக் கொண்டுபோய்ப்
பந்தி சேர்த்தார்.

2921 வாசிவா ணிகர்க்குத் தென்னன் வெண்டுகில் வரிசை யாக
வீசினான் பாணற் கேவல் செய்தவர் வெள்கு வாரோ
கூசிலா நேசர்க் காப்பான் குதிரையின் இழிந்தேற் றந்தத்
தூசினை யிரண்டாங் கங்கை யெனமுடி சூடி நின்றான்.

2922 இனையதூ சிவன்பால் ஊர்தி யிழிந்துநின் றேற்றுச் சென்னி
புனைவதென் னிவர்கை யோடும் புனைந்ததிக்
குடையும் பூண்ட
கனலராப் பூணு மன்னன் கவருமோ வென்று தம்மின்
வினவினர் வெகுண்டு சொன்னார் கணத்தனி
வீர ரெல்லாம்.

2920.மறை முடியையுடைய, கல்லணையையுடைய வேதப்பரி ஒன்றையல்லாமல், வேறு நின்ற வேகமுடைய மாயக் குதிரைகள் எல்லாவற்றையும் கொடுத்தான். ஒப்பற்ற சூரியனைப் போல் விளங்கும் பாண்டியன் வாங்கி, பாகர்கள் கையில் கொடுத்து, தனது அரண்மனைக்குச் செலுத்துமாறு கட்டளை இட, அவர்கள் காற்றையும் கடலையும் கொண்டு போவது போல் கொண்டுபோய் அரண்மனையில் உள்ள பந்தியில் சேர்த்தார்கள்.

இறைவர் சன்மானம் பெறுதல்

2921.குதிரை வணிகராகிய இறைவர்க்குப் பாண்டியன் வெள்ளிய ஆடை ஒன்றைப் பரிசாகக் கொடுத்தான். பாணபத்திரனுக்கு அடிமை என்று கூறி அவன் பணியைச் செய்தவர் இதை வாங்குவதற்கு வெட்கப்படுவாரோ? சிறிதும் வெட்கப்படாமல் அன்பராகிய வாதவூரரைக் காப்பதற்காக, குதிரையில் இருந்து கீழே இறங்கி, ஆடையை வாங்கி இரண்டாவது கங்கையைச் சூடுவது போல் தம் முடியில் சூடி நின்றார்.

(இதில் உள்ள பாணபத்திரன் வரலாற்றினை இப்புராணத்தில் 41-ஆம் படலத்தில் கண்டு கொள்க)

2922.ஒப்பற்ற கணவீரர் அனைவரும், ''இந்த கிழிந்த ஆடையை இம்மன்னனிடம், குதிரையினின்றும் இறங்கி எளியவன் போல நின்று வணக்கத்துடன் வாங்கி முடியில் சூடியது எதற்காக? அவ்வாறு ஏற்காவிடில் இவர்கையில் உள்ள ஒட்டினையும், அணிந்த திக்காடையையும், அணிந்துள்ள பாம்பணிகளையும் பாண்டியன் கவர்ந்து கொள்வானோ?'' என்று ஒருவரோடொருவர் சினத்துடன் கூறிக் கொண்டனர்.

2923 அறந்தரு கோலான் வெவ்வே றடுபரி வயவர் யார்க்கும்
நிறந்தரு கலிங்க மீந்தா னேர்ந்தவை வாங்கி யன்பிற்
சிறந்தருள் வடிவாய் வந்தார் செழுமறைப் புரவி யோடு
மறைந்தனர் மறைந்தார் ஒக்க மாயவாம் பரிமேல் வந்தார்.

2924 இருமைக்குந் துணையாய் நின்ற விருபிறப் பாளர்க் கேற்ப
அருமைத்தாஞ் சிறப்பு நல்கி யவரிடத் தவரை யுய்த்துப்
பருமத்த யானை வேந்தன் பகற்கதிர் வானத் துச்சி
வருமப்போது எழுந்து செம்பொன் மாடநீள்
கோயில் புக்கான்.

2925 ஏனைமந் திரருந் தத்த மில்புகப் புரவி பார்த்த
மாநகராருந் தத்த மனைபுகப் பரியின் பாக
ரானவர் தாமுங் கோயில் அடைந்துதம் விளையாட்
டெல்லாம்
மீனெடுங் கண்ணினாட்கு விளம்பின ரிருந்தா ரன்றே.

நரி பரியாக்கிய படலம் முற்றிற்று.

2923.அறநெறியினின்றும் வழுவாது பேணுவதால் குடிகட்கு இன்பம் தரும் செங்கோலையுடைய பாண்டியன், வேறு வேறு வெற்றி மிக்க குதிரை வீரர் அனைவருக்கும் ஒளி பொருந்திய ஆடைகளைச் கொடுத்தான். அன்பினால் சிறந்து அருள் உருவாய் வந்த இறைவர் முன் சென்று அவற்றை வாங்கிக்கொண்டு வேதப் பரியுடன் மறைந்து அருளினார். மாயமாகிப் தாவுகின்ற குதிரையில் வந்த கணவீரரும் கூடனே மறைந்தனர்.

பாண்டியன் முதலியோர் அவரவரிடம் செல்லல்

2924.இம்மையும் மறுமையும் ஆகிய இரண்டிற்கும் துணையாய் நின்ற மறையவராகிய வாதவூரருக்குப்பொருந்து மாற்றால் அருமையான வரிசைகளை அளித்து அவரை அவரிடத்திற்கு அனுப்பிவைத்தான். யானையை உடைய மன்னன், சூரியன் வானின் உச்சியில் வருகின்ற பொழுதில் எழுந்து சிவந்த பொன்னாலாகிய மாடத்தையுடைய நீண்ட அரண்மனையில் புகுந்தான்.

2925.மற்றைய அமைச்சர்களும் தம்தம் வீட்டிற்குச் சென்றனர். குதிரைக் காட்சியைக் காணவந்த பெரிய நகரத்து மாந்தரும் தத்தம் வீட்டிற்குச் சென்றனர். குதிரை வீரராகிய இறைவரும் தம் திருக்கோயிலை அடைந்து தமது திருவிளையாடல் அனைத்தும் மீன் போன்ற நீண்ட கண்களையுடைய அம்மையாருக்குக் கூறியருளினார்.

நரி பரியாக்கிய படலம் முற்றிற்று

60. பரி நரியாக்கி வைகை அழைத்த படலம்

2926 ஞான நாயகன் அணையா னரிபரி வெள்ள
மான வாறுரை செய்துமீண் டப்பரி நரியாய்ப்
போன வாறுகண் டமைச்சரைப் புரவலன் கறுப்ப
வான வாறுபோல் வைகை நீர் வந்தவா றுரைப்பாம்.

2927 நெருங்கு தூரிய முழக்கமுந் தானையு நிமிர
மருங்கி லாதவர் வந்தெதிர் மங்கல மேந்த
அரங்கொல் வேலினான் அருளிய வரிசையோ டணைந்து
புரங்கொல் வேதியர்க் கன்பர்தந் திருமனை புகுந்தார்.

2928 உடுத்த சுற்றமுங் கழகமும் ஒட்டிய நட்பும்
அடுத்த கேண்மையால் வினவுவா ரவரவர்க் கிசைய
எடுத்த வாய்மையான் முகமனு மகிழ்ச்சியு மீந்து
விடுத்த வாதவூ ராளிகள் வேறிடத் திருந்து.

2929 கரந்தை சூடிய வாலவாய்க் கண்ணுத னாமன்
றிரந்த வண்ணமே யாங்கொடு போகிய வெல்லாம்
பரந்த வன்பருந் தானுங்கொண் டெம்மையும் பணிகொண்
டரந்தை தீர்த்தனன் அன்றியு மரசனுக் கிசைய.

60. பரி நரியாக்கி வைகை அழைத்த படலம்

2926. ஞான நாயகனான இறைவனின் ஆணையால் நரிகள் குதிரைப் பெருக்காகி வந்த திருவிளையாடலைக் கூறினோம். இப்போது, அக்குதிரைகள் நரிகளாகிப் போன தன்மை கண்டு, மந்திரியாகிய வாதவூரடிகளை மன்னன் தண்டிக்க, வான ஆற்றினைப் போல வையை நதி பெருகி வந்த திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

வாதவூரர் தம்மை அடைந்தார்க்கு முகமன் கூறிவிடுதல்

2927. நெருங்கிய வாத்தியங்களின் பேரொலியும், சேனைகளின் ஆரவாரமும் ஓங்க, இடை இல்லாத பெண்கள் எதிரே வந்து எட்டு மங்கலங்களையும் ஏந்தவும், திரிபுரம் அழித்த இறைவர்க்கு அன்பராகிய வாதவூரர், வேற்படையினை உடைய பாண்டியன் அளித்த சிறப்புடன் சென்று தம் தெய்வத்தன்மைப் பொருந்திய மனையில் புகுந்தார்.

2928. சூழ்ந்துள்ள சுற்றத்தவரும் கற்றோரும் நெருங்கிய நண்பருமாய் நட்புடன் வினவியதற்கெல்லாம் பொருத்தமான இன்சொற்களால் முகமன் கூறி மகழ்வை அளித்து அவரவர் இருக்கைக்குச் செல்ல விடுத்த வாதவூரடிகள் தான் மட்டும் ஓர் தனியிடத்தில் அமர்ந்தார்.

வாதவூரடிகளின் மனமயக்கம்

2629. ''கரந்தை மலரைச் சூடிய திருவாலவாயுடைய இறைவர், நாம் முன்பு குறையிரந்து வேண்டிய வண்ணமே நாம் கொண்டு சென்ற பொருள்களை எல்லாம் மிக்க அன்பர்களும் தாமும் ஏற்றுக்கொண்டு எம்மையும் அடிமை கொண்டு என் பிறவித் துன்பத்தையும் தீர்த்தான். அத்துடன் மன்னன் விரும்பியவாறு,

2930 நல்ல வாம்பரி செலுத்தின னமக்கினிக் கவலை
இல்ல வாம்படி யாக்கினன் இன்னமொன் றுலகை
வெல்ல வாம்படி தன்னருள் விளைக்குமா னந்தம்
புல்ல வாம்படி யெமைத்தவம் பூட்டுவான் வேண்டும்.

2931 என்ற வாதரந் தலைக்கொள விகபரத் தாசை
ஒன்றும் இன்றியே யுணர்வினுக் குள்ளுணர் வாகத்
துன்று பூரண மாகிய சுந்தரச் சோதி
மன்று ளாடிய சேவடி மனம்புதைத் திருந்தார்.

2932 நாளை யுந்திரு வாலவாய் நாயகன் றமரை
ஆள மண்சுமந் தருளுமென்று அதனையுங் காண்பான்
ஊளை வெம்பரிப் பூழிபோர்ப் புண்டமெய் கழுவி
மீள வேண்டுவான் போறகடல் குளித்தனன் வெய்யோன்.

2933 ஈச னாடல்வெம் பரிக்குழாத் தெழுந்தசெந் தூளான்
மாசு மூழ்கிய வண்டத்தை வானிலா வென்னுந்
தூசி னாலறத் துடைப்பவன் எனமணித் தொகுதி
வீசு மாழியுண் முளைத்தனன் வெண்மதிக் கடவுள்.

2934 சேய தாரகை வருணமாத் தீட்டிய வானம்
ஆய வேட்டினை யிருளெனு மஞ்சனந் தடவித்
தூய வாணிலா வென்னும்வெண் டூசினாற் றுடைப்பான்
பாய வேலையின் முளைத்தனன் பனிமதிக் கடவுள்.

2930.''நல்ல குதிரைகளைக் கொண்டு வந்தனன். நமக்கு இனிக் கவலை இல்லை. ஆயினும் இன்னும் செய்ய வேண்டியது ஒன்றுள்ளது. இனி உலகினை வெற்றி கொள்ளும்படி தம்முடைய சிவானந்த அனுபவத்தில் இடைவிடாதிருக்கும்படி என்னைத் தவநெறியில் செலுத்துதல் வேண்டும்''.

2931.என்ற பெரு விருப்பம் கொண்டு, இம்மை மறுமை இன்பங்களில் சிறிதும் ஆசைஇல்லாமல், அறிவுக்குள் அறிவாய் உள்ள எங்கும் நிறைந்த சோமசுந்தரக் கடவுளின் வெள்ளியம் பலத்துள் ஆடியருளும் சிவந்த திருவடியைத் தன் மனத்தில் எண்ணி இருந்தார்.

சூரியன் மறைவும் சந்திரன் தோற்றமும்

2932.அப்போது ''நாளைக்கு ஆலவாய் அண்ணல், திருவாதவூரடிகளை ஆண்டருளும் பொருட்டு மண்சுமந்தருள் வான் என்றும் அதனையும் காண வேண்டும்'', என்றும் கருதி ஊளையிடும் நரிப்பரிகளால் மேலெழுந்த புழுதியில் போர்க்கப் பட்ட உடலைக் கழுவிக்கொண்டு திரும்பி வருவதற்கு எண்ணிய வனைப் போலச் சூரியன் மேலைக் கடலில் மூழ்கினான்.

2933.இறைவன் திருவிளையாடலால் போந்த குதிரைக் கூட்டத்தினால் எழுந்த செம்புழுதியினால் அழுக்கடைந்த அண்டத்தினைத் தமது வெள்ளிய நிலவாகிய ஆடையினால் முற்றும் துடைக்கத் தோன்றியவனைப் போல முத்துக் குவியல் களை அலைகளால் வீசும் கடலின் கண் சந்திரன் வந்து தோன்றினான்.

2934.தூரத்தில் உள்ள நட்சத்திரங்களையே எழுத்தாக எழுதப்பட்ட வானமாகிய ஏட்டினை, இருளாகிய மையினைத் தடவி, நிலவாகிய வெள்ளாடையினால் துடைப்பதற்கு, குளிர்ச்சி மிக்க சந்திரனாகிய தேவன் பரந்த கடலில் தோன்றினான்.

2935 கள்ளொ முக்குதார் மீனவன் கடிமனை புகுந்த
புள்ளு வப்பரி நள்ளிருட் போதுவந் தெய்தப்
பிள்ளை யாகிய மதிமுடிப் பிரான்விளை யாட்டால்
உள்ள வாறுதம் வடிவெடுத் தொன்றோடொன் றுசாவும்.

2936 சங்கி நோசையும் பிணப்பறை யோசையுஞ் சரிந்த
மங்கு லோதிய ரழுகுரல் ஓசையும் வடந்தாழ்
கொங்கை சேப்புறக் கையெறி யோசையுங் குளிர
எங்கு நாஞ்செவி பருகுவ மின்னமு தென்ன.

2937 வாம்ப ரித்திர ளாகிநா மனித்தரைச் சுமந்து
தாம்பு சங்கிலி தொடக்குண்டு மத்திகை தாக்க
ஏம்ப லுற்றனம் பகலெலாம் இப்பொழு தீண்டு
நாம்ப டைத்தன நம்முரு நம்விதி வலத்தால்.

2938 கான கந்தனில் ஒழுகநாள் முதலிந்தக் கவலை
யான துன்பநா மறிந்தில மின்னமு மார்த்த
மான வன்றொடர் வடுக்களு மத்திகைத் தழும்பும்
போன வன்றினிப் புலருமுன் போவதே கருமம்

குதிரைகள் நரிகளாக மாறுதல்

2935.தேனைச் சொரிகின்ற வேப்ப மலர் மாலையை அணிந்த பாண்டியனது காவலையுடைய மனையின் கண்புகுந்த மாயக் குதிரைகள், நடு இரவில் பிறைமதியணிந்த பெருமானின் விளையாட்டால் முன் உள்ள தன் நரிவடிவத்தை மீண்டும் எடுத்துக் கொண்டன. தம்முள் பேசிக் கொண்டன.

நரிகள் ஒன்றோடொன்று பேசிக் கொள்ளுதல்:

2936.அப்போது நரிகள் ஒன்றோடொன்று நோக்கி ''சங்கொலியையும், பிணப்பறை ஒலியையும், பின்புறம் சரிந்த முகில் போல் விரிந்த கூந்தலையுடைய பெண்களின் அழுகை ஒலியையும், முத்து மாலை தங்கிய கொங்கைகள் சிவக்கும்படி கையினால் அடித்துக் கொள்ளும் ஒலியையும் இனிய அமுதினைப் பருகுவது போல நாம் எவ்விடத்தும் செவிகள் குளிரப் பருகுவோம்!''

2937.''நாம் பகல் முழுவதும் குதிரைக்கூட்டங்களாகி மனிதர்களைச் சுமந்து, கயிற்றினாலும் சங்கிலியாலும் கட்டப் பட்டு, சவுக்கடிபட்டு வருந்தினோம். இப்போது இங்கு நாம் நம் நல்வினையின் வலிமையாலே பழைய வடிவினைப் பெற்றுக் கொண்டோம்.

2938.''நாம் காட்டில் சஞ்சரித்த நாள் முதல் நேற்று வரையும் இந்தக் கடும் துன்பத்தை ஒரு காலத்தும் அறிந்திலோம். சங்கிலியால் கட்டப்பட்டதால் உண்டான தழும்புகளும் சவுக்கடியின் தழும்புகளும் இன்னும் நம் உடலை விட்டு நீங்கவில்லை. இன்றிரவு விடியுமுன் நாம் இவ்விடத்தினின்றும் ஓடிவிடுவதே செய்யத் தக்க காரியம்.

2939 உள்ள மாரநாந் தின்பதற் கூன்சரிந் தொழுகும்
நொள்ளை நாகில நந்தில நுழைந்தளை யொதுங்கும்
கள்ள நீள்கவைக் கானஞெண்டு மிலவினிக் கடலை
கொள்ளி னோடுபைம் பயறுபுற் கொள்வதை யடாதால்.

2940 நாடிக் காவலன் றமருளார் நகருளார் கண்டாற்
சாடிக் காய்வரே புலருமுன் சங்கிலித் தொடர்நீத்
தோடிப் போவதே சூழ்ச்சியென் றூக்கமுற் றொருங்கே
கூடிப் பேசின வூளைவாய்க் குறுநரிக் குழாங்கள்.

2941 வெறுத்த காணமுங் கடலையும் விரும்பின கோழூன்
துறுத்த நாகுநந் தலவனைச் சங்கிலித் தொடரை
முறித்த கால்களிற் கட்டிய கயிற்றொடு முளையைப்
பறித்த வூளையிட்டு எழுந்தன போம்வழி பார்ப்ப.

2942 நின்ற நீணிலைப் பந்தியு ணெருங்குமா நிரையைச்
சென்று தாவிவாள் எயிறுறச் சிதைபடக் கடித்து
மென்று சோரியைக் குடிப்பன வீக்கிய முளையோ
டொன்ற வோடவே யண்டத்தி லூறுசெய் வனவால்.

2943 ஊளை யோசைகேட் டிம்மென வுறக்கநீத் தெழுந்து
காளை வீரராய் மந்துரை காப்பவர் நெருநல்
ஆளி போல்வரு பரியெலா நரிகளாய் மற்றை
ஒளி மாநிரை குடர்பறித்து உண்பன கண்டார்.

நரிகள் படுத்திய பாடு

2939.''மனமார நாம் வயிறு நிறைய தின்பதற்குத் தசையுடைய நத்தைகள் இல்லை; சங்கும் இல்லை. வலையில் நுழைந்து பதுங்கும் கள்ளத்தையும் பிளவு பட்ட கால்களையும் உடைய நண்டுகளும் இல்லை. இனி கடலையும், கொள்ளும், பசிய பயறும், புல்லும் தின்னுவது நமக்குப் பொருந்தாது.

2940.நகரில் உள்ள மக்களும், மன்னன் சேனைகளும் நம்மை நாடி வந்து பார்த்தால் அடித்துக் கொன்று விடுவார். ஆதலால் இன்றிரவு விடியுமுன் சங்கிலிக் கட்டினைமுறித்துக் கொண்டு ஓடிவிடுவது நல்லது'', என்று ஊளையிடும் வாயினை யுடைய நரிக் கூட்டங்கள் ஒரு சேரக் கூடிப் பேசி முடிவு செய்தன.

2941.கொள்ளு, கடலை போன்றவற்றை வெறுத்து தசையுடைய நத்தையையும், சங்கினையும், நண்டையும் விரும்பி, சங்கிலிக் கட்டினை முறித்துக் கால்களில் கட்டிய கயிற்றுடன் முளையையும் பிடுங்கி ஊளையிட்டுக் கொண்டு தப்பியோடும் வழியினைப் பார்த்தன.

2942.சில, தாம் நின்ற நீண்ட நிலையினையுடை-ய குதிரைப் பந்தியிலே தம்முடன் பிணிக்கப்பட்டிருந்த குதிரைக் கூட்டங் களைத் தம் பற்களாலே தாவிக் கடித்து மென்று குருதியைக் குடித்தன. சில, கட்டிய முளையோடு பிடுங்கிக் கொண்டு ஓடுதலால் அவற்றின் அண்டங்களில் (ஆண்குறிவிதை) முளைகள் பட்டு ஊறு செய்தன.

2943.குதிரைப் பந்தி காக்கும் காளைப் பருவமுடைய வீரர்கள் நரிகளின் ஊளை ஒலியைக் கேட்டு உறக்கம் களைந்து விரைந்து எழுந்து, நேற்றுச் சிங்கம் போல் வந்த குதிரையெல்லாம் நரிகளாகி, ஏனைய வரிசையாயக் கூடிய குதிரைக் கூட்டங்களின் குடல்களைப் பறித்து உண்ணுதலைக் கண்டனர்.

2944 காண்ட லுஞ்சில வலியுள கடியமுள் ளரணந்
தாண்டி யோடின சிலநரி சாளர முழையைத்
தூண்டி யோடின சிலநரி சுருங்கையின் வழியால்
ஈண்டி யோடின நூழில்புக் கேகின சிலவே.

2945 முடங்கு காலுடைச் சம்புவ மூப்படைந் தாற்றல்
அடங்கு மோரியுங் கண்குரு டாகிய நரியும்
ஒடுங்கி நோயுழந் தலமரும் இகலனு மோடும்
இடங்கள் கண்டில பந்தியிற் கிடந்தன வேங்கி.

2946 கிட்டி யோடினர் வெருட்டுவோர் கீழ்விழக் கடித்துத்
தட்டி யோடுவ சிலவெதிர் தடுப்பவர் அடிக்கீழ்
ஒட்டி யோடுவ சிலகிடந் தூளையிட் டிரங்குங்
குட்டி யோடணைத் தெயிலிறக் குதிப்பன சிலவே.

2947 மறம்பு னைந்தவேன் மீனவன் மாளிகை தள்ளிப்
புறம்ப டைந்தவிந் நரியெல்லாம் பொய்கையுய் யானம்
அறம்ப யின்றநீண் மனைமறு காலயங் கவலைத்
திறம்ப டர்ந்தபன் மாடநீ ணகரெலாஞ் செறிந்த

2948 மன்றுஞ் சித்திர கூடமு மாடமு மணிசெய்
குன்றுந் தெற்றியு முற்றமு நாளொடு கோள்வந்
தென்றுஞ் சுற்றிய பொங்கரும் எங்கணு நிரம்பி
ஒன்றுஞ் சுற்றமோ டூளையிட் டுழல்வன நரிகள்.

2944.அங்ஙனம் கண்ட அளவில் சில வலிமை மிக்க நரிகள், கூரிய இரும்பு முள்களைத் தலையில் உடைய மதில்களைத் தாண்டி ஓடின. சில நரிகள் பலகணியின் துளைகளைத் தள்ளி ஓடின. சில நரிகள் சுரங்கையின் வழியினால் ஓடின. சில நரிகள் கரந்துறை வழியால் புகுந்தோடின.

2945.வளைந்த காலினை உடைய நரிகளும், வயது முதிர்ந்த கிழநரிகளும், குருடான நரிகளும், உடல் இளைத்து நோயினால் வருந்தும் நரிகளும் ஓடும் வழியைக் காணாதனவாய், குதிரை லாயத்திலேயே மனம் ஒடுங்கிக் கிடந்தன.

2946.சில நரிகள் தங்களை நெருங்கி வந்து வெருட்டுவோரைக் கீழே விழும்படி கடித்து விட்டு அவர் கையில் அகப்படாமல் ஓடின. சில நரிகள் எதிரே வந்து தடுப்பவரின் காலின் கீழே நுழைந்தோடின. சில நரிகள் செயலின்றிக் கிடந்து ஊளையிட்டுக் கொண்டு வருந்தும் தம் குட்டிகளை அணைத்துக் கொண்டு மதிலைத் தாவிக் குதித்து ஓடின.

2947.வெற்றிமாலை சூடிய, வேற்படை ஏந்திய பாண்டியனது மாளிகையைக் கடந்து வெளியே சென்ற நரிகள் எல்லாம் குளக்கரையும் பூந்தோட்டங்களும் அறம்மிக்க நெடிய சாலைகளும், வீதிகளும், திருக்கோயில்களும் சந்தி வகைகளும் ஆகிய பல இடங்களில் சென்று பல மாடங்களையுடைய நெடிய நகர் முழுவதும் நெருங்கின.

2948.நரிக் கூட்டங்கள் மன்றங்கள், சித்திரக்கூடங்கள், மாடங்கள், செய்குன்றம், திண்ணைகள், முன்றில்கள், நாள் மீனோடு கோள்கள், சோலைகள் ஆகிய எல்லா இடங்களிலும் நிறைந்து ஊளையிட்டுத் திரிந்தன.

2949 கரியி னோசையும் பல்லிய வோசையுங் கடுந்தேர்ப்
பரியி னோசையும் இனறமி ழோசையும் பாணர்
வரியி னோசையும் நிரம்பிய மணிநக ரெங்கும்
நரியி னோசையாய்க் கிடந்தது விழித்தது நகரம்.

2950 விழித்த ஞாளிகள் விழித்தன கேகயம் வெருவி
விழித்த கோழிகள் விழித்தன மதுகரம் வெருண்டு
விழித்த வோதிமம் விழித்தன குருகினம் விரைய
விழித்த வாரணம் விழித்தன கருங்கொடி வெள்ளம்.

2951 அட்டில் புக்கன நிணத்தினை யழற்பசி யுருக்கப்
பட்ட டுக்கிய கருங்குலம் உருட்டுவ பாகு
சுட்ட சோறுபல் லுணவுவாய் மடுப்பன சூழ்ந்த
குட்டி யுண்ணவுங் கொடுப்பன கூவிளி கொள்வ.

2952 புறவு பூவைபைங் கிள்ளைகள் பூத்தலைச் சேவல்
பிறவும் வாருவ வுறங்கிய பிள்ளையைக் கொடுபோய்
நறவு நாறிய குமுதவாய் நகையெழ நக்கி
உறவு போல்விளை யாடுவ வூறுசெய் யாவால்.

2953 பறிப்ப வேரொடு முன்றில்வாய்ப் படர்பசுங் கொடியைக்
கறிப்ப நாகிளங் காயெலாங் கரும்புதேன் கவிழ
முறிப்ப வாயிட்டுக் குதட்டுவ வண்டுவாய் மொய்ப்பத்
தெறிப்ப வூளையிட்டு ஆடுவ திரிவன பலவே.

2949.யானனையின் பிளிறொலியும், பலவகை வாத்தியங்கள் ஒலியும், தேரில் பூட்டிய விரைந்த வேகத்தை யுடைய குதிரைகளின் கனைப் பொலியும், இனிய தமிழின் ஒலியும், பாணர்களின் பாட்டொலியும், நிறைந்த அழகிய நகர் முழுவதும், நரிகளின் ஊளையொலி மிகுந்தெழுந்ததாலே நகரிலுள்ள அனைவரும் விழித்துக் கொண்டனர்.

2950.நாய்கள் விழித்தன. மயில்கள் அஞ்சி விழித்தன. கோழிகள் விழித்தன. வண்டுகள் பயந்து விழித்தன, அன்னப் பறவைகள் விழித்தன. நாரைக் கூட்டங்கள் விழித்தன. யானைகள் விழித்தன. கரிய காக்கைக் கூட்டங்கள் விழித்தன.

2951.சில நரிகள், தசைகளை உருக்குவது போன்ற பசி மிகுதியால் சமையல் அறையில் புகுந்து அடுக்கியிருந்த பல மட்பாண்டங்களை உருட்டி, குழம்பு, சோறு போன்ற பல உணவுகளைத் தின்றும், தம்மைச் சுற்றியுள்ள குட்டிகள் உண்ணுதற்குக் கொடுத்தும் பேரொலி செய்தன.

2952.சில நரிகள் புறாக்களையும், நாகணவாய்ப் பறவைகளையும், கிளிகளையும் மலர் சூட்டப் பெற்றது போன்ற கொண்டையை யுடைய சேவல்களையும், இவை போன்ற பிறவற்றையும் கவர்ந்து தின்றன. சில நரிகள் உறங்கிய பிள்ளைகளைக் கொண்டு போய்த் தேன் ஊறும் குமுதம்போன்ற வாயில் புன்னகை தோன்ற நக்கி உறவோடு விளையாடின. துன்பம் செய்ய வில்லை.

2953.பல நரிகள் முன்றில் படர்ந்த பசுமையான கொடிகளை வேரோடு பிடுங்கின. அவற்றில் உள்ள பல வகையான இளம் காய்களைக் கடித்தன. தேன் ஒழுகுமாறு கரும்புகளை வாயில் போட்டுக் குதட்டி,. வண்டுகள் மொய்க்கும் படி கீழே உமிழ்ந்து, ஊளையிட்டு விளையாடித் திரிந்தன.

2954 ஆயி ரம்பொறி திரிமருப் படல்கெழு மேடம்
ஆயி ரங்கருந் தாதுதே ராக்கைய வேனம்
ஆயி ரங்கவி ரனையசூட் டவிர்தலைக் கோழி
ஆயி ரங்குறும் பார்ப்பொடு மாருயிர் செகுப்ப

2955 பின்றொ டர்ந்துநாய் குரைப்பொடு துரந்திடப் பெயர்ந்து
முன்றொ டர்ந்துயிர் செகுப்பன வெஞ்சின மூட்டி
வன்ற டம்புய மள்ளர்போய் வலிசெயப் பொறாது
கன்றி வந்துசெம் புனலுகக் கடிப்பன வனந்தம்.

2956 பன்றி வாய்விடும் இரக்கமும் பல்பொறி முள்வாய்
வென்றி வாரணச் சும்மையு மேழகத் தொலியும்
அன்றி நாய்குரைப் போசையு மாடவ ரார்ப்பும்
ஒன்றி யூளைவாய் நரிக்குரற் கொப்பதுண் டொருசார்.

2957 கங்குல் எல்லைகா ணியநகர் கண்விழித் தாங்கு
மங்கு றோய்பெரு வாயில்க டிறத்தலு மாறா
தெங்கு மீண்டிய நரியெலா மிம்மென வோடிப்
பொங்கு காரிருட் டுணியெனப் போயின கானம்.

2958 ஈறி லாச்சிவ பரஞ்சுட ரிரவிவந் தெறிப்பத்
தேறு வாரிடைத் தோன்றிய சிறுதெய்வம் போல
மாறி லாதபன் செங்கதிர் மலர்ந்துவா ளெறிப்ப
வீறு போயொளி மழுங்கின மீன்கணம் எல்லாம்.

2954.திருகிய கொம்பினையுடைய பொருக்கான வலிமையான ஆயிரம் ஆட்டுக் கிடாய்களையும், இரும்புபோன்ற உடலையுடைய ஆயிரம் பன்றிகளையும், மலர் சூட்டியது போன்ற தலையினை உடைய ஆயிரம் கோழிகளையும், ஆயிரம் கோழி குஞ்சுகளையும் கொன்று திரிந்தன.

2955.பல நரிகள், நாய்கள் தம்மைத் தொடர்ந்து துரத்திடத் திரும்பி முன்னே துரத்திச் சென்று அவற்றின் உயிரைப் போக்கின. கொடிய சினத்துடன், வலிய தோளையுடைய வீரர்கள் சென்று துன்புறுத்த, பொறுக்காது சினந்து மேல் விழுந்து இரத்தம் ஒழுக அவர்களைக் கடிப்பன.

2956.பன்றிகள் வாய்விட்டுக் கதறும் ஒலியும், முள் போன்ற வாயுடைய கோழிகள் கூவும் ஒலியும், ஆடுகளின் ஒலியும், இவையெல்லாம் நாய் குரைக்கும் ஓசையும், ஆடவர் களின் ஆரவாரமும் ஒன்றுபட்டு நரிகளின் ஊளை ஒலி போலக் கேட்டன.

2957.இரவின் முடிவைக் காண்பதற்கு நகரம் கண்விழித்தது போலப் பெரிய வாயில்கள் திறந்தவுடன், எங்கும் இடமில்லாமல் நரிக்கூட்டங்கள் விரைந்து, மிகக் கரிய இருளின் துண்டங்கள் காட்டிற்கு ஓடினாற் போலக் காட்டிற்குள் ஓடி மறைந்தன.

சூரியன் தோற்றம்

2958.கேட்டல் சிந்தித்தல் நிட்டைகூடல் முதலியவற்றால் மெய்யுணர்வு பெறாதவரிடத்து, முடிவில்லாத சிவ பரஞ்சோதி யாகிய சூரியன் தோன்றி, கிரணத்தை வீச அங்குத் தோன்றிய சிறு தெய்வங்கள் வலி குறைந்து ஒளி மழுங்குதல்போல, சூரியனின் ஆயிரம் கிரணங்களும் பரவி ஒளிவீச விண் மீன்களின் கூட்டமெல்லாம் வலிகுன்றி ஒளி மழுங்கின.

2959 அண்ட ருக்கரி தாகிய மறைப்பொரு ளழுகைத்
தொண்ட ருக்கெளி தாகிமண் சுமந்தருள் வருத்தங்
கண்ட ருட்கழல் வருடுவான் கைகளா யிரமுங்
கொண்ட ருக்கவெங் கடவுளுங் குணகடல் உதித்தான்.

2960 கவன வெம்பரி செலுத்திமேற் கவலைதீர்ந் துள்ளே
சிவமு ணர்ந்தவர் சிந்தைபோன் மலர்ந்தசெங் கமலம்
உவமை யில்பரம் பொருளுணர்ந் துரையிறந்து இருந்தோர்
மவுன வாயென வடங்கின மலர்ந்தபைங் குமுதம்.

2961 பந்தி யாளர்கள் யாதெனப் பகர்துமென் றச்சஞ்
சிந்தி யாவெழுந் தொல்லைபோய்த் திரண்மதங் கவிழ்க்குந்
தந்தி யாரை சிறைகொளும் இருக்கையைச் சார்ந்து
வந்தி யாவுடல் பனிப்புற வந்தது மொழிவார்.

2962 காற்றி னுங்கடுங் கதியவாய்க் கண்களுக் கினிதாய்
நேற்று வந்தவாம் பரியெலா நின்றவாம் பரிக்குக்
கூற்றெ னும்படி நரிகளாய் நகரெலாங் குழுமி
ஊற்றஞ் செய்துபோய்க் காட்டகத்து ஓடிய வென்றார்.

2959.தேவர்களும் அரிதாகிய வேதத்தின் உட்பொருளான இறைவர், அழுதலை மேற்கொண்ட உண்மைத் தொண்டராகிய வாதவூரடிகளுக்கு எளிதாகி, மண் சுமந்தருளும் வருத்தத்தை நோக்கித் திருவருளாகிய திருவடிகளை வருடும் பொருட்டு, ஆயிரம் கைகளையும் கொண்டு சூரியன் கீழ்த்திசைக் கடலில் வந்து தோன்றினான்.

2960.மிக்க வேகத்தை யுடைய குதிரைகளைப் பாண்டியனுக்குச் செலுத்தியதாலே இனிக் கவலை இல்லை என்று எண்ணி அகத்தில் சிவபெருமானை உணர்ந்த மாணிக்கவாசகர் இதயம் போல செந்தாமரை மலர்கள் மலர்ந்தன. ஒப்பற்ற அப்பரம் பொருளை உணர்ந்து பேசாமல் இருந்த அம் மாணிக்கவாசகரின் மௌனம் பொருந்திய வாய்போல் இரவில் மலர்ந்திருந்த குமுத மலர்கள் கூம்பின.

பாண்டியன் மனக் கொதிப்பு

2961.மதுரைக் காவலர்கள் ''இதனை என்னவென்று நாம் அரசனுக்குக் கூறுவது?'' என்று அச்சம் கொண்டு, விரைந்து எழுந்துபோய்ப் பாண்டியன் அரசியல் மண்டபத்தை விடியற் காலையில் அடைந்தார்கள். அரசனை வணங்கினார்கள் உடல் நடுங்கி நடந்ததைக் கூறத்தொடங்கினார்கள்.

2962.''காற்றைவிட மிக்க வேகமுடையனவாய், கண்களுக்கு இனிய அழகுடையனவாய், நேற்று வந்த தாவுகின்ற குதிரைகள் அனைத்தும், பந்தியில் நின்ற பழைய குதிரைகளுக்கு எமன் என்று சொல்லுமாறு நரிகளாகி, நகரம் முழுவதும் பலவிதத் துன்பங்களைச் செய்து விட்டுச் காட்டிற்கு ஓடிப்போய் விட்டன'' என்று கூறினர்.

2963 கருத்து றாதவிச் சொல்லெனுங் கடியகால் செவியாந்
துருத்தி யூடுபோய்க் கோபமாஞ் சுடுதழன் முட்டி
எரித்த தீப்பொறி சிதறிடக் கண்சிவந் திறைவன்
உருத்த வாறுகண் டமைச்சரும் வெருவினார் ஒதுங்கி.

2964 அமுத முண்டவ னஞ்சமுண் டாலென முதனாட்
சமர வெம்பரி மகிழ்ச்சியுட் டாழ்ந்தவ னவையே
திமிர வெங்குறு நரிகளாய்ச் சென்றவே யென்னா
அமரர் அஞ்சிய வாணையா னாரஞ ராழ்ந்தான்.

வேறு

2965 அருகிருக்குந் தொல்லமைச்சர் தமைநோக்கி வாதவூ
ராளி யென்னுங்
கருகிருட்டு மனக்கள்வ னம்முடைய பொருண்முழுதுங்
கவர்ந்து காட்டிற்
குருதிநிணக் குடர்பிடுங்கித் தின்றுதிரி நரிகளெல்லாங்
குதிரை யாக்கி
வரவிடுத்தா னிவன்செய்த மாயமிது கண்டீரோ
மதிநூல் வல்லீர்.

2966 இம்மாயஞ் செய்தானை யென்செய்வ தெனவுலகில்
எமருக் கெல்லாம்
வெம்மாசு படுபாவம் பழியிரண்டும் படவிழுக்கு
விளைத்துத் தீய
கைம்மாறு கொன்றான்றன் பொருட்டினியா மேதுரைக்கக்
கடவே மென்று
சும்மாது சிரந்தூக்கி யெதிராடா திருந்தாரச்
சூழ்வல் லோர்கள்.

2963.நினைக்கவும் முடியாத இச்சொல்லாகிய கொடிய காற்று, செவியாகிய துருத்தி வழியாகச் சென்று, சினமாகிய கொடிய நெருப்பினை மூட்டி, எரித்த தீப்பொறி சிதறிட, அரசன் கண்கள் சிவந்து கோபிப்பதைக் கண்டு அமைச்சர்களும் பயந்து ஒதுங்கினார்கள்.

2964.முதல்நாள் குதிரைகளைக் கண்டு பெருமகிழ் வடைந்த, தேவர்களும் அஞ்சும் ஆணையையுடைய அரிமர்த்தன பாண்டியன், அக்குதிரைகளே மீள நரிகளாய் மாறி ஓடிப்போயின என்பதைக் கேட்டு, அமுதினை உண்டவன் மீண்டும் நஞ்சினை உண்டாற்போலத் துயரக் கடலில் மூழ்கினான்.

2965.தம் அருகில் இருக்கும் பழைய மந்திரிகளைப் பார்த்து, ''மதிநூல் வல்லீர்! வாதவூரன் என்னும் கரிய இருட்டுள்ளம் படைத்த கள்வன் நம்முடைய பொருள் முழுவதும் கொள்ளை கொண்டு, இடுகாட்டிலே குருதி ஒழுகும் நிணத்துடன் கூடிய குடல்களைப் பிடுங்கித் தின்று திரிகின்ற நரிகளை எல்லாம் குதிரைகளாக்கி நமக்கு வரவிடுத்தான். இவன் செய்த மாயத்தைக் கண்டீர்களா?

2966.''இவ்வஞ்சகம் செய்த வாதவூரனை, நாம் என்ன செய்யலாம்?'' என்று மன்னன் வினவினான். சூழ்ச்சியில் மிக்க வல்லவர்களாகிய அவ்வமைச்சர்கள், 'இவ்வுலகத்தில் நம் போன்றவர்களுக்கெல்லாம் கொடிய பழிபாவம் உண்டாகக் குற்றம் செய்து செய்ந்நன்றி மறந்த தீயோனாகிய வாதவூரன் பொருட்டு இனி யாம் யாது சொல்வோம்?'' என்று தலை கவிழ்ந்து பதில் ஒன்றும் சொல்லாமல் பேசாது இருந்தனர்.

2967 அவ்வேலை மனக்கினிய பரிசெலுத்தி யரசகா
ரியநன் றாக்கி
வெவ்வேலை மனக்கவலை விடுத்தனமென் றகமகிழ்ச்சி
விளைவு கூர
மைவ்வேலை விடமுண்ட வானவனை நினைந்தறிவு
மயமா மின்ப
மெய்வேலை யிடைவீழ்ந்தார் விளைந்ததறி யார்வந்தார்
வேந்தன் மாடே.

2968 வந்தவரைச் சிவந்தவிழிப் பொறிசிதறக் கடுகடுத்து
மறவோ னோக்கி
அந்தமிலாப் பொருள்கொடுபோய் நல்லவயப் பரிகொடுவந்
தழகி தாகத்
தந்தனையன் றோவரச கருமமுடித் திசைநிறுத்த
தக்கோர் நின்போல்
எந்தவுல குளரேயோ வெனவெகுண்டான் அதுகேட்ட
வீசன் றொண்டர்.

2969 குற்றமே தப்புரவிக் கெனக்கேட்டார் கோமகனுங்
குற்ற மேதும்
அற்றதா லரையிரவி னரியாகி யயனின்ற புரவி யெல்லாஞ்
செற்றுவார் குறுதியுக நிணஞ்சிதறக் குடர்பிடுங்கித்
தின்று நேர்வந்
துற்றபேர்க் கூற்றமிழைத் தூர்கலங்கக் காட்டகத்தி
லோடிற் றன்றே.

2970 கண்ணுமிடு கவசமும்போற் காரியஞ்செய் தொழுகியதுங்
காலம் பார்த்தெம்
எண்ணிய நிதியீட்டங் கவர்வதற்கோ நின்னமைச்சி
னியற்கை நன்றாற்
புண்ணியவே தியர்மரபிற் பிறந்தனமென் றொருபெருமை
பூண்டா யேநீ
பண்ணியகா ரியம்பழுது பிறராற் றண்டிக்கப்
படுவ ரென்றான்.

வாதவூரடிகளும் பாண்டியனும்

2967.அப்போது மனத்திற்கு இனிய குதிரைகளைச் செலுத்தி, அரசு காரியத்தையும் இனிதே முடித்து, கடல் போன்ற கொடிய மனக்கவலை நீங்கினோம் என்று கருதி மனத்தில் மகிழ்வு மேலோங்க, கரிய கடலின் நஞ்சினை உண்டஇறைவனைத் தியானித்து ஞானமாகிய பேரின்பக் கடலுள் வீழ்ந்த வாதவூரடிகள் நிகழ்ந்த செயலினை அறியாமல் அரசனிடம் வந்தார்.

2968.அங்ஙனம் வந்த வாதவூரடிகளை, மறத்தினையுடைய பாண்டியன், சிவந்த கண்களில் இருந்து தீப்பொறி சிதறுமாறு கோபத்துடன் பார்த்து. ''அளவிறந்த பொருள்களை எடுத்துக் கொண்டுபோய், நல்ல குதிரைகளைக் கொண்டு வந்து அழகாகக் கொடுத்தாயல்லவா? அதனால் அரசகாரியம் முடித்துப் புகழை நிலை நிறுத்த வல்ல தக்கோர் உன்னைப்போல் எவ்வுலகத்தில் உள்ளாரோ?'' என்று கூறினான். அதனைக் கேட்ட அடிகள்,

2969.''அக்குதிரைகளுக்கு என்ன குற்றம்'' என்று கேட்டனர். மன்னனும், ''நள்ளிரவிலே நரிகளாக மாறி, பக்கத்தில் நின்ற குதிரைகளை எல்லாம் கொன்று, இரத்தம் ஒழுகவும், நிணங்கள் சிதறவும் அவற்றின் குடல்களைப்பிடுங்கித் தின்று விட்டு, நேரில் வந்த மக்களுக்குத் துன்பம் விளைவித்து, ஊரில் உள்ளவர்கள் மனம் கலங்கக் காட்டிற்கு ஒடிவிட்டன. இதுவன்றி வேறு குற்றமொன்றுமில்லை.

2970.''இவ்வளவு காலமும் நீ எனக்குக் கண்ணும் கவசமும் போல ஒழுகியது,சமயம் பார்த்து நம்முடைய பொருளைக் கவருவதற்கோ? உன்னுடைய அமைச்சிலக்கணம நன்று, புண்ணிய மறையோர் மரபில் தோன்றினோம் என்று ஒரு பெருமை கொண்டனையே! நீ செய்த காரியம் பிறர் செய்வாராயின் உடனே தண்டிக்கப்படுவர்'' என்று கூறினான்.

2971 தண்டலா ளர்களிவனைக் கொடுபோய்நம்
பொருண்முழுதுந் தடுத்து மீர்த்தும்
மிண்டினால் வலிசெய்தும் வாங்குமென
வெகுண்டரசன் விளம்பக் கூற்று
மண்டுமேன் மறஞ்செய்யும் வலியுடையார்
கதிரையிரு ளடுத்துப் பற்றி
கொண்டு போனா லென்னக் கொடுபுறம்போ
யறவோரைக் கொடுமை செய்வார்.

2972 கதிர்நோக்கிக் கனன்மூட்டுங் கடும்பகலுச்
சியிலிரவிக் கடவு ணோர்நின்
றெதிர்நோக்க நிலைநிறுத்திக் கரங்களினு
நுதலினுங்கல் லேற்றிச் செந்தீப்
பிதிர்நோக்கத் தவரொறுப்ப வாற்றாராய்
வீழ்ந்திருளைப் பிளப்போன் செந்தீ
மதிநோக்கத் தனிச்சுடரை யழைத்தழுது
துதிசெய்வார் வாத வூரர்,

வேறு

2973 நாதவோ நாத முடிவிறந்த நாடகஞ்செய்
பாதவோ பாதனாம் என்னைப் பணிகொண்ட
வேதவோ வேத முடிவின் விளைந்ததனிப்
போதவோ போத நெறிகடந்த பூரணவோ.

2974 ஐயவோ வென்னுடைய வன்பவோ வன்பர்க்கு
மெய்யவோ மெய்யில் வினையேன் றலைவைத்த
கையவோ செய்யகழற் காலவோ காலனைக்காய்
செய்யவோ வேதப் பரியேறுஞ் சேவகவோ.

தண்டலர்கள் வாதவூரரை வறுத்தல்

2971.தண்டல்காரர்களை நோக்கி, ''தண்டல்காரர்களே, இவனைக் கொண்டு போய், எங்கும் செல்லவொட்டாமல் தடுத்தும், இழுத்தும், நம் ஆணையை மீறினால் தண்டித்தும், நம் பொருள் முழுவதையும் வாங்குங்கள்!'' என்று மன்னன் சினந்து கூறினான். கூற்றுவன் வந்து எதிர்ப்பினும் உடனே எதிர்த்துப் போர் புரிந்து வெற்றியடையும் ஆற்றலுடைய அத்தண்டல் காரர்கள், சூரியனை இருள் நெருங்கிப் பிடித்துக் கொண்டு சென்றது போல, பிடித்துக் கொண்டு வெளியில் சென்று அற அடிகளாகிய வாதவூரடிகளைத் தண்டிக்கத் தொடங்கினர்.

2972.வெம்மை மிக்க கொடிய உச்சிப் பொழுதில், சூரியனுக்கு நேராக, அச்சூரியனைப் பார்க்கும்படி வாதவூரடி களை நிறுத்தி, இரண்டு கைகளிலும், நெற்றியிலும் கற்களை ஏற்றி மிக்க கோபம் கொண்டு அனல் வீசும் கண்களையுடைய அத்தண்டலர்கள் தண்டித்தனர். அத்தண்டனையைப் பொறுக்க முடியாமல் கீழே விழுந்து, இருளைப் போக்கும் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடராகிய கண்களையுடைய சோமசுந்தரக் கடவுளை அழைத்துத் துதிப்பாராயினார்:

2973.''நாதனே! நாத தத்துவத்தின் முடிவைக் கடந்த ஞான நடனம் செய்யும் திருவடிகளையுடையவனே! பாதகனாகிய என்னையும் அடிமை கொண்டருளிய மறை வடிவானவனே! அம்மறையின் முடிவில் விளைந்த ஒப்பற்ற ஞான வடிவானவனே! பாசஞான, பசுஞானங்களின் வழியைக் கடந்த பூரண வடிவானவனே!

2274.''ஐயனே! என்னுடைய அன்பனே! நின் அன்பர்க்கு மெய்யானவனே! பொய் நிறைந்த தீவினையுடையவனாகிய என் தலைமேல் வைத்தருளிய திருக்கரத்தையுடையவனே! சிவந்த வீரக்கழல் அணிந்த திருவடியையுடையவனே! எமனை உதைத்தருளிய செம்மேனியையுடையவனே! வேதப்பரியில் ஏறி அருளியவனே!

2975 அத்தவோ கல்லாக் கடையேனை யாட்கொண்ட
பித்தவோ பொய்யுலகை மெய்யாகப் பேதிக்குஞ்
சித்தவோ சித்தந் தெளிவித்து எனைத்தந்த
முத்தவோ மோன மயமான மூர்த்தியவோ.

வேறு

2976 என்றேறிய புகழ்வேதியர் இரங்குந்துதி செவியிற்
சென்றேறலும் விடையேறுசுந் தரன்மற்றிவர் செயலை
மன்றேறவு முடிமேனதி மண்ணேறவு முதியாள்
அன்றேறிய தேரோடும்விண் ணடைந்தேறவு நினைந்தான்.

2977 கங்கைப்புனல் வடிவாகிய கவ்வைத்திரை வைகைச்
சங்கச்சரி யறலாமர்ந் தாரோதியை நோக்கா
வங்கக்கடல் பேரூழியில் வருமாறென வெவரும்
இங்கற்புதம் அடையப்பெரு கென்றானருள் குன்றான்

2978 தும்பைச்சடை முடியானொரு சொல்லாடவு முன்னாள்
வம்பைப்பொரு முலையால்வரி வளையால்வடு வழுத்துங்
கொங்கைத்தவங் குலைப்பான்கடுங் கோபங்கொடு நடக்குங்
கம்பைப்பெரு நதியிற்கடுங் கதியால்வரும் வைகை.

2975. ''இறைவனே! கல்லாத கடை அறிவுடையவனான என்னை ஆட்கொண்டருளிய பித்தனே! பொய் உலகை மெய்யாகக் கருதும் வண்ணம் பேதப்படுத்தும் சித்தனே! என்னுடைய மயக்க உணர்வினைத் தெளிவித்து என்னை உணர்த்திய முத்தி வடிவானவனே! மௌன வடிவான மூர்த்தியே!''

2976. என்று, புகழ்மிக்க மறையோராகிய வாதவூரடிகள் அழுது முறையிட்டுத் துதி செய்தமை இறைவன் திருச்செவியில் சென்று புகுந்தது. அவ்வளவில் விடையேறும் வித்தகராகிய கடம்பவன சுந்தரர் வாதவூரடிகளின் செய்கைகளை எல்லாம் அரிமர்த்தன பாண்டியன் தெளியவும், தமது திருமுடியில் வையை ஆற்றின் மண் ஏறவும், வந்தி என்கிற முதியவள், தான் ஏறிய விமானத்துடன் சிவபுத்தை அடையவும் திருவுளம் கொண்டருளினார்.

வையை ஆற்றின் பெருக்கு

2977. பின்பு பேரருள் குன்றாத சிவபெருமான், கங்கை போலும் தோற்றமுடைய அலை வீசும் வையை நதியாகிய சங்காகிய வளையலையும், கருமணலாகிய கூந்தலையுமுடைய பெண்ணை நோக்கி, ''கப்பல்களை உடைய கடல் பெரிய ஊழிக்காலத்தில் எவ்வாறு பெருகி வருமோ, அவ்வாறு இவ்வுலகில் உள்ள அனைவரும் வியப்படையுமாறு பெருகி வருக,'' என்று அருளிச் செய்தார்.

2978. தும்பை மலர் மாலையை அணிந்த சோம சுந்தரக் கடவுள் இவ்வாறு சொன்னவுடன், முன்னொரு நாளில் கச்சினையுடைய தனங்களாலும், வரிகள் அமைந்த வளையல்களாலும் இறைவன் மேனியில் வடு உண்டாகுமாறு அழுத்திய உமைப்பிராட்டியின் தவத்தை அழிக்கும் பொருட்டு வந்த பெரிய கம்பை நதியைப் போல, வையை நதியும் கடும் பெருக்கெடுத்து விரைவுடன் வரத் தொடங்கியது.

2979 பத்திக்குளிர் கமுகின்குலை பரியக்கரை முரியக்
குத்திப்பழஞ் சிதறச்செறி கோட்டங்களை வீட்டி
முத்திக்கொடு கதலிப்புதன் முதுசாலிகள் அரித்துத்
தத்திப்பல தருவேரொடுத் தள்ளிக்கடு கியதே.

2980 பல்லாயிரஞ் செந்தாமரை பரப்பிக்கொடு வரலால்
நல்லாயிரங் கண்ணானெழி னயக்குங்குளிர் நளினங்
கல்லாரமுங் கடிமுல்லையுங் கரும்புங்கொடு வரலால்
வில்லாயிரங் கொடுபோர்செயும் வேள்வீரனு மானும்

2981 மணிமாலையு மலர்மாலையுஞ் சிதறாவிறு மருங்கே
அணிகாஞ்சியும் ஒளிர்சங்கமு மலறப்புடை யெறியாக்
கணியாவெழின் முகத்தாமரை கண்ணீரொடுங் கவிழாத்
தணியாமுனி வுடனூடிய தடங்கண்ணியர் போலும்

2979. அப்போது வையை நதி, வரிசை வரிசையாகக் குளிர்ந்த பாக்குமரத்தின் பழக்குலைகள் கீழே விழக் கரைகளை உடைத்துக் கொண்டு ஓடிப், பழங்கள் சிதறுமாறு நெருங்கிய மரக்கிளைகளைக் கீழே வீழ்த்தி, கரும்புகளையும், வாழை மரங்களையும், முற்றி விளைந்த நெற்கதிர்களையும் அரித்துத் தாண்டிக் கொண்டு பல மரங்களை வேருடன் சாய்த்து விரைந்து சென்றது.

2980. வையை நதி, பல்லாயிரக்கணக்கான செந்தாமரை மலர்களைப் பரப்பிக் கொண்டு வருதலால், ஆயிரம் கண்களை யுடைய இந்திரனின் தோற்றத்தை ஒத்திருந்தது. குளிர்ந்த தாமரை மலரையும், குவளை மலரையும், முல்லை மலரையும், கரும்பி னையும் கொண்டு வருதலால் அளவற்ற விற்களைக் கொண்டு போர் புரியும் மன்மதன் போலவும் தோற்றம் அளித்தது.

2981. மணிகளின் வரிசையையும், மலர்களின் வரிசையையும் உடைந்த கரையிலே சிதறி, அழகிய காஞ்சி மரங்களையும், சங்குகளையும் ஒலிக்கும்படி பக்கங்களில் வீசி, அளவிட முடியாத அழகைத் தன்னிடத்தே கொண்ட முகமாகிய தாமரை மலர்களைக் கள்ளாகிய நீருடன் (கண்ணீருடன்) கவிழ்ந்து வருதலால், ஆறாத கோபத்துடன், ஊடி வரும் மகளிரை ஒத்திருந்தது.

(ஊடும் காலத்து அப்பெண்கள் தம் இடையில் உள்ள முத்துமாலையையும், மணிகளையும், வளையல்களையும் வீசி எறிந்து, கண்ணீர் சிந்தி ஊடல் கொள்வர். அவ்வாறே வையை ஆறும் மணி, மலர், சங்கு போன்றவற்றை வீசி, தாமரை மலரின் கள்ளைக் கண்ணீர் எனச் சிந்தியது. எனவே ஊடல் மகளிரை ஒத்தது என்க.)

2982 வரையுந்திய மதுமுல்லையி னெய்பாறயிர் மருதத்
தரையுந்திய கரும்பின்குறை சாறோடுவ ராறோ
டிரையுந்தெழு தூநீர்வைகை யிந்நன்னகர் வைகுந்
திரையுந்தெழு கடறம்மிடஞ் சென்றாலவை போலும்.

2983 கல்லென்றதிர் சும்மைப்புனல் கடிமாமதிற் புறம்போய்
இல்லங்களுஞ் சிறுதுச்சிலு மறித்திட்டிருங் கடல்வாய்ச்
செல்லுங்கல நாவாய்பல திமில்போற்சுமந்து ஏகிப்
புல்லும்புரி சையுந்தள்ளியுள் புகுகின்றதை யன்றே.

2984 மறுகும்பல பொருளாவண மணிவீதியு மன்றுஞ்
சிறுகுங்கண மதமாநிரை சேருந்தெரு வும்போய்
முறுகுஞ்சின மொடுதெண்டிரை மூரிப்புன றாவிக்
குறுகும்படி கண்டஞ்சினர் கொடிமாநகர் உள்ளார்.

2985. சிலர்மைந்தரை யெடுப்பார்களுஞ் சிலர்மைந்தரைக் காணா
தலமந்தழு வாருஞ்சிலர் அங்கைதளிர் பற்றிக்
குலமங்கையர் தமைக்கொண்டுயப் போவார்களுங் குறுகுந்
தலமெங்கெனத் திகைப்பார்களுந் தடுமாறுகின் றாரும்.

2982. குறிஞ்சி நிலத்தில் உள்ள தேனையும், முல்லை நிலத்தில் உள்ள நெய் பால் தயிரையும், மருத நிலத்தில் உள்ள கருப்பஞ்சாற்றையும் நெய்தல் நிலத்து உப்பு நீரையும் கொண்டு வரும் தூய நீரினையுடைய வையை நதி, சோம சுந்தரக் கடவுளால் அழைக்கப்பட்டு, இந்த நல்ல நகரில் உள்ள ஏழு கடல்களும் தத்தமக்கு உரிய இடங்களுக்கு எழுந்து செல்வதை ஒத்திருந்தது.

2983. கல்லென்று ஒலிக்கும் ஒலியுடன் ஓடிவரும் அவ் வையை நதியின் வெள்ளம், மதுராபுரியின் காவலையுடைய பெரிய மதிலின் புறத்தே சென்று, பல வீடுகளையும் சிறு குடில்களையும் கீழ் மேலாகத் தள்ளி, இவற்றைப் பெரிய கடலின்கண் ஓடும் மரக்கலங்களையும், படகுகளையும் போலச் சுமந்து சென்று பெரிய மதிலையும் தள்ளி உள்ளே புகுந்தது.

2984. தெள்ளிய அலைகளையுடைய அவ்வெள்ள நீர், மிகுந்த சினத்துடன் பலபொருள் நிறைந்த அழகிய கடை வீதிகளிலும், மன்றங்களிலும், சிறுகண்களையுடைய மதமயக்கம் கொண்ட யானைக் கூட்டங்கள் நிறைந்த தெருக்களிலும் சென்று தாவி வரும் தன்மையைக் கண்ட, கொடிகள் நெருங்கிய பெரிய நகரில் உள்ளவர்கள் அஞ்சினார்கள்.

நகர மக்களின் பேச்சு

2985. புதல்வர்களை எடுப்போர் சிலர். புதல்வர்களைக் காணாமல் அலமந்து அழுதனர் சிலர். அழகிய கைத்தளிரைப் பிடித்து மனைக்கிழந்தியரை அழைத்துக் கொண்டு போய் உயிர் தப்பச் சென்றனர் சிலர். தாம் செல்கின்ற இடம் எங்குள்ளது என்று சிலர் திகைத்தனர். ஒன்றும் தோன்றாமல் தடுமாறினர் சிலர்.

2986 பொன்னுள்ளன பணியுள்ளன பொருள்பேணல்செய் வாரும்
மன்னுஞ்சில பொருள்கைக்கொள மறப்பார்களு மாடம்
மின்னுங்கொடி நெடுமாளிகை மேலேறுகின் றாரும்
இந்நன்னகர் துயர்மூழ்குதற் கேதேதுவென் பாரும்.

2987 நேற்றும்பரி நரியாயின நெடுமாநகர் எங்கும்
ஊற்றஞ்செய்த வென்பார்களு மொருகாலமு மிந்த
ஆற்றின் பெருக் கிலையென்றயர் வாருங்கட லரசன்
சீற்றங்கொடு முன்போல்வருஞ் செயலே கொலென் பாரும்.

2988 நங்கோமகன் செங்கோல்பிழைத் தனனோவென நவில்வார்
அங்கோல்வளை பங்கன்விளை யாட்டோவென வறைவார்
இங்காரிது தணிப்பாரென விசைப்பாரிது தணிப்பான்
பொங்காலமுண் டருள் சுந்தரன் அலதியாரெனப் புகல்வார்.

2989 அடுத்தாயிரங் குண்டோதரர் எதிரேற்றிருந்த தகல்வாய்
மடுத்தாலுமி தடங்காதென மதிப்பாரிது தனையும்
எடுத்தாயிர முககங்கையி னிறைவன்சடை யேறக்
கொடுத்தாலல தடங்காதிதன் கொடுங்கோபம தென்பார்.

2986. தமக்குரிய பொன்னையும், பொருளையும், பிற அணிகலன்களையும் எடுத்துக் காப்பாற்றினர் சிலர். தம் பொருள்களை எடுத்துக் காப்பாற்றச் சிலர் மறுத்தனர். சிலர் கொடிகள் கட்டிய உயர்ந்து நீண்ட மாளிகையில் ஏறினர். ''இப்புண்ணிய நகரம் துன்பக் கடலுள் மூழ்குவதற்குக் காரணம் என்ன'' என்று கூறுவார்கள்.

2987. நேற்றுக் குதிரைகள் எல்லாம் நரிகளாகி நகர மெங்கும் ஊறு செய்தன என்றனர் சிலர். ''முன்னொரு காலத்திலும் இவ்வாறு இந்த அளவு பெருகியதில்லை'' என்றனர் சிலர். ''கடலரசன் முன் போலச் சீறி வரும் செயலோ?'' என்று ஐயுற்றுக் கூறுவார் சிலர்.

2988. ''நம் மன்னன் நீதிமுறை தவறினனோ?'' என்பார் சிலர். ''அழகிய திரண்ட வளையலை அணிந்த உமையம்மையின் ஒரு கூறனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலோ?'' என்று சொல்வார் சிலர். இவ் வெள்ளத்தை வற்றச்செய்பவர் இவ்வுலகத்தில் யாவருளர்? என்று சிலர் கூறுவார். ''இதனைத் தணிக்கின்றவன் நஞ்சினை உண்டருளிய சோமசுந்தரக் கடவுளேயல்லாது வேறு யாவருளர்?'' என்று புகல்வர் சிலர்.

2999. ஆயிரம் குண்டோதரர்கள் இதனை அடுத்து எதிரே வந்து மறித்து அகன்ற தங்கள் வாய்களை வைத்துப் பருகினாலும் இது அடங்காது என்று சிலர் கருதினர். ''ஆயிரம் முகங்களை யுடைய கங்கையை எடுத்து வைத்தது போல இறைவன் இதனையும், எடுத்துத் தன் சடையில் வைத்தால் அல்லாமல் இவ்வெள்ளம் அடங்காது'' என்று சிலர் கூறினர்.

2990 வானாறிழி நதியாயிர முகத்தால்வரு வதுபோல்
ஆனாதெழு நீத்தந்தணி யாவாறுகண் டன்பு
தானாகிய சிவனன்பரை யொறுக்குந்தறு கண்ணர்
போனார்தம தகத்தேயுள் பொருள்பேறுதல் கருதா.

வேறு

2991 வழுதிதன் றமர்விட் டேக மதுரைநா யகன்பால் ஏகி
அழுதிசை பாடுந் தொண்டி லகப்படும் பாதம் போற்றித்
தொழுதுகொண் டறிவா யூறுஞ் சுகப்பெருங்
கடலின் மூழ்கி
எழுதுசித் திரம்போன் மன்னி யிருந்தனர் வாதவூரர்.

பரிநரியாக்கி வைகை அழைத்த படலம் முற்றிற்று.

61. மண் சுமந்த படலம்

2992 பண்சு மந்தமறை நாட ரும்பொருள் பதஞ்சு
மந்தமுடி யார்மனம்
புண்சு மந்ததுயர் தீர வந்தபரி நரிக ளாயடவி போனபின்
விண்சு மந்தசுர நதியெ னப்பெருகு வித்த
வைகையிது விடையவன்
மண்சு மந்துதிரு மேனி மேல் அடி வடுச்சு மந்தகதை
யோதுவாம்.

2990. இவ்வாறு நகர மக்களெல்லாம் வருந்தும்போது ஆகாய கங்கை ஆயிரம் முகத்தால் வருவது போல இடையறாது பெருகும் வெள்ளம் குறையாத தன்மையை, அன்பே தானாகி நின்ற வாதவூரடிகளைத் துன்புறுத்தும் தண்டல்காரர்களும் கண்டு, தம் வீட்டின் கண் உள்ள பொருள்களை வெள்ளத்தில் இருந்து பாதுகாக்கக் கருதிச் சென்றனர்.

வாதவூரர் திருக்கோயில் சென்று இறைவனைத் தரிசித்தல்

2991. தண்டல்காரர்கள் விட்டுச் சென்றவுடன் வாதவூரடிகள் மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளிடத்துச் சென்று, அவன்பால் அழுது, இசைத்தமிழால் வழுத்துதலாகிய திருத்தொண்டின் கண் அகப்படும் திருவடிகளைத் துதித்து, வணங்கி ஐம்புல உணர்ச்சியில் ஊற்றெடுக்கும் இன்பக் கடலுள் மூழ்கிச் சித்திரம்போல் அசைவற்று இருந்தார்.

பரி நரியாக்கி வைகை அழைத்த படலம் முற்றிற்று.

61. மண் சுமந்த படலம்

2992. இசையுடைய மறைகளும் நாடுதற்கு அரிய மெய்ப்பொருளாகிய இறைவனது திருவடியைத் தாங்கிய முடியுடைய வாதவூரடிகளின் மனம் புண்படுவதற்குரிய துயரம் நீங்கும்படி வந்த குதிரைகள் நரிகளாக மாறி காட்டிற்குச் சென்றபின், வானநதியாகிய கங்கையைப் போல வையையைப் பெருகுவித்த திருவிளையாடல் இது. ஆனேற்றினையுடைய இறைவன் மண்ணைச் சுமந்து, திருமேனியில் பிரம்படியின் தழும்பினைத் தாங்கிய திருவிளையாடலை இனிக் கூறலாம்.

2993 கருங்க டற்றிரை யிடைக்கி டந்துசுழல் கலமெ
னக்கன முகடளாய்
வரும்பு னற்பரவை யுட்கி டந்துநகர மறுகி
யுட்கமற வேலினான்
ஒருங்க மைச்சரை விளித்து நீர்க்கரை சுமந்தொ
துக்கிவரு மோதநீர்ப்
பொருங்க தத்தினை யடக்கு வீரென வமைச்ச
ருந்தொழுது போயினார்.

2994 வெறித்த டக்கைமத யானை மந்திரிகள் வேறு
வேறுபல குடிகளுங்
குறித்தெ டுத்தெழுதி யெல்லை யிட்டளவு கோல்கி
டத்திவரை கீறியே
அறுத்து விட்டுநகர் எங்க ணும்பறை யறைந்த
ழைத்துவிடு மாளெலாஞ்
செறித்து விட்டவ ரவர்க்க ளந்தபடி செய்மி
னென்றுவரு வித்தனர்.

2995 மண்டொ டுங்கருவி கூடை யாளரு மரஞ்சு
மந்துவரு வார்களும்
விண்டொ டும்படி நிமிர்ந்து வண்படு விரிபசுந்
தழைய லாலமுங்
கொண்ட திர்த் துவரு வாரும் வேறுபல கோடி
கூடிய குழாமுநீர்
மொண்ட ருந்தவரும் ஏக சாலமென வருபு
னற்கரையின் மொய்த்தனர்.

கரையை அடைக்க அரசன் கட்டளை இடல்

2993. வானின் முடியை அளாவிவரும் புனற் பரப்பினுள் கரிய கடலின் அலைகளில் கிடந்து சுழலும் கப்பலைப் போல நகரமானது கிடந்து சுழன்று வருத்தமடைய, வேற்படையை யுடைய பாண்டியன், தம் மந்திரிகளை ஒரு சேர அழைத்து, ''நீங்கள் வைகை நதிக்கரையினைக் கட்டிப், பெருகிவரும் வெள்ளத்தின் வெகத்தைத் தணித்து வாருங்கள்'' என்று பணித்தான். அமைச்சர்கள் தொழுது போயினர்.

2994. மதமும், பெரிய துதிக்கையும் உடைய யானைகளை யுடைய அமைச்சர்கள், பல வேறுபாடுடைய குடிகளை ஆராய்ந்து எடுத்து எழுதி எல்லையிட்டு, அளவு கோல் போட்டு அளந்து கோடுகிழித்து வரையறை செய்து நகர் முழுவதும் பறைசாற்றி அழைத்து, அவ்வவ் குடிகள் விடுத்த கூலியாட்களை எல்லாம் ஓரிடத்தில் கூடும்படி செய்து ''அவரவர்க்கு அளந்து எல்லை குறிப்பிட்டபடி கரை அடைக்கும் வேலையைச் செய்யுங்கள்'' - என்று கூறி அவ்விடத்திற்கு அவரவரைச் செல்ல விட்டனர்.

வைகைக் கரையினை அடைத்தல்

2995. மண்வெட்டும் கருவியுடன் கூடையும் கொண்டு வருவார்களும், மரங்களைச் சுமந்து வருகின்றவர்களும், வானைத் தொடும்படி ஓங்கி வண்டுகள் மொய்த்த பசிய தழையையும், வைக்கோலையும் சுமந்து கொண்டு ஆரவாரம் செய்து கொண்டு வருவார்களும், இவர்கட்கு வேறான பல கோடியாய்த் திரண்ட கூட்டங்களும், நீரினை முகர்ந்து பருகுவதற்கு வரும் முகில் கூட்டம் போல வையை ஆற்றின் கரையில் வந்து கூடினார்கள்.

2996 கிட்டு வார்பரி நிறுத்து வாரரவு ருட்டு வாரடி கிடத்துவார்
இட்டு வார்தழை நிரப்பு வார்விளி யெழுப்பு
வார்பறை யிரட்டுவார்
வெட்டு வார்மணல் எடுத்து வார்செல வெருட்டு
வார்கடிது துடுமெனக்
கொட்டு வார்கரை பரப்பு வாருவகை கூரு
வார்ருவகை குழறுவார்

2997 கட்டு வார்கரை யுடைப்பு நீர்கடுகல் கண்டு
நெஞ்சது கலங்குவார்
மட்டி லாதமுனி வென்னை யன்னையினி யாறு
கென்றெதிர் வணங்குவார்
கொட்டு வார்மணல் உடைப்ப டங்கமகிழ் கொள்ளு
வார்குரவை துள்ளுவார்
எட்டு மாதிரமு மெட்ட வாயொலி யெழுப்பு
வார்பறையி ரட்டுவார்.

வேறு

2998 இந்நிலை யூரில் உள்ளார் யாவர்க்குங் கூலி யாளர்
துன்னிமுன் னளந்த வெல்லைத் தொழின்முறை
மூண்டு செய்வார்
அந்நிலை நகரின் றென்கீழ்த் திசையுளா ளளவி லாண்டு
மன்னிய நரைமூ தாட்டி யொருத்திபேர் வந்தி யென்பாள்

2999 செவியுண வான வேத சிரப்பொருள் உணர்ந்து செந்நீ
அவியுண வூட்டு மீச னன்பரி னாற்ற நோற்ற
தவநிறை பேறு துய்ப்பா டாயிலார்க் கன்னை யொப்பாள்
சுவையுறு பிட்டுவிற்றுண் டொழிலினா டமிய லாவாள்.

2996. சிலர் கரை உடைந்த இடங்களில் சென்று குதிரைப் பாய்ச்சலாக மரங்களை நிறுத்துவார்கள். சிலர் வைக்கோல் முதலியவற்றைப் பாம்பு போல உருட்டி அக்குதிரை மரத்தின் அடியில் கிடத்துவார்கள். சிலர் அங்குத் தழைகளை இட்டு நிறுத்துவார்கள். சிலர் மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரம் செய்து பறையடிப்பார்கள். சிலர் மண்ணை வெட்டி எடுத்துச் செல்பவரை விரைந்து செல்லும்படி அதட்டுவார்கள். சிலர் விரைந்து துடுமென்ற மணலைக் கொட்டிக் கரையின்கண் பரப்புவார்கள். சிலர் மகிழ்ச்சியோடு குரவைப் பாடலைப் பாடுவார்கள்.

2997. கட்டிய நீண்ட கரையை உடைப்பதற்குத் தண்ணீர் வருவதைக் கண்டு மனம் கலங்கி, வையை நதியை நோக்கி, ''தாயே! எங்கள் மேல் அளவில்லாத கோபம் எதற்கு? இனி ஆறக்கடவை'' என்று வேண்டி வணங்கி மணலைக் கொட்டு வார்கள். உடைப்பு அடைய அதனைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு குரவை ஆடுவார்கள். எட்டுத் திக்குகளிலும் ஒலிக்கும்படி வாயினால் ஒலி செய்து பறை அடிப்பார்கள்.

வந்தி என்னும் முதியவள்

2998. இவ்வாறு நகரில் உள்ள யாவருக்கும் கூலியாட்கள் வந்து சேர்ந்து, முன்னரே அவரவர்க்கு அளந்து விட்ட முறைப்படி தொழிலை மேற்கொண்டு செய்வராயினர். அப்போது இம் மதுரையின் தென்கீழ்த் திசையில் உள்ளவளும் ஆண்டுகள் பல கடந்து நரை முதுமையளுமாகிய 'வந்தி' என்னும் பெயருடைய ஒருத்தி இருந்தாள்.

2999. அவள் செவியுணவாகிய மறைப்பொருளை உணர்ந்து அவியுணவை ஊட்டும் சிவனடியார்களினும் தவத்தால் நிறைந்த பயனை நுகருவாள்; தாயற்றவர்களுக்குத் தாயைப் போன்றவள்; சுவைமிக்க பிட்டினை விற்று உண்ணும் தொழிலினை உடையவள்; யாரும் அற்ற தனியள்.

3000 வைகலு மவித்த செவ்விப் பிட்டினை மருங்கு நான்கு
கைகளாய் முளைத்த முக்கட் கரும்பினை யரும்பு மூரற்
செய்கதிர் முகத்தான் அந்தத் தேறலை யால வாயெம்
ஐயனை யகத்தா னோக்கி யன்பினா லருத்தி விற்பாள்

3001 வளைந்தமெய் யுடைய வந்த மாதவ நரைமூ தாட்டிக்
களந்தபங் கடைப்பான் கூலி யாள்கிடை யாமல் ஆற்றத்
தளர்ந்தினி யென்னே மன்னன் றண்டிக்கி
னென்செய் கேனென்
றுளந்தடு மாறிக் கூட லுடையநா யகனை யுன்னா.

3002 பிட்டுவிற் றுண்டு வாழும் பேதையேன் இடும்பை யென்ப
தெட்டுணை யேனு மின்றி யிரவியெங் கெழுகென்
றின்னாண்
மட்டுநின் னருளா லிங்கு வைகினேற் கின்று வந்து
விட்டதோ ரிடையூ றைய மீனவ னாணை யாலே.

3003 துணையின்றி மக்கள் இன்றித் தமரின்றிச் சுற்ற மாகும்
பணையின்றி யேன்று கொள்வார் பிறரின்றிப்
பற்றுக் கோடாம்
புணையின்றித் துன்பத் தாழ்ந்து புலம்புறு பாவி யேற்கின்
றிணையின்றி யிந்தத் துன்ப மெய்துவ தறனோ வெந்தாய்.

3000. நாள்தோறும், அவித்த செம்மையான பிட்டினை, பக்கத்தில் நான்கு திருகரங்களையுடையவனும், மூன்று கண்களை யுடையவனும், புன்னகை அரும்பும் திருமுகத்தையுடைய இன்பத் தேன் போன்றவனுமான திருவாலவாயில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் அகத்தால் நோக்கி அன்பினால் முதலில் ஊட்டிப் பின்பு விற்பவள்,

வந்தி தன் கரை அடைக்கும் ஆள்இன்றி வருந்துதல்

3001. வளைந்த உடலையுடைய அந்தப் பெரிய தவத்தை யுடைய நரைமூதாட்டிக்கு அளந்து விடப்பட்ட பங்கை அடைப் பதற்குக் கூலி ஆள் கிடைக்காமல் மிகவும் வருத்தமடைந்தாள். ''இனி என்னே! அரசன் தண்டிப்பானாயின் யான் யாது செய்வேன்?'' - என்று மனம் தடுமாறி மதுரை நாயகனை மனத்தில் துதித்தாள்.

3002. ''ஐயனே! பிட்டு விற்று உண்டு வாழும் பேதையானாகிய நான் இதுவரையும் நின் திருவருளால் துன்பம் என்பது எள்ளளவேனும் இல்லாமல், சூரியன் எங்கேனும் எழக்கடவன் என்று கருதி இருந்தேன். இன்று பாண்டியன் ஆணையாலே இடையூறு ஒன்று வந்துவிட்டது.

3003. ''எந்தையே! எனக்குக் கணவனும் இல்லை. மக்களும் இல்லை. உறவினரும் இல்லை. நட்பினரும் இல்லை. மற்றவர்களும் இல்லை. ஆதலால் பற்றுக் கோடின்றித் துன்பக் கடலுள் ஆழ்ந்து வாடும் பாவியேனாகிய எனக்கு இன்று இணையற்ற இந்தத் துன்பம் வருதல் அறமோ?

3004 தேவர்க்கும் அரிய னாகுந் தேவனே யன்ப ராவார்
யாவர்க்கு மெளிய னாகு மீசனே வேந்த னாணைக்
காவற்செங் கோலார் சீற்றங் கடுகுமுன் கூலி யாளாய்
ஏவற்செய் வாரைக் காணே னேழையே
னினியென் செய்கேன்.

3005 கூலியாள் வருவ துண்டோ வென்றுதன் கொங்கை முற்றத்
தாலிபோற் கண்ணீர் சோர்வாள் குறித்துமுன்
பருத்தும் பிட்டை
வேலைநீர் ஞாலங் காண மிசைந்தவள் இடும்பை தீர்ப்பான்
பாலினேர் மொழியாள் பாக மறைத்தருட்
படிவங் கொள்வார்.

3006 குறட்குநீ ரருத்தி வைகைக் குடிஞையா யொழுகுங் கங்கை
அறற்குழல் பிரிவி னாற்றா தன்பினால் அவளைக் காண்பான்
மறக்கய னெடுங்க ணாளை வஞ்சித்து வடிவ மாறிப்
புறப்படு வாரைப் போலப் போதுவார் போத மூர்த்தி.

வேறு

3007 அழுக்கடைந்த பழந்துணியொன்று அரைக்கசைத்து
விழுத்தொண்டர்
குழுக்கடந்த விண்டைநிகர் சுமையடைமேற் கூடைகவிழ்த்
தெழுக்கடந்து திசைகடந்திட் டிணைகடந்த
திருத்தோண்மேன்
மழுக்கடைந்து விளங்கியவாய் மண்டொடுதிண்
படையேந்தி

3004. ''தேவர்களுக்கும் அரியவனாகிய தேவனே! அன்பர்களுக்கு எளியவனாகிய தேவனே! மன்னன் மேற்கொண்டு வரும் அமைச்சர்களின் சினம் என் மேல் விரைந்து வருமுன் கூலியாளாக வந்து என் ஏவலைச் செய்பவரைக் கண்டிலன், ஏழையாகிய நான் இனி என் செய்வேன்?''

3005. 'கூலியாள் வருவதுண்டோ?' என்று கருதித் தன் மார்பகத்தே மழைத்துளி போல் கண்ணீர் சொரிய நின்றாள். அவ்வந்தி மன் மனத்தால் நினைத்து யாரும் அறியாமல் உண்பிக்கும் பிட்டினை, கடல்நீர் சூழ்ந்த இப்புவியிலுள்ளோர் காண உண்டு அவள் துன்பத்தை நீக்கும் பொருட்டுப் பாலை யொத்த மொழியினையுடைய பிராட்டியாரின் பாகத்தை மறைத்து அருள்வடிவம் கொள்ளலானார்.

இறைவன் கூலி ஆளாக வருதல்

3006. குண்டோதரனுக்கு நீரினை ஊட்டி, வையை நதியாகச் செல்லும் கருமணலாகிய கூந்தலையுடைய கங்கை என்னும் நாயகியின் பிரிவைப் பொறுக்கலாற்றாது அந்நங்கையை அன்பினால் காணுதற்கு, கயல்போலும் கண்களையுடைய உமையம்மையை வஞ்சித்துத் திருவுருவம் மாறிப் புறப்படு வாரைப் போல ஞானமூர்த்தியாகிய சோம சுந்தரக் கடவுள் புறப்பட்டு வெளியே வந்தார்.

3007. அவர் அழுக்குடைய பழைய துணி ஒன்றை இடையில் கட்டி, மெய்த் தொண்டர்கள் கட்டிச்சாத்திய இண்டை மாலையைப் போன்ற சும்மாட்டின்மேல் கூடையினைக் கவிழ்த்து, தூணை வென்று திக்குகளைக் கடந்து உவமை கூற முடியாத திருத்தோளின் மீது, மழுங்கிய வாயுடைய மண்வெட்டியை வைத்துக் கொண்டார்.

3008 திடங்காதல் கொண்டறவோர் திருவேள்வி தருமமுதும்
இடங்காவல் கொண்டுறைவா ளருத்தமுது மினிதுண்டும்
அடங்காத பசியினர்போல அன்னைமுலைப் பாலருந்த
மடங்காத பெருவேட்கை மகவுபோற் புறப்பட்டார்.

3009 ஆலுமறைச் சிரமுடியார் அடிக்கமல நிலஞ்சுடக்
கூலிகொடுத் தெனைவேலை கொள்வாருண்
டோவென்றென்
றோலமறைத் திருமொழிபோ லுரைபரப்பிக் கலுழ்கண்ணீர்
வேலையிடைப் படிந்தயர்வாள் வீதியிடத் தணைகின்றார்.

3010 தந்தைதாய் பிறரின்றி வருகின்ற தனிக்கூலி
மைந்தனார் வாய்மலருங் குரல்கேட்டு வந்தியுந்தன்
சிந்தையா குலமிழந்து நல்கூர்ந்தார் செல்வமகத்
தந்தபோது எழுமகிழ்ச்சி தலைக்கொள்ளப் புறம்போந்தாள்.

3011 அன்னையெனத் தன்பாலின் னருள்சுரந்து வருகாளை
தன்னையழைத் தெனக்களந்த கரையடைத்துத் தருவாயோ
என்னவிசைத் தனளாக வடைக்கின்றேன் எனக்கன்னை
பின்னையதற் கிடுங்கூலி யாதென்றார் பெருமுதியாள்.

3008. முனிவர்கள் வேள்வியின்கண் அன்புடன் அளிக்கின்ற அவியையும், இடப்பாகத்தின்கண் காவல் கொண்டு உறைபவராகிய உமையம்மையார் ஊட்டும் அமுதையும் இனிது உண்டும் அடங்காத - பசியினை உடையவர் போலத் தாயின் முலைப்பாலைப் பருகுவதற்குப் பேரவாவுடன் வரும் குழந்தை போலப் புறப்பட்டு அருளினார்.

3009. ஒலிக்கின்ற வேத முடியின் உச்சியிலுள்ள திருவடித் தாமரையை நிலமகள் தரிக்குமாறு ''கூலி கொடுத்து என் வேலை கொள்வார் உண்டோ?'' என்று ஒலி வடிவாகிய சிறந்த வேதமொழிபோலக் கூறி, அழுகின்ற கண்ணீராகிய கடலில் படிந்து துன்புறும் வந்தியினது வீதியின் கண் வருகின்றார்.

வந்தி கூலியாளைக் கண்டு மகிழ்தல்

3010. தந்தையும் தாயும் வேறொருவர் இன்றித் தனிக் கூலியாளாக வரும் இறைவர் குரலைக் கேட்டு வந்தியானவள் தனது மனக்கவலையை யொழித்து, மக்கட்பேறு இன்மை என்னும் வறுமையாளார் மக்கட் பேறாகிய செல்வத்தைப் பெற்ற காலத்து அவர்க்கு உண்டாகும் மகிழ்ச்சி போல மகிழ்வுற்று வெளியே வந்தாள்.

3011. தாய்போலத் தன்னிடம் இனிய அருள்சுரந்து வரும் காளைப் பருவமுடையாரை அழைத்து, ''எனக்கு அளந்து விட்ட பங்கினை அடைத்துத் தருவாயோ?'' என்று வினவினாள். ''தாயே! அடைத்துத் தருகிறேன். அடைத்த பின் எனக்கு அதற்காகத் தரும் கூலி யாது?'' என்று கேட்டார். உடனே அம் மூதாட்டியும்;

3012 பிட்டிடுவேன் உனக்கென்றா ளதற்கிசைந்து பெரும்பசியாற்
சுட்டிடநான் மிகமெலிந்தேன் சுவைப்பிட்டி
லுதிர்ந்தவெலாம்
இட்டிடுவா யதுமுந்தத் தின்றுநா னிளைப்பாறிக்
கட்டிடுவே னின்னுடைய கரையென்றார் கரையில்லார்.

3013 தெள்ளியடு சிற்றுண்டி சிக்கடைந்த பொதிநீக்கி
அள்ளியெடுத் தருந்தப்பா வென்றிட்டாள் அரைக்கசைத்த
புள்ளியுடைத் துகினீத்தார் புறத்தானை விரித்தேந்தி
ஒள்ளியடுதன் றவளன்பு முடன்கூட்டி யமுதுசெய்வார்.

3014 அன்னைமுலைத் தீம்பாலின் அரியசுவைத் திஃதந்தத்
தென்னவனா யுலகாண்ட திருவால வாயுடைய
மன்னர்பிரான் றனக்கேயா மென்றென்று வாய்ப்பெய்து
சென்னியசைத் தமுதுசெய்தார் தீவாய்நஞ் சமுதுசெய்தார்

3015 தந்தையொடு தாயின்றித் தனிக்கூலி யாளாக
வந்தவெனக் கொருதாயாய் அருள்சுரந்து மாறாத
இந்தவிளைப் பொழித்தனையே யினிவேலைத்
தலைச்சென்றுன்
சிந்தைகளிப் பெழவேலை செய்வேனென்
றிசைத்தெழுந்தார்.

3012. ''உனக்குக் கூலியாகப் பிட்டு தருவேன்'' என்று கூறினாள். எல்லை இல்லாதவராகிய இறைவர் அதற்கு உடன்பட்டு, 'பெரும் பசித்தீ என்னைச் சுட்டிட நான் மிகவும் இளைத்தேன். நான் வேலை செய்வதற்கு முன்னரே சுவைமிக்க உதிர்ந்த பிட்டு முழுவதும் தருவாய். அதனைத் தின்று நான் சிறிது நேரம் இளைப்பாறி பின் நினது பங்கிற்குரிய கரையைக் கட்டுவேன்'' என்று கூறினார்.

இறைவர் உதிர்ந்த பிட்டினை உண்ணல்

3013. வந்தி, தெள்ளிய மாவினால் அவித்த பிட்டினை அழுக்கடைந்த மூடிய ஆடையை நீக்கி, அள்ளியெடுத்து ''அப்பா, இதனை உண்பாயாக'', என்று கூறி அளித்தனள். இடையில் கட்டிய புள்ளியையுடைய புலித்தோல் ஆடையை நீக்கி வந்தவர், முன்றானையை விரித்து அதனை ஏந்தி, ''இது மிகவும் நன்றாய் இருக்கின்றது'', என்று கூறி அவள் அன்பையும் உடன் கூட்டி அருந்தினார்.

3014. ''தாயின் முலைப்பாலைவிட அரிய சுவையுடைய தாகிய இப்பிட்டு, சுந்தரபாண்டியனாய் இருந்து இந்நிலவுலகை ஆண்டருளிய சோமசுந்தக் கடவுளுக்கே உரியதாகும்'' என்று சொல்லி சொல்லி வாயிற்போட்டு, தீயைப் போலும் வெம்மையுடைய நஞ்சினை உண்ட அவ்விறைவர் தலையை அசைத்து உண்டார்.

3015. ''தந்தையும் தாயும் இல்லாமல் தனிக் கூலியாளாக வந்த எனக்கு, ஒரு அன்னையாகி அருள் சுரந்து நீங்காத இந்த இளைப்பினை நீக்கினாயே! ஆதலால் இனி வேலை நடக்குமிடம் சென்று உன் மனம் மகிழ்ச்சி அடையும் படி வேலை செய்வேன்''- என்று கூறி எழுந்தார்.

3016 தந்திவாய் மருப்பிடறி வருங்குடிஞைத் தடங்கரையில்
வந்தியான் வந்தியாள் என்றேட்டில் வரைவித்துப்
புந்தியா லுரையானூற் பொருளினா லளப்பரிய
அந்திவான் மதிச்சடையார் கரையடைப்பா ராயினார்.

3017 வெட்டுவார் மண்ணைமூடி மேல்வைப்பார் பாரமெனக்
கொட்டுவார் குறைத் தெடுத்துக் கொடுபோவார் சுமடுவிழத்
தட்டுவார் சுமையிறக்கி யெடுத்ததனைத் தலைபாடியக்
கட்டுவார் உடன்சுமந்து கொடுபோவார் கரைசொரிவார்.

3018 இவ்வண்ண மிவரொருகால் இருகான்மண் சுமந்திளைத்துக்
கைவண்ண மலர்கன்றக் கதிர்முடிமேல் வடுவழுந்த
மைவண்ண னறியாத மலரடிசெம் புனல்சுரந்து
செவ்வண்ணம் படைப்பவொரு செழுந்தருவின்
மருங்கணைந்தார்.

3019 தருமேவு மலைமகளுஞ் சலமகளும் அறியாமற்
றிருமேனி முழுதுநில மகடீண்டித் திளைப்பெய்தக்
குருமேவு மதிமுடியைக் கூடையணை மேற்கிடத்தி
வருமேரு வனையார்தம் வடிவுணர்ந்து துயில்கின்றார்.

இறைவர் கூலியாளாய் மண் சுமத்தல்

3016. யானையின் வாயில் உள்ள கொம்பினை இடறிக் கொண்டு வருகின்ற வையை யாற்றின் பெரிய கரையின் கண் வந்து ''யான் வந்தியின் கூலியாள்'' என்று கணக்கில் எழுதுவித்து, மனத்தாலும் மொழியாலும், நூற் பொருளினாலும் அளந்து காண்பதற்கரிய, சிவந்த வானில் தோன்றிய பிறையை அணிந்த சடையையுடைய இறைவர் கரையினை அடைக்கத் தொடங்கினார்.

3017. மண்ணினை வெட்டுவார். அதனைத் தூக்கி முடிமேல் வைப்பார். பாரம் அதிகமென்று கூறிக் கீழே கொட்டுவார். அதனைக் குறைத்து எடுத்துக் கொண்டு போவார். சும்மாடு விழுமாறு தட்டுவார். சுமையைக் கீழே இறக்கி வைத்து அச்சும்மாட்டினை எடுத்துத் தலையில் படியுமாறு கட்டுவார். விரைந்து சுமந்து கொண்டுபோய்க் கரையில் கொட்டுவார்.

3018. இவர் இவ்வாறு ஒருமுறை இருமுறை மண் சுமந்ததால் உடல் மெலிந்து, திருக்கைகளாகிய தாமரை மலர்கள் கன்றவும், ஒளி பொருந்திய முடியின்கண் வடு அழுந்தவும், முகில்போலும் நிறமுடைய திருமாலும் அறியாத தாமரைமலர் போன்ற திருவடிகள் குருதி சுரந்து செந்நிறம் அடையவும் ஒரு செழித்த மரநிழலை அடைந்தார்.

இறைவன் திருவிளையாடல்

3019. மரங்கள் பொருந்திய மலையரையன் புதல்வியராகிய உமையம்மையாரும் கங்கா தேவியாரும் அறியாமல் தம் திருமேனி முழுவதும் நிலமகள் தீண்டித் திளைக்க சந்திரனை அணிந்த முடியினைக் கூடையாகிய அணையின் மேல் வைத்து மேருமலையைப் போன்ற இறைவர் தம் வடிவினை உணர்ந்து துயில் கொண்டார்.

3020 அத்தருவே யாலநெடுந் தருவாக வலைபுரட்டித்
தத்திவரும் புனலடைப்பார் சனகாதி முழுதுணஃர்ந்த
மெய்த்தவராய்க் கண்களிப்ப மெய்யுணர்ச்சி மோனமயச்
சுத்தவுருத் தெளிவிப்பார் எனத்துயிலுந் துயிலுணர்ந்தார்.

3021 ஆடுவார் சாமமெனத் தித்திக்கும் அமுதவிசை
பாடுவார் நகைசெய்வார் தொழில்செய்வார் பராக்கடையக்
கோடுவார் மணல்குவிப்பார் குதிப்பார்தூ ளெழவடிபாய்ந்
தோடுவா ருடன்மீள்வா ருன்மத்த ரெனவிருப்பார்.

3022 வேலையினால் அறவருத்தி யிளைத்தார்போன் மெய்வேர்வை
காலமிசை மூச்செறிந்து வாயொலியாற் காற்றழைத்துச்
சாலநெடும் பசியினர்போற் றளர்ந்தடியா ளிடும்பிட்டின்
மேலடைந்த விருப்பினராய் மீண்டுமவள் பாலணைவார்.

3023 இடும்பைநோய் வெள்ள நீந்தி யின்பநீர் வெள்ளத்தாழ்ந்த
கொடும்புற முதியாண் முன்போய்க் கூறுவார் கோலுக்கேற
இடம்படு கரைகள் எல்லா மடைபடு கின்ற வின்னங்
கடும்பசி யுடையே னன்னே பிட்டிடு கடிதி னென்றார்.

3020. அந்த மரமே நீண்ட வடிவால மரமாக, அலைகளை வீசித் தத்திக்கொண்டு வரும் நீரை அடைப்வர்களே சனகாதி முனிவர்களாகிக் கண் களிகூர, மெய்யுணர்வால் பெறப்படும் மோனமயமாகிய தம் தூய அருள் உருவினைத் தெளிவிப்பாரைப் போலத் தூங்கும் தூக்கத்தினின்றும் விழித்தெழுந்தார்.

3021. எழுந்து கூத்தாடினார். சாமவேதம் போல இனிய இசையினைப் பாடினார், சிரித்தார். வேலை செய்பவர்கள் பராக்குப் பார்க்கக் கரையின்கண் மணலைக் குவித்துத் தாண்டினார். காலில் உள்ள துகள் மேலே எழுமாறு பாய்ந்து ஓடினார். உடனே திரும்பினார். உன்மத்தரைப் போலப் பேசாமல் இருந்தார்.

3022. வேளையினாலே மிகவும் வருந்தி மெலிந்தவர் போல, உடல் வேர்வையைச் சிந்த மேல் மூச்சு விட்டு வாயைக் குவித்துச் செய்யும் ஒலியினால் காற்றினை அழைத்து மீண்டும் நீண்ட காலத்துப் பசியுடையார் போலத் தளர்வுற்று அடியாளாகிய வந்தியின் பிட்டில் பெருவிருப்பு உடையவராய் அவள் இருக்கமிடம் சென்றார்.

3023. துன்ப வெள்ளத்தினை நீந்திக் கடந்து இன்ப வெள்ளத்தில் அழுந்திய வளைந்த முதுகினையுடைய வந்தியின் முன் சென்று, ''அன்னையே! அளந்து விட்ட கோலுக்கு ஏற்பக் கரைகளெல்லாம் அடைபடுகின்றன. யான் மிகவும் பசியையுடை யவன். ஆதலால் இன்னும் பிட்டினை இடுவாயாக'' என்றார்.

3024 ஆங்கவ ளப்போ தட்ட சிற்றுண வளித்தா ளையர்
வாங்கியங் கையு நாவுங் கனலெழ வாயிற் பெய்து
பாங்கிரு கொடிறு மொற்றிப் பதமுறப் பருகிக் கொண்டு
நீங்கிமுன் போலப் போந்து நெடுங்கரை யடைக்கல்
உற்றார்.

3025 பிட்டுவாய் மிதப்ப வுண்பார் பெருவலி யுடையார் போல
வெட்டுவார் எடுத்த மண்ணைக் கொண்டுபோய்
வேற்றுப் பங்கிற்
கொட்டுவா ருடைப்பு மாறுங் கொள்கைகண்
டார்த்துத் திண்டோள்
தட்டுவா ரயனின் றாரைத் தழுவுவார் களிப்புத் தாங்கி

3026 எடுத்தமண் கூடை யோடு மிடறிவீழ் வார்போல் ஆற்றின்
மடுத்திட வீழ்வர் நீந்தி வல்லைபோய்க் கூடை தள்ளி
எடுத்தகன் கரைமே லேறி யடித்தடித் தீரம் போக்கித்
தொடுத்தகட் டவிழ்ப்பார் மீளத் துன்னுவர்
தொடுவர் மண்ணை.

3027 கொட்டுமண் சுமந்து செல்வர் கூடையை யுடைப்பில் வீழத்
தட்டுவர் எடுப்பார் போலத் தாவிவீழ்ந் தலையி லோட
விட்டொரு மரத்தைப் பற்றி மிதப்பர்திண் கரையிலேற
முட்டுவர் சுழியி லாழ்வர் சேட்சென்று முளைப்பர் மீள்வர்.

3024. அவ்விடத்தில் அவ்வந்தி அப்போது செய்த பிட்டினை எல்லாம் கொடுத்தாள். இறைவர் அதனை வாங்கி அங்கையும் நாவும் தீயெழ, சுடச்சுட அதனை வாயில் பேோட்டு இரண்டு பக்கங்களிலும் உள்ள கவுளினைக் (கன்னத்தைக்) கையில் ஒற்றிப் பதம் பொருந்த அதனை அருந்திக் கொண்டே அவ்விடம் விட்டு நீங்கிச் சென்று முன் போல் கரையினை அடைக்கத் தொடங்கினார்.

(சூடான பிட்டாதலால் சூடு தாளாமல் கன்னத்தைக் கையில் பிடித்துக் கொண்டார்)

3025. வாயில் உள்ள பிட்டினைக் குதப்பித் தின்பார். பெரிய வலிமையுடையவர் போல வெட்டுவார். எடுத்த மண்ணை கொண்டுபோய் வேறிடத்தில் கொட்டுவார். உடைப்பு அடை வதைக் கண்டு திண்ணிய தோளினைத் தட்டுவார். களிப்புடன் அருகில் நின்றவரைக் கட்டித் தழுவுவார்.

3026. எடுத்த மண்ணையுடைய கூடையுடன் கால் இடறி விழுபவரைப் போல ஆற்றில் அழுந்த விழுவார். விரைந்து நீந்திச் சென்று கூடையைத் தள்ளி வந்து எடுத்து அகன்ற கரையின் மேலேறி அக்கூடையைப் பலமுறை கீழே அடித்து ஈரத்தைப் போக்கி, அதன் கட்டினை அவிழ்ப்பார் மீண்டும் அதனைக் கட்டுவார். மண்ணை வெட்டுவார்.

3027. ஒரு கொட்டு மண்ணைச் சுமந்து கொண்டு செல்வார். கூடையை உடைப்பில் விழுமாறு தட்டுவார். அதனை எடுப்பவர் போலத் தாவி நீரில்விழுந்து அது அலையில் ஓடுமாறு விட்டு ஒரு மரத்தினைப் பிடித்துக் கொண்டு மிதப்பார். தரையில் ஏறப் பல பக்கங்களிலும் சென்று மோதுவார். நீர்ச் சுழியில் அழுந்துவார். நெடுந்தூரம் சென்று மேலே எழுந்து மீளுவார்.

3028 கொட்டினைக் கழலப் பார்ப்பர் கோப்பர்கோ
லிடையாப் பிட்டுத்
தட்டுவர் உயிர்ப்பு வீங்கித் தள்ளநின் றிளைப்பர் கச்சிற்
பிட்டினை நுகர்வர் வேலை வினைகெடப் பிறர்க்கு மள்ளி
இட்டுமா றோச்ச நோக்கி நகைப்பர்கை யிரண்டுந் தாக்கி

3029 வானத்தின் மண்ணிற் பெண்ணின் மைந்தரிற்
பொருளி லாசை
தானற்றுத் தமையு நீத்துத் தத்துவம் உணர்ந்த யோகர்
ஞானக்கண் கொண்டே யன்றி நாடருஞ் சோதி மண்ணோர்
ஊனக்கண் கொண்டுங் காண வுடன்விளை
யாடல் செய்வார்.

3030 அருளினால் உலக மெல்லா மாக்கியு மளித்து நீத்தும்
பெருவிளை யாடல் செய்யும் பிறைமுடிப் பெருமா னிங்ஙன்
ஒருவிளை யாடல் செய்ய வோச்சுகோற் கைய ராகி
அருகுநின் றேவல் கொள்வா ரடைகரை நோக்கப் புக்கார்.

3031 நெட்டலை யொதுங்கி யோட நிவப்புற வரைபோ லிட்டுக்
கட்டிய கரைகள் எல்லாங் கண்டுகண் டொப்பு நோக்கி
அட்டமே செல்வார் திங்க ளாயிரந் தொழுதாள் பேரால்
விட்டபங் கடைப டாமை கண்டனர் வெகுளி மூண்டார்.

3028. மண்வெட்டி சுழலும்படி செய்வார். காம்பினிடத்தில் ஆப்பினைச் செருகிக் கோத்துத் தட்டுவார். மூச்சு மேலோங்கிச் செல்ல நின்று வருந்துவார். தம் கச்சில் உள்ள பிட்டினை அள்ளி அருந்துவார். மற்றவர்களின் வேலை கெடுமாறு அவர்களுக்கு அள்ளிக் கொடுப்பார். வேலை வாங்குவோர் பிரம்பினை ஓங்க, அதனைப் பார்த்து இரண்டு கைகளையும் ஒன்றோடொன்று தாக்கிச் சிரிப்பார்.

3029. இந்திரன் முதலிய இறையவர் பதங்களிலும் மண்ணிலும், மகளிரிலும், மைந்தரிலும், பொருளிலும் விருப்ப மின்றி, தற்போதத்தையும் இழந்து உண்மை நிலையினை உணர்ந்த யோகிகள் ஞானக்கண்ணால் அன்றிப் பிறவற்றால் அறிய முடியாத பரஞ்சுடராகிய சோமசுந்தரக் கடவுள் புவியிலுள்ளோர் ஊனக்கண்ணால் கண்டு களிக்க அவர்களுடன் தாமும் ஒருவராய் விளையாடினார்.

3030. அருளினாலே உலகமனைத்தையும் ஆக்கியும் காத்தும் அழித்தும் பெருவிளையாடலைப் புரியும் பிறையை அணிந்த முடியையுடைய இறைவன் இங்கே இவ்வாறு ஒரு விளையாடலைச் செய்து கொண்டிருக்க, பிரம்பேந்தியகையுடன் அருகில் நின்று வேலை வாங்குவோர் அடைபட்ட கரைகளைப் பார்க்கச் சென்றனர்.

கோலாளர், வந்தியின் கூலியாளைக் கண்டு மயங்கிக் கூறல்

3031. நீண்ட அலைகள் ஒதுங்கி ஓடுமாறு மலைபோல் மண் இட்டுக் கட்டிய கரைகள் அனைத்தையும் கணக்கின்படி சரி பார்த்துக் கொண்டு, ஒத்து இருப்பதைக் கண்டு வந்தனர். அவ்வாறு வருபவர்கள், ஆயிரம் பிறையினைக் கண்டு வணங்கிய வந்தியின் பெயரால் அளந்துவிட்ட பங்கு அடைபடாமை கண்டு கோபம் கொண்டனர்.

3032 வந்திக்குக் கூலி யாளாய் வந்தவன் யாரேன் றோடிக்
கந்தர்ப்பன் எனநேர் நின்ற காளையை நோக்கி யேடா
அந்தப்பங் குள்ள வெல்லா மடைபட்ட தெவனீ யின்னம்
இந்தப்பங் கடையாய் வாளா திருத்தியா றம்பீ யென்றார்.

3033 வேறுரை யாது தம்மை யுணர்ந்தவர் வீறு தோன்ற
ஈறிலான் இறுமாப் பெய்தி யிருந்தன னாக மேலிட்
டாறுவந் தடுத்த பங்கி லடைகரை கல்லிச் செல்ல
மாறுகொண் டோச்ச வஞ்சி மயங்கினார் வலிய கோலார்.

3034 பித்தனோ விவன்றா னென்பார் அல்லது பேய்கோட் பட்ட
மத்தனோ விவன்றா னென்பார் வந்தியை யலைப்பான் வந்த
எத்தனோ விவன்றா னென்பா ரிந்திர சாலங் காட்டுஞ்
சித்தனோ விவன்றா னென்பா ராரென்றுந்
தெளியோ மென்பார்.

3035 பாடல்விஞ் சையனோ வென்பார் பண்ணினாற்
பாணிக் கேற
ஆடல்விஞ் சையனோ வென்பார் அரும்பெறற்
செல்வத் தாழ்ந்து
வாடிய மகனோ வென்பா ரிசைபட வாழந்து கெட்ட
ஏடவிழ் தாரி னாருள் யார்மக னிவன்கொ வென்பார்.

3032. வந்திக்குக் கூலி ஆளாய் வந்தவன் யார் என்று கேட்டு ஓடி, மன்மதன் போன்ற தோற்றமுடன் எதிரில் நின்ற காளையைப் பார்த்து, ''ஏண்டா! தம்பீ! மற்றைப் பங்கெல்லாம் அடைபட்டன, நீ இன்னமும் இந்தப் பங்கினை மட்டும் அடைக்காமல் சும்மா இருக்கின்றாயே! அதற்கு யாது காரணம்?'' என்று வினவினர்.

3033. அழிவில்லாத இறைவன் அதற்கு வேறொன்றும் விடை கூறாது தம்மை உணர்ந்த அடியாரின் வீறு வெளிப்பட இறுமாப்புடன் இருந்தார். ஆறானது மேற்கொண்டு வந்து அடுத்த பங்கில் அடைபட்டிருந்த கரையையும் தோண்டிச் சென்றது. வலிய கோலினை உடையார் அவருடைய கட்டழகைக் கண்டு கோலினால் அடிக்க அஞ்சினார்.

3034. ''இவன் என்ன பித்தனோ? அல்லது இவன் பேயின் வயப்பட்ட உன்மத்தனோ?'' என்று சொல்வார், அன்றி ''இவன் வந்தியை வருத்துவதற்கு வந்த எத்தனோ?'' என்று இயம்புவார் சிலர். ''இவன்தான் இந்திர சாலம் காட்டும் சித்தனோ?'' என்பார் சிலர். ''இவருள் யாரென்று அறிய முடியவில்லையே?'' என்பார் சிலர்.

3035. ''இசைப்பாடலில் வல்ல காந்தருவனோ?'' என்று பகர்வார் சிலர். பண்ணோடு தாளத்துக்குப் பொருந்த ஆடுதலில் வல்ல பரதநூல் புலவனோ?'' என்று சிலர் சொல்வார். முன்னே பெறுதற்கரிய செல்வப் பெருக்கில் அழுந்திப்பின் அச்செல்வம் குன்றியவனோ? என்பார் சிலர். ''புகழோடு வாழ்ந்து பின்னர் அவ்வாழ்க்கை கெட்ட இதழ் விரிந்த மாலையை அணிந்த மன்னர்களில் இவன் யாருடைய மகனோ?'' என்பார் சிலர்.

3036 கரும்பனும் விரும்ப நின்ற கட்டழ குடையன் என்பார்
அரும்பெற லிவன்றான் கூலி காட்செய்த
தெவனோ வென்பார்
இரும்பெருங் குரவ ரற்ற தமியனோ வென்பார் வேலை
புரிந்தவ னல்ல னென்பா ரதுமேனி புகலு மென்பார்.

3037 கூலியுங் கொண்டான் றானே கணக்கிலுங்
குறிக்கச் சொன்னான்
வேலையுஞ் செய்யான் இன்சொல் விளம்பினுங்
கேளான் கல்லின்
பாலறை முளையே யாகிப் பராமுகம் பண்ணி நின்றான்
ஏலநா மிதனை வேந்தற் குணர்த்துது மென்று போனார்.

3038 தலைமகன் றிருமுன் றாழ்ந்து சாற்றுவா ரடிகே ளிந்த
அலைபுன னகரார் தத்தம் பங்கெலாம் அளந்த வாற்றான்
மலையினும் வலிய வாகச் சுமந்தனர் வளைந்த சிற்றூண்
விலைநரை யாட்டி தன்பங் கடைத்திலள்
வென்றி வோலாய்.

3039 வேளையும் வனப்பி னாலே வென்றவன் ஒருவன் வந்தி
ஆளென வங்கே வந்து பதிந்தன னரசர் செல்வக்
காளைபோற் களிப்பன் பாடு மாடுவன் காலம் போக்கி
நீளுவன் வேலை யொன்று நெஞ்சினு நினைதல் செய்யான்.

3036. சிலர் 'மதவேளும் விரும்பும் பேரழகுடையவன் என்று பேசுவார். ''பெறுதற்கரிய இவன்கூலியின் பொருட்டு ஆளாக வந்து வேலை செய்தது என்ன காரணமோ?'' என்று கூறுவர். ''இவன் தாயும் தந்தையும் அற்ற அனாதை'' என்று கூறுவர் சிலர். ''இவன் இதற்குமுன் வேலை செய்தவன் அல்ல'' என்பார். அத்துடன் ''இதனை இவன் திருமேனியே சொல்கின்றது'' என்பார் அவர்.

3037. ''வேலை தொடங்குவதற்கு முன்னரே வந்தியிடம் கூலியும் வாங்கிக் கொண்டான். தானே இங்கு வந்து யான் வந்தியின் ஆளென்று கணக்கிலும் பதிவு செய்து கொள்ளக் கூறினான். வேலையும் செய்யாமல் இருக்கிறான். இனியவை கூறினாலும் காது கொடுத்துக் கேட்கவில்லை. கல்லில் அடித்த முளையைப் போல நம்மையும் பொருட்படுத்தாமல் நிற்கிறான். நாம் இச்செய்தியை மன்னற்குக் கூறுவோம்'' - என்று கருதிச் சென்றனர்.

பாண்டியனிடம் வந்தியின் கூலிபற்றிக் கூறுதல்

3038. கோலாளர் பாண்டியன் திருமுன்னே சென்று வணங்கி நின்று, ''அரசே! வருத்தமடைய இந்நகரத்தில் உள்ளார் அளந்து விட்டபடியே தத்தமக்குரிய பங்காகிய கரை முழுவதும் மலையைக் காட்டிலும் உறுதியாகக் கட்டி முடித்து விட்டனர். ஆனால் பிட்டு விற்கும் வளைந்த உடலை உடைய முதியவளாகிய வந்தி என்பாள் தன் பங்கினை இன்னும் அடைத்தாள் இல்லை.

3039. ''மதவேளையும் தன் அழகினால் வென்றவனாகிய ஒருவன் 'வந்தியின் ஆள்' என்று அங்கே வந்து தன்னைக் கணக்கில் பதிவு செய்தனன். மன்னர்களின் செல்வம் மிக்க புதல்வனைப் போலக் களித்தும் பாடியும் ஆடியும் வேலை செய்யாமல் காலத்தை வீணே போக்குகிறான். வேலையைப் பற்றி மனத்தில் சிறிதும் எண்ணினான் இல்லை.

3040 ஆண்டகை வனப்பை நோக்கி யடிக்கவுங் கில்லே மஞ்சி
ஈண்டினே மென்று கூற விம்மென வமைச்ச ரோடும்
பாண்டியன் எழுந்து நாம்போய்ப் பங்கடை பட்ட வெல்லாங்
காண்டுமென் றெறிநீர் வைகைக் குடிஞையங்
கரையைச் சார்ந்தான்.

3041 எடுத்ததின் கரைகள் எல்லா மிறைமக னுள்ளத் தோகை
மடுத்தன னோக்கிச் செல்வான் வந்திபங் கடைப்பா ரின்றி
அடுத்தநோன் கரையுங் கல்லி யழித்தெழு வெள்ள நோக்கி
கடுத்துநின் றெங்குற் றானிக் கரைசுமந்
தடைப்பா னென்றான்.

3042 வள்ளறன் கோபங் கண்ட மாறுகோற் கைய ரஞ்சித்
தள்ளருஞ் சினத்த ராகித் தடக்கைதொட் டீர்த்துப் பற்றி
உள்ளொடு புறங்கீழ் மேலா யுயிர்தொறு மொளித்து நின்ற
கள்வனை யிவன்றான் வந்தி யாளெனக் காட்டி நின்றார்.

3043 கண்டனன் கனன்று வேந்தன் கையிற்பொற் பிரம்பு வாங்கி
அண்டமு மளவி லாத வுயிர்களும் ஆக மாகக்
கொண்டவன் முதுகில் வீசிப் புடைத்தனன் கூடை யோடு
மண்டனை யுடைப்பிற் கொட்டி மறைந்தன
னிறைந்த சோதி.

3040. ''அவனுடைய பேரழகினைப் பார்த்து அஞ்சி அடிக்கவும் மனம் கொள்ளாமல் இங்கு வந்தோம்'' என்று சொன்னார்கள். பாண்டியன் விரைந்து மந்திரிகளோடு எழுந்து ''நாம் சென்று அடைபட்டுள்ள பங்குகளை எல்லாம் காண்போம்,'' என்று கூறி, அலை வீசும் அலைகளையுடைய வையை ஆற்றின் கரையினைச் சேர்ந்தான்.

பாண்டியன் சென்று கரைகளைப் பார்வையிடல்

3041. உயர்த்தி அடைக்கப்பட்ட திண்ணிய கரைகள் அனைத்தையும் மனமகிழ்வோடு கண்டு செல்பவனாகிய மன்னன், வந்தியின் பங்கை அடைப்பவர் இல்லாமையால் அதனை அடுத்துள்ள வலிய கரைகளையும் உடைத்துக் கொண்டு மேலெழுகின்ற வெள்ளத்தைப் பார்த்துக் கோபமடைந்து ''இந்தக் கரையினை அடைப்பவன் எங்குச் சென்றான்?'' என்று கேட்டான்.

3042. பாண்டியன் சினத்தைக் கண்ட பிரப்பங் கழியைக் கையில் ஏந்திய ஏவலாளர், பயந்து மிகுந்த சினத்துடன், அகமும் புறமும் கீழும் மேலுமாகி உயிர்களில் மறைந்து நின்ற கள்வனாகிய இறைவனைப் பெரிய கையைத் தொட்டுப் பிடித்து இழுத்து வந்து, ''இவன் தான் வந்தியின் கூலி ஆள்'' என்று காண்பித்து நின்றனர்.

பாண்டியன் கூலியாளை அடித்தல்

3043. அரிமர்த்தன பாண்டியன் கண்டு சினந்து கையில் பொன் பிரம்பினை வாங்கி, அண்டங்களையும் அளவில்லாத உயிர்களையும் தனது திருமேனியாகக் கொண்ட இறைவனது முதுகிலே வீசி அடித்தனன். எங்கும் நிறைந்த ஒளி வடிவினனாகிய அவ்விறைவன் கூடையுடன் மண்ணை உடைப்பில் போட்டு விட்டு மறைந்து அருளினான்.

வேறு

3044 பாண்டியன் முதுகிற் பட்டது செழியன் பன்னியர்
உடம்பினிற் பட்ட
தாண்டகை யமைச்சர் மேனிமேற் பட்ட தரசிளங்
குமரர்மேற் பட்ட
தீண்டிய கழற்கால் வீரர்மேற் பட்ட திவுளிமேற்
பட்டது பருமம்
பூண்டவெங் கரிமேற் பட்டதெவ் வுயிர்க்கும்
போதன்மேற் பட்டவத் தழும்பு.

3045 பரிதியு மதியும் பாம்புமைங் கோளும் பன்னிறம்
படைத்தநாண் மீனம்
இருநிலம் புனல்கா லெரிகடுங் கனல்வான் என்னுமைப்
பூதமுங் காருஞ்
சுருதியு மாறு சமயவா னவருஞ் சுரர்களு
முனிவருந் தொண்டின்
மருவிய முனிவர் கணங்களும் பட்ட மதுரைநா
யகனடித் தழும்பு.

3046 வானவர் மனிதர் நரகர்புள் விலங்கு மாசுணஞ்
சிதலெறும் பாதி
ஆனபல் சரமு மலைமரங் கொடிபுல் லாதியா
மசரமும் பட்ட
ஊனடை கருவும் பட்டன தழும்போ டுதித்தன
வுயிரிலோ வியமும்
தானடி பட்ட சராசர சடங்க டமக்குயிர்
ஆயினோன் றழும்பு.

3047 துண்ணென மாயோன் விழித்தனன் கமலச் சோதியும்
யாதென வியந்தான்
விண்ணவர்பெருமான் வெருவினான் வானோர்
வேறுளார்மெய்பனிப் படைந்தார்
வண்ணயா ழியக்கர் சித்தர்சா ரணர்தம் வடுப்படா
வுடம்பினிற் பட்ட
புண்ணையா தென்று தத்தமிற் காட்டி மயங்கினார்
புகுந்தவாறு அறியார்.

அனைவரின் மேலும் அவ்வடிபட்டது

3044. எவ்வுயிர்கட்கும் அறிவுக்கு அறிவாய் உள்ள சிவபெருமான் மேல்பட்ட அவ்வடித் தழும்பு அரிமர்த்தன பாண்டியன் முதுகில் பட்டது. அப்பாண்டியனின் மனைவியர் களின் மேல்பட்டது. ஆண் சிங்கம் போன்ற அமைச்சர்களின் மேலும் பட்டது. இளமை மிக்க அரச குமாரர்களின் மேல் பட்டது. நெருங்கிய வீரக் கண்டை அணிந்த கால்களையுடைய வீரர்கள் மேல் பட்டது. குதிரைகள் மேல்பட்டது. கவசம் அணிந்த யானைகளின் மேலும் பட்டது.

3045. மதுரை நாயகனாகிய சோமசந்தரக் கடவுளின் மேல்பட்ட அடிக்கழும்பினைச் சூரியனும் சந்தினும், இராகு கேதுக்களாகிய பாம்புகளும், செவ்வாய் முதலிய ஐந்து கோள்களும் பல நிறமுடைய நட்சத்திரங்களும், நிலம், நீர், காற்று, தீ, வான் ஆகிய ஐந்து பூதங்களும், மேகமும், வேதங்களும், அறுவகை சமயங்களுக்கு முதல்வர்களான தேவர்களும் ஏனை வானோர்களும், திருத்தொண்டி னைச் செய்யும் முனிவர்களும் பெற்றுக் கொண்டனர்.

3046. இயங்குவனவும் நிற்பனவுமாகிய சேதனங்களுக்கும் அசேதனங்களுக்கும் உயிராய் உள்ள இறைவன் அடித்தழும்பினைத் தேவரும், மக்களும், நரகரும், பறவையும், விலங்கும் பாம்பும், செல்லும், எறும்பும் முதலாகிய இயங்குதிணை பலவும், மரமும் மலையும் கொடியும் புல்லும் முதலாகிய நிலைத் திணைகளும் பெற்றன, கருப்பையுள் தங்கிய கருக்களும் அடிபட்டுத் தழும்புடன் தோன்றின. உயிரில்லாத சித்திரங்களும் அடிபட்டன.

3047. திருமால் திடுக்கிட்டு விழித்தனன். தாமரை மலரில் இருந்த பிரம தேவனும், ''இது யாது?'' என்று வியந்தான். தேவேந்திரன் பயந்தான். மற்றைத் தேவர்களும் உடல் நடுங்கினர். இலக்கணம் அமைந்த யாழினையுடைய இயக்கர்களும், சித்தர்களும், சாரணர்களும் தம் வடுப்படாத உடம்பில்பட்ட புண்ணை ''இது யாது?'' என்று தத்தமக்குள்ளேயே காண்பித்துக் கொண்டு நிகழ்ந்த வற்றை அறியாதவர்களாய் மயங்கினார்கள்.

3048 ஏகநா யகனெவ் வுயிர்களுந் தானே யென்பதும்
அன்பினுக் கெளியன்
ஆகிய திறனுங் காட்டுவா னடிபட் டங்கொரு
கூடைமண் கொட்டி
வேகநீர் சுருங்கக் கரையினை யுயர்த்தி மிகுத்துடன்
வேலைநீத் தொளித்துப்
போகிய வாறு கண்டுகோற் கையர் போய்நரை
யாட்டியைத் தொடர்ந்தார்.

3049 வன்புதாழ் மனத்தோர் வலிசெய வின்ன மன்னனான்
மறுக்கமுண் டேயோ
முன்புபோ கியவா ளென்செய்தான் என்னாய் முடியுமோ
வினியெனத் திரங்கி
என்புபோல் வெளுத்த குழலினாள் கூட லிறைவனை
நோக்கிநின் றிரங்க
அன்புதே னாக வருத்திய சிற்றூ ணமுதுசெய்
தருளினா ரருளால்.

3050 கண்ணுத னந்தி கணத்தவர் விசும்பிற் கதிர்விடு
திப்பிய விமானம்
மண்ணிடை யிழிச்சி யன்னைவா வென்று வல்லைவைத்
தமரர்பூ மழையும்
பண்ணிறை கீத வோதையும் வேதப் பனுவலுந்
துந்துபி யைந்தும்
விண்ணிடை நிமிரச் சிவனருள் அடைந்தோர் மேவிய
சிவபுரத் துய்த்தார்.

ஏவலாளர் சென்று அரசனிடம் வந்தியை வரவழைத்தல்

3048. தனி முதல்வனாகிய இறைவன் எவ்வுயிர்களும் தானே என்பதனையும் தான் அன்பிற்கு எளியனாகிய தன்மையையும் அனைவருக்கும் காட்டும் பொருட்டு, பிரம்படி பட்டு, அவ்வுடைப்பில் ஒருகூடை மண்ணைக் கொட்டி, நீரின் வேகம் குறையுமாறு கரையை வெகுவாக உயர்த்தி, உடனே வேலை செய்தலை விட்டு மறைந்து போன தன்மையைக் கண்டு, கோலை ஏந்திய கையை உடைய அரசனுடைய கோலாளர், நரைமூதாட்டியாகிய வந்தியிடம் சென்றனர்.

3049. வன்மை தங்கிய மனத்தினையுடைய ஒறுப்பாளர் துன்பம் செய்ய, எலும்பைப் போல் வெளுத்த கூந்தலையுடைய அவ்வந்தி ''இன்னமும் பாண்டியனால் துன்பம்? முன்னர் எனக்காக வேலை செய்யச் சென்ற ஆள் என்ன செய்தானோ? இனி இது எப்படி முடியுமோ?'' என்று எண்ணிக் கூடல் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை எண்ணி வருந்தினாள். அன்பையே தேனாகக் கலந்து ஊட்டிய பிட்டினைத் திருவமுது செய்தருளிய சோமசந்தரக் கடவுளின் திருவருளினால்,

3050. சிவகணத்தவர் ஒளிவீசும் சிறந்த விமானத்தினை வானிலிருந்து பூமிக்கு இறக்கி, ''தாயே வருக'', என்று கூறி அதில் ஏற்றி, தேவர்களின் மலர் மழையும்' பண்ணிறைந்த இசையின் ஒலியும் வேதமந்திரங்களின் ஒலியும் பஞ்ச தூரியங்களின் முழக்கமும் வானின்கண் ஓங்க சிவபெருமானின் திருவருளைப் பெற்றவர்கள் சென்றடைந்த சிவலோகத்திற்குச் செலுத்தினார்கள்.

3051 மன்றுடை யானோர் கூடைமண் கொட்டி மறைந்தது
மடைகரை நீண்ட
குன்றென வுயர்ந்த தன்மையுந் தம்மேற் கோலடி
பட்டது நோக்கி
என்றன்மேற் பட்ட தென்றன்மேற் பட்ட திதுவென
வதுவென வமைச்சர்
நின்றவர் உணர்த்து நிகழ்ச்சியும் பிறர்பா னிகழ்ச்சியு
நோக்கியந் நிருபன்.

வேறு

3052 உள்ளத்தா சங்கை பூண்டா னாகமண் ணுடைப்பிற்
கொட்டிக்
கள்ளத்தார் ஆகிப் போனார் ககனத்தா ராகச் சேனை
வெள்ளத்தார் பிறருங் கேட்ப மீனவற் குவகை வெள்ளங்
கொள்ளத்தா மழைத்தா காய வாணியாற் கூற லுற்றார்.

3053 மறத்தாறு கடந்த செங்கோல் வழுதிநின்
பொருள்கள் எல்லாம்
அறத்தாற்றி னீட்டப் பட்ட வனையவை புனித மான
திறத்தாலே நமக்கு நம்மைச் சேர்ந்தவர் தமக்கு மார்வம்
உறத்தாவில் வாத வூர னுதவினா னாத லாலே.

3054 அனையனை மறுக்கஞ் செய்தாய் அரும்பினைப்
புலவுத் தீவாய்
வனநரித் திரளை யீட்டி வாம்பரி யாக்கித் தந்தேங்
கனையிருட் கங்குற் போதிற் கழிந்தன பின்னுந் தண்ட
வினையர்பால் விடுத்துத் துன்பம் விளைத்தனை
யதுபொ றாதேம்.

3051. வெள்ளியம்பலத்தையுடைய சோமசுந்தரக் கடவுள் ஒருகூடை மண்ணைக் கொட்டி மறைந்து அருளியதையும், அடைக்கலுற்ற கரையானது நீண்ட மலை போல் உயர்ந்த தன்மையையும் தங்கள் உடம்பிலே பிரம்படி பட்டதையும், ''என்மேல் அடிபட்டது! என்மேல் அடிபட்டது!'' என்று அமைச்சர் முதலானோர் ஒருவருக்கொருவர் சுட்டிக் காட்டிப் பேசுவதையும், பிறர்பால் நிகழும் நிகழ்ச்சியையும் கண்டு அரிமர்த்தன பாண்டியன்,

3052. மனதில் ஐயுறவு கொண்டு நின்றான். மண்ணை உடைப்பினில் போட்டு மறைந்து சென்றருளிய அவ்விறைவர், ஆகாயத்தில் நின்று படைவீரரும் பிறரும் கேட்குமாறு பாண்டியனுக்கு மகிழ்ச்சிப் பெருக்கு உண்டாக அவனைப் பார்த்து அசரீரியாகச் சொல்லத் தொடங்கினர்.

இறைவன் அசரீரி

3053. ''அறநெறியுடைய செங்கோல் ஏந்திய பாண்டியனே! உன்னுடைய பொருள்களனைத்தும் அறவழியில் தேடப்பட்டவை. அவை தூய தன்மையை உடையவை நமக்கும் நம்மை அடைந்த அடியார்களுக்கும் குற்றமில்லாத வாதவூரன் கொடுத்தனன் ஆதலால்,

3054. ''அவ்வாதவூரனைத் துன்பம் செய்தனை. பிணங்களின் புலாலையுடைய, கொடிய வாயினையுடைய வனத்திலுள்ள நரிகளை எல்லாம் தாவுகின்ற குதிரைகளாக்கித் தந்தோம். அவையாவும் இருளையுடைய அன்றைய இரவுப் பொழுதில் நரிகளாகி ஓடிப்போய் விட்டன. மற்றை நாளும் அவனைத் தண்டலரிடம் விடுத்துத் துன்பம் விளைவித்தனை. அதனை நாம் பொறுக்க மாட்டாமல்,

3055 வருபுனல் பெருகப் பார்த்தேம் வந்திகைப் பிட்டு வாங்கிப்
பருகிவந் தாளாய் மாறு பட்டன மண்போ கட்டுப்
பொருகரை யுயரச் செய்து போகியவ் வன்னை போல்வாள்
பெருகிய விடும்பை தீர்த்தெம் பேருலகு அடையச்
செய்தேம்.

3056 இத்தனை யெல்லாஞ் செய்த திவன்பொருட் டிந்த வேத
வித்தகன் றன்மை யொன்றும் அறிந்திலை
வேட்கை யெம்பால்
வைத்துனக் கிம்மை யோடு மறுமையுந் தேடித் தந்த
உத்தமன் றொடைசந் தாதிப் புறப்பற்று மொழிந்த நீரான்.

3057 நிறையுடை யிவனை யிச்சை வழியினா னிறுத்தி யான்ற
மறைவழி நின்று நீதி மன்னவர்க் களந்த வாழ்நாள்
குறைபடா தானச் செல்வ வாரியுட் குளித்து வாழ்கென்
றிறையவன் மொழிந்த மாற்றம் இருசெவி
நிரப்பத் தென்னன்.

3058 அச்சமுற் றுவகை யீர்ப்ப வதிசய வெள்ளத் தாழ்ந்து
பொச்சமி லன்பர் எங்குற் றாரெனப் புகுந்து தேடி
நச்சர வசைத்த கூட னாயகன் கோயி னண்ணி
இச்சையி லிருக்கின றாரைக் கண்டுபோ
யிறைஞ்சி வீழ்ந்தான்.

3055. ''வையை ஆற்றில் வரும் நீரினைப் பெருகி வரும்படி செய்தோம். வந்தியினிடம் கூலி ஆளாய் வந்து அவள் கையில் பிட்டினை வாங்கி உண்டு பிரம்படியும் பட்டோம். ஒரு கூடை மண்ணைக் கொட்டி அலைகள் மோதும்படியான கரையினை உயரும்படி செய்தோம். அவ்வந்தியின் துன்பம் நீக்கி, அவளை எம்முலகை அடையுமாறு செய்தோம்.

3056. ''இவ்வாறெல்லாம் செய்தது இவ்வாதவூரன் பொருட்டே. இம்மறை நூலுணர்ந்த சதுரப்பாடுடையவன் தன்மையை சிறிதும் நீ அறிந்திலை. இவன் எம்மிடம் விருப்பம் வைத்ததால் உனக்கு இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் தேடித் தந்த உத்தமன். மாலையும் சந்தனமும் முதலிய புறப்பற்றினையும், அகப்பற்றினையும் துறந்த தன்மையுடையவன்.

3057. ''மனதை ஒருவழி நிறுத்தும் இவ்வாதவூரனை, அவன் விருப்பத்தின்படியே நடக்க விடுத்து, நீ பெருமைமிக்க மறைநூல் வழியே நின்று, நீதியோடு கூடிய மன்னவர்க்கு வரையறுத்த ஆயுள் நாள் குறைவு படாமல், நீங்காத செல்வப் பெருக்கோடு வாழக் கடவை!'' - என்று இறைவன் கூறியருளிய மொழி பாண்டியனின் இரு செவிகளிலும் நிரம்பியது.

பாண்டியன் வாதவூரரைத் தேடியலைந்து வேண்டுதல்

3058. உடனே பாண்டியன் அச்சமும் ஆனந்தமும் அதிசயமும் அடைந்து, பொய்யில்லாத மெய்யன்புடைய அடியார் எங்குச் சென்றார் என்று பல இடங்களில் தானே புகுந்து தேடிச் சென்று, நச்சுடைய பாம்பினைக் கச்சாகக் கட்டிய, நான்மாடக் கூடலில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலை அடைந்தான். அங்குத் தம் விருப்பின்படியே சிவயோகத்தில் இருக்கும் வாதவூரடிகளைக் கண்டு விழுந்து வணங்கினான்.

3059 தொல்லைநீ ருலக மாண்டு சுடுதுயர் நரகத் தாழ
வல்லவென் னறிவுக் கேற்ற வண்ணமே செய்தே னீரென்
எல்லைதீர் தவப்பே றாய்வந் திகபர வேது வாகி
அல்லல்வெம் பிறவி நோய்க்கு மருமருந் தானீர் ஐயா.

3060 செறுத்துநா னும்மை யெண்ணா திழைத்தவித் தீங்கு தன்னைப்
பொறுத்துநீர் முன்போ னுங்கள் புவியெலாங் காவல் பூண்டு
மறுத்துடைத் தாள்வ தாகென் றிரந்தனன் மண்ணில் ஆசை
வெறுத்தவர் நகையுட் டோன்ற வேந்தனை நோக்கிச் சொல்வார்.

3061 பாய்திரை புரளு முந்நீர்ப் படுகடல் உலகுக் கெல்லாம்
ஆயிரஞ் செங்க ணான்போ லரசுவீற் றிருப்பீ ருங்கள்
நாயக னருளிச் செய்த வண்ணமே நயந்து செய்வீர்
தூயவ ரன்றோ நுங்கள் சூழல்சேர்ந் தொழுக வல்லார்.

3062 உம்மைநா னடுத்த நீரால் உலகியல் வேத நீதி
செம்மையா லிரண்டு நன்றாத் தெளிந்தது தெளிந்த நீரான்
மெய்ம்மையாஞ் சித்த சுத்தி விளைந்தது விளைந்த நீராற்
பொய்ம்மாவா னவரி னீந்திப் போந்தது சிவன்பாற் பத்தி.

3059. ''ஐயனே! பழைய கடல் சூழ்ந்த இந்நிலவுலகினை ஆண்டு நரகத்தின்கண் அழுந்துவதற்குரிய என்புல்லறிவுக்கு ஏற்ற உமக்குத் தீங்கு செய்தேன். நீவிர் என்னுடைய அளவற்ற தவப்பயனால் மந்திரியாகி வந்து, இம்மைக்கும் மறுமைக்கும் காரணமான கொடிய பிறவிப் பிணிக்கு அரிய மருந்தாயினீர்.

3060. ''அடியேன், உமது உயர்வினைச் சிறிதும் கருதாது கோபத்துடன் செய்த இத்தீமையைப் பொறுத்தருளி நீவீர் முன்போல நமது புவி அனைத்தையும், காத்தருள வேண்டும்'' என்று இரந்து வேண்டினான். மண்ணுலக விருப்பத்தை நீக்கிய வாதவூரடிகள் புன்னகை தோன்ற அரசனை நோக்கிச் சொல்லத் தொடங்கினார்.

திருவாதவூரர் பாண்டியனிடம் விடைபெற்றுச் செல்லல்

3061. ''அரசே! அலைகள் புரளுகின்ற பரந்த கடல் சூழ்ந்த உலகமனைத்திற்கும் சிவந்த ஆயிரம் கண்களையுடைய இந்திரனைப் போலத் தனியாக அரசு செய்வீராக! உங்கள் இறைவனாகிய சோமந்தரக் கடவுள் கட்டளை இட்டபடியே விருப்பமுடன் செய்வீராக! தங்களைச் சார்ந்து வாழ்வோர் தூய்மையுடையவரே!

3062. ''நான் உம்மை அடைந்த தன்மையால், உலக நடை, வேத ஒழுக்கம் ஆகிய இரண்டும் தெளியப் பெற்றேன். அவ்வாறு தெளிந்தபடியால் உண்மையான மனத்தூய்மை உண்டானது. அவ்வாறு உண்டானதால் அழிகின்ற தேவர்களை விடுத்து சிவபெருமானிடம் அன்பு விளைந்தது.

3063 வந்தவிப் பத்தி மாயையின் விருத்தியான
பந்தமாம் வஞ்ச வாழ்க்கை விளைவினுட் பட்ட துன்பம்
வெந்தது கருணை யாகி மெய்யுணர் வின்பந் தன்னைத்
தந்தது பாதஞ் சூட்டித் தன்மய மாக்கிற் றன்றே.

3064 சச்சிதா னந்த மாமத் தனிப்பர சிவனே தன்ன
திச்சையா லகிலம் எல்லாம் படைத்தளித் தீறு செய்யும்
விச்சையா னவரைத் தந்த மேலவன் பிறவித் துன்பத்
தச்சமுற் றடைந்தோர்க் கானா வின்பவீ டளிக்கு மன்னோன்.

3065 மந்தரங் கயிலை மேருப் பருப்பதம் வார ணாசி
இந்தநல் லிடங்க டோறும் இகபர போகம் யார்க்குந்
தந்தருள் செய்தெம் போல்வார் தம்மனம் புறம்போ காமற்
சிந்தனை திருத்தி ஞானத் திருவுரு வாகி மன்னும்.

3066 ஒப்பவர் மிக்கோர் வேறற் றொருவனா யெங்குந் தங்கும்
அப்பரஞ் சுடரே யிந்த வாலவா யுறையுஞ் சோதி
கைப்படு கனிபோன் மேனாட் கண்ணுவ னாதி யோர்க்கு
மெய்ப்பொருள் விளங்கித் தோன்றா வேதத்தை
விருத்தி செய்தான்.

3063. ''இங்ஙனம் விளைந்த இவ்வன்பினாலே, மாயையின் வித்தாகிய உலக வாழ்க்கையின் நிகழ்ச்சியில் உண்டாகிய துன்பம் வெந்து நீறாகியது. சச்சிதானந்தப் பரம்பொருள் அருள்வடிவாகி வந்து தம்மை எனக்குக் கொடுத்துத் தம் திருவடியை எமது முடியில் சூட்டித் தம் உருவமாக்கியது.

3064. சச்சிதானந்தமாகிய அந்த ஒப்பற்ற பரமசிவனே தனது விருப்பத்தால், உலகமனைத்தையும் படைத்து அளித்து அழிவு செய்யும் தொழிலையுடைய அயனும் அரியும் அரனுமாகிய தேவர்களை உண்டாக்கிய மேலோன். பிறவித் துன்பத்திற்கு அஞ்சி வந்தவர்களுக்கு நீங்காத இன்பத்தையுடைய வீடு பேற்றைக் கொடுத்தருள்பவன்.

3065. மந்தரமலை, கயிலை மலை, மேருமலை, ஸ்ரீபருப்பதம், காசி முதலிய இத்தலங்கள் தோறும் ஞான வடிவாகி அனைவருக்கும் இம்மை மறுமை இன்பங்களைக் கொடுத்துக் கொண்டும் எம்மனோர் மனம் புறத்தே செல்லாமல் உள்ளத்தைத் திருத்திக் கொண்டும் வீற்றிருப்பார்.

3066. ஒப்பாரும் மிக்காரும் வேறுயாரும் இன்றித் தனி முதல்வனாய் எங்கும் நிலைபெற்ற அந்தப் பரஞ்சோதியே இந்த ஆலவாயின்கண் உறைந்தருளும் சோமசுந்தரக் கடவுள், முன்னொரு காலத்தில் கண்ணுவர் முதலான முனிவர்களுக்கு வேதத்தின் உண்மைப் பொருளை உள்ளங்கை நெல்லிக்கனி போல விரிவாக விளங்க அருளிச் செய்தார்.

3067 தன்னரு ளான ஞானத் தபனிய மாகுந் தில்லைப்
பொன்னகர் இடத்தி லென்னைப் போகெனப்
பணித்தா னீரும்
அன்னதற் கிசைதி ராகென் றாலவா யடிக டம்மைப்
பன்னருந் துதியா லேத்தி விடைகொடு பணிந்து போவார்.

3068 தன்றொடக் கறுத்த நாதன் றாட்டொடக் குண்டு போவார்
பின்றொடர்ந் தரசன் செல்லப் பெருந்தவர் நின்மி னின்மின்
என்றனர் செலவுங் கூப்பி டெல்லைசென் றணிய னாகிச்
சென் றடி பணிந்து தென்னன் விடைகொடு
திரும்பி னானே.

3069 துறந்தவர் போக மீண்டு தொன்னகர் அடைந்து தென்னன்
அறந்தரு பங்கி னாரை யடைந்துதான்
பிரம்பு நீட்டப்
புறந்தரு கருணை வெள்ளம் பூரிப்பத் தாழ்ந்து நெஞ்ச
நிறைந்தது வாய்கொள் ளாம னின்றெதிர் துதிப்ப தானான்.

வேறு

3070 அடையாளம் பட வொருவ னடித்தகொடுஞ்
சிலைத்தழும்புத்
தொடையாக வொருதண்டன் றொடுத்தெறிந்த
கல்லும்போற்
கடையானேன் வெகுண்டடித்த கைப்பிரம்பு
உலகமெல்லாம்
உடையானே பொறுத்தோ வுன்னருமைத் திருமேனி.

3067. 'அவரே தன் மயமாகிய ஞான வெளியாம் பொன்னம்பலமெனும் அழகிய தில்லை நகருக்குப் போக வேண்டும் என்று எனக்குக் கட்டளை இட்டுள்ளார். நீங்களும் அதற்கு உடன்படுவீராக' என்று கூறித் திருவாலவாயில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுளைப் பலவிதமான துதிகளால் வணங்கி, விடை பெற்றுக் கொண்டு சென்றார்.

3068. தனது கட்டினை அறுத்த இறைவனது திருவடியில் பற்றுக் கொண்டு செல்லும் வாதவூரடிகளை, அரசன் பின் தொடர்ந்து சென்றான். பெரிய தவத்தினையுடைய அடிகள் அரசனை, ''நில்லும்! நில்லும்!'' என்று கூறியும்பாண்டியன் கூப்பிடு தூரம் வரை சென்று நெருங்கி அவரை அடிவணங்கிப் பின் விடைபெற்றுக் கொண்டு மீண்டனன்.

3069. முற்றும் துறந்தவராகிய அடிகள் செல்ல பாண்டியன் மீண்டும் தனது பழைய நகரை அடைந்து, உமையம்மையை இடப்பாகத்தில் உடைய சோமசுந்தரக் கடவுளை அடைந்து தான் பிரம்பினை ஒச்ச முதுகு தந்தருளிய அருள் வெள்ளமாகிய அவ்விறைவன் மகிழுமாறு விழுந்து வணங்கி வாழ்த்தத் தொடங்கினான்.

3070. ''உலகமனைத்தும் உடைய பெருமானே! உம்முடைய அருமையான திருமேனியானது, அருச்சுனன் என்னும் ஒருவன் அடித்த வளைந்த வில்லின் தழும்பையும், சாக்கிய நாயனார் என்னும் ஒரு தொண்டர் மாலையாகத் தொடுத்து வீசிய கல்லையும் பொறுத்தது போல, கீழ்மையுடைய வனாகிய நான் சினந்து அடித்த பிரம்பினையும் பொறுத்ததோ!

3071 கடியேறு மலர்மகன் மான் முதலாய கடவுளரும்
படியேழும் அளவிறந்த பல்லுயிரு நீயேயோ
முடியேற மண்சுமந்தாய் முதுகிலடி வடுப்பட்ட
தடியேனும் பட்டேனின் றிருமேனி யானேனோ.

3072 கைக்குமருந் தின்சுவையின் காட்டுமா றெனவினைக்கும்
பொய்க்குமருங் கலனாகி மண்ணாண்டு புலைநரகத்
துய்க்குமருந் துயர்களைவான் மாறாய்நின் றுணையடிக்கே
உய்க்குமருந் தவரிவரென்று அறியாமை யொறுத்தேனே.

3073 பாதியுமை யுருவான பரமேட்டீ யெனக்கிம்மை
ஊதியமும் பரகதியும் உறுதிபெற விளைவிக்கும்
நீதியினான் மந்திரியாய் நின்னருளே யவதரித்த
வேதியரை யறியாதே வெறுத்துநா னொறுத்தேனே.

3074 மாயா விருத்தியினான் மாழாந்து மாதவரை
ஆயா தொறுத்தே னருநரகத் தாழ்ந்துநான்
வீயாமல் இன்றனையார் மெய்ம்மையெலாந் தேற்றியவெண்
றாயானாய் தண்ணளிக்கென் றமியேன்செய் கைம்மாறே.

3075 நின்னையுணர்ந் தவர்வேத நெறிவேள்வி செய்தூட்டும்
இன்னமுதிற் கழிசுவைத்தோ விவளிடும்பிட்
டெவ்வுயிர்க்கும்
மன்னவனே செந்துவர்வாய் மலர்ந்தமுது செய்தனையால்
அன்னையிலா வுனக்கிவளோர் அன்னையாய் வந்தாளோ.

3071.''முடியின் மீது மண்படியும்படி மண் சுமந்த இறைவனே! மணம் பொருந்திய தாமரை மலரில் இருக்கும் பிரமனும் திருமாலும் பிறதேவர்களும், ஏழு உலகங்களும் அவற்றில் உள்ள அளவில்லாத உயிர்களும் உன் திருமுதுகிற்பட்ட அடித் தழும்பு அவை எல்லாவற்றின் மேலும் பட்டது. அவ்வடியை அடியேனும் பட்டேன். ஆதலால் நானும் நினது திருமேனி ஆனேனோ?

3072.''முன்னே கசக்கும் மருந்து பின்னே இனிய பயனைக் காட்டுவது போல, தீவினையும் பொய்யுமாகிய பண்டங்களை ஏற்றும் அரிய மரக்கலமாகி இவ்வுலகினை ஆள்வதால் புல்லிய நரகத்தை அடையும் கொடியதுன்பத்தை நீக்கும் பொருட்டு, முன்னே பகையாகி பின் நின் இரண்டு திருவடிகளிலே செலுத்தும் அரிய முனிவர் இவரென்று அறியாமல் தண்டித்தேன்.

3073.''ஒரு பாதி உமையம்மையின் வடிவான இறைவனே! எனக்கு, இம்மைப் பயனையும் வீடுபேற்றையும் உறுதியாக உண்டாக்கும் நீதியுடன் நினது திருவருளே அமைச்சராய்த் தோன்றிய அந்தணரை அறியாமல் வெறுத்து நான் தண்டித்தேன்.

3074.''மாயையின் விருத்தியினால் மயங்கி மாதவரை ஆராயாது தண்டித்தேன். அடியேன் நரகத்தில் அழுந்திக்கெடாமல் இப்போது அவ்வடிகளின் உண்மைகள் அனைத்தையும் தெளிவித்தாய்! அன்னையைப் போன்றவனே! உன்னுடைய குளிர்ந்த அருளுக்கு அடியேன் செய்யும் கைம்மாறு யாது? ஒன்றுமில்லை.

3075.''உன்னுடைய இயல்பினை அறிந்த முனிவர்கள் கூறிய வேதநெறிப்படி வேள்வி புரிந்து அதில் உண்பிக்கும் அவியுணவினும் இவ்வந்தி இட்ட பிட்டு மிகவும் சுவை உடையதோ? எல்லா உயிர்கட்கும் இறைவனே! நினது திருவாயினைத் திறந்து அமுது செய்துருளினை. தாயில்லாத உனக்கு இவ்வந்தி தாயாக வந்தனளோ?

3076 அன்றுசிறுத் தொண்டரிடும் பிள்ளைக் கறியமுதும்
மென்று சுவைதெரிந்து வேடனிட்ட வூனும்போல்
நன்றுநரை யாட்டியிடு பிட்டு நயத்தருந்தி
என்று மடியார்க் கெளிவந்தாய் எந்தாயே.

3077 நரியாவும் பரியாக்கி நடத்தியுமம் பரமன்றித்
தரியாயான் றருதுகிலைத் திருமுடிமேற் றரித்துமறைக்
கரியாய்நீ யென்பாசம் அறுக்கவருந் திருமேனி
தெரியாதே பரியாசை திளைத்திருமாந் திருந்தேனே.

3078 விண்சுமக்கும் புள்ளாய் விலங்காய்ச் சுழன்று மனம்
புண்சுமக்குஞ் சூழ்ச்சி வலியுடைய புத்தேளிர்
மண்சுமக்கு மள்ளராய் வந்திலரே வந்தக்காற்
பண்சுமக்குஞ் சொல்லிபங்கன் பாதமுடி காண்பாரே.

வேறு

3079 என்றுபல முறையாலே துதித்தடைந்தோர்க் கன்பரிவர் இவரைத் தேறின்
நன்றுமிக பரபோகம் வீடுபெற லெளிதென்று நகைத்தார் வேந்தன்
அன்றுதிருப் பணிபூசை பிறவுநனி வளம்பெருக்கி யழகார் வெள்ளி
மன்றுடையா னடிக்கன்பு முயிர்க்கன்புஞ் சுரந்தொழுகி வாழு நாளில்.

3076. ''அந்நாளில் சிறுத்தொண்டர் இட்ட பிள்ளைக் கறி அமுதினையும், கண்ணப்ப நாயனார் இட்ட, அவரால் மென்றுசுவை தெரியப்பெற்ற ஊனமுதினையும் போல, நரைமுதியவளாகிய வந்தி இட்ட பிட்டினையும் பெரிதும் விரும்பி நுகர்ந்து, எம் தந்தையே எக்காலத்தும் அடியார்க்கு எளிவந்து அருள் புரிந்தாய்!

3077.''வேதங்களுக்கு எல்லாம் அரியவனான நீ நரிகளை எல்லாம் குதிரைகளாக்கி நடத்தியும், திசைவெளி அன்றி வேறொன்றையும் உடுக்காத நீ அடியேன் கொடுத்த ஆடையை வாங்கித் திருமுடியின் கண் அணிந்தும், எனது பாசம் அறுக்க வரும் நினது திருமேனியை உணராமல் குதிரைகள் மேல் வைத்த விருப்பத்தினால் இறுமாந்திருந்தேனே!

3078.''வானாற் சுமக்கப்படும் பறவையாகியும் விலங்காகியும் தேடி வருந்திக் காணமுடியாமல் மனம் புண்பட்ட ஆராய்ச்சி வலியினையுடைய பிரமனும் திருமாலும் ஆகிய தேவர்கள் மண்ணைச் சுமக்கும் ஏவலாளராய் வந்திலரே! வந்திருப்பார்களானால் பண்ணின் சுவையினைத் தாங்கிய இன்சொல்லை யுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் வைத்த இறைவனது திருவடியையும் திருமுடியையும் கண்டிருப்பரே!

3079.என்று பலவாறு துதித்து,''தன்னடியினை அடைந்தவர்க்கு அன்பராவார் இவர். இவரைப் பெற்றால் இம்மை மறுமை இன்பங்களையும் முக்தி இன்பத்தையும் பெறுதல் எளிதாம்'' என்று கருதி ஒளி பொருந்திய மாலையை அணிந்த மன்னன் அன்று முதல் பல திருப்பணிகளையும், பூசை, திருவிழா முதலியவற்றையும் சிறப்புடன் செய்வித்து அழகு நிறைந்த வெள்ளியம்பலமுடைய இறைவனது திருவடிக்கண் அன்பும் உயிர்களிடத்து அன்பும் பெருக ஆட்சி செய்து கொண்டு வாழ்ந்துவந்தான்.

3080 முன்புபெருந் துறையார்க்கு மடியார்க்கு மறந்தெரிந்த
முறையால் ஈட்டுந்
தன்பொருள்போ யுடன்பலவாய்த் தழைத்துவரு
பயனேபோற் றலையு வாவின்
நன்பனிகான் மதிகண்ட வுவரியெனப் பலசெல்வ
நாளு மோங்க
இன்புறுவான் சகநாத னெனுமகப்பெற் றின்பத்து
ளின்பத் தாழ்ந்தான்.

3081 அம்மகனை முடிசூட்டி யரசாக்கி வாதவூர்
அமைச்சர் சார்பான்
மெய்ம்மைநெறி விளக்கியிரு வினையொப்பி
லரன்கருணை விளைந்த நோக்கான்
மும்மைமலத் தொடர்நீந்திச் சிவானந்தக் கடற்படிந்து
முக்கண் மூர்த்தி
செம்மலர்த்தா ணிழலடைந்தான் றிறலரிமர்த்
தனனென்னுந் தென்பார்வேந்தன்.

வேறு

3082 வழுதியால் விடுக்கப் பட்ட வாதவூர் முனிக டம்மைப்
பழுதிலாப் பாடல் கொள்வார் பதிபல பணிந்து போந்து
முழுதுணர் மறையோர் வேள்விப் புகையண்ட
முடிகீண் டூழி
எழுவட வரைபோற் றோன்றும் எழிற்றில்லை
மூதூர் சேர்ந்தார்.

பாண்டியன் மகப்பேறும் சிவப்பேறும் பெறுதல்

3080.இவ்வாறு அரிமர்த்தன பாண்டியன் வாழும் காலத்தில் அறநெறியால் ஈட்டிய பொருள் முன்பு திருப்பெருந்துறைப் பெருமானிடத்தும் அவர் அடியார் இடத்தும் வாதவூரடிகளால் சென்று உடனே பலவகையாய்த் தழைத்து வரும் பயனே போலவும், பூரணச் சந்திரனைக் கண்ட கடல் பொங்குவது போலவும் பலவகைப்பட்ட செல்வம் நாள் தோறும் மிக்கு ஓங்க சகநாதன் என்னும் புதல்வனைப் பெற்று, சிறந்த மகிழ்ச்சிக் கடலுள் அழுந்தினான்.

3081.ஆற்றல் பொருந்திய அரிமர்த்தன பாண்டிய மன்னன் அம்மகனுக்கு முடிசூட்டி அவனை அரசனாக்கி வாதவூரடிகளாகிய அமைச்சரது சம்பந்தத்தால் உண்மை நெறி விளங்கப் பெற்று இருவினை யொப்பின் கண் உண்டாகிய இறைவனது அருள் நோக்கால், ஆணவம், மாயை, கன்மம், என்னும் மும்மலங்களின் தொடர்ச்சி நீங்கி, சிவானந்தமாகிய கடலில் மூழ்கி மூன்று கண்களையுடைய சோமசுந்தரக் கடவுளின் சிவந்த தாமரை மலர் போன்ற திருவடி நிழலை அடைந்தான்.

வாதவூரர் தில்லையை அடைந்து தரிசித்தல்

3082.பாண்டியனால் விடுவிக்கப்பட்ட வாதவூரடிகள், தம்மையுடைய குற்றமில்லாத பாடல்களை ஏற்றுக் கொள்ளும் இறைவர் திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிச் சென்று அந்தணர் மூவாயிரவரின் வேள்விப் புகை அண்ட முகட்டினைக் கிழித்து, ஊழிக் காலத்தில் உயரும் வடக்கில் உள்ள கைலாய மலை போலக் காணப்படும் அழகிய தில்லை என்னும் பழம் பதியினை அடைந்தார்.

வேறு

3083 வீதிதொறும் வீழ்ந்துவீழ்ந் திறைஞ்சியா லயத்தெய்தி
மெய்ம்மை யான
சோதியறி வானந்தச் சுடருருவாஞ் சிவகங்கை
தோய்ந்து மேனி
பாதிபகிர்ந் தவள்காணப் பரானந்தத் தனிக்கூத்து
பயிலா நிற்கும்
ஆதியரு ளாகியவம் பலங்கண்டு காந்தநே
ரயம்போற் சார்ந்தார்.

3084 அன்றுகுறுந் தடியிலடி வைத்தாண்ட கோலமே
யருளா னந்த
மன்றிடத் தெதிர்தோற்றி வாவென்பா ரெனமூரன்
மணிவாய் தோற்றி
நின்றதனிப் பெருங்கூத்தர் நிலைகண்டார் அஞ்சலித்தார்
நிலமேல் வீழ்ந்தார்
ஒன்றரிய புலன்கரண வழிநீந்தி மெய்யன்பி னுருவ மானார்.

3085 வண்டுபோற் புண்டரிக மலரில்விளை சிவானந்த
மதுவை வாரி
உண்டுவா சகம்பாடி யாடியழல் வெண்ணெயென
வுருகுந் தொண்டர்
விண்டுழா வியகுடுமி மன்றுடையான் திருவாக்கான்
மிகுந்த நேயங்
கொண்டுபோய்க் குணதிசையில் அருந்தவர்வாழ்
தபோவனத்தைக் குறுகி யங்கண்.

3086 குறிகுணங்கள் கடந்ததனிக் கூத்தனுரு வெழுத்தைந்தின்
கொடுவாள் ஒச்சிப்
பொறிகரணக் காடெறிந்து வீசிமனப் புலந்திருத்திப்
புனிதஞ் செய்து
நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங்
களைந்தருணன் னீகால் பாய
அறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்த வமுதருந்தா
தருந்தி நின்றார்.

3083. வீதிகள் தோறும் விழுந்து வணங்கித், திருக்கோயிலை அடைந்து உண்மையான ஒளியும் அறிவும் இன்பமும் ஆகிய இறைவரது திருவுருமாகிய சிவகங்கையில் நீராடி, திருமேனியில் பாதியைப் பங்கிட்டுக் கொண்ட சிவகாமி அம்மை பார்க்க ஆனந்தத் தாண்டவம் செய்தருளும் இறைவனின் திருவருளாகிய காந்தத் தால் கவரப்படும் இரும்பைப் போலக் கவரப்பட்டுச் சென்றார்.

3084. அன்று திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் அடியில் திருவடியை முடியின்கண் சூட்டி ஆட்கொண்டருளிய திருக்கோலமே அருளானந்த மயமாகிய அம்பலத்தின்கண் எதிரே தோன்றி 'வருக' என்று அழைப்பது போல, அழகிய திருவாயின் கண் புன்னகை காட்டி நின்றருளி, ஒப்பற்ற பெரிய கூத்தப் பெருமானது திருக்கோலத்தினைக் கண்டு, கைகளை முடியில் குவித்துத் தரையில் விழுந்து ஐம்புலன்களையும் அந்தக்கரணங் களையும் கடந்து உண்மை அன்பின் வடிவமாயினார்.

3085. வண்டினைப்போல தில்லைவனமாகிய தாமரை மலரில் விளைந்த சிவானந்தமாகிய தேனை வாரி உண்டு திருவாசகம் பாடி இன்பக் கூத்தாடி நெருப்பில்பட்ட வெண்ணெய் போல மனம் உருகினார். வானளாவிய முடியினை உடையதாகிய பொன்னம்பலத்தை உடைய இறைவனது திருவாக்கினால் மிகுந்த அன்புடன் சென்று கீழ்த்திசையில் அரிய தவத்தையுடைய முனிவர்கள் வாழும் தவவனத்தை அடைந்தார்.

3086. அங்கே குறியையும் குணத்தையும் கடந்த ஒப்பற்ற கூத்தப்பெருமானது வடிவமாகிய திருவைந்தெழுத்தென்னும் வாளினை ஒச்சி. ஐம்பொறிகளும் அந்தக்கரணமும் ஆகிய காட்டினை அழித்து, மனமாகிய நிலத்தினைச் செப்பம் செய்து எங்கும் நிறைந்த சிவமாகிய வித்தினை விதைத்து, ஆன்ம அறிவாகிய களையினைக் களைந்து, அருளாகிய நல்ல நீர்பாய்ச்சுதலால் அறிவே வடிவமாய் விளைந்த ஒப்பற்ற சிவபோகமாகிய அமுதினை இடையறாமல் அருந்தி நின்றார்.

3087 மானிரையும் குயவரியும் வந்தொருங்கு நின்றுரிஞ்ச
மயங்கு கானத்
தானிரைகன் றெனவிரங்கி மோந்துநக்க வானந்த
வருட்கண் ணீரைக்
கானிறைபுள் ளினம்பருகக் கருணைநெடுங் கடலிருக்குங்
காட்சி போலப்
பானிறவெண் ணீற்றன்பர் அசைவின்றிச் சிவயோகம்
பயிலு நாளில்.

3088 புத்தர்சிலர் இலங்கையிலும் போந்துமூ வாயிரமெய்ப்
போத வேத
வித்தகரோ டேழுநாள் வரையறுத்துச் சூளொட்டி
விவாதஞ் செய்வார்
இத்தகைய நாளேழில் யாமிவரை வேறுமெனு
மெண்ணம் பூண்ட
சித்தமுடை யவராக வவர்கனவி லெழுந்தருளித்
தேவ தேவர்.

3089 வாதவூ ரனைவிடுத்து வாதுசெய்வீர் எனவிழித்து
மறையோ ரந்தப்
போதவே தியரைவனம் புகுந்தழைத்தா ரப்போது
பொதுவி லாடும்
வேதநா யகன்பணித்த வழிநின்றா ரெதிர்மறப்ப
மீண்டு போந்து
காதரா குலமூழ்கி யிருந்தார்முத் தழனிமிர்த்துக்
கலியைக் காய்வார்.

3090 பின்னுமவர் கனவின்கண் மன்றுணடம் பிரியாத
பெருமான் வந்து
முன்னவனைப் பெருந்துறையில் குருந்தடியில்
ஆட்கொண்ட முறையி னாலும்
இன்னிசைவண் டமிழ்மணிபோற் பாடுங்கா ரணத்தானும்
யாமன் றிட்ட
மன்னியபேர் மாணிக்க வாசகனென் றழைமின்கள்
வருவ னென்றார்.

3087. இருள்நிறைந்த அந்தக் காட்டில், நீண்ட அருட்கடல் இருந்த தோற்றம்போலப் பால் போன்ற வெண்ணீறினை அணிந்த அடிகள் அசைவின்றிச் சிவயோகம் செய்தருளும் நாளில், மான் கூட்டங்களும் புலிகளும் வந்து ஒரு சேர நின்று ஒரு துறையில் நீரை அருந்தின. பசுக்கூட்டங்கள் கன்றென நினைந்து அவரை நக்கும். அவர் கண்ணிலிருந்து வழியும் ஆனந்தக் கண்ணீரை அங்குள்ள பறவைக் கூட்டங்கள் வந்து பருகும்.

மூவாயிரவர் வாதவூரரைப் புத்தரோடு வாதிட அழைத்தல்

3088. அக்காலத்தில் சில புத்தர்கள் இலங்கையிலிருந்து தில்லையை வந்தடைந்து மெய்யான ஞானமுடைய மறையவர் மூவாயிரவரோடும் ஏழுநாள் வரையறுத்துக்கொண்டு சபதம் கூறி வாது செய்வாராயினர். இவ்வாறு வரையறை செய்யப்பட்ட ஏழுநாளில் இவரை வெல்வோம் என்ற எண்ணம் கொண்ட தில்லை மூவாயிரவரது கனவில் தேவ தேவராகிய இறைவர் எழுந்தருளினார்.

3089. ''நம் திருவாதவூரனை விடுத்து வாதம் செய்யுங்கள்'' என்று இறைவர் கனவில் கூறியருளினார். வேதியர்கள் விழித்து, அந்த ஞான மறையோரான வாதவூரர் இருக்கும் காட்டினை அடைந்து வாது புரிய வருமாறு அழைத்தனர். அப்பொழுது பொதுவில் ஆடும் வேதநாயகன் கட்டளைப்படியே நிற்பவராகிய வாதவூரடிகள் அவ்வாறு செய்ய மறுத்தார். முத்தீயை வளர்த்து உயிர்களின் துன்பத்தைப் போக்குபவராகிய அம் மூவாயிரவரும் திரும்பி வந்து துன்பக் கடலுள் மூழ்கி இருந்தனர்.

3090. பொன்னம்பலத்தில் நீங் ாது நடம்புரியும் இறைவன் மீண்டும் அவர் கனவில் வந்து, ''மு ு குருந்த மரத்தின் அடியில் ஆட்கொண்டமுறையாலும், இனிய இசையோடு கூடிய வளமையான தமிழ்ப் பாட்டுகளை மாணிக்கம் போலப் பாடுகின்ற காரணத்தாலும் யாம் அன்று இட்ட பெயர் மாணிக்கவாசகனாகும். ஆதலால் அப்பெயரைக் கூறி அழையுங்கள். வருவார்'' என்று அருள் செய்தார்.

3091 உறக்கமொழிந் தறவோர்சென் றவர்நாம மொழிந்தழைப்ப
வுணர்ந்து நாதன்
அறக்கருணை யிதுவோவென் றவரோடும் எழுந்துநக
ரடைந்து மண்ணுந்
துறக்கமுநீத் தருவருத்தார் மன்றாடுந் துணைக்கமலந்
தொழுது மீண்டோர்
நிறக்கனக மண்டபத்திற் புக்கிருந்தா ரறிஞர்குழாம்
நெருங்கிச் சூழ.

வேறு

3092 தத்துநீர்க் கலத்திற் போந்த சீவரப் போர்வை தாங்கும்
புத்தரை வேறுவைத்துப் புகன்மினும் மிறையு நூலும்
அத்தலை நின்றோர் எய்துங் கதியுமென் றாய்ந்த கேள்வி
மெய்த்தவ நெறிமா ணிக்க வாசகர் வினவி னாரே.

3093 கனவினு நீறு காணாக் கைதவர் காட்சி யானும்
மனவனு மானத் தானும் வாசகப் பெருமான் றம்மை
வினவிய மூன்று முத்தே சாதியின் விரித்தார் வேதம்
அனையவர் கேட்டம் மூன்று மனுவாதஞ்
செய்துட் கொள்ளா.

3094 இன்றிவர்க் கனுமா னாதி யெடுப்பதென் னென்று காட்சி
ஒன்றுகொண் டவர்க டாமே யுடம்படன் மறுத்தார் காட்சி
அன்றியே தின்மை யாலே யனுமான வளவையாலும்
நின்றவன் றுங்கோ னாதி நிறுத்திய மூன்றும் என்றார்.

வாதவூரர் புத்தர்களின் வாதசபையை அடைதல்

3091. அவ்வந்தணர்கள் உறக்கம் நீங்கி எழுந்து சென்று வாதவூரடிகளை அடைந்து, ''மாணிக்க வாசக! வருக!'' என்றழைத்தனர். நிலவுலக இன்பத்தையும், வானுலக இன்பத்தையும் துறந்த அடிகள் அதனை அறிந்து இறைவன் அறக்கருணை இதுவென்று கருதி அம்மறையவரோடு புறப்பட்டு தில்லை நகரை அடைந்து, 'பொன்னம்பலத்தில்' ஆடியருளும் நடராசப் பெருமானின் இரண்டு திருவடித் தாமரைகளையும் வணங்கிக் கொண்டு திரும்பி ஒளியுடைய பொன் மண்டபத்தில் புகுந்து அறிஞர் கூட்டம் நெருங்கிச் சூழ்ந்திருந்த சபை நடுவிலே இருந்தருளினார்.

வாதவூரர் புத்தர்களோடு வாதிடல்

3092. அலைகளையுடைய கடலில் மரக்கலத்தில் வந்த, கடுக்காய் நீரில் தோய்த்த போர்வையை அணிந்த,புத்தர்களை வேறாக நிறுத்தி,''உங்கள் கடவுளையும் நூலையும், அந்நூல் வழியில் நின்றவர் எய்தும் கதியையும் கூறுங்கள்'' என்று, ஆராய்ந்த கேள்வியினையும், உண்மைத் தவ ஒழுக்கத்தையும் உடைய மாணிக்கவாசகர் கூறினார்.

3093. கனவிலும் திருநீற்றைக் காணாதவராகிய அப் புத்தர்கள், காட்சி அளவையினாலும் மாணிக்கவாசகப் பெருமான் தம்மைக் கேட்ட மூன்றையும் உத்தேச முதலியவற்றால் விரித்துக் கூறினார். மறைபோல்பவராகிய அடிகள் கேட்டு அம் மூன்றினையும் அனுவதித்து மனத்துள் கொண்டார்,

3094. பின்னர் இவர்கட்கு இப்பொழுது கருதல் முதலிய அளவைகளை எடுத்துக் கூறுதல் எதற்கு என்று கருதிக் காட்சியளவை ஒன்றினாலே அவர்களே உடன்படுமாறு மறுத்து, ''காட்சி அளவை இன்றி, ஏது இல்லை யாகலின் உமது கடவுள் முதலாக நீர் நிலை நிறுத்திய மூன்றும் கருதலளவையாலும் நின்றன அல்ல'' என்று கூறியருளினார்.

3095 பொன்றுதன் முத்தி யென்பார் பூசரர் பிரானை நோக்கி
இன்றெமைக் காட்சி யொன்றால் வென்றன
மென்றீ ரானால்
நன்றுநுங் கடவு டன்னை யளவையா னாட்டி யெம்மை
வென் றிடும் என்றா ரைந்தும் வென்றவர்
முறுவல் செய்யா.

3096 பிறவியந் தகர்க்கு வெய்யோன் பேரொளி காட்ட லாமோ
மறைகளால் அளவை தன்னாற் றேவரான் மனத்தால்
வாக்கால்
அறிவருஞ் சோதி யெங்கோ னவன்றிரு நீற்றுத் தொண்டின்
குறிவழி யன்றிக் காணுங் கொள்கையா னல்ல னென்றார்.

3097 தேற்றமில் லாதார் உங்கள் சிவனுக்குந் திருநீற் றுக்குந்
தோற்றமெப் படித்திட் டாந்தஞ் சொல்லுமி
னென்றார் தூயோர்
வேற்றுமை யறநா மின்னே விளக்குது மதனை நீங்கள்
தோற்றபி னுமக்குத் தண்டம் யாதுகொல்
சொன்மி னென்றார்.

3098 செக்குர லிடையிட் டெம்மைத் திரிப்பது தண்டம் என்னா
எக்கராம் புத்தர் தாமே யிசைந்தன ரெரிவாய் நாகங்
கொக்கிற கணிந்தா ரன்ப ருலர்ந்தகோ மயத்தை வாங்கிச்
செக்கரந் தழல்வாய்ப் பெய்து சிவந்திட வெதுப்பி வாங்கி.

3095. பஞ்சகந்தம் கெடுதலே வீடுபேறு என்னும் அப்புத்தர்கள் அந்தணர் பெருமானாகிய அடிகளை நோக்கி, ''இப்பொழுது எங்களைக் காட்சி அளவை ஒன்றினாலே வென்றோம் என்று கூறினீராயின் நன்று, உமது கடவுளைக் காட்சி அளவையால் நிலைநிறுத்தி எங்களை வெல்லும்'' என்று கூறினர். ஐம்புலன்களையும் வென்றவராகிய மாணிக்கவாசகர் நகைத்தார்.

3096. பிறவிக் குருடர்களுக்கு சூரியன் ஒளியைக் காட்டல் இயலுமோ? மறைகளாலும் அளவைகளாலும் தேவர்களாலும், மனத்தாலும், மொழியினாலும் அறிதற்கரிய ஒளி வடிவினன் எம் இறைவன். அவ்விறைவன் திருநீற்றுத் தொண்டாகிய குறி வழியே நிற்பவர்க்கு அல்லாமல் ஏனையோரால் காணும் தன்மையுடையவன் அல்லன்''என்று கூறினார்.

3097. தெளிவில்லாத அப்புத்தர்கள், உங்கள் சிவனுக்கும் திருநீற்றுக்கும் உள்ள இயைபுக்குக் காட்சியளவையாது? உதாரணம் சொல்லுங்கள்'' என்றனர். புனிதராகிய அடிகள் ''நாம் இப்பொழுதே அதனை வேற்றுமை நீங்க விளக்கிக் காட்டுவோம். நீவிர் தோல்வியுற்ற பின்னர் நுமக்குத் தண்டனை யாது என்று சொல்லுங்கள்'' என்று வினவினார்.

3098. ''செக்காகிய உரலின்கண் எம்மைப் போட்டுத் திரிப்பதுவே தண்டனை''என்று இறுமாப்புடைய புத்தர்கள் தாமே கூறி உடன்பட்டனர். நஞ்சினையுடைய பாம்பினையும், கொக்கின் இறகினையும் அணிந்த சிவபெருமானுக்கு அன்பராகிய மாணிக்கவாசகர் காய்ந்த கோமயத்தை (பசுவின் சாணத்தை) எடுத்து சிவந்த நெருப்பில் போட்டு அது சிவக்குமாறு எரித்து அதனை எடுத்தார்.

3099 இவ்வண்ண மிருக்கு மெங்கள் இறைவண்ண வடிவுமந்தச்
செவ்வண்ண மேனி பூத்த திருவெண்ணீறதுவு மென்னா
மெய்வ்வண்ண முணர்ந்த வேத வித்தகரவைமுன் காட்ட
உய்வ்வண்ண மறியா மூடருள்ளமு முயிருந் தோற்றார்.

3100 இங்கிலர் தோற்ற வண்ணங் கேட்டவர் இறப்பதின்பந்
தங்குவீடென்று தேற்றுஞ் சமயத்திலாழ்ந்த வாத்திக்
கொங்கிவர் தாரான் மூங்கைக் குயிற்பெடையெனத்தானீன்று
மங்கையைக் கொண்டு தில்லை மல்லன்மா
நகரில் வந்தான்.

3101. யாவரே யாக வின்றிங் கென்மகண் மூங்கை தீர்த்தோர்
ஆவரே வென்றோ ரென்றான் ஆற்றவு மானம் பூண்டு
சாவதே முத்தி யென்பார் மணிமுதன் மூன்றுந் தங்கள்
தேவரே யென்றென் றுள்கிச் செய்யவுந் தீரா தாக.

3102 அந்தணர் பெருமான் முன்போய் அரசன்றன்
மகனைப் போகட்
டிந்தநோய் நீரே தீர்க்க வேண்டுமென் றிரந்தானையன்
சுந்தர நாதன் மன்றுளாடிய துணைத்தா டன்னைச்
சிந்தைசெய் தருட்க ணோக்காற் றிருந்திழை யவளை
நோக்கா.

3099. ''எங்கள் இறைவனது ஒளி பொருந்திய வடிவமும் அந்தச் செவ்வண்ண வடிவாகிய திருமேனியில் பூத்த திருவெண்ணீறும் இவ்வாறு இருக்கும்''என்று மெய்யின் தன்மையை உணர்ந்த அந்தணராகிய அடிகள் அவையோர் முன் காண்பிக்க, உய்வண்ணம் அறியாத மூடரான புத்தர்கள் மனவூக்கத்தையும் உயிரையும் ஒருங்கே தோற்றனர்.

ஊமைப் பெண்ணைப் பேச வைத்தல்

3100. இங்கு இவர்கள் தோல்வியுற்ற தன்மையைக் கேட்டு அப்புத்தர்கள் பஞ்சகந்தம் கெடுதலே இன்பம் நிலை பெற்ற வீடு தேற்றப்படும் என்னும் சமயப் படுகுழியில் அழுந்திய ஆத்தி மலராகிய மணம் விரிந்த மாலையை அணிந்த சோழன் கூவாத பெண்குயில்போலத் தான் பெற்ற மங்கையை உடன்கொண்டு தில்லை நகரின்கண் வந்தனன்.

3101. அவன், ''வென்றவர் தோற்றவர் யாவராயினும் ஆகுக, இன்று இவ்விடத்தில் என் மகளுடைய ஊமைத் தன்மையைத் தீர்த்தவரே வெற்றி பெற்றவர் ஆவார்'' என்று கூறினான். பஞ்சகந்தம் கெடுதலே வீடு என்று கூறும் அப் புத்தர் மிகவும் மானத்தை மேற்கொண்டு, மணி, மந்திரம், மருந்து என்ற மூன்றுமே தங்கள் புத்தர் பெருமான் கூறியவை எனக் கருதி ஊமைத் தன்மையைப் போக்க முயன்றனர். ஆயின் ஊமைத் தன்மை நீங்கவில்லை.

3102. அந்தணர் பிரானாகிய அடிகளின் முன் அரசன் சென்று, தன் மகளை இருத்தி,''இப்பிணியினை அடிகளே நீங்கள் நீக்கியருள வேண்டும்'' என்று வேண்டினான். சோமசுந்தரக் கடவுளின் மன்றுள் ஆடும் இரண்டு திருவடிகளையும் மனதில் நினைந்து, தம் அருட் பார்வையால், சிறப்பான அணிகலன்கள் அணிந்த அப்பெண்ணை நோக்கினார்.

3103 வேறுவேறிறைவன் கீர்த்தி வினாவுரை யாகம் பாம்
ஈறிலானன்பர் கேட்ப விறைமொழி கொடுத்து மூங்கை
மாறினாள் வளவன் கன்னி மடவரல் வளவன் கண்டு
தேறினான் சிவனே யெல்லாத் தேவர்க்குந் தேவன் என்னா.

3104 பின்புர வாரம் பூண்ட பிரானருள் விளையப் பாடுடி
அன்பரை முனிவர் மூவாயிரவரையடியிற் றாழ்ந்து
முன்பவர் சொன்ன வாறே மூர்க்கரைத் தடிந்து மன்றுள்
இன்பரை நடங்கண் டேத்தி யிறைமகன் சைவன் ஆனான்.

3105 மாசறு மணிபோற் பன்னாள் வாசக மாலை சாத்திப்
பூசனை செய்து பன்னாட் புண்ணிய மன்றுள் ஆடும்
ஈசன தடிக்கீ ழெய்தியீறிலா வறிவானந்தத்
தேசொடு கலந்து நின்றார் சிவனருள் விளக்க வந்தார்.

மண்சுமந்த படலம் முற்றிற்று.

62. பாண்டியன் சுரந்தீர்த்த படலம்

3106 வான லமுத மதிமுடிமேன் மதுரைப் பெருமான் மண்சுமந்து
தேன லமுத வாசகரைக் கதியில் விடுத்த திறனிதுமேற்
பானன் மணிவாய்க் கவுணியனை விடுத்துச் சமணர்
படிற்றொழுகுங்
கூனல் வழுதி சுரந்தணித்தாட் கொண்ட கொள்கை
கூறுவாம்.

3103. இறைவனது வேறு வேறாக உள்ள புகழினை வினா மொழியாகப் பாடி, முடிவில்லாத அப்பெருமானுக்கு அன்பராகிய வாதவூரடிகள் கேட்க, சோழன் மகளாகிய அந்நங்கை அவற்றுக்கு மறுமொழி கொடுத்து வாய் திறந்து பேசி தம் ஊமைத் தன்மை நீங்கினாள். சோழன் அதனைப் பார்த்து, சிவபெருமானே எல்லாத் தேவர்களுக்கும் தேவ தேவனாவான் என்று தெளிவடைந்தான்.

3104. பின்பு,பாம்பை அணியாக அணிந்த இறைவனது திருவருள் விளையுமாறு பாடும் அன்பராகிய மாணிக்க வாசகரையும், அந்தணர் மூவாயிரவரையும் அடிகளில் விழுந்து வணங்கி மூர்க்கர்களாகிய புத்தர்களை அவர் முன் சொல்லிய படியே தண்டித்தான். பொன்னம்பலத்தில் நடனம் செய்தருளும் கூத்த பெருமானைத் தரிசித்துத் துதித்து வணங்கிச் சைவனாயினான்.

வாதவூரர் சோதியில் கலத்தல்

3105. சிவபெருமான் திருவருளை விளக்கிக் காட்ட வந்த வாதவூரடிகள் பல நாள்வரை நடராசப் பெருமானின் திருவடிகளுக்குக் குற்றமற்ற மாணிக்க மாலை போல் விளங்கும் திருவாசக மாலையைச் சாத்தி வழிபாடு செய்து, அறவடிவாகிய அம்பலத்தில் ஆடியருளும் திருக்கூத்தனது திருவடி நிழலை யடைந்து அழிவில்லாத சிவானந்த ஒளியுடன் கலந்து நின்றருளினார்.

மண் சுமந்த படலம் முற்றிற்று.

62. பாண்டியன் சுரந் தீர்த்த படலம்

3106. மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள், வானில் உள்ள அமுதம் போன்ற சந்திரனைத் தரித்த முடியின் மேல் மண்ணைச் சுமந்து தேனும் அமுதும் போலும் இனிய திருவாசகம் உடைய மாணிக்க வாசகனாரை வீட்டுலகில் செலுத்திய திருவிளை யாடல் இது. இனிபால் மணம் மாறாத திருவாயினை யுடைய ஆளுடைப் பிள்ளையாரை விடுத்து சமணர்களின் பொய் நெறியில் ஒழுகும் கூன்பாண்டியனுடைய வெப்பு நோயைத் தணித்து ஆட்கொண்டருளிய திருவிளையாடலைக் கூறுவோம்.

3107 வாகு வலத்தான் சகநாத வழுதி வேந்தன் மகன்வீர
வாகு வவன்சேய் விக்கிரம வாகு வவன்சேய் பராக்கிரம
வாகு வனையான் மகன்சுரபி மாற னனையான்றிருமைந்தன்
வாகு வலத்தான் மறங்கடிந்து மண்ணா ளுங்குங்
குமத்தென்னன்.

3108 அன்னான் குமரன் கருப்புரபாண் டியனாம்
அவன்சேய் காருணிய
மன்னா மவன்றன் மகன்புருடோத் தமனா
மவன்றன் மகனாகும்
மின்னார் மௌலிச் சத்துருசா தனபாண் டியனாம்
விறல்வேந்தன்
இன்னான் மகன்கூன் பாண்டியனா மிவன்றோள் வலியா
லிசைமிக்கான்.

3109 திண்டோள் வலியாற் குடநாடர் செம்ம றனையு மாரலங்கல்
வண்டோ லிடுதார் இரவிகுல மருமான் றனையு
மலைந்துபுறங்
கண்டோர் குடைக்கீழ் நிலமூன்றுங் காவல் புரிந்து
கோலோச்சிப்
புண்டோய் குருதி மறக்கன்னிப் புகழ்வேல் வழுதி
நிகழ்நாளில்.

3110 விண்டு ழாவுங் கைம்மாவும் வெறுக்கைக் குவையு
மணிக்குவையும்
வண்டு வீழும் தாரளக வல்லி யாய மொடுநல்கிக்
கண்டு கூடற் கோமகனைக் காலில் வீழ்ந்து தன்னாடு
பண்டு போலக் கைக்கொண்டு போனான் றேனார்
பனந்தாரான்.

பாண்டிய மரபினர் ஆட்சி

3107. தோள் வலிமையுடைய சகநாத பாண்டிய மன்னனுக்குப் பிறகு, வீரவாகு என்பவனும் அவன் மகன் விக்கிரமவாகு என்பவனும் அவன் புதல்வன் பராக்கிரமவாகு என்பவனும் அவன் மகன் சுரபிமாறன் என்பவனும், அவனது அழகிய புதல்வன் தனது தோள்வலிமையினால் தீமையைப் போக்கி நிலவுலகை ஆளும் குங்குமப் பாண்டியன் என்பவனும் ஆட்சி புரிந்தனர்.

கூன்பாண்டியன்

3108. அவன் மகன் கற்பூரப் பாண்டியன் ஆவான். அவன் மகன் காருணிய பாண்டியனாவான். அவனுடைய மகன் புருடோத்தமன். அவன் மகன் ஒளி நிறைந்த முடியினை உடைய சத்ருசாதனபாண்டியன் ஆவான். இவன் தன் தோள் வலிமை யினால் மிக்க புகழுடையவன் ஆனான்.

3109. தன்னுடைய சிறப்பு மிக்க தோளின் வலிமையால் மேற்புறத்து மன்னராகிய சேரனையும், ஆத்தி மாலையில் வண்டுகள் ஒலிக்கும் வரிசையை யுடைய சூரிய குலத் தோன்றலாகிய சோழனையும் போர் புரிந்து புறம் கண்டு ஒரு குடைக்கீழ் இம் மூன்று நிலங்களையும் காத்துச் செங்கோல் செலுத்தினான்.

3110. அப்போது, தேன் நிறைந்த பனம்பூ மாலையை அணிந்த சேரன், கூடல் தலைவனாகிய கூன்பாண்டியனை நேரில் கண்டு அவன் காலில் விழுந்து வணங்கி, மேகம் துழாவும் துதிக்கையுடைய யானையையும், பொற் குவியல்களையும் மணிக்குவியல்களையும், வண்டுகள் ஒலிக்கும் மாலையணிந்த கூந்தலையுடைய கொடி போன்ற பெண்களையும் கொடுத்துத் தன்நாட்டை முன் போலப் பெற்றுச் சென்றனன்.

3111 சென்னிக் கோனுந் தான்ஈன்ற திலகப் பிடியை
யுலகமெலாம்
மின்னிக் கோதில் புகழொளியால் விளக்குஞ் சைவ
மணிவிளக்கைக்
கன்னிக் கோல மங்கையருக் கரசி தன்னைக் கௌரியற்கு
வன்னிக் கோமுன் மணம்புணர்த்தி வாங்கி
னான்றன் வளநாடு.

வேறு

3112 வளவர்கோன் செழியன் கற்பின் மங்கையர்க் கரசி யாருக்
களவறு நிதியுஞ் செம்பொற் கலிங்கமு மணியும் போகம்
விளைநில மனைய வாய வெள்ளமும் பிறவுந் தென்னன்
உளமகிழ் சிறப்ப வேந்தர் வரிசையா லுதவிப் பின்னர்.

3113 கோதறு குணத்தின்மிக்ககுலச்சிறை யென்பான் அங்கோர்
மேதகு கேள்வி யானை விடுத்தனன் மீண்டு தென்னன்
காதலி யோடு காவற் கடவுள்செம் பதுமக் கோயின்
மாதரை மணந்து செல்வான் போல்வந்து மதுரை சேர்ந்தான்.

3114 மலர்மகன் மார்பன் பொன்னி மன்னவன் பயந்த தெய்வக்
குலமகள் உடனே வந்த குலச்சிறை குணனுங் கேள்வித்
தலைமையு மதியின் மிக்க தன்மையும் தூக்கி நோக்கி
நலமலி யமைச்ச னாக்கி நானிலம் புரக்கு நாளில்.

3111. சோழ மன்னனும் தான்பெற்ற, திலகம் அணிந்த பெண் யானையைப் போன்றவரும், குற்றமற்ற ஒளியினால் உலகமெல்லாம் ஒளி வீசி விளங்குகின்ற சைவ மாணிக்க விளக்குப் போல்வாரும், கன்னிப் பருவமுடைய அழகிய மங்கையற் கரசியாரை அப்பாண்டியனுக்கு தீக் கடவுள் முன்னே மணம் புரிந்து கொடுத்துத் தன் வளப்பம் மிக்க நாட்டைப் பெற்றுக் கொண்டு சென்றான்.

3112. சோழ மன்னன் மங்கையற்கரசியாருக்கு அளவற்ற திரவியமும் சிவந்த பொன்னாடைகளும், அணி கலன்களும், இன்பம்விளையும் நிலத்தினை யொத்த பாங்கி மார்களையும் மன்னர்க்குரிய முறைப்படி கொடுத்தான்.

3113. பின்பு குற்றமற்ற குணத்தினால் மேம்பட்ட ''குலச்சிறை'' எனப்படும் சிறந்த நூல் வல்லான் ஒருவனை அங்கு விடுத்தனன். கூன்பாண்டியன் சிவந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளை மணந்து செல்லும் காத்தற் கடவுளாகிய திருமாலைப் போல மனைவியோடு திரும்பி மதுரை வந்து சேர்ந்தனன்.

பாண்டியன் குலச்சிறையாரோடு ஆட்சி புரிதல்

3114. திருமகள் தங்கும் மார்பினை உடைய கூன் பாண்டியன், காவிரிநாடாளும் சோழ மன்னன் பெற்றெடுத்த தெய்வத் தன்மை பொருந்திய மங்கையற்கரசியாருடன் வந்த குலச்சிறையாருடைய நற்குணங்களையும், நூற் கேள்வியின் சிறப்பினையும், இயற்கை அறிவின் மேம்பட்ட தன்மையையும் சீர்தூக்கி அவரைத் தமக்கு நன்மை நிறைந்த முதன் மந்திரியாக்கிப் புவியினைப் பாதுகாத்து வந்தான்.

3115 வல்வினை வலியான் மெய்யில் வலியகூன்
அடைந்தான் போலக்
கொல்வினை யிலராய் வஞ்சங் கொண்டுழன்
றுடுத்த பாசம்
வெல்வினை யறியா நக்க வேடர்சொல் வலையிற் பட்டு
நல்வினை யுதவாத் தென்ன னான்மறை யொழுக்க நீத்தான்.

3116 போதவிழ் தாரா னக்கர் புன்னெறி யொழுக்கம் பூண்டோ
னாதலிற் கன்னி நாடும் அமணிருண் மூழ்கிப் பூதி
சாதன நெறியாஞ் சைவ சமயமு முத்திச் செல்வ
மாதவ நெறியுங் குன்ற மறைந்தது வேத நீதி.

3117 பறிபடு தலையும் பாயின் உடுக்கையும் பாசிப் பல்லும்
உறிபொதி கலனு மத்தி நாத்தியென் றுரைக்கு நாவும்
அறிவழி யுளம்போ னாணற் றழிந்தவெற் றரையுங்
கொண்டு
குறிகெடு மணங்கு சூழ்ந்தாங் கமணிறை கொண்ட
தெங்கும்.

3118 அருந்தமிழ்ப் பாண்டி வேந்தற் குறுதியா யாக்கஞ் செய்யும்
மருந்தினிற் சிறந்த கற்பின் மங்கையர்க் கரசி யாரும்
பெருந்தகை யமைச்சு நீரிற் குழைத்தன்றிப் பிறங்கப் பேறு
தருந்திரு நீறிடா ராய்ச் சிவனடிச் சார்பி னின்றார்.

3115. தீவினையின் வலிமையால் வலிய உடலில் கூனை அடைந்தவன் போல, கொல்வினை இல்லாதவராய் வஞ்சகம் கொண்டு கழன்று, சூழ்ந்துள்ள பாசக்கட்டினை அறுக்கும் நற்கருமம் அறியாத அருகர்களின் சொல் வலையில் அகப்பட்டு முன்னை நல்வினை வந்து உதவப் பெறாத பாண்டியன் நான்மறை வழி ஒழுகுதலை மறந்தான்.

சமணநெறியில் பாண்டியநாடு

3116. மலர் விரிந்த மாலையை அணிந்த பாண்டியன் சமணர்களின் மதத்தை மேற்கொண்டான் ஆதலின் பாண்டிய நாடும் சமண இருளில் அழுந்தப் பெற்றுத் திரு நீற்றுச் சாதன நெறியாகிய சைவ சமயமும், வீடுபேற்றினை அடைவிக்கும் தவ ஒழுக்கமும் குன்றி, வேதநெறிமறைந்தது.

3117. மயிர் பறிக்கப்பட்ட தலையும், பாயாகிய உடையும், பாசிப் பல்லும், உறியிற் பொதிந்த கமண்டலமும், உண்டாம் இல்லையாம் என்று கூறும் நாவும், அறிவினை இழந்த உள்ளம் போல் ஆடையில்லாத அரையும் உடைய தாய்ப் பொலிவிழந்த தவ்வை (மூதேவி) சூழ்ந்து தாங்கினாற் போலச் சமணம் எங்கும் சூழ்ந்து தங்கியது.

3118. அரிய தமிழையுடைய பாண்டியனுக்குப் பற்றுக் கோடாக நின்று வீடுபேறாகிய செல்வத்தை அளிக்க வல்ல கற்பின் சிறந்த மங்கையற்கரசியாரும், பெரிய தகுதியுடைய மந்திரியாகிய குலச் சிறையாரும் எல்லாப் பேற்றினை அளிக்கும் திருநீற்றினை நீரிற் குழைத்து வெளியில் தோன்றா வண்ணம் இடுதலேயன்றி, வெளியில் தோன்றுமாறு இடாதவராய் சிவபெருமானின் திருவடிச் சார்பில் நின்றனர்.

3119 பொய்யுரை பிதற்றும் இந்தப் புன்சமண் களைகட்டீண்டு
மெய்யுரை வேத நீதி வியன்பயிர் தலைச்செய் தோங்கச்
செய்யுந ரேவரோ வென்று சிந்தையிற் கவலை பூண்டு
நையுந ராகிக் கூட னாதனை வணங்கப் போனார்.

3120 பேதுற்ற முனிவர்க் கன்று பெருமறை விளக்கஞ் செய்த
வேதத்தின் பொருளே யிந்த வெஞ்சமண்
வலையிற் பட்டுப்
போதத்தை யிழந்த வேந்தன் புந்தியை மீட்டிப் போஃதுன்
பாதத்தில் அடிமை கொள்வா யென்றடி பணியு மெல்லை.

3121 வேதியன் ஒருவன் கண்டி வேடமும் பூண்டோன் மெய்யிற்
பூதியன் புண்டரீக புரத்தினும் போந்தோன் கூடல்
ஆதியைப் பணிவான் வந்தான் மங்கையர்க் கரசி யாரும்
நீதிய வமைச்ச ரேறு நேர்பட வவனை நோக்கா.

3122 எங்கிருந் தந்த ணாளிர் வந்தனி ரென்றார் ஆய்ந்த
புங்கவன் சென்னி பொன்னி நாட்டினும் போந்தே
னென்றான்
அங்கவ ரங்குண் டான புதுமையா தறைதி ரென்றார்
சங்கரற் கன்பு பூண்டோ னுண்டென்று சாற்று கின்றான்.

சைவம் தழைக்க இறைவனை வேண்டுதல்.

3119. இவ்விடத்தில் பொய்யுரை பிதற்றும் இந்தப் புல்லிய சமணக் களையினைப் பிடுங்கி, உண்மையை உரைக்கும் வேதநெறி என்னும் சிறந்த பயிர் தலையெடுத்து ஓங்குமாறு செய்ய வல்லவர் யாரே என்று கருதி மனதில் கவலையை மேற்கொண்டு கூடல்நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்குவதற்குச் சென்றனர்.

3120. ''பொருள் தெரியாமல் மயங்கிய முனிவர்களுக்கு அந்நாளில் பெரிய வேதத்திற்குப் பொருளை விளக்கிய மறைப் பொருளே! இந்தக் கொடிய சமணமாகிய வலையில் பட்டு அறிவினை இழந்த அரசனது புத்தியைத் திருப்பி இப்போது உனது திருவடிக்கு அடிமை ஆக்கிக் கொள்வாய்'' என்று குறையிரந்து திருவடியை வணங்கி வேண்டினர்.

அந்தணன் ஒருவன் மூலம் காழிப் பிள்ளையாரைப் பற்றி அறிதல்.

3121. புலியூராகிய சிதம்பரத்தினின்று வந்தவனாகிய மறையவன் ஒருவன் உருத்திராக்கமணிந்த திருவேடமுடைய வனாய் உடலில் திருநீறு தரித்தவனாய் கூடல் நாயகனை வணங்கத் திருக்கோயிலுக்கு வந்தனன். மங்கையற்கரசியாரும் அமைச்சருள் சிங்கம் போன்றவருமாகிய குலச்சிறை யாரும் அவனை நேரில் கண்டனர்.

3122. கண்டவுடன், ''அந்தணாளரே! எங்கிருந்து வந்தீர்?'' என்று கேட்டனர். அம் மறையவன், ''சோழ மன்னன் அரசு புரியும் காவிரி நாட்டினின்றும் வந்தேன்'' என்றான். உடனே அவர்கள், ''அங்கு ஏதேனும் புதுமை உண்டோ? இருப்பின் அதனைக் கூறும்'' - என்று வினவினர். சங்கரனுக்கு அன்பு பூண்ட அவ்வந்தணன் ''புதுமை உண்டு'' என்று அதனைக் கூறத் தொடங்கினான்.

3123 ஏழிசை மறைவல் லாளர் சிவபாத விதயர் என்னக்
காழியி லொருவ ருள்ளார் காரமண் கங்குல் சீப்ப
ஆழியி லிரவி யென்ன வொருமக வளித்தி யென்னா
ஊழியி லொருவன் றாளை யுள்கிநோற் றொழுகி நின்றார்.

3124 ஆயமா தவர்பா லீச னருளினால் உலக முய்யச்
சேயிளங் கதிர்போல் வந்தான் செல்வனுக்
கிரண்டாண் டெல்லை
போயபின் மூன்றா மாண்டிற் பொருகடன் மிதந்த தோணி
நாயகன் பிராட்டி யோடும் விடையின்மே னடந்து நங்கை.

3125 திருமுலைப் பாலி னோடு ஞானமுந் திரட்டிச் செம்பொற்
குருமணி வள்ளத் தேந்திக் கொடுப்பவப் பாலன் வாங்கிப்
பருகியெண் ணிறந்த வேதா கமமிவை பற்றிச் சார்வாய்
விரிகலை பிறவும் ஓதா துணர்ந்தனன் விளைந்த ஞானம்.

3126 நம்பந்த மறுப்போன் ஞான நாயகன் ஞானத் தோடு
சம்பந்தஞ் செய்து ஞான சம்பந்த னாகி நாவில்
வம்பந்த முலைமெய்ஞ் ஞான வாணியுங் காணி கொள்க
அம்பந்த மறைகள் எல்லா மருந்தமி ழாகக் கூறும்.

3123. ''சீகாழிப் பதியின்கண் ஏழு இசைகளையுடைய மறையில் வல்ல வேதியர் ஒருவர் 'சிவபாத இருதயர்' என்னும் பெயருடையவராய் இருக்கின்றார். அவர் சமணமாகிய இருளினை ஓட்டக் கடலில் தோன்றிய இளம் சூரியனைப் போல ஒரு புதல்வனைத் தந்தருளுமாறு, ஊழிக் காலத்தில் ஒருவனாயுள்ள இறைவனின் திருவடியை நினைத்துத் தவம் செய்தார்.

3124. ''அந்தத் தவப் பெரியாரிடத்து இறைவனின் திருவருளினால் உலகம் உய்ய இளம் கதிரவனைப் போல ஒரு புதல்வர் அவதரித்தார். அப்புதல்வருக்குக் காட்சிதர, இரண்டு ஆண்டு முடிவெய்தி மூன்றாம் வயதில், அலைகள் மோதும் கடலின் மேல் மிதந்த தோணிபுரத்து இறைவன், இறைவியுடன் ஆனேற்றில் ஏறிவந்தார். அப்பிராட்டியினது,

3125. ''திருமுலைப் பாலுடன் சிவஞானத்தையும் குழைத்துச் சிவந்த பொன்னாலாகிய, மணிகள் பதித்த கிண்ணத்தில் கொடுத்தருளினார். அப்பாலகன் அதனை வாங்கி அருந்தி எண்ணிறந்த மறைகளையும் ஆகமங்களையும் அவற்றின் சார்பு நூலாகிய பிற கலைகளையும் ஓதாது உணர்ந்து சிவஞானம் பெற்றார்.

3126. ''நமது பற்றினை அறுத்தருளும் இறைவனது சிவஞானத்துடன் சம்பந்தம் செய்தலால் திருஞான சம்பந்தர் என்னும் திருப்பெயர் கொண்டு விளங்குகின்றார். கச்சினை அணிந்த அழகிய கொங்கையையுடைய உண்மைவடிவாகிய ஞானவாணி, அவருடைய நாவினை உறைவிடமாகக் கொண்டு விளங்க, அரிய மறைகளை எல்லாம் அரிய தமிழ்ப் பாடல்களாகக் கூறியருளினார்.

3127 கரும்பினிற் கோது நீத்துச் சாறடு கட்டி யேபோல்
வரம்பிலா மறையின் மாண்ட பொருளெலா
மாணத் தெள்ளிச்
சுரும்பிவர் கொன்றை வேணிப் பிரானிடந் தோறும்போகி
விரும்பிய தென்சொன் மாலை சிவமணம்
விளையச் சாத்தி.

3128 பருமுத்த முலையாள் பங்கன் அருளினாற்
பசும்பொற் றாளந்
திருமுத்தின் சிவிகை காளந் தெண்முத்தின் பந்தரின்ன
நிரு மித்த வகைபோற் பெற்றுப் பாலையை நெய்த லாக்கி
பொருமுத்த நதிசூழ் வீழிப் பொற்படிக் காசு பெற்று.

3129 அருமறை வணங்குங் கோயிற் கதவினை யடைக்கப் பாடிப்
பரனுறை பதிகள் எங்குந் தொழுதனர் பாடிப் பாடி
வருமவர் நுங்க ணாட்டு வணங்கவும் வருவ ரென்னத்
தருமநூ லணிந்த தெய்வத் தாபதன் சாற்ற லோடும்.

3130 கற்பலர் கொடியன் னாருந் தென்னவன் கண்போல் வாரும்
அற்புரை யமண்பே யோட்டி யன்றுதங் கோமான் மெய்யிற்
பொற்புறு நீறு கண்டு பூதிசா தனத்தால் எய்துஞ்
சிற்பர வீடு கண்ட மகிழ்ச்சியுட் டிளைத்தோ ரானார்.

3127. ''கரும்பிலிருந்து கோதினை நீக்கி, கருப்பஞ் சாற்றினைக் காய்ச்சிச் செய்த சருக்கரைக் கட்டியே போல எல்லையற்ற மறைகளின் சிறந்த பொருள்களனைத்தையும் மாட்சிமைப்படத் தெளிந்தெடுத்து, வண்டுகள் ஒலிக்கும் கொன்றைமலர் மாலையை அணிந்த முடியினையுடைய சிவபெருமான் எழுந்தருளிய திருப்பதிகள் தோறும் சென்று சிவமணம் கமழச்செந்தமிழ்ப் பதிக மாலையை இறைவனுக்குச் சூட்டி வருகின்றார்.

3128. ''முத்துமாலையை அணிந்த தனங்களையுடைய உமையம்மையை ஒரு பாதியாக உள்ள இறைவன் அருளினால் பசிய பொன் தாளமும், அழகிய முத்துச் சிவிகையும் திருச் சின்னமும், தெள்ளிய முத்துப்பந்தரும் இவை போல்வன பிறவும் பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கி கரையை மோதும் அலைகளையுடைய முத்துடை காவிரிநதி சூழ்ந்த திருவீழி மிழலையின் திருப்படியில் பொற்காசு பெற்றார்.

3129. ''அரிய வேதங்கள் வழிபடும் திருமறைக்காட்டின் திருக்கோயில் கதவு அடைக்குமாறு பாடியருளி இறைவன் எழுந்தருளிய திருப்பதிகள் அனைத்திலும் சென்று வணங்கினார். தமிழ் மறையைப் பாடிப் பாடி வருகின்ற அவ்வாளுடைய பிள்ளையார் உங்கள் பாண்டிய நாட்டிற்கும் சோமசுந்தரக் கடவுளைத் தரிசிக்க வருவார்'' என்று தெய்வத் தன்மை பொருந்திய அறநூல் வழுவாத முந்நூல் அணிந்த அம்முனிவன் கூறினான்.

ஞான சம்பந்தருக்கு ஓலை அனுப்புதல்.

3130. கற்பு மலர்கின்ற கொடிபோல்பவராகிய மங்கையற்கரசியாரும், பாண்டியனின் கண் போன்ற குலச் சிறையாகும் அப்பொழுதே சமணப் பேயினைத் துரத்தித் தமது தலைவனான பாண்டியனின் உடலில் அழகுமிக்க திருநீற்றினைக் கண்டு, பூதி சதனத்தால் அடையும் ஞானமாகிய பர வீட்டினைக் காணுதலால் விளையும் சிவஞானத்தில் மூழ்கியவர் ஆனார்.

3131 தங்கள்பேர் தீட்டி யோலை விண்ணப்பஞ் சண்பை நாடர்
புங்கவர்க் குணர்த்த வந்தப் பூசுரன் கையிற் போக்கி
மங்கையர்க் கரசி யாரும் அரசற்கு மருந்தன் னானும்
அங்கையற் கண்ணி கோனைப் பணிந்துதம்
மகத்திற் புக்கார்.

3132 பண்படு வேதச் செல்வன் வல்லைபோய்ப் பழன வேலிச்
சண்பையர் பிரானைக் கண்டு பறியுண்டு
தலைகள் எல்லாம்
புண்படத் திரியுங் கையர் பொய்யிருள் கடந்தார் தந்த
எண்படு மோலை காட்டிப் பாசுர மெடுத்துச் சொன்னான்.

வேறு.

3133 வெங்குரு வேந்தர் அடிபணிந் தடியேன் குலச்சிறை
விளம்புவிண் ணப்பம்
இங்கெழுந் தருளிச் சமணிரு ளொதுக்கி யெம்மிறை
மகற்குநீ றளித்துப்
பொங்கிரும் பணைசூழ் தென்றமிழ் நாட்டைப் பூதிசா
தனவழி நிறுத்தி
எங்களைக் காக்க வென்றபா சுரங்கேட் டெழுந்தனர்
கவுணியர்க் கிறைவர்.

3134 ஆதகா திதுவென் றோதுவார் நாவுக் கரையர்நீர்
சிறியவர் அவரோ
பாதக மஞ்சார் தம்மொடும் பன்னாட் பழகிய
வெனையவர் செய்த
வேதனை யளந்து கூறுவ தென்னை விடுகதில்
லம்மவோ வுமக்கிப்
போதுநாள் கோள்கள் வலியில வென்னப் புகலியர்
வேந்தரும் புகல்வார்.

3131. உடனே காழி நாட்டினர் தலைவராகிய திருஞான சம்பந்தருக்குத் தெரிவிக்க, விண்ணப்ப ஓலை ஒன்று தங்கள் பெயரால் எழுதி அதனை அம்மறையவன் கையில் கொடுத்து அனுப்பினர். பின்னர் மங்கையற்கரசியாரும், மன்னனுக்கு மருந்து போன்ற வருமான குலச்சிறையாரும், அங்கையற்கண்ணித் தலைவரான சோமசுந்தரக் கடவுளை வணங்கித் தம் அரண்மனையை அடைந்தனர்.

பிள்ளையார் குலச்சிறையார் அனுப்பிய ஓலையைக் காணல்.

3132. பண்ணமைந்த மறைச் செல்வனாகிய அவ்வந்தணன், விரைந்து சென்று கழனிகள் சூழ்ந்த காழியின் வேந்தராகிய திருஞான சம்பந்தரைத் திருமறைக் காட்டில் கண்டு, தலைகள் முழுவதும் புண்படுமாறு மயிர்கள் பறிக்கப்பட்டுத் திரியும் சமணர்களின் பொய் நெறியாகிய இருளினைக் கடந்த மங்கையற்கரசியாரும், குலச் சிறையாரும் கொடுத்த மதிப்புடைய ஓலையினைக் காட்டி அதிலுள்ள பாசுரத்தை எடுத்துக் கூறினான்.

3133. ''சீகாழிப் பிள்ளையாரின் திருவடிகளை வணங்கி அடியேன் குலச்சிறை கூறும் விண்ணப்பம். தேவரீர் இந்த நாட்டிற்கு எழுந்தருளிச் சமணமாகிய இருளினைப் போக்கி எமது அரசனுக்குத் திருநீறு கொடுத்துப் பெரிய வயல் சூழ்ந்த தென் தமிழ்நாட்டைப் பூதிசதன வழியில் நிறுத்தி அடியேங்களைக் காத்தருளக் கடவீர்'' என்று எழுதியிருந்த பாசுரத்தைக் கேட்டார் ஆளுடைப் பிள்ளையார்.

ஞானசம்பந்தர் பாண்டியநாடு வருதல்.

3134. கவுணியர் தலைவராகிய ஆளுடைப் பிள்ளையார், பாண்டிய நாட்டிற்குப் புறப்படத் தயாரானார். அப்போது அவருடன் அருகில் இருந்த திருநாவுக்கரசர், ஞான சம்பந்தரை நோக்கி, ''ஆ, இது தகாது'' நீரோ சிறு குழந்தை. சமணரோ பாதகத்துக்கு அஞ்சாதவர். அவர் தம்மோடு பலநாட்கள் பழகிய எனக்கு அவர்கள் செய்த தீவினை இவ்வளவென்று அளவிட்டுக் கூற இயலாது. உமக்கு இப்போது நாள்களும் கோள்களும் வலிவுடையனவாகவும் இல்லை. ஆதலால் போதலைத் தவிர்க்க'' என்று கூறித் தடுத்தார்.

3135 எந்தையெம் பெருமான் அருளிலார் போல வின்னண
மிசைப்பதென் னவர்செய்
வெந்தவே தனையி னுய்ந்தநீர் நாள்கோள் விளங்குபுள்
ளவுணர்பேய் பூதம்
அந்தமில் பலவு மம்மையோ டப்ப னாணையாடைப்பன
வலர்நஞ்
சிந்தையே கோயில் கொண்டுவீ ற் றிருப்பத் தீங்கிழை
யா வென வெழுந்தார்.

வேறு

3136 மாமுர சொலிப்பச் சங்கங் காகளம் வாய்விட் டேங்கச்
சாமரை பனிப்ப முத்தின் பந்தரிற் றரளத் தெய்வக்
காமரு சிவிகை மேற்கொண் டமணிருள் கழுவுஞ் சோதி
யாமென நெறிக்கொண் டீச னிடந்தொறும் அடைந்து பாடி.

3137 செம்பிய னாடு நீந்தித் தென்னவ னாடு நண்ணி
வெம்பிய சுரமு முல்லைப் புறவமு மேக வில்லைத்
தும்பிக்கை நீட்டி வாங்கு மலைகளுந் துறந்து பாகத்
தம்பிகை யுடையான் கூட னகர்ப்புறன் அணுகச் செல்வார்.

3135. திருஞான சம்மந்தர் அதனைக் கேட்டு, ''அச்சமணர் செய்த கொடிய துன்பத்தினின்றும் இறைவன் அருளால் தப்பிய நீவிர், எம்பெருமானுடைய திருவருளைப் பெறாதவர் கூறுவதுபோல, இவ்வாறு கூறுவது ஏனோ? நாள்களும், கோள்களும், விலங்குகளும், பறவைகளும், அவுணர்களும், பேய்களும், பூதங்களும் இவை போன்ற அளவிறந்த பலவும், அம்மையோடு அப்பனாய் உள்ள இறைவனது ஆணையினாலே நடப்பன. அவ்விறைவர் நம்முடைய மனத்தையே கோயிலாகக் கொண்டு வீற்றிருத்தலால் அவை தீங்கு புரியா'' என்று கூறிக் கோளறு பதிகத்தை ஓதி அவரை ஒருப்படுத்திக் கொண்டு புறப்பட்டார்.

ஞானசம்பந்தர் கூடற் பதியை நெருங்குதல்.

3136. பெரிய முரசங்கள் முழங்கவும், சங்கும் திருச்சின்னமும் வாய்விட்டு ஒலிக்கவும், இருபுறங்களில் சாமரை அசையவும் முத்து பந்தரின் கீழ், தெய்வத்தன்மை பொருந்திய அழகிய முத்து சிவிகையில் ஏறிச் சமணாகிய இருளைப் போக்கும் சூரியனாகும் என்று கண்டோர் சொல்லுமாறு சென்று வழியில் உள்ள சிவத் தலங்களை வணங்கிக் கொண்டு தேவாரம் பாடிய வண்ணம் சென்றார்.

3137. சோழநாட்டைக் கடந்து, பாண்டியநாட்டை அடைந்து, வெப்பமான பாலையையும், முல்லையையும், மேகத்தில் உள்ள இந்திரவில்லைத் தமது துதிக்கையை நீட்டி வாங்கும் யானைகளையுடைய மலைகளையும் கடந்து அம்மையை ஒரு பாதியில் உடைய் இறைவனது கூடல் மாநகரின் அருகில் சென்றார்.

3138 புண்ணிய நீற்றுத் தொண்டர் குழாத்தினுட் புகலி வேந்தர்
நண்ணிய சிவிகை மீது நகைவிடு தரளப் பந்தர்
கண்ணிய றோற்றந் தீம்பாற் கடல்வயி றுதித்துத் தீர்ந்து
விண்ணியன் முழுவெண் டிங்கள் விளக்கமே
யொத்த தன்றே.

3139 தேம்படு குமுதச் செவ்வாய்ச் சிரபுரச் செல்வர் முன்னம்
போம்பரி சனத்தார் தம்மிற் பொன்னெடுஞ்
சின்ன மார்ப்போர்
தாம்பர சமய சிங்கஞ் சமணிருள் கிழியப் பானு
ஆம்படி வந்தா னென்றென் றார்த்தெழும் ஓசை கேளா.

3140 நின்றுண்டு திரியுங் கையர் எதிர்வந்து நீவிர் நுங்கள்
கொன்றறஞ் சொன்ன தேவைக் கும்பிட வந்தா லிந்த
வென்றிகொள் சின்ன மென்கொல் வீறென்கொல்
யாரை வென்றீர்
என்றனர் தடுத்தா ரென்று மீறிலா னடியார் தம்மை.

3141 மாமதம் ஒழுகச் செல்லுந் திண்டிறன் மத்த வேழந்
தாமரை நூலாற் கட்டத் தடைபட வற்றோ கொற்றக்
காமனை முனிந்தார் மைந்தர் கயவர்தந் தடையை நீத்துக்
கோமணி மாட முதூ ரடைந்தரன் கோயில் புக்கார்.

ஞானசம்பந்தர் செல்லும் காட்சி.

3138. புண்ணியமாகிய திருநீற்றினை அணிந்த அடியார் கூட்டத்தினுள், காழிவேந்தர் எழுந்தருளிய சிவிகையின் மேல் ஒளிவிடும் முத்துப் பந்தரின் காட்சியானது இனிய திருப் பாற்கடலின் நடுவில் தோன்றி வானில் உலாவும் முழு வெண் மதியைப் போல் விளங்கியது.

சிவனடியார்களின் கூட்டம் ஆரவாரத்துடன் செல்லல்.

3139. தேன் பொருந்திய குமுத மலர் போன்ற சிவந்த வாயினையுடைய காழிச் செல்வருக்கு முன்னே செல்லும் பரிசனங்களுள் பொன்னாலகிய நீண்ட திருச் சின்னம் ஊதுவோர், ''எங்கள் பரசமய கோளரி வந்தனன்; சமணாகிய இருள் கெட உதித்த ஞான சூரியன் வந்தனன்,'' என்று பலமுறை கூறிச் செல்லும் ஆரவாரத்தைச் சமணர்கள் கேட்டனர்.

3140. நின்ற வண்ணமே உணவு உண்டு திரியும் சமணர்கள், ''உயிர்களைக் கொன்று அறம் கூறிய உங்கள் தேவனை நீவிர் கும்பிட வந்தால் இந்த வெற்றி பொருந்திய சின்னம் எதற்கு? இறுமாப்பு எதற்கு? யாரை வென்றீர்?'' என்று கூறி எஞ்ஞான்றும் அழிவில்லாத இறைவன் அடியார்களைத் தடுத்தனர்.

இறைவரை வேண்டல்.

3141. கரிய மதநீர் ஒழுகும் வலிமையுடைய மதயானை யானது, தாமரை நூலால் கட்டுவதால் தடைப்பட்டுப் போகாது நிற்கும் வன்மைக் குறைவுடையதோ? இல்லை. வெற்றி மிக்க மதவேளை எரித்தவரின் திருமைந்தராகிய ஞான சம்பந்தர், அவர்களின் தடையை நீக்கி, தலைமை பெற்ற மணிகள் அழுந்திய மாடங்களையுடைய தொன்னகராகிய மதுரையை அடைந்து, சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலினுள் சென்றார்.

3142 கைம்மலைச் சாபந் தீர்த்த கருணையங் கடலைத் தாழ்ந்து
மும்முறை வளைந்து ஞான முகிழ்முலைப் பாலி னோடு
செம்மணி வள்ளத் தீந்த திருவொடுந் தொழுதான் அந்த
மெய்ம்மய வெள்ளத் தாழ்ந்து நின்றனர் வேதச் செல்வர்.

3143 மறைவழி நின்று நின்னை வந்திசெய் துய்ய மாட்டா
நிறைவழி வஞ்ச நெஞ்சச் சமணரை நெறிகள் எல்லாஞ்
சிறைபட வாது செய்யத் திருவுளஞ் செய்தி கூற்றைக்
குறைபட வுதைத்தோ யென்று குறித்துரை பதிகம் பாடி.

3144 வேண்டுகொண் டருளைப் பெற்று மீளுமப் போது கண்டு
மூண்டவைம் பொறியும் வென்று வாகீச முனிகள் என்ன
ஆண்டுளா ரொருவர் வேண்ட வவர்திரு மடத்தி லன்பு
பூண்டெழு காத லோடும் போயினார் புகலி வேந்தர்.

3145 அங்கெழுந் தருளி யெல்லின் அமுதுசெய் திருப்பவற்றைக்
கங்குல்வா யமணர் செய்யுங் கருதருஞ் செயலுந் தங்கண்
மங்கல மரபின் வந்தாள் வருத்தமுங் காண வஞ்சிக்
செங்கதி ரவன்போல் மேலைச் செழுங்கடல்
வெள்ளத் தாழ்ந்தான்.

3142. மறையாகிய செல்வத்தையுடைய திருஞான சம்பந்தப் பெருமான், தாமரை அரும்பினையொத்த திருமுலைப் பாலினோடும் குழைத்துச் சிவந்த மணிகள் பதித்த பொற் கிண்ணத்தில் கொடுத்தருளிய அம்மையோடும் வெள்ளை யானையின் சாபத்தைப் போக்கியருளிய அருட்கடலாகிய அப்பனை, மூன்று முறை வலம் வந்து விழுந்து வணங்கி உண்மையான சிவானந்தப் பெருக்கில் அழுந்தினார்.

3143. ''கூற்றுவனை அவனுயிர் சிதையுமாறு உதைத்து அருளியவனே! வேத நெறியினின்று உன்னை வணங்கிப் பிழைக்க மாட்டாத, வஞ்சம் நிறைந்த உள்ளத்தையுடைய சமணரை அவர் வழிகளெல்லாம் சிறைப்படுமாறு வாது செய்யும் வன்மை பெறத் திருவுள்ளம் செய்யக் கடவை'' என்று அதனைக் குறித்துக் கூறும் திருப்பதிகம் பாடினார்.

3144. அவ்வாறு வேண்டிக்கொண்டு இறைவன் திருவருளைப் பெற்று வெளியே வந்தார், அப்போது மூண்ட ஐம்பொறியையும் வென்ற 'வாகீச முனிவர்' என்னும் தவமுனிவர் ஒருவர் வந்து ஞானசம்பந்தரைக் கண்டு தமது திருமடத்திற்கு எழுந்தருளுமாறு வேண்டி அழைத்தார். அன்பு மேலெழும் பெரு விருப்பத்துடன் அத்திருமடத்திற்கு காழியரசர் சென்றருளினார்.

3145. பிள்ளையார் அங்கு எழுந்தருளிப் பகற்பொழுதில் திருவமுது செய்திருக்க, அன்று இரவின்கண், சமணர்கள் செய்யும் நினைத்தற்கரிய செயலையும் தமது மங்கலமாகிய மரபில் தோன்றிய மங்கையற்கரசியாரின் வருத்தத்தையும் பார்க்க அஞ்சி, செங்கதிரோன் மேலைச் செழுங்கடலில் ஆழ்ந்தான்.

3146 மாறுகொள் அமணர் செய்யும் வஞ்சனைக் கிடனா யொத்து
வேறற நட்புச் செய்வான் வந்தென விரிந்த கங்குல்
ஈற்ற முளைத்த வான்மீ னினமவர் பறித்த சென்னி
ஊறுபட் டெழுந்த மொக்கு ளொத்தவக் கங்கு லெல்லை.

வேறு

3147 வைதி கத்தனி யிளஞ்சிறு மடங்கலே றடைந்த
செய்தி யைத்தெரிந் தயன்மலை யிடங்களிற் றிரண்ட
கைத வத்தவெண் ணாயிரங் கயவரும் ஒருங்கே
எய்தி முத்தமிழ் விரகர்மேற் பழித்தழ லிழைத்தார்.

3148 மெய்யில் சிந்தையார் அத்தழற் கடவுளை விளித்தாங்
கெய்தி யெம்பகை யாயினோ ரிருக்கையை யழுது
செய்து வாவெனப் பணித்தனர் சிறுவிதி மகத்துக்
கையி ழந்தவன் செல்லுமோ வஞ்சினான் கலங்கி.

3149 ஈனர் தாஞ்சுடத் தீயினை யெடுத்தனர் ஏகி
ஞான போனகர் மடத்தினிற் செருகினார் நந்தா
தான தீப்புகை யெழுவதை யடியவர் கண்டு
வான நாயகன் மைந்தருக் குணர்த்தினார் வல்லை.

3146. மாறுபாட்டினைச் செய்யும் சமணர்கள் புரியும் வஞ்சனைக்கு இடமாகி வேறுபாடு நீங்கி ஒன்றுபட்டு நட்புச் செய்ய வந்தாற் போல் இருள் வந்து பரவியது. அவ்விரவில் முடிவில்லாமல் முளைத்த விண்மீன் கூட்டங்கள், சமணர்களின் மயிர் பறிக்கப்பட்ட தலைகளில் புண்பட்டதால் எழுந்த கொப்புளங்களை ஒத்திருந்தன.

சமணர் ஒன்று கூடல்.

3147. வேதநெறியில் செல்லும் சைவ இளம் சிங்கமாகிய திருஞான சம்பந்தர் அப்பதிக்கு வந்து சேர்ந்த செய்தியை அறிந்து, பக்கங்களில் உள்ள மலைகளில் கூடியுள்ள வஞ்சக ஒழுக்கமுடைய எண்ணாயிரம் சமணர்களும் ஒரு சேர மதுரைக்கு வந்து முத்தமிழ் வித்தகர் மேல் பழித்து அழல் வேள்வி செய்தனர்.

3148. உண்மையில்லாத உள்ளத்தையுடைய சமணர், அத்தீக்கடவுளை அழைத்து, ''அங்குச் சென்று எமது பகைவரின் இருப்பிடத்தை உண்டு வருவாயாக'' என்று கட்டளை இட்டனர், தக்கன் வேள்வியில் கை அறுபட்ட அவன் செல்வானோ? மனம் கலங்கி அஞ்சினான்.

மடத்திற்குத் தீயிடல்.

3149. அச்சமணர் தாமே சடமாகிய நெருப்பினை எடுத்துச் சென்று, சிவஞானத்தை அமுது செய்த பிள்ளையார் தங்கி இருக்கும் திருமடத்தில் செருகினர். அதனால் உண்டான நெருப்பின் புகை மேலெழுந்ததைக் கண்ட அடியார்கள் பார்த்து வீட்டுலகத்தின் தலைவனாகிய இறைவனது திருப்புதல்வரான ஞானசம்பந்தருக்கு அறிவித்தனர்.

3150 சிட்டர் நோக்கியத் தீயினைத் தென்றமிழ்க் கூடல்
அட்ட மூர்த்தியை யங்கிருந்து அருமறைப் பதிகந்
துட்டர் பொய்யுரை மேற்கொண்டு தொன்முறை துறந்து
விட்ட வேந்தனைப் பற்றெனப் பாடினார் விடுத்தார்.

3151 அடுத்த தக்கணத் தரசனை வெப்புநோய் ஆகித்
தொடுத்த திட்டபல் கலன்களுந் துகளெழப் பனிநீர்
மடுத்த சாந்தமுங் கலவையு மாலையுங் கருகப்
படுத்த பாயலுஞ் சருகெழப் புரவலன் பதைத்தான்.

3152 வளவர் கோன்றிரு மடந்தையு மந்திரர் ஏறுந்
தளர்வ டைந்துநன் மருத்துநூல் விஞ்சையர் தமைக்கூஉய்ப்
பளகில் பன்மருந் தருத்தவும் பார்வையி னாலும்
விளைவ தேயன்றி வெஞ்சுரந் தணிவது காணார்.

3153 சவலை நோன்புழந் திம்மையு மறுமையுஞ் சாரா
அவல மாசரை விடுத்தனர் அனைவரும் பார்த்துத்
தவல லத்தினு மருந்தினுந் தணிந்தில தாகக்
கவலை யெய்தினா ரிருந்தனர் விடிந்தது கங்குல்.

3150. மேலோராகிய பிள்ளையார் அந்நெருப்பினைப் பார்த்து அங்கு இருந்த வண்ணமே ''தீச்செயலையுடையவர் களாகிய சமணர்களின் பொய்மொழியை மேற்கொண்டு பழைய முறைகளைக் கைவிட்ட மன்னனை மெதுவாகச் சென்று பற்றக் கடவை'' என்று தென்தமிழ்க்கூடல் எழுந்தருளிய அட்ட மூர்த்தியாகிய சோமசுந்தரக் கடவுள் மேல் தமிழ் மறைப் பதிகம் பாடி, விடுத்தனர்.

பாண்டியனை வெப்பு நோய் பற்றுதல்.

3151. அத்தீயானது அவ்விநாடியில் கூன் பாண்டியனை அடைந்து வெப்பு நோயாகிப் பற்றியது. அதனால் அவன் அணிந்த பல அணிகள் பொடிந்து தூளாகவும், பனிநீர்விட்டுக் குழைத்த சந்தனமும், கூட்டு வர்க்கமும் மாலையும் கருகித் தீயவும், படுத்திருக்கும் படுக்கை வெந்து சருகாகவும் அவ்வேந்தன் பதைத்தனன்.

3152. வளவர்கோன் பாவையாகிய மங்கையற்கரசியாரும் அரசர் ஏறாகிய குலச்சிறையாரும் தளர்ச்சியுற்றனர், நல்ல மருத்துவரை அழைத்துக் குற்றமில்லாத பல மருந்துகளை அருந்துவதனாலும், மந்திரித்தலினாலும் வெப்பம் மேலும் மேலும் முதிர்வதே அல்லாமல் கொடிய அவ்வெப்பு நோய்த்தணிவதைக் கண்டிலர்.

3153. உடல் மெலிவதற்கு ஏதுவாகிய நோன்பினால் வருந்தி, இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் அடையாத, தவ வலியற்ற, இருவகை அழுக்கினையுமுடைய சமணர்களை அழைத்து வந்து விடுத்தனர். அவர் அனைவரும் தமது தவ வலிமையினாலும், மருந்தினாலும் பார்த்தும் அந்நோய் தணியவில்லை. அதனால் கவலையுற்றிருக்க இரவும் விடிந்தது.

3154 வட்ட வாழியொன் றுடையதேர் பரிதிதன் மருமான்
பெட்ட காதல்கூர் மருகனைப் பற்றிய பிணிகேட்
டிட்ட காரிருள் எழினியை யெடுத்தெடுத் தங்கை
தொட்டு நோக்குவான் வந்தெனத் தொடுகடன்
முளைத்தான்.

3155 வாலி தாகிய சைவவான் பயிரினை வளர்ப்பான்
வேலி யாகியோர் இருவரும் வேந்தனை நோக்கிக்
கால பாசமுஞ் சுடுமிந்நோ யருமறைக் காழிப்
பால ராலன்றித் தீர்த்திடப் படாதெனப் பகர்ந்தார்.

3156 பொய்யர் சார்பினை விடாதவ னீங்குநீர் புகன்ற
சைவர் நீறிட்டுப் பார்ப்பது தகுவதோ வென்ன
ஐய நீயெனைத் திறத்தினால் ஆயினு நோய்தீர்ந்
துய்ய வேண்டுமே யிதினில்யா துறுதியென் றுரைத்தார்.

3157 அழைமி னீண்டென வரசனும் இசைந்தன னார்வந்
தழையு மந்திரத் தலைமகன் றனிநக ரெங்கும்
விழவு தூங்கநன் மங்கல வினைகளால் விளக்கி
மழலை யின்றமிழ் விரகர்தம் மடத்தில்வந் தெய்தா.

3154. வட்டமாகிய உருளை ஒன்றையுடைய சூரியன், தனது வழித் தோன்றலாகிய சோழனால் விரும்பப்பட்ட அன்புமிக்க மருமகனாகிய பாண்டியனைப் பற்றிய நோயினைக் கேட்டுக் கரிய இருட்போர்வையைத் தன் கைகளால் எடுத்துவிட்டுத் தம் அகங்கையால் தொட்டுப் பார்த்தற்கு வந்தாற் போலக் கீழைக் கடலின்கண் வந்து தோன்றினான்.

தேவியாரும் அமைச்சரும் அரசனிடம் கூறல்.

3155. தூயதாகிய சிறந்த சைவமாகிய பயிரினை வளர்ப்பதற்கு வேலியாய் உள்ள மங்கையற்கரசியாரும், குலச்சிறையாரும் அரசனைப் பார்த்து, ''கூற்றுவனது பாசத்தையும் சுடும் இக்கொடிய சுரநோய், சீகாழிப் பிள்ளையால் தீர்க்கப் படுமே அல்லாமல் வேறு ஒருவராலும் தீராது'' என்றனர்.

3156. பொய்யர்களாகிய சமணர்களின் சார்பினைவிட்டு நீங்காத பாண்டியன், ''இப்போது நீர் கூறிய அச்சைவர், திருநீறிட்டு என்னைப் பார்ப்பது தகுமோ?'' என்றான். ''ஐயனே! நீ எந்த வகையினாலும் நோய் நீங்கிப் பிழைக்க வேண்டு மல்லவா? இதனைக் காட்டிலும் உறுதி பயப்பது யாது?'' என்றனர்.

3157. பாண்டியன் அதற்கு உடன்பட்டு ''அவரை இங்கே அழையுங்கள்'' என்றான். விருப்பமுடைய அமைச்சர் தலைவராகிய குலச்சிறையார் மதுரைத் திருநகரைத் திருவிழாப் பொலிவுற மங்கலச் செயல்களால் எங்கும் அழகு பெற அலங்கரித்து இனிய மழலை மொழியினையுடைய முத்தமிழ் விரகர் எழுந்தருளிய திருமடத்திற்கு வந்து சேர்ந்தார்.

3158 அன்று கேள்வியால் அருந்திய ஞானவா ரமுதை
இன்று கண்களா லுண்டுகண் பெற்றபே றெய்திச்
சென்றி றைஞ்சினா னெழுந்திருந் தீயமண் சூழ்ச்சி
வென்ற சிந்தையீ ரென்ற னர் பூந்தராய் வேந்தர்.

3159 நன்றி ருந்தனி ரேயென நகைமலர்த் தடந்தார்
வென்றி மீனவன் கற்பி னார் தம்மையும் வினவ
என்று நும்மருள் உடையவர்க் கெவன்குறை யென்னா
ஒன்று கேண்மைகூ ரன்பினா ரிதனையு முரைப்பார்.

3160 கையர் மாளவு நீற்றினாற் கவுரியன் றேயம்
உய்வ தாகவு மின்றுநும் மருளினால் ஒலிநீர்
வைகை நாடன்மேல் வெப்புநோய் வந்ததா லதனை
ஐய தீர்த்திடல் வேண்டுமென் றடியில்வீழ்ந்திரந்தார்.

3161 இரந்த வன்பருக் கன்னதா கென்றருள் சுரந்து
பரந்த நித்தில யானமேற் பனிக்கதிர் மருமான்
சுரந்த ணிப்பலென் றேகுவா னொத்துமெய்ச் சுருதி
புரந் தளிப்பவர் பாண்டியன் கோயிலிற் புகுவார்.

3158. அந்தணனால் கூறப்பட்ட, அன்று செவியினால் பருகிய நிறைந்த ஞான அமுதினை இப்போது கண்களால் பருகி, கண் பெற்ற பயனை அடைந்து, மகிழ்ந்து அருகில் சென்று விழுந்து வணங்கினர். அப்போது சீகாழிப் பிள்ளையார் அமைச்சரை நோக்கி, ''தீய அமணர்களின் சூழ்ச்சியை வென்ற சிந்தையை உடையீர்! எழுந்திருப்பீராக!'' என்று கூறியருளினார்.

3159. பின் ''நலமுற இருக்கின்றீரோ?'' என்று வினவி, மலர்களால் ஆகிய பெரிய மாலையை அணிந்த வெற்றியுடைய பாண்டியன் தேவியாகிய மங்கையற்கரசியாரைக் குறித்தும் வினவினார். ''நும் அருள் உடையவர்க்கு என்றும் தீங்கு எது?'' என்று கூறி நட்புடன் பொருந்திய அன்பினையுடைய குலச் சிறையார் மீண்டும் சொல்லத் தொடங்கினார்.

3160. ''ஐயனே! இன்று நமது திருவருளினால் சமணர்கள் அழியவும், பாண்டிய நாடானது திருநீற்றினால் உய்தி பெறவும் ஏதுவாய், நீர் நிறைந்த வையை நாடனாகிய பாண்டியன் உடலில் வெப்பு நோய் வந்தடைந்தது. ''அப்பிணியை நீக்கியருள வேண்டும்'' என்று திருவடியில் விழுந்து குறையிரந்தனர்.

பிள்ளையார் அரண்மனை அடைதல்.

3161. உண்மையாகிய மறைகளைப் பாதுகாத்தளிப் பவராகிய பிள்ளையார், வேண்டிய அன்பருக்கு ''அங்ஙனமே ஆகுக'' என்று அருள் கூர்ந்து ஒளி பொருந்திய முத்துச் சிவிகையில் ஏறியருளி குளிர்ந்த ஒளியினையுடைய சந்திரன், வழித் தோன்றலாகிய பாண்டியனது வெப்பு நோயைத் தணிப்பேன் என்று கருதிப் போதல் போலப் பாண்டியன் மாளிகைக்குச் சென்றார்.

3162 வாயி லெங்கணுந் தூபமு மங்கல விளக்குந்
தோய கும்பமுங் கொடிகளுஞ் சுண்ணமுந் துவன்றச்
சேய காகள வொலிமன்னன் செவிப்புலன் சுவைப்பக்
கோயி லெய்தினார் அமணர்தங் கோளரி யனையார்.

3163 காவ லோன்மருங் கிட்டதோர் கதிர்மணித் தவிசின்
மேவி னார்வர் நோக்கினான் மீனவன் றெளிந்து
வாவி தாழ்செழுந் தாமரை யெனமுக மலர்ந்து
பாவி யேன்பிணி தணித்தெனைப் பணிகொண்மின்
என்றான்.

3164 புலைத்தொ ழிற்குவித் தாயினோர் கேட்டுளம் புழுங்கிக்
கலைத்த டங்கட னீந்திய காவலோய் உன்றன்
வலப்பு றத்துநோ யிவரையு மற்றைநோ யெமையுந்
தொலைத்தி டப்பணி யென்றனர் கைதவன் சொல்வான்.

3165 அனைய செய்திரென் றிசையுமுன் சமணரும் அசோகன்
றனைநி னைந்துகைப் பீலியாற் றடவியுங் காத்துக்
கனைகொ ளாலிநீர் சிதறியு நெய்சொரி கனல்போற்
சினவி மேலிடக் கண்டனர் தீர்ந்தடக் காணார்.

3162. வாயில்கள் எங்கும் தூபம், மங்கல விளக்கு, பூரணக் கும்பம், கொடிகள், சுண்ணப் பொடிகள் முதலியன நிறையவும் திருச்சின்னங்களின் ஒலியாகிய அமுதினைப் பாண்டியன் கேட்டுச் சுவைக்கவும் சமணர்களாகிய யானைகட்குச் சிங்கம் போன்ற பிள்ளையார் அரசனது மாளிகையை அடைந்தார்.

3163. அரசன் பக்கத்தில் இட்டதாகிய ஒளி பொருந்திய மணிகள் அழுத்திய ஒரு தவிசின்கண் அமர்ந்தருளினார். அவரது பார்வையினால் பாண்டியன் தெளிவடைந்து, தடாகத்தில் தங்கிய செந்தாமரை மலர் என, முகமலர்ச்சி யுடையவனாய் ''பாவியாகிய எனது நோயைத் தீர்த்து என்னை அடிமை ஆக்கிக் கொள்வீர்'' என்று வேண்டினான்.

சமணர்கள் அரசனை வேண்டுதல்.

3164. இழிதொழிலுக்கு வித்தாய் உள்ள சமணர்கள், அதனைக் கேட்டு உள்ளம் வருந்தி, ''நூல்களாகிய பெரிய கடலைக் கடந்து கரை கண்ட மன்னனே! உனது வலப்புறம் உள்ள நோயை இவரையும், இடப்புறத்து நோயினை எம்மையும் நீக்குவதற்குக் கட்டளை இடுவாயாக'' என்றனர். பாண்டியன் பேச முயன்றான்.

3165. அங்ஙனம் செய்யுமென்று அவன் உடன்படுமுன்னே, சமணர்கள் அருகனை நினைந்து கையில் உள்ள மயிற் பீலியால் தடவியும், கமண்டலத்தில் உள்ள நீர்த்துளியினைத் தெளித்தும் நோயைப் போக்க முயன்றனர். ஆயின் அவற்றால் அந்நோய் நெய் சொரிந்த நெருப்புப் போல முன்னினும் மிகுந்தது. நீங்கக் கண்டிலர்.

3166 தீயர் மானமிக் குடையராய்க் செருக்கழிந் திருப்பப்
பாய கேள்வியோர் புண்ணியப் பையுணீ றள்ளிக்
காயு நோயது தணித்திடக் கருதினார் அதனை
மாய நீறென விலக்கினார் மாயைசெய் தழிவார்.

3167 அண்ட நாயகன் றிரும டைப் பள்ளிநீ றள்ளிக்
கொண்டு வாருமென் றருமறைக் கவுணியர் கூறக்
கண்டு காவலன் ஏவலர் கைக்கொடு வந்தார்
வண்டு லாவுதார் வழுதிநோய் தணிப்பவர் வாங்கி.

3168 மருந்து மந்திரம் யாவையு மறையுரைப் பதுவும்
பொருந்து மின்பவீ டளிப்பதும் போகமும் பொருளுந்
திருந்து மாலவா யான்றிரு நீறெனச் சிறப்பித்
தருந்து மின்னமு தனையசொற் பதிகம் அறைந்து.

3169 மெய்யில் இட்டனர் வருடலும் வெஞ்சுரந் துறந்த
மையில் சிந்தையோர் வெகுளியிற் றணிந்தது வாசஞ்
செய்த தண்பனி நீர்விரைச் சந்தனந் திமிர்ந்தால்
எய்து தண்மைய தாயின திறைவலப் பாகம்.

சம்பந்தர் பாண்டியன் நோயைத் தணித்தல்

3166. அச்சமணர், மானம் மிக உடையவராய்த் தம் இறுமாப்பு அழிந்து வாளா இருந்தனர். பரந்த நூற்புலமையுடைய பிள்ளையார் அறவடிவினதாகிய பையிலுள்ள திருநீற்றினை அள்ளி வெதுப்புகின்ற நோயினை நீக்கக் கருதினார். வஞ்சகம் புரிந்து, அழியும் அச்சமணர், அதனை ''மாயநீறு'' என்று கூறித் தடுத்தனர்.

3167. ''தேவ நாயகனாகிய சோசுந்தரக் கடவுளின் திருமடைப் பள்ளியில் உள்ள சாம்பலை அள்ளிக் கொண்டு தாருங்கள்'' என்று தமிழ் மறை பாடும் பிள்ளையார் கூறினார். மன்னன் ஏவலாளர் அதனைக் கேட்டு அவ்வாறே கையில் அள்ளிக் கொண்டு வந்தனர். வண்டுகள் உலவும் மலர் மாலையை அணிந்த பாண்டியனது பிணியினை நீக்கும் பிள்ளையார் அதனை வாங்கினார்.

3168. ''மருந்தும், மந்திரமும் முதலிய அனைத்தும், வேதத்தினால் உரைக்கப்படுவதும், இன்ப வீடுபேற்றினை அளிப்பதும் போகமாயுள்ளதும், பொருளாய் உள்ளதும் ஆலவாயன் திருநீறே'' என்று சிறப்பித்து, உண்மை இனிய அமுதம் போன்ற சொற்களையுடைய 'திருநீற்றுத் திருப்பதிகம், பாடியருளினார்.

3169. பின்னர், பாண்டியனது உடம்பில் அச்சாம்பலைத் இட்டுத் தடவினார். அவ்வளவில் அக்கொடிய வெப்பு நோய், முற்றும் துறந்த குற்றமற்ற சிந்தனையுடையார் சினம் போல விரைந்து தணிந்தது. அதனால் அரசனது வலதுபாகம் மணம் வீசும் குளிர்ந்த பனிநீரில் குழைத்த சந்தனம் பூசினால் உண்டாகும் குளிர்ச்சியை அடைந்தது.

3170 பொழிந்த தண்மதுத் தார்புனை பூழியர் கோனுந்
கிழிந்த செய்கையர் கைதொட வெரியிடு சுரத்தாற்
கழிந்த துன்பமுங் கவுணியர் கைதொடச் சுரந்தீர்ந்
தொழிந்த வின்பமு மிருவினை யொத்தபோல் ஒத்த.

3171 ஐய விச்சுர மாற்றரி தாற்றரி தென்னா
வைகை நாடவன் வல்லமண் மாசுதீர்ந் தடியேன்
உய்ய வேண்டுமேல் அதனையு மடிகளே யொழித்தல்
செய்ய வேண்டுமென் றிரந்தனன் சிரபுரக் கோனை.

3172 பிள்ளை யாரிடப் பாகமும் பண்டுபோற் பெருமான்
வெள்ளை நீறுதொட் டங்கையா னீவுமுன் மேனாள்
உள்ள கூனொடு வெப்புநோ யொழிந்துமீ னுயர்த்த
வள்ளன் மாசறக் கடைந்தவிண் மணியெனப் பொலிந்தான்.

வேறு

3173 அன்னதொரு காரணத்தாற் சவுந்தரிய பாண்டியனென் றாகி யன்ன
தென்னவர்கோன் கவுணியர்கோன் திருநோக்காற் பரிசத்தாற் றெருட்டும் வாக்காற்
பொன்னடிதாழ்ந் தைந்தெழுத்து முபதேசப் பேறடைந்த பொலிவால் வஞ்சந்
துன்னமணர் நெறியிகழ்ந்து தொல்வேத நெறியடைந்து தூயன் ஆனான்.

பாண்டியன் சுரந்தீர்த்த படலம் முற்றிற்று.

கூன் பாண்டியன் சவுந்தரிய பாண்டியனாதல்

3170. தேனைப் பொழியும் மாலையணிந்த பாண்டிய மன்னனுக்குச் சமணர்களின் கைபட்டவுடன் அனல் போலக் காந்தும் வெப்பு நோயால் மேலிட்ட துன்பமும், பிள்ளையார் கை தொடுதலால் வெப்பு நோய் நீங்கி இன்பம் மேலிட்டதும் இரண்டு வினைகளும் தம்முள் ஒத்தன போல் விளங்கின.

3171. வையை நாட்டினையுடைய பாண்டியன், ''ஐயனே! இவ்வெப்பு நோய் பொறுத்தற்கரியது! பொறுத்தற்கரியது!! சமணர்களின் சார்பாய் உள்ள குற்றத்தினின்று நீங்கி அடியேன் உய்ய வேண்டுமானால், இடப்புறத்து நோயையும் அடிகளே நீக்கியருள வேண்டும்'' என்று குறையிரந்து வேண்டினான்.

3172. ஆளுடைப் பிள்ளையார் இடப்புறத்தையும் முன் போலவே இறைவன் வெண்ணீற்றினைத் தொட்டுத் தம் அம் கையால் தடவியவுடன் முன்னரே இருந்த உடல்கூனுடன் வெப்பு நோயும் நீங்கியது. மீன்கொடியை உயர்த்தியுள்ள வள்ளலாகிய பாண்டியன் குற்றம் நீங்கக் கடையப்பட்ட சூரியனைப் போல் விளங்கினான்.

3173. அந்தப் பாண்டியர் பெருமான் கூன் நீங்கப் பெற்ற காரணத்தால் 'சவுந்தரிய பாண்டியன்' என்னும் பெயரைப் பெற்றான். கவுணியர் பெருமானின் திருப்பார்வையினாலும், தொடுதலினாலும், மெய்ப்பொருளைத் தெளிவிக்கும் திருவார்த்தையினாலும் அவர் பொன்போலும் திருவடியில் விழுந்து வணங்கினான். திருஐந்தெழுத்தையும் உபதேசிக்கப் பெறுதலை அடைந்த விளக்கத்தாலும் சமணர்களின் பொறி நெறியை இகழ்ந்து பழைய வேத நெறியினைக் கைக்கொண்டு புனிதனானான்.

பாண்டியன் சுரம் தீர்த்த படலம் முற்றிற்று.

63. சமணரைக் கழுவேற்றிய படலம்

3174 பஞ்சவன் அடைந்த நோயைப் பாலறா வாயர் தீர்த்து
நஞ்சணி கண்ட னீறு நல்கிய வண்ணஞ் சொன்னேம்
அஞ்சல ராகிப் பின்னும் வாதுசெய் தடங்கத் தோற்ற
வஞ்சரைக் கழுவே றிட்ட வண்ணமுஞ் சிறிது சொல்வோம்.

3175 தென்னவன் றேவி யாரு மமைச்சருட் சிறந்த சிங்கம்
அன்னவன் றானுங் காழி யந்தணர் அடியில் வீழ்ந்தெம்
மன்னவன் வெப்புங் கூனும் பாசமு மாற்றி னீரே
இன்னமு மடியேம் வேண்டுங் குறைசெயத் தக்க தென்றார்.

3176 கன்னிநா டெங்கு மிந்தக் காரமண் காடு மூடித்
துன்னின விதனை யின்னே துணித்திடல்
வேண்டும் என்றார்
அன்னவ ரால வாயார் திருவுள்ள மறிவே னென்னா
உள்ளி மனத்த ராகி யொய்யெனக் கோயில் புக்கார்.

3177 அவ்விரு வோருங் கூட வடைந்துபொற் கமலம் பூத்த
திவ்விய தீர்த்தந் தோய்ந்து சேனெடுங் கண்ணி பாக
நவ்வியங் கமலச் செங்கை நாதனைத் தாழ்ந்து வேந்தன்
வெவ்விய வெப்பு நீத்தார் தொழுதுஇது வினவுகின்றார்.

63. சமணரைக் கழுவேற்றிய படலம்

3174. பால்மணம் மாறாத திருவாயினை யுடைய ஆளுடைய பிள்ளையார், பாண்டியன் அடைந்த வெப்பு நோயைத் தீர்த்து, நஞ்சையுடைய திருமிடற்றினையுடைய இறைவனது திருநீற்றினை அளித்த திருவிளையாடலைக் கூறினோம். மீண்டும் அஞ்சாதவராகி வாது செய்து தோல்வியுற்ற சமணரைக் கழுவில் ஏற்றிய திருவிளையாடலையும் சிறிது கூறுவோம்.

சமண் இருள் போக்க வேண்டுதல்

3175. பாண்டியன் தேவியராகிய மங்கையற்கரசியரும், அமைச்சருள் மேம்பட்ட சிங்கம் போன்ற குலச்சிறையாரும் சீர்காழி வேந்தரான ஆளுடைப்பிள்ளையார் திருவடியில் விழுந்து வணங்கி ''எம்மன்னன் வெப்பு நோயையும் உடல் கூனையும் பாசத்தையும் போக்கியருளினீர். இன்னும் அடியேம் வேண்டும் குறையினை முடிக்கக் கடவீராக'' என்று இரந்து வேண்டினர்.

வாதுசெய்ய இறைவன் திருவளத்தை அறிதல்

3176. இப்பாண்டிய நாடெங்கும் சமண்காடு மூடிச் செறிந்துள்ளது. அதனை இப்போது வெட்டி யழித்தருள வேண்டும் என்று வேண்டினர். ஆளுடைப் பிள்ளையார் ''திருவாலவா யுடையார் திருவுள்ளத்தை அறிவேம்,'' என்று கூறி விரைந்து திருக்கோயிலுள் புகுந்தார்.

3177. பாண்டியன் தேவியாரும், மந்திரியான குலச்சிறை யாரும் உடன்வர, பிள்ளையார் பொற்றாமரைத் தாடகத்தில் நீராடி மீன்போன்ற நீண்ட கண்களையுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் உடைய, மானைத் தாமரை போன்ற சிவந்த கரத்திலேந்திய இறைவனை வணங்கி, முன்னர் மன்னனின் கொடிய வெப்பு நோயை நீக்கியருளிய அப்பிள்ளையார் வேண்டத் தொடங்கினார்.

3178 காயமே யொறுத்து நாளுங் கைதவம் பெருக நோற்கும்
பேயரை யிம்மை யோடு மறுமையும் பேறற் றாரை
நீயுரை செய்த வேத வேள்வியை நிந்தை செய்யுந்
தீயரை யொறுத்தல் செய்யத் திருவுளஞ் செய்தி யென்றார்.

3179 வெம்மத வேழங் காய்ந்த விடையவர் விசும்பிற் சொல்வார்.
எம்மனோர் அவீர் நுங்கட் கிசைந்ததே யெமக்கும் வேண்டுஞ்
சம்மத மதனால் வெல்லத் தக்கவ ராக நீரே
அம்மத முடையார் தோற்கத் தக்கவ ராக வென்றே.

3180 எம்மொழி தேறி னீர்போ யிறைமகன் அவையத் தெய்திச்
செம்மையி லாரை வாது செய்திர்நீ ரனையார் தோற்று
வெம்முனைக் கழுவி லேறி விளிகுவ ரென்னக் கேட்டு
மைம்மலி களத்தான் மைந்தர் தொழுதுதம் மடத்திற் போனார்.

3181 இருவரு மீண்டு தத்தம் இருக்கையிற் போகி யற்றைப்
பருவமங் ககலப் பின்னாட் பாண்டிமா தேவி யாரும்
பெருமதி யமைச்ச ரேறும் பிள்ளையார் மடத்திற் போகி
அருகரை வெல்லுஞ் சூழ்ச்சி யாதென வளர்ந்து தேர்வார்.

3178. 'உடலை வருத்தி எப்பொழுதும் வஞ்சகமே பெருக தவம் புரியும் பேய்க்குணமுடையவரும், இம்மை மறுமைப் பயன்களை இழந்தவரும், நீ திருவாய் மலர்ந்தருளிய வேதங் களையும் அதனுள் கூறிய வேள்விகளையும் நிந்தனை புரியும் தீயவருமாகிய சமணர்களைத் தண்டிக்கத் திருவுளம் புரிய வேண்டும்,'' என்று இரந்தனர்.

3179. கொடிய மத மயக்கமுடைய யானையைக் கொன்ற இடபவூர்தியை உடைய இறையவர் வானின்கண் அசரீரியாகத் தோன்றி ''எம்முடைய அன்பர்களே! உங்கள் கருத்திற்கு இசைந்ததே எமக்கும் வேண்டிய உடன்பாடு. அதனால் நீங்களே வெல்லத்தக்கவர். அந்தச் சமணர் தோல்வி பெறத்தக்கவர்'', என்று கூறி அருளினார்.

3180. மேலும், ''எம்மொழியாகிய வேதாகமங்களைத் தெளிந்தவர்களே! நீங்கள் பாண்டியன் அவைக்குச் சென்று, ஒழுக்கமற்ற அச்சமணருடன் வாதம் புரியுங்கள். அவர் தோல்வியுற்றுக் கூரிய முனையையுடைய கழுவில் ஏறி இறந்து படுவர்,'' என்று கூறினார். அதனைக் கேட்டுத் திருநீலகண்டரின் புதல்வராகிய ஆளுடையப்பிள்ளையார் வணங்கித் தம் மடத்தினுள் சென்று ('தந்தார்.

3181. மற்றை இருவரும் திரும்பித் தத்தம் இருப்பிடத்திற்குச் சென்று அன்றைய பொழுதினைக் கழித்தனர். மறுநாள் மங்கையற்கரசியாரும், சிறந்த மதியுடைய சிங்கம் போன்ற அமைச்சரும் ஆளுடைப் பிள்ளையாரின் திருமடத்திற்குச் சென்று, ''சமணரை வெல்லுவதற்குரிய வழி யாது?'' என்று ஆராயத் தொடங்கினர்.

3182 பேரரு ணிறைந்த காழிப் பெருந்தகை யுடன்போய்த்
தங்கோன்
சீரவை குறுகி யீது செப்புவார் செய்ய கோலாய்
காரமண் காடே யெங்குங் கழியவு மிடைந்த வின்ன
வேரொடுங் களைந்தாற் சைவ விளைபயிர் ஓங்கு மென்றார்.

3183 அவ்வண்ணஞ் செய்வ தேயென் றரசனு மனுச்சை செய்யச்
செவ்வண்ண வெண்ணீற் றண்ண லனுச்சையுந்
தெரிந்த தேயம்
உய்வ்வண்ணம் இதுவென் றங்க னுண்மகிழ்ந்
திருந்தார் நீண்ட
பைவ்வண்ண வாரம் பூண்டார் புகழெங்கும்
பரப்ப வல்லார்.

வேறு

3184 அந்த வேலை யருகந்தக் கையரைக்
குந்த வேற்கட் குலமட மாதரும்
மைந்தர் ஆகிய மக்களுங் கண்ணழல்
சிந்த நோக்கி யிகழ்ந்திவை செப்புவார்.

3185 செழியர் கோமகன் மூழ்கிய தீப்பிணி
கழிய மாற்றும் வலியின்றிக் கற்றிலா
மழலை வாயொரு மைந்தற்குத் தோற்றுவெம்
பழிவி ளைத்தீர் பகவன் றமர்க்கெலாம்.

3186 சாம்ப ராடுஞ் சமயம் புகுந்துவெம்
பாம்ப ணிந்தவ னேபக வானென
வேம்ப னுங்கள் விரத நெறியெலாஞ்
சோம்ப லெய்தத் துறந்தான் இகழ்ந்தரோ.

பாண்டியன் உடன்பாடு

3182. பெரிய அருளுடைய சீர்காழிப்பிள்ளையாருடன் சென்று தம் அரசனுடைய அவையை அடைந்து இதனைச் சொல்லத் தொடங்கினர். ''செங்கோலுடைய அரசே! நமது நாடு முழுவதும் சமணக் காடுகளே நிறைந்துள்ளன. அவற்றை வேருடன் அகழ்ந்து எறிந்தால்தான் சைவப்பயிர் ஓங்கி வளரும்'' என்று கூறினர்.

3183. ''அவ்வாறே செய்க,'' என்று வேந்தனும் அனுமதித்தான். ஞானசம்பந்தர் சோமசுந்தரப் பெருமானின் உடன்பாட்டையும் நினைந்து ''பாண்டியநாடு உய்தி பெறுவதற்குரிய காலம் இதுவே'' என்று மனமகிழ்ந்து, நீண்ட படத்தையுடைய அழகிய பாம்பை ஆரமாக அணிந்த இறைவனது புகழை எங்கும் பரவச் செய்வதில் வல்லவராகி அங்கேயே இருந்தார்.

சமணர்களை அவர்களின் மனைவி மக்கள் இகழ்தல்

3184. அப்பொழுது சமணர்களைக் கூரிய வேற்படை போன்ற கண்களையுடைய அவர்களுடைய மனைவியரும், பிள்ளைகளும், கோபத்துடன் பார்த்து இதனைக் கூறத் தொடங்கினர்:

3185. ''பாண்டிய மன்னன், மூழ்கிய வெப்பு நோயினின்றும் நீங்குமாறு அதைத் தீர்க்கும் வலிமை அற்றவர்களாயினீர். கல்லாத மழலைச் சொல்லையுடைய ஒரு பிள்ளைக்குத் தோற்று அருகனின் அடியார்களுக்கெல்லாம் கொடிய பழியினை உண்டாக்கி விட்டீர்.

3186. ''வேம்பணிந்த பாண்டியன் சாம்பலைப் பூசும் சைவ சமயத்தில் புகுந்து, கொடிய பாம்பை அணிந்த சிவனே இறைவன் என்று கொண்டு, உங்கள் விரதநெறியை இகழ்ந்து கைவிட்டான்.

3187 ஏது மக்கு நிலையினி யென்றவப்
போது மற்றவர் தம்மைப் புறகிட
வாது செய்தற் கெழுந்தனர் வஞ்சகர்
போதும் என்னத் தடுத்தனர் பூவைமார்.

3188 செல்லன் மின்க ணுமக்கிது செவ்வியன்
றல்லல் கூர வருந்துன்பத் தாழநாம்
எல்லி கண்ட கனவுண் டிதனையாஞ்
சொல்லு கேமின்று கேண்மெனச் சொல்லுவார்.

வேறு

3189 இடைய றாதுநம் பாழியும் பள்ளியும் எங்குஞ்
சடையர் முஞ்சியர் சாம்பலர் தாங்கிய சூலப்
படையர் தீவிழிப் புலவுவாய்ப் பாய்பெரும் புலித்தோல்
உடைய ராய்ச்சிலர் வந்துவந் துலாவுதல் கண்டேம்.

3190 கன்னி யிற்றுற வன்னங்கள் கணவனிற் றுறவின்
மன்னு மாரியாங் கனைகணூல் வாங்குமக் குசைகள்
என்ன மூவகைப் பெண்டவப் பள்ளிகள் எல்லாஞ்
சின்ன வெண்பிறைக் கோட்டுமா சிதைக்கவுங் கண்டோம்.

3191 முண்டி தஞ்செய்த தலையராய் முறுக்குறி தூங்கு
குண்டி கைத்தடங் கையராய்க் கோவணம் பிணித்த
தண்டு தாங்கிய சுவலராய்ச் சடையன்பேர் நாவிற்
கொண்ட சைத்தன ராயெங்குங் குலாவவுங் கண்டேம்.

3187. ''இனி உமக்குப் பற்றுக் கோடு எது?'' என்று கூறினர். அம் மொழியினைக் கேட்ட பின்னரும் சமணர்கள் ஆளுடைப் பிள்ளையாருடன் வாது செய்வதற்கு எழுந்தனர். அவர் மனைவியார் தடுத்தனர்.

சமணர் மனைவியார் தாம் கண்ட தீய கனவைக் கூறுதல்

3188. ''உமக்கு இது வெற்றி தரும் காலம் அன்று. நாங்கள் கவலையுடன் துன்பக் கடலுள் அழுந்தும்படி இரவில் ஒரு கனவு கண்டோம். நாங்கள் அக்கனவினைச் சொல்வோம் கேளுங்கள்'', என்று கூறத் தொடங்கினர்.

3189. ''இடைவிடாது நம்முடைய பாழிகளிலும் பள்ளிகளிலும் ஓயாமல் எங்கு நோக்கினும் சடையும், இடையில் முஞ்சிப் புல்லும் சாம்பல் பூசிய மேனியும், சூலப்படையும், புலால் நாறும் வாயையும் நெருப்புப் போல் விழிகளையும் உடைய புலித் தோலாடையணிந்த சிலர் வந்து உலாவுதலைக் கண்டோம்.

3190. ''திருமணம் இல்லாத கன்னிப் பருவத்திலே துறவு பூண்ட அன்னங்களும் (பெண்களும்) கணவனுடன் கூடிவாழும் இல்லற வாழ்விலே துறவு பூண்ட ஆரியாங்கனைகளும், கைம்பெண் ஆகிய பின்னர் துறவு பூண்ட அக்குசைகளும் என்று சொல்லப்படும் மூன்று வகைப் பெண்களின் தவம் செய்யும் இடங்களனைத்தையும், கொடிய வெள்ளிய பிறை போன்ற கொம்பினையுடைய யானை ஒன்று அழிக்கவும் கண்டோம்.

3191. ''முண்டிதம் செய்த தலையராய், முறுக்கிய உறியில் குண்டிகையை ஏந்திய கையராய்க் கோவணம் கட்டிய கோலினைத் தாங்கிய பிடரினை உடையராய்ச் சிவன் பெயரைக் கூறும் நாவினராய் உள்ள சிலர் எங்கும் உலாவுதலைக் கண்டோம்.

3192 காந்து வெங்கதம் உடையதோர் கயந்தலை வந்து
சூழ்ந்து கொண்டுநம் மடிகண்மார் கணமெலாந் துரத்தி
ஏந்து பூஞ்சினை யலைந்திட விரங்கிவண் டிரியப்
பாய்ந்து பிண்டியை வேரொடும் பறிக்கவுங் கண்டேம்.

3193 அந்த மூவிலை வேலினு மயின்முனைக் கழுவின்
பந்தி மீதுநீர் ஏறவுங் கண்டுளம் பனிப்பச்
சந்த மார்பகஞ் சேப்பவந் தளிர்க்கரம் புடைத்துக்
கந்த வார்குழல் சோரவுங் கலுழவுங் கண்டேம்.

3194 தள்ள ருந்திறல் இந்திர சாலமோ காதி
உள்ள விஞ்சையிவ் வெல்லைவந் துதவில வொன்றுங்
கள்ள ராற்பறி பட்டவோ கனவில்வெந் தனவோ
வெள்ளங் கொண்டவோ சேமத்திற் கிடப்பவோ விளம்பீர்.

3195 தாவு தீவளர்த் தெழுகரி தன்னையா டரவை
ஆவை யேவிமுன் னம்மனோர் பட்டது மறிந்தீர்
காவ லன்பிணி தணித்திலீர் இனிச்செயுங் கருமம்
யாவ தாகுமோ வதனையு மெண்ணுமி னென்றார்.

3192. ''கடும் கோபம் கொண்ட ஒரு யானைக் கன்று வந்து நமது அடிகள்மார் கூட்டங்களை எல்லாம் வளைத்துக் கொண்டு துரத்தி, ஏந்திய பூங்கொத்துகள் அலையவும், வண்டுகள் ஒலித்து நீங்கவும் பாய்ந்து பிண்டியை வேரோடு பிடுங்கவும் கண்டோம்.

3193. ''நீவிர் யாவரும் மூவிலைச் சூலத்திலும், கூரிய முனைகளையுடைய கழுவிலும் ஏற அதனைக் கண்டு எங்கள் உள்ளம் நடுங்க சாந்தணிந்த மார்பகம் சிவக்குமாறு அழகிய தளிர் போன்ற கைகளால் அடித்துக் கொண்டு மிக்க கூந்தல் சரிய அழுது புலம்பவும் கண்டோம்.

3194. ''அருந்திறல் வாய்ந்த இந்திர ஜாலமும், மோகனம் முதலாக உள்ள வித்தைகளும் இப்போது வந்து உங்களுக்கு உதவவில்லை! அவை கள்ளரால் கொள்ளை கொள்ளப் பட்டனவோ? நெருப்பில் வெந்து பட்டனவோ? வெள்ளத்தால் கொண்டு போகப்பட்டனவோ? காவலில் வைக்கப்பட்டுக் கிடக்கின்றனவோ? கூறுங்கள்!

3195. ''தாவுகின்ற நெருப்பினை வளர்த்து அதில் எழுந்த யானையையும் கொல்லும் தொழிலையுடைய பாம்பினையும், பசுவையும் நம் முன்னோர் விடுத்துப் பட்டதையும் அறிவீர். பாண்டியன் வெப்பு நோயைத் தணித்திலீர் இனி செய்யப் போகும் காரியம் எப்படி முடியுமோ? அதனையும் சிறிது எண்ணிப் பாருங்கள்'', என்று கூறித் தடுத்தார்கள்.

(யானை, பாம்பு, பசு போன்றவற்றை ஏவிய வரலாறு இப்புராணத்தின் கூடற்காண்டம் மூலம் அறிந்து தெளிக.)

3196 இற்றை வைகலுக் கேகன்மி னென்றனர் அறத்தைச்
செற்ற வஞ்சகர் செல்லுவார் திரும்பவுங் கையைப்
பற்றி யீர்த்தனர் பெண்டிர்சொற் கேட்பது பழுதென்
றுற்ற தீவினை வழிச்செல்வா ரொளித்தனர் செல்வார்.

3197 கொங்க லார்க்குழல் சரிந்திடக் குரத்தியர் பின்னும்
எங்கள் சொற்கொளா தேகுவீர் பரிபவ மெய்தி
உங்க ளுக்கிடை யூறுவந் துறுகெனச் சபித்தார்
அங்க தற்குமஞ் சார்செல்வா ரழியுநாள் அடுத்தார்.

3198 புட்க ளும்பல விரிச்சியும் போகலென் றெதிரே
தட்க வுங்கடந் தேகுவார் தடங்கய லுகைப்பக்
கட்க விழ்ந்தலர் கிடங்கர்சூழ் கடிநகர்ப் புறம்போய்
உட்கு நெஞ்சரா யாவரும் ஓரிடத் தீண்டி.

3199 யாது சூழ்ச்சியென் றெண்ணுவார் இறைவனைக் கண்டே
தோதி நாமவ னனுமதி யுறுதிகொண் டனைய
ஏதி லாளனை வாதினால் வேறுமென் றிசைந்து
போது வார்நகர் புகுந்துவேத் தவைக்களம் புகுவார்.

தம் மனைவியின் சொல்லைத் தட்டிப் புறப்படல்

3196. அதடன், ''இன்றைய நாளில் செல்ல வேண்டாம்'' என்று கூறினர். அறத்தைக் கொன்ற வஞ்சகராகிய அச்சமணர் மீண்டும் அவர்கள் பேச்சைக் கேட்காமல் செல்லத் தொடங்கினர். அப்பெண்கள் அவர்களின் கையைப் பற்றி இழுக்கவும் ''பெண்கள் சொல்லைக் கேட்பது பழுதாகும்'' என்று கருதித் தங்கள் மனைவியர் அறியாதவாறு தீவினையின் வழியே மறைந்து சென்றனர்.

3197. மணம் பொருந்திய மலரணிந்த கூந்தலையுடைய அப்பெண்டிர் தங்கள் கூந்தல் சரிய, ''எங்கள் சொல்லை ஏற்றுக் கொள்ளாது செல்கின்றீர்! இழிவு உண்டாகி உங்களுக்குத் துன்பம் வரக் கடவது,'' என்று சபித்தனர். அழியும் காலம் வந்து நெருங்கியதால் அச் சமணர்கள் எதற்கும் அஞ்சாமல் புறப்பட்டுச் சென்றனர்.

சமணர்கள் அரச சபையை அடைதல்

3198. பறவைகளும், பல தீய சகுனங்களும் 'போக வேண்டாம்' என்று தடுக்கவும் அவற்றையும் பொருட்படுத்தாமல் கடந்து சென்றனர். பெரிய கயல் மீன்கள் எழுந்து பாய்வதால் தேனைச் சிதறிய தாமரைகள் மலரும் அகழி சூழ்ந்த காவலையுடைய நகரின் புறத்தேபோய் அஞ்சிய நெஞ்சோடு அனைவரும் ஓரிடத்தே கூடினர்'.

3199. ''வெல்லும் சூழ்ச்சி யாது?'' என்று சிந்தித்தனர். பின், ''நம் அரசனைக் கண்டு இதனைக் கூறி அவன் ஆணை பெற்று அப்பகைவனை வாதத்தால் வெல்வோம்'' என்று தம்முள் ஒரு மனதாக தீர்மானம் செய்து நகரில் புகுந்து மன்னர் அவைக்களத்தில் புகுந்தனர்.

3200 ஆய போதிளங் காலையிற் கவுணியர் ஆல
வாயர் சேவடி பணிந்துதம் மடத்தினிற் செல்லக்
காயு மாதவச் செல்வனைக் கங்குல்சூழ்ந் தாங்கு
மாய வஞ்சகர் வந்திடை வழித்தலை மறித்தார்.

3201 மறித்த கையர்பின் செல்லமுன் மன்னவை குறுகிக்
குறித்த வாளரித் தவிசின்மேற் கொச்சையர் பெருமான்
எறித்த சேயிளம் பரிதியின் ஏறிவீற் றிருந்தார்
பறித்த சீத்தலைப்புலையர்கள் பொறாதிவை பகர்வார்.

3202 மழலை யின்னமுந் தெளிகிலா மைந்தகண் மணியொன்
றுழல்க ருங்கொடி யிருந்திடக் கனியுதிர்ந் தாங்குன்
சுழல்கொள் விஞ்சையி னன்மையான் மன்னனைத் தொடுத்த
தழல வித்தனம் என்றுநீ தருக்குறத் தகுமோ.

3203 நந்து நாகுநீர் வண்டுசென் னடைவழி யெழுத்தாய்
வந்து வீழினம் வீழுமவ் வழக்கின் கையற்
சிந்து சாம்பருஞ் சிறுசொலு மருந்துமந் திரம்போற்
சந்து சூழ்மலை யான்சுரந் தணித்தன கண்டாய்.

3200. அப்போது காலைப் பொழுதில் ஆளுடைப் பிள்ளையார் திருவாலவாயுடையார் சிவந்த திருவடியினைப் பணிந்து தம்மடத்திற்குச் சென்று கொண்டிருந்தார். சுடுகின்ற சூரிய தேவனை இருள் சூழ்ந்தார்போலப் பிள்ளையாரை அச்சமணர்கள் வழியில் மறித்தனர்.

3201. தம்மை வழியில் மறித்த கீழ்மக்களாகிய அச்சமணர்கள் பின்னே வர, காழிப் பிள்ளையார் முன்னே அப்பாண்டியன் அவையை அடைந்து, அவனால் காட்டப்பட்ட சிங்காதனத்தின் மேல் ஒளிவீசும் இளம் சூரியனைப் போல் வீற்றிருந்தார். மயிர் பறித்தலால் சீழ்ப்பட்ட தலையையுடைய புலையர்கள் பொறுக்காமல் இவற்றைக் கூறுவாயிராயினர்.

ஞானசம்பந்தரை வாதுக்கு அழைத்தல்

3202. ''இன்னும் மழலை மொழி மாறாத சிறுவனே! இரண்டு கண்களுக்கு ஒரு மணி இருந்து சுழலும் கரிய காக்கை ஏறப் பனம்பழம் விழுந்தாற் போல, உன்னுடைய மந்திர வித்தையின் நன்மையினாலே அரசனைத் தொடுத்த வெப்பு நோயை நீக்கினோம் என்று கருதி நீ செருக்கினை அடைதல் தகுமோ?

3203. ''சங்கும் நத்தையும் நீர்வண்டும் செல்லும் வழியானது கீறு எழுத்தாக வந்து அமைந்தாலும் அமையும். அது போன்று நின் கையில் இருந்து சிந்திய சாம்பலும் சிறு சொல்லும் முறையே மருந்து போலவும் மந்திரம் போலவும், சந்தன மரங்கள் நெருங்கிய பொதிய மலையை உடைய பாண்டியனின் வெப்பு நோயை ஒழித்தன.

3204 உங்கண் மந்திரம் ஏடொன்றிற் றீட்டுக வோரேட்
டெங்கண் மந்திரந் தன்னையுந் தீட்டுக விரண்டும்
அங்கி வாயிடின் வெந்தது தோற்றதவ் வங்கி
நுங்கி டாதது வென்றதென் றொட்டியே நுவலா.

3205 செக்க ரஞ்சடை யானுறை பதிகளிற் செய்யத்
தக்க தன்றவ னடுநிலை பிழைத்துநுஞ் சார்வாய்
விக்க மெம்மனோர்க் கியற்றுவான் வேறொரு தலத்திற்
புக்க மர்ந்துவா தஞ்செயப் போதுகம் என்னா.

3206 வென்றி மாமுர சுறங்கிடா வியனகர்ப் புறம்போய்
மன்றல் வேம்பன்முன் கதழெரி மடுத்திடிற் பிழைப்ப
தொன்று வேவதொன் றீதுகொண் டுமர்களும் எமரும்
இன்று வெல்வதுந் தோற்பதுங் காண்டுமென் றெழுந்தார்.

3207 ஈட்டுவஞ்ச நெஞ்சரே யெழீஇநகர்ப் புறம்புபோய்க்
கீட்டிசைக்க ணோரழற் கிடங்குதொட் டெழுந்துவான்
நீட்டுகோ டரங்குறைத்து நிறையவிட்டு நெட்டெரி
மூட்டினார்த மாதரார் வயிற்றுமிட்டு மூட்டினார்.

3208 ஞானமுண்ட முனிவர்தம்மை யெள்ளியெள்ளி நாயினும்
ஈனரங்கி யைத்தடுத் திருப்பவெண் ணிராயிரர்
ஆனதொண்டர் உடனெழுந்து சண்பைவேந்து மரசனும்
மானனாரு மந்திரக் கிழானும்வந்து வைகினார்.

3204. ''ஆதலின், உங்கள் மந்திரத்தை ஒரு பனையேட்டில் எழுதக் கடவீர்! வேறொரு பனையேட்டில் எங்கள் மந்திரத்தையும் எழுதுங்கள். இவ்விரண்டு ஏட்டினையும் நெருப்பில் இட்டால் வெந்த ஏடு தோல்வி அடைந்தது. வேகாத ஏடு வெற்றி பெற்றது என்று கொள்வோம்'' என்று வஞ்சினம் கூறினர்.

3205. அதனுடன் ''சிவன் உறையும் பதிகளில் இது செய்யத் தக்கது அன்று. அச்சிவன் நடுநிலைமை தவறி உம்முடைய சார்பில் நின்று எங்களுக்குக் கெடுதி செய்வான். ஆதலின் நாம் வேறொரு தலத்தில் போயிருந்து வாது புரிவோம்'' என்று கூறினர்.

3206. ''பெரிய வெற்றி முரசு ஒலிக்கும் இடம் அகன்ற இந்நகரின் வெளியே சென்று, மணம்மிக்க வேப்ப மலர் மாலையை அணிந்த பாண்டியன் முன், மிகுதியாக எரியும் தீயின் கண் நம்மேடுகளை இட்டால் வேகாதது, வெந்தது என்ற ஏதுவினாலேயே உம்மவரும் நம்மவரும் இன்று வெற்றி பெறுவதும் தோல்வியுறுவதும் பார்ப்போம்'' என்று சமணர்கள் எழுந்தனர்.

3207. வஞ்சகத்தையே தேடிச் செய்யும் அச்சமணர்களே முன்னர் எழுந்து நகருக்கு வெளியே சென்று, கிழக்குப் புறத்தில் ஒரு தீக்குழி தோண்டினர். மேலெழுந்து வானை அளாவிய மரங்களை வெட்டி அதில் இட்டனர். பெரிய நெருப்பை மூட்டினர். அத்தீயைத் தன் மனைவியர்கள் வயிற்றிலும் இட்டனர்.

அனல் வாதம் புரிதல்

3208. சிவஞானம் பருகிய ஆளுடைப் பிள்ளையாரை இகழந்திகழ்ந்து நாயினும் கடையராகிய அச்சமணர் தமது மந்திரத்தால் அந்நெருப்பை மூட்டிக் கொண்டிருந்தனர். அப்போது பதினாயிரம் தொண்டருடன் எழுந்து, ஆளுடைப் பிள்ளையாரும், மன்னரும், மங்கையற்கரசியாரும், குலச் சிறையாரும் அங்கு வந்து தங்கினர்.

3209 உள்ளவிழ்ந்த முலைசுரந் தொழுக்குபால் அருந்தியே
துள்ளியோடு கன்றுபின் றொடர்ந்துசெல்லு மானென
வெள்ளியம்ப லத்துளாடும் வேதகீதர் காதல்கூர்
பிள்ளைபோன வாறுதம் பிராட்டியோடு மெய்தினார்.

3210 ஆறினோ டிரண்டடுத்த வாயிரஞ் சமணரும்
வேறுவேறு தாயமுன்ற மந்திரங்கள் வேறுவே
றூறுநீர் சுந்தரவோலை யிற்பொறித் தொருங்குபோய்
சீறிவா னிமிர்ந்தெழுந்த தீயின்வாய் நிரப்பினார்.

3211 அக்கிவாய் மடுத்தவே டனைத்துமக் கணத்தினே
இக்குவா யுலர்ந்ததோ டெனக்கரிந்து சாம்பராய்
உக்கவாறு கண்டுநீச ருட்கிடந்து பொங்கவே
திக்குளார்கள் கண்டபேர் சிரித்துளார்கள் ஆயினார்.

3212 விரிந்தவேத நாவர்தாம் விரித்தவேத மெய்ப்பொருள்
வரைந்தபுத்த கத்தைவண் கயிற்றினால் வகிர்ந்துதாம்
அருந்தஞான வமுதளித்த வம்மைபோ கப்படத்
தெரிந்தவே டெடுத்தடுத்த தீயின்வாயில் இட்டனர்.

3213 மறைபுலப் படுத்தநூல் வரைந்தவே டனந்தநாள்
அறைபுனற் கிடந்ததா மெனப்பசந்த தரசனும்
நிறையமைச்சு மரசியாரு நின்றபேரு மந்தணர்க்
கிறைவரைப் புகழ் ந்தளப்பி வின்பவெள்ள மூழ்கினார்.

3209. உள்ளம் நெகிழ்தலால் முலை சுரந்து ஒழுகும் பாலைப் பருகித் துள்ளி யோடுகின்ற கன்றின் பின்னே தொடர்ந்து செல்கின்ற பசுவைப் போல, வெள்ளியம் பலத்திலே ஆடுகின்ற சாம வேதத்தை விரும்புகின்ற இறைவர், தமது பிராட்டியாரோடு அன்புமிக்க பிள்ளையார் சென்ற வழியில் சென்றடைந்தார்.

3210. எண்ணாயிரம் சமணரும், தாம் முயன்று கற்ற வேறு வேறு மந்திரங்களை, ஊறுகின்ற நீர் சுரந்த பச்சை ஓலைகளில் எழுதி ஒரு சேரச் சென்று வானின் உயர்ந்து ஓங்கி எழும் தீயிலே இட்டார்கள்.

3211. அவ்வாறு தீயிலே இடப்பட்ட ஏடுகள் யாவும் அந்தக் கணப்பொழுதிலேயே கரும்பின் உயர்ந்த தோட்டைப் போல கரிந்து சாம்பலானது. அதனைக் கண்டு சமணர்கள் மனம் புழுங்கினர். அங்குக் குழுமி இருந்த அனைவரும் சிரிக்கலாயினர்.

பிள்ளையார் அனலில் பாசுரம் எழுதிய ஏட்டினை இடுதல்

3212. வேதம் விரிந்த பிள்ளையார், தாம் விரித்துக் கூறிய வேதத்தின் உண்மைப் பொருள் எழுதிய திருமுறையை, எடுத்துத் திருக்கயிறு சார்த்திப் பார்த்தார். தாம் அருந்த சிவஞான அமுதளித்த அம்மையாரின் திருப்பெயரினைக் கொண்ட (போகமார்த்த பூண்முலையாள் என்னும்) ஏடு அகப்பட்டது. அந்த ஏட்டினை எடுத்து அடுத்துள்ள தீயில் இட்டனர்.

3213. வேதத்தின் மெய்ப்பொருளை வெளிப்படுத்திய ஒருமுறையினின்றும் கைக்கொண்ட அவ்வேடு மிகப்பல நாள் ஒலிக்கின்ற நீரின்கண் கிடந்ததுபோலப் பசுமையாகவே இருந்தது. பாண்டியனும், அமைச்சிலக்கணம் நிறையப் பெற்ற குலச் சிறையாரும், மங்கையற்கரசியாரும், அங்கு நின்ற மற்றையவர் களும் அதனைக் கண்டு காழிப் பிள்ளையாரைப் புகழ்ந்து அளவில்லாத இன்பத்தில் மூழ்கினார்கள்.

3214 வெந்தசிந்தை யமணர்வாது வெல்வதற்கு வேறிடம்
புந்திசெய்து வந்தவப் பொதுத்தலம் பொதுக்கடிந்
தந்தணாளர் வாதுவென்ற வன்றுதொட்டு ஞானசம்
பந்தனென்ற நாமமே படைத்துயர்ந்த தின்றுமே.

3215 அன்னவேடு முறையினோடு இறுக்கியந்த ணாளர்கோன்
மன்னைநோக்க வினையினோடு பாயுடுத்த மாசர்தாஞ்
சொன்னசூழ் புலப்படத் துணிந்துவாய்மை நாணொரீஇக்
கன்னிநாட னவை சிரிக்கவாற்றலாது கத்துவார்.

3216 ஏடநாங்கள் எழுதியிட்ட பச்சையேடெ ணாயிரம்
வீடவந்த நீவரைந்து விட்ட வோலை யொன்றுமென்
வாடலின்றி நீரிலிட்ட வண்ணமான தாலிதுன்
பாடவஞ்செய் விஞ்சைகொண்டு பாவகற் பிணித்ததே.

3217 உங்களோடு மெங்களோடும் உம்பர்வான ளாய்விரைஇப்
பொங்கியோடும் வைகைநீரி லிடுகவிட்ட போதுதான்
அங்குநீரெ திர்க்குமோலை வெல்லுமோலை யன்றியே
துங்கவேலை செல்லுமோலை தோற்குமோலை யாவதே.

3214. புழுங்கிய உள்ளத்தையுடைய சமணர்கள் வாதில் வெல்வதற்கு, வேறு இடம் வேண்டும் என்று முன்னர் எண்ணித் தேர்தெடுத்த இவ்விடமானது, ஞானசம்பந்தர் வெற்றி கொண்ட அந்த நாள் முதல், இன்றுவரை பொதுமை நீங்கி ஞானசம்பந்தன் என்ற பெயரையே (சம்பந்த நத்தம்) ஏற்று விளங்குகின்றது. (இக்காலத்தில் சாம்ப நத்தம் என வழங்குகின்றது).

புனல் வாதம் புரிதல்

3215. அந்த ஏட்டினைத் திருமுறையுடன் எடுத்துக் கட்டி, மறையவர் பெருமானாகிய பிள்ளையார் மன்னனைக் பார்க்க, தீவினையுடன் பாயையும் உடுத்த அழுக்கினையுடைய அச்சமணர் தாங்கள் கூறிய வஞ்சினத்தை அறிந்திருந்தும், வாய்மையையும் வெட்கத்தையும் விட்டு விட்டு, பாண்டிய மன்னன் அவையோர் சிரிக்க அதனைக் கண்டு சகியாது பெரும் கூச்சலிட்டனர்.

3216. அவர்கள் மீண்டும் பிள்ளையாரை நோக்கி, ''ஏடா! நாங்கள் எழுதி இட்ட எண்ணாயிரம் பச்சை ஏடுகளும் சாம்பலாக, நீ எழுதிப் போட்ட அந்த ஓரோலை மட்டும் சிறிதும் வாடாமல் நீரில் இட்டது போன்ற நிறத்தை யடைந்தது என்ன காரணம்? நீ கற்ற அக்கினிக்கட்டு வித்தையினால் மற்றவர்க்கு மகிழ்ச்சி உண்டாக இவ்வாறு செய்து விட்டாய்.

3217. ''உமது ஏட்டினையும், எமது ஏட்டினையும், வானின் மேல் அளாவி விரைந்து கரையைத் தழுவி ஓடும் வையை ஆற்றின் நீரில் மேல் இடுவோமாக. அவ்வாறு இட்டபொழுது, நீரினை ஏதிர்த்துச் செல்லும் ஓலை வெற்றி பெற்றதாகக் கொள்வோம். அவ்வாறில்லாமல் கடலில் செல்லும் ஓலை தோல்வியுற்ற ஓலையாகும்.

3218 வென்றுவீ றடைந்தவர்க்கு வீறழிந்து தோற்றபேர்
என்றுமேவ லடிமையாவ தென்றிசைந்து கைதவக்
குன்றுபோலு நின்றகுண்டர் கூறலோடும் ஈறிலா
மன்றுவாடு மடிகண்மைந்தர் வாய்மலர்ந்து பேசுவார்.

வேறு

3219 அடியார் பதினா யிரவர் உள்ளார் சிவனை யவமதித்த
கொடியார் நீவி ருமக்கேற்ற தண்டமுதுவோ கொன்றமதி
முடியா ரருளா லுங்களைநாம் வென்றே மாயின் மூவிலைவேல்
வடிவா னிரைத்த கழுமுனையி லிடுவே மதுவே வழக்கென்றார்.

3220 ஊழின் வலியால் அமணரதற் குடன்பட் டார்க ளஃதறிந்து
சூழி யானைக் குலைச்சிறையுந் தச்சர் பலரைத் தொகுவித்துத்
காழி னெடிய பழுமரத்திற் சூல வடிவாய்க் கழுநிறுவிப்
பாழி நெடிய தோள்வேந்தன் முன்னே கொடுபோய்ப் பரப்பினார்.

3221 தேற லாதார் தமைக் காழிச் செம்ம னோக்கி யினிவம்மின்
நீறு பூசிக் கண்டிகையும் பூண்டு நிறுத்தர் எழுத்தைந்தும்
ஊற வோதிப் பாசமொழித் துய்மி னென்னா வறநோக்கிக்
கூறி னார்மற் றதுகேட்டுக் குண்ட ரெரியிற் கொதித்துரைப்பார்.

3218. ''வெற்றி பெற்றவர்களுக்கு தோல்வியடைந்தவர் எப்போதும் குற்றேவல் புரிய வேண்டும் அதனுடன் அவர் அடிமையாக வேண்டும்'' என்றனர். இவ்வாறு வஞ்சமலை போன்ற அச்சமணர் கூறிய அளவில், முடிவில்லாத பொதுவில் ஆடியருளும் இறைவனின் புதல்வராகிய பிள்ளையார் திருவாய் மலர்ந்து கூறத் தொடங்கினார்.

3219. ''நமக்கு ஏவல் புரியும் அடியவர்கள் பதினாயிரவர் உள்ளார்கள். அவர்களே போதும், நீங்கள் சிவபெருமானை இகழ்ந்த கொடியவர்கள், உமக்குரிய தண்டனை இதுவன்று, கொன்றை மாலையை அணிந்த இறைவரது திருவருளால் நாம் உங்களை வென்றோமாயின் மூன்று தகட்டு உருவமுடைய சூலப்படையின் வடிவோடு வரிசைப் படுத்தி நட்ட கழு முனையின் மேல் இடுவோம். அதுவே தக்க முறையாகும்'' என்றனர்.

3220. ஊழின் வலியால் அச்சமணர்கள் அதற்கு உடன்பட்டார்கள். முகபடாத்தையுடைய யானையையுடைய குலச்சிறையாரும் அதனை அறிந்து பல தச்சர்களைக் கூட்டி வயிரமுடைய நீண்ட முதிர்ந்த மரங்களில் சூலவடிவாகக் கழுக்களை நிறுத்தி வலிய நீண்ட தோளையுடைய பாண்டிய மன்னன் முன்னே கொண்டு வந்து பரப்பினார்.

3221. மெய்ப் பொருளை அறியாத அச்சமணர்களை, சீகாழிப் பிள்ளையார் பார்த்து, ''இனியேனும் இங்கு வருவீராக! திருநீறு தரித்து உத்திராக்க மாலையணிந்து திருக்கூத்தருடைய திருவைந்தெழுத்தையும் நாவில் ஊற ஓதிப் பாசபந்தத்தை ஒழித்துப் பிழையுங்கள்'' என்று அறை நெறியை நோக்கிக் கூறியருளினார். அதனைக் கேட்ட அச் சமணர்கள் நெருப்பைப் போல் சினந்து கூறத் தொடங்கினர்.

3222 முன்பு தீயில்வென்றனமே நீரில் யாதாய் முடியுமென
அன்பு பேசி யெமையிணங்கி யகல நினைந்தாய் அல்லதைநீ
பின்பு வாது செயத்துணியும் பெற்றி யுரைத்தா யல்லைபுலால்
என்பு பூணி யடியடைந்த வேழாய் போதி யெனமறுத்தார்.

3223 ஊகந் தவழும் பழுமரத்தை யுரைத்துக் கரைமா றிடவொதுக்கிப்
பூகந் தடவி வேர்கீண்டு பொருப்பைப் பறித்துப் புடைபரப்பி
மாகந் துழாவிக் கடுகிவரும் வைகைப் புனலை மந்திரத்தால்
வேகந் தணிவித்து ஏடெழுதி விடுத்தார் முன்போல் வெள்காதார்.

3224 சிறையேய் புனல்சூழ் வேணுபுரச் செல்வர் யாருந் தெளிவெய்த
மறையே வாய்மை யுரையாகின் மறைகண் முழுதுற் துணிபொருடான்
பிறையே வேணிப் பிரானாகிற் பெருநீர் எதிரே செல்கவென
முறையே பதிக மெடுத்தெழுதி விட்டார் முழங்கி வருபுனலில்.

3225 தேசம் பரவுங் கவுணியர்கோன் விடுத்த வேடு செழுமதுரை
ஈசன் அருளாங் கயிறுபிணித் தீர்ப்ப நதியி லெதிரேற
நாசஞ் செய்யும் பொறிவழியே நடக்கு முள்ள மெனச்சென்று
நீச ரேடெண் ணாயிரமு நீத்த வழியே யொழுகியவால்.

சமணர்கள் காழிப்பிள்ளையாரை வாதுக்கு அழைத்தல்

3222. ''முன்பு அனல் வழக்கில் வென்றுவிட்டோம். இனி, நீர் வழக்கில் யாதாக முடியுமோ? என்று கருதி இன்மொழி கூறி எங்களை உடன்படுத்தி ஓடிப்போக நினைத்தாயே அல்லாமல் நீர் எம்முடன் வாது புரிவதற்கு மனம் துணியும் தன்மையைக் கூறினாய் இல்லை. புலால் உடைய எலும்பு மாலையை அணிந்த சிவன் அடியினை அடைந்த அறிவில்லாதவனே! வாதம் செய்ய வருக!'' என்று மறுத்துக் கூறினர்.

வையையில் ஏட்டை விடுதல்

3223. கரும் குரங்குகள் தாவி வருகின்ற ஆலமரங்களைக் கல்லி, கரைகள் உடைய அங்கு ஒதுக்கிப் பாக்கு மரங்களின் முடிகளை அளாவி, அவற்றின் வேர்களைப்பெயர்த்து, மலைகளை அகழ்ந்து பக்கங்களில் பரப்பி வானைத் தடவிக் கொண்டு விரைந்து வருகின்ற வையை நீரின் வேகத்தைத் தம் மந்திர வலியினால் குறைத்து முன்போலவே ஏடுகளை எழுதி வெட்க மில்லாதவராய் விடுத்தனர்.

3224. கரையுடைய நீர் சூழ்ந்த சீகாழியின் செல்வர், அனைவரும் தெளிவடைய, ''வேதங்கள் உண்மை யுரையானால், வேதங்கள் அனைத்தும் துணிந்து கூறும் மெய்ப்பொருள், பிறையையணிந்த சடையையுடைய சிவபெருமானே என்பது உண்மையானால் இந்த ஏடு வெள்ளத்தினை எதிர்த்துச் செல்க''. என்று சொல்லி முறையாகப் பதிகம் எடுத்தெழுதி ஆரவாரத்துடன் வரும் நீரில்விட்டார்.

3225. உலகத்தார் துதிக்கும் ஆளுடைப் பிள்ளையார் விடுத்த அவ்வேடானது மதுரைப் பெருமானாகிய சோம சுந்தரக் கடவுளின் திருவருளாகிய கயிறானது கட்டி இழுத்ததால் நதியின் எதிர் ஏறிச் சென்றது. சமணர்கள் விடுத்த எண்ணாயிரம் ஏடுகளும் ஐம்புலன்களின் வழியே நடக்கும் உள்ளம் போல வெள்ளம் சென்ற வழியிலேயே சென்றது.

3226 சிங்க மனையார் எழுதுமுறை யெதிராற் றேறத் தெரிந்தமார்
அங்க ணறும்பூ மழைபொழிந்தா ரறவோர் துகில்விண்
ணெறிந்தார்த்தார்
கங்கை யணிந்தார் திருத்தொண்டர் கண்ணீர்க் கடலி
லமிழ்ந்தினார்
வெங்க ணமணர் நடுங்கியுடல் வெயர்வைக் கடலி
லமிழ்ந்தினார்

3227 வேமே யென்ப தறியாதே வெல்வேம் என்றே சூளொட்டி
நாமே யிட்ட வேடெரியில் வேவக் கண்டு நதிக்கெதிரே
போமே யின்னம் வெல்வேமென் றிட்ட வேடும் புணரிபுகத்
தாமே தம்மைச் சுடநாணி நின்றா ரமணர் தலைதூக்கி.

3228 பொருப்பே சிலையாய்ப் புரங்கடந்த புனித னேயெத்
தேவர்க்கும்
விருப்பேய் போகம் வீடுதரு மேலாங் கடவுள் எனநான்கு
மருப்பேய் களிற்றான் முடிதகர்த்தான் மருமா னறியக்
குருமொழிபேதல்
நெருப்பே யன்றி வேகவதி நீரும் பின்னர்த் தேற்றியதால்.

3226. பரசமயங்களாகிய யானைகட்குச் சிங்கம் போன்ற வராகிய பிள்ளையார் எழுதிவிட்ட திருமுறை ஆற்றின் எதிர் ஏறிச் செல்லவும், தேவர்கள் அதனை உணர்ந்து அவ்விடத்தில் நறிய மலர் மழை பொழிந்தனர். முனிவர்கள் ஆடையை வானில் வீசி ஆரவாரம் செய்தனர். கங்கையை அணிந்த சிவபெருமானின் அடியார்கள் ஆனந்தக் கடலில் அழுந்தினார்கள். வன்கண் அமணர்கள் உடல் நடுங்கி வியர்வைக் கடலுள் அழுந்தினார்கள்.

காழிப் பிள்ளையாரை அரசன் முதலியோர் வணங்கல்

3227. வெந்து போகும் என்பதை அறியாமல் வெல்வோம் என்று வஞ்சினம் கூறித்தாமே கொண்டு போய்ப் போட்ட ஏடுகள் அனலில் வேதலைப் பார்த்தும், 'நதியின் எதிரே நம்மேடுகள் போகும் (அதனால்) நாமே வெல்வோம்' என்று இட்ட ஏடும் கடலில் சென்று புகுந்ததுவே எனத் தம் உள்ளமே தம்மைச் சுட்டு வருத்துதலால் சமணர்கள் தலை கவிழ்ந்து வெட்கத்துடன் நின்றார்கள்.

3228. மேருமலையையே வில்லாகக் கொண்டு திரிபுரம் எரித்த சிவபெருமானே எல்லாத் தேவர்களுக்கும் விருப்பம் பொருந்திய இன்பத்தையும் வீடு பேற்றையும் அளித்தருளும் முதற் கடவுளென்று நான்கு கொம்புகளை யுடைய வெள்ளை யானையின் தலைவனாகிய இந்திரனின் முடியினைத் தகர்த்து எறிந்த உக்கிரப் பெருவழுதியின் வழித் தோன்றலாகிய சவுந்தரிய பாண்டியன் அறியுமாறு, குருவின் உபதேச மொழிபோல முன்னர் அனல் தெளிவித்ததே அல்லாமல் பின்னர் வையையின் புனலும் தெளிவித்தது.

3229 பொய்யின் மறையின் புறத்தமணர் புத்தர்க் கன்றி
வாய்மையுரை
செய்யு மறைநூல் பலதெரிந்துஞ் சிவனே
பரமென்றறியாதே
கையில் விளக்கி னொடுங்கிடங்கில் வீழ்வார் கலங்கிமனம்
ஐய மடைந்த பேதையர்க்கும் அறிவித் தனவே
யவையன்றோ.

3230 கண்டு கூடற் கோமகனுங் கற்பு நிறைந்த பொற்புடைய
வண்டு கூடுந் தாரளக வளவன் மகளு மந்திரியுந்
தொண்டு கூடி மடியாருங் காழிக் கரசைத் தொழுதுதுதி
விண்டு கூடற் கரியமகிழ் வெள்ளத் தழுந்தி வியந்தனரால்.

3231 நன்றி தேறார் பின்புள்ள மானம் இழந்து நாணழிந்து
குன்று போலுந் தோணிபுரக் கோமா னெதிரே யாங்களுமக்
கின்று தோற்றே மெமையீண்டு நீரே வென்றீ ரெனநேர்ந்து
நின்று கூறக் கவுணியர்கோ னனையா ருய்யு நெறிநோக்கா.

3232 இன்ன மறத்தா றிசைக்கின்றே நீரேன் வாளா விறக்கின்றீர்
அன்னை யனையா னெம்மிறைவன் அவனுக் காளா
யுய்மின்கள்
என்ன வேட சிறியாய்நீ யெவ்வா றெங்கட் கடாதமொழி
சொன்ன தென்று மானமுளார் கழுவி லேறத்
தொடங்கினார்.

3229. பொய்யில்லாத வேதத்திற்குப் புறம்பினராகிய சமணர் புத்தர்களுக்கே அல்லாமல் உண்மையை உரைக்கும் பல மறைநூல்களை ஓதியும் சிவனே பரம்பொருள் என்று உணராமல், கையில் உள்ள விளக்கோடு குழியில் விழுபவரைப் போல, அறிவு கலங்கி ஐயுற்ற மூடர்களுக்கும் அவை தெரிவித்தன அல்லவா?

3230. கூடல் மன்னனாகிய பாண்டியனும், கற்பு நிறைந்த பொற்புடைய, வண்டுகள் ஒலிக்கும் மாலையை அணிந்த கூந்தலையுடைய, வளவர் கோன் பாவையாகிய மங்கையற் கரசியாரும், குலச்சிறையாரும், தொண்டு பூண்ட அடியார்களும் இந்நிகழ்ச்சியைக் கண்டனர். காழி மன்னராகிய பிள்ளையாரை வணங்கி துதிமொழி கூறி மற்றவர்கள் அடைய முடியாத அளவு மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினார்கள்.

3231. செய்ந்நன்றி அறியாத அச்சமணர்கள் பின் எஞ்சியுள்ள மானத்தையும் இழந்து, வெட்கத்தையும் விட்டுச் சிலர் மலைபோலும் தோணிபுரத் தோன்றலாகிய பிள்ளையார் திருமுன்னர்வந்து ''இன்று யாம் உமக்குத் தோற்றோம். இங்கு எம்மை நீரே வென்றீர்'' என்று உடன்பட்டுச் சொன்னார்கள். பிள்ளையார் அச்சமணர்கள் உய்திபெறும் வழியைக் கருதினார்.

3232. ''இன்னமும் அறநெறி கூறுகின்றோம். நீவிர் ஏன் வீணாக இறந்து படுகின்றீர்? எம் இறைவன் எல்லாவுயிர்களுக்கும் தாய் போல்பவன். அவனுக்கு ஆட்பட்டுப் பிழையுங்கள்''. என்று கூறியருளினார். ''ஏடா! சிறியவனாகிய நீ எங்களுக்குப் பொருத்த மற்றவற்றை எவ்வாறு கூறினாய்?'' - என்று சிலர் மானம் மிக்கவராய்த் தாமே கழுவில் ஏறத் தொடங்கினார்கள்.

வேறு

3233 மதத்தினின் மான மிக்கார் தாங்களே வலிய வேறிப்
பதைத்திட விருந்தார் ஏனைப் பறிதலை யவரைச் சைவ
விதத்தினா லொழுக்கம் பூண்ட வேடத்தார் பற்றிப் பற்றிச்
சிதைத்திடர் செய்தே றிட்டார் திரிதலைக் கழுக்கோ
றன்னில்.

3234 வழிவழி வருமா ணாக்கர் சாதற்கு வருந்தி நெஞ்சம்
அழிபவர் திருநீ றிட்டா ரதுகிட்டா தயர்வார் ஆவின்
இழிவில்கோ மயத்தை யள்ளிப் பூசினா ரிதுவுங் கிட்டா
தொழிபவ ராவின் கன்றைத் தோளிலிட்டுயிரைப் பெற்றார்.

3235 கூறிட்ட மூன்றுங் கிட்டாது அயர்பவர் குற்றந் தீர
நீறிட்டார் நெற்றி யோடு நிருமல கோம யத்தின்
சேறிட்டார் நெற்றி யோடு நெற்றியைச் செறியத் தாக்கி
மாறிட்ட பாசந் தன்னை மறித்திட்டுப் பிறப்பை வெல்வார்.

3236 மற்றிவர் தம்மை யூற்றஞ் செய்திலர் மடிந்தோர் யாருஞ்
சுற்றிய சேனங் காக நரிகணாய் தொடர்ந்து கௌவிப்
பற்றிநின் றீர்த்துத் தின்னக் கிடந்தனர் பரும யானை
வெற்றிகொள் வேந்தன் காழி வேந்தரைத் தொழுது
நோக்கா.

3237 இன்றுநீ ரிட்ட வேடிங் கியாவருங் காண நேரே
சென்றதே யெங்கே யென்றான் அதனையாஞ்
செம்பொற் கூடன்
மன்றவ ரருளா லின்னே வருவிப்ப மென்று வாது
வென்றவர் நதியின் மாடே மேற்றிசை நோக்கிச் செல்வார்.

சமணர் தாமே கழுவேறுதல்

3233. தங்கள் சமயத்தில் பற்று மிக்கவராகிய சில சமணர்கள் தாங்களாகவே கழுவில் ஏறி உயிர் பதைபதைக்க இறந்தனர். அவ்வாறு ஏறாத ஏனைய சமணரைச் சைவப் பாகுபாட்டுள் ஒழுக்கம் மேற்கொண்ட திருவேடமுடையார் பிடித்துப் பிடித்து இடர் செய்து துன்புறுத்தி மூன்று தலைகளை யுடைய கழு மரத்தில் ஏற்றினார்கள்.

3234. வழிவழியாக வந்த மாணாக்கர்கள் சாதலுக்கு வருந்தி உள்ளம் நைந்து திருநீறு இட்டார். அவர்களுள் அத்திருநீறு கிடைக்காது வருந்துபவர் பசுவினது குற்றமில்லாத கோமயத்தை (சாணம்) வாரிப் பூசினர். இதுவும் கிடைக்கப் பெறாதவர் பசுவின் கன்றினைத் தோளில் தாங்கி உயிரைப் பெற்றனர்.

3235. இங்குக் கூறிய மூன்றும் கிடைக்காமல் வருந்துபவர் குற்றம் நீங்க திருநீறிட்டவரின் நெற்றியையும் தூய பசுவின் சாணத்தைப் பூசியவரின் நெற்றியோடும் தம்முடைய நெற்றி பொருந்தும்படி அழுத்தித் தம்மோடு மாறுதலைக் கொண்ட பாசத் தளையைப் போக்கிப் பிறப்பினை அழித்தார்கள்.

3236. இவர்களைச் சிவனடியார் துன்பம் செய்யாமல் விட்டுவிட்டனர். இறந்தவர்களின் உடல்களைச் சூழ்ந்து கொண்டு பருந்தும் காக்கையும் நரிகளும் நாய்களும் வாயாற் கௌவிப் பிடித்து தின்னத் தொடங்கியது. கலசமணிந்த யானையையுடைய வெற்றிமிக்க பாண்டியமன்னன் பிள்ளையாரை நோக்கி வணங்கினான்.

3237. ''இப்போது நீர்போட்ட ஏடானது அனைவரும் அறிய நேரே போயிற்றே! அஃது எங்கே?'' என்று வினவினார். வழக்கில் வெற்றி கொண்ட பிள்ளையார், ''சிவந்த பொன் மயமான கூடலில் வீற்றிருக்கும் வெள்ளியம்பலவர் திருவருளால் யாம் இப்போது அவ்வேட்டினை வருவிப்போம்'' என்று கூறியருளி ஆற்றின் கரையோரம் மேல்திசை நோக்கிச் செல்லத் தொடங்கினார்.

3238 செல்லுநர் காண வோலை காவதஞ் செல்வ தப்பால்
ஒல்லையங் கொளித்த லோடும் வியந்தவ
ணொருங்கு கூடிக்
கொல்லையான் மேய்த்து நின்றார் சிலர்தமைக்
குறித்து நீரிவ்
வெல்லையுள் விசேட, முண்டோ விவண்கண்ட
திசைமின் என்றார்.

3239 அவ்விடைச் சிறார்கள் யாங்க ளொன்றையு மறியேம் என்ன
இவ்விடை விசேடங் காணல் வேண்டுமெத்
திறத்துமென்னாத்
தெவ்விடை வாதுசெய்யத் திருவுளைக் கருணை செய்த
வெவ்விடைக் கொடியி னாரைப் பாடினார் வேத நாவார்.

3240 பாட்டின்மேற் கருணை வைத்தார் சயம்புவாய்ப்
பராரை வில்லக்
காட்டினுள் இருப்ப நேரே கண்டுதாழ்ந் தெழுந்து சண்பை
நாட்டினார் வலங்கொண் டேத்தி யெதிர்நின்றார்
நகைத்தார் நிம்பத்
தோட்டினா னதுகேட் டங்கே தோன்றினான்
றாளை யோடும்.

3241 அந்தமா விலிங்கத் தீசன் ஆயிர மதியங் கண்ட
முந்தைவே தியராய்த் தோன்றி முத்தமிழ்க் கரசை நீயென்
மைந்தனா மிளையோ னோப்பாய் வருகென நீறு சாத்திச்
சிந்தைநீ ளார்வங் கூரத் திருவருள் சுரந்து நின்றார்.

3238. அவரைப் பின் தொடர்ந்து மற்றவர்களும் சென்றனர். ஆற்றினை எதிர்த்துச் சென்ற ஏடு ஒரு காத தூரம் சென்றது. பிறகு அது திடீரென்று மறைந்தது. அவ் வளவில் அவர்கள் வியப்படைந்து ஒன்றுகூடி, அங்குப் பசுக்களை மேய்த்து நிற்கும் சிலரைநோக்கி, ''இந்த எல்லைக்குள் வியக்கத் தகும் நிகழ்ச்சி ஏதேனும் உண்டா? இங்குக்கண்டதை நீங்கள் கூறுங்கள்'' என்று வினவினார்.

நீரில் மறைந்த ஏட்டைத் தேடிச் செல்லல்

3239. அந்த இடைச்சிறுவர்கள் ''நாங்கள் ஒரு நிகழ்ச்சியையும் அறியோம்'' என்று கூறினர். இவ்விடத்தில் எப்படி யாயினுங் ஒரு விசேடம்காண வேண்டுமென்று கருதிய காழிப் பிள்ளையார், சமணர்களோடு செய்த வாதத்தில் வெற்றி தந்தருளிய இடபக்கொடியுடைய சிவபெருமானை நோக்கி, தமிழ்வேதம் பாடும் நாவினையுடைய பிள்ளையார் திருப்பதிகம் பாடினார்.

3240. திருப்பதிகத்தின் மேல் கருணை வைத்த இறையவர் சுயம்பு மூர்த்தியாய்ப் பருத்த அரையையுடைய வில்வக் காட்டினுள்ளே இருக்க, காழிநாட்டினையுடைய பிள்ளையார் நேரிற் கண்டு விழுந்து வணங்கி எழுந்து அவர் திருமுன் நின்றார். வேப்ப மலர் மாலையை அணிந்த பாண்டியன் அதனை அறிந்து தன் சேனையோடு அங்கு வந்து சேர்ந்தான்.

3241. அந்தச் சிறந்த இலிங்கத்தினின்றும் இறைவன், ஆயிரம் மறைகளைக் கண்ட முதிய அந்தணனாகத் தோன்றினான். மூன்று தமிழுக்கும் அரசராகிய பிள்ளையாரைப் பார்த்து, ''என் இளைய மைந்தனைப் போன்றிருக்கின்றாய்!'' என்று திருநீறு சாத்தி மகிழ்ந்து திருவருள் பாலித்து நின்றருளினார்.

3242 நின்றவந் தணரை யன்று நிருமல ஞான மீந்தார்
என்றுகண் டிறைஞ்சி யைய நீரில்யான் இட்ட வேடு
சென்றதிங் கெடுத்தீர் நீரே யஃதுநுஞ் செல்வர்க் கேற்ற
தன்றதைத் தருதி ரென்றா ரறுமுகச் செம்ம லன்னார்.

3243 இன்னமும் பன்னாள் எம்மை யிடந்தொறும் பாடி யெஞ்சும்
புன்னெறி யொழுகு வாரை வென்றுநம் புனித வீடு
பின்னர்நீ பெறுதி யென்னா வேடுதந் தாசி பேசி
மின்னென மறைந்து நின்றார் வேதிய ராய வேடர்.

3244 தாதையார் கவர்ந்து மீடத் தந்தவே டதனை வாங்கிப்
போதையார் ஞான முண்டார் புரிசடைப் பிரானார் வௌவி
ஈதையா மிரந்து வேண்டத் தந்தனர் என்று கூறிக்
கோதையார் வேலி னாற்குக் காட்டவக் கொற்கை வேந்தன்.

3245 கச்சான வரவ மார்த்த கருணையங் கடலிற் றோன்றும்
விச்சான ஞான முண்டீர் ஆற்றலின் விளைவு தேறா
தச்சான வலியா னும்மை யளந்தன னடியே னிந்தத்
துச்சான பிழைதீர்த் தாள்கென் றிறைஞ்சினான்
றுணர்த்தார் வேம்பன்.

3242. ஆறுமுகங்களையுடைய முருகக்கடவுளைப் போல்பவராகிய பிள்ளையார் அங்கு எதிரே நின்ற முதிய அந்தணரை முன்பு தூய சிவஞானத்தினைத் தமக்கு அளித்து அருளியவரென்று உணர்ந்து வணங்கி, ''ஐயனே! நீரிலே நான் விட்ட ஏடு இங்கு வந்தது. அதனை எடுத்தவர் நீரே ஆவிர். அஃது உமது புதல்வர் விளையாடுவதற்கு ஏற்றதன்று. ஆதலின் அதனைத் தந்தருளுள்க'' என்று கேட்டனர்.

ஏடு பெறுதல்

3243. மறையவராகிய திருவேட முடையார், ''இன்னமும் பல நாள் எம்மைத் திருப்பதிகள் தோறும்சென்று பாடி, எஞ்சியுள்ள புல்லிய நெறியில் ஒழுகுவோரையும் வென்று பின்னர் நமது தூய்மை பொருந்திய வீடுபேற்றினை அடைவாயாக'', என்று ஆக்கமொழிகூறி, ஏட்டினைக் கொடுத்து மின் போல மறைந்தருளினார்.

3244. தந்தையார் கைப்பற்றித் திரும்பக் கொடுத்த அவ்வேட்டினை, ஞானவடிவினராகிய அம்மையார் அளித்த ஞான அமுதினை உண்ட பிள்ளையார் வாங்கி, ''இவ் வேட்டினை, முருக்கிய சடையினை யுடைய எம்பெருமான் கவர்ந்து, பின் யாம் குறையிரந்து வேண்டக் கொடுத்தருளினார்'' என்று கூறி மாலையை அணிந்த வேற்படையுடைய பாண்டியனுக்குக் காண்பித்தார். அப்பாண்டியன்,

3245. ''பாம்பினைக் கச்சாகக் கட்டிய, அருட் கடலில் தோன்றிய வீடுபேற்றிற்குக்காரணமான ஞான அமுதினை உண்ட பெருமானே! உமது ஆற்றலின் பெருமையை அறியாது தற்போத வலியினால் நும்மை அடியேன் அளந்தேன். இந்த இழிவாகிய குற்றத்தை நீக்கி ஆளக் கடவீர்'' என்று வேப்ப மாலையை அணிந்த பாண்டியன் வணங்கினான்.

3246 அந்நெடு மேரு வாகு மாடகச் சிலையி னார்க்குப்
பொன்னெடுஞ் சிகரக் கோயின் மண்டபம் புயலைக் கீண்டு
மின்னெடு மதியஞ் சூடுங் கோபுர மேகந் தாவும்
கன்னெடும் புரிசை வீதி யாவையுங் களிப்பக் கண்டான்.

3247 அற்றைநா ளாதி யாக வேடகம் என்னு நாமம்
பெற்றதா லேட கத்தின் மேவிய பிரானைப் பாண்டிக்
கொற்றவன் சமண ரோடுங் கூடிய பாவ மெல்லாம்
பற்றறப் பூசை செய்து பாசமுங் கழியப் பெற்றான்.

3248 நறைகெழு துழாயி னானுங் கலுழனு நாகர் வேந்தும்
முறையினால் உகங்கண் மூன்றும் பூசித்து முடியா வின்ப
நிறையருள் பெற்றா ரன்ன நிராமய விலிங்கத் தன்னை
இறுதியா முகத்திற் பாண்டி யிறைமகன் பூசை செய்தான்.

3249 அங்கண்மா நகர்கண் டாங்கோர் ஆண்டிறை
கொண்டு காழிப்
புங்கவ ரோடும் பின்னாட் பூழியர் பெருமான் மீண்டு
மங்கல மதுரை சேர்ந்து வைகுநா ளீற்றுச் செல்வம்
எங்கணும் விளங்கச் சின்னா ளிருந்துபின் ஞானச் செல்வர்.

3250 வடபுலது உள்ள வீசன் பதிகளும் வணங்கிப் பாடக்
கடவமென் றெழுந்து கூடற் கண்ணுதற்
பெருமான் றன்னை
இடனுறை கயற்க ணாளை யிறைஞ்சிப்பல் வரனும் பெற்று
விடைகொடு தமிழ்நா டெங்கும் பணிந்தனர்
மீண்டு போவார்.

திருவேடகம்

3246. நீண்ட மேருவாகிய பொன்மலையை வில்லாகக் கொண்ட அக்கடவுளுக்குப் பொன்னாலாகிய நீண்ட முடியினை யுடைய திருக்கோயிலும், திருமண்டபங்களும், மேகத்தைக் கிழித்து ஒளி பொருந்திய சந்திரனைத் தாங்கும் கோபுரங்களும், நீண்ட மதில்களும், வீதி முதலிய அனைத்தையும் கண்டோர் மகிழ்வடைய மன்னன் உண்டாக்கினான்.

3247. அந்த நாள் முதல் அந்நகரம் 'திருவேடகம்' என்னும் திருப்பெயரைப் பெற்றது. அத்திருவேடகத்தில் எழுந்தருளிய இறைவனை, பாண்டிய மன்னன், சமண ரோடு சேர்ந்திருந்த பாவம் முழுவதும் சிறிதும் இல்லாமல் நீங்கப் பூசித்து மும்மலமாகிய பாசமும் நீங்கப் பெற்றான்.

3248. மணம் பொருந்திய துழாய் மாலை யணிந்த திருமாலும் கருடனும், பாம்புகளுக்கு வேந்தனாகிய அனந்தனும் முறையே யுகங்கள் மூன்றிலும் வழிபாடு செய்து அழியாத இன்பம் நிறைந்த திருவருளைப் பெற்றனர். அந்த நோயற்ற இலிங்க மூர்த்தியை இறுதியாக இக்கலியுகத்தில் பாண்டிய மன்னன் வழிபாடாற்றினான்.

3249. அழகிய ஒரு நகரம் அமைத்து, அவ்விடத்தில் சீகாழித் தோன்றலுடன் ஓர் ஆண்டு காலம் தங்கி இருந்து சௌந்தரிய பாண்டியன் பின்னொரு நாள் மீண்டும் மங்கலம் நிறைந்த மதுரை நகரம் வந்தடைந்தான். சிவஞானச் செல்வரான பிள்ளையார் திருநீற்றுச் செல்வம் எங்கும் விளங்கச் சில காலம் இருந்தார்.

ஞானசம்பந்தர் சோழ நாட்டுக்குத் திரும்புதல்

3250. பின்னர் வடபுறம் உள்ள திருப்பதிகளையும் வணங்கிப் பாடவேண்டும் என்று உள்ளத்தில் எண்ணி எழுந்து கூடலில் எழுந்தருளிய நெற்றிக் கண்ணையுடைய பெருமானையும் அவன் இடப்பாகம் உறையும் அங்கயற் கண்ணம்மையையும் வணங்கிப் பல வரங்களைப் பெற்று விடை பெற்றுத் தமிழ் நாட்டில் உள்ள பல தலங்களை வணங்கிச் சென்றார்.

3251 தன்பெருங் கற்பி னாளும் அமைச்சனுந் தமிழ்நர் கோனும்
பின்புமு னந்தண் காழிப் பிரானடி பிரிவாற் றாராய்
அன்புதந் தவர்பா னட்ட வன்றுதொட் டானாக் கேண்மை
இன்பமுந் துன்ப மாகி விளைந்துமுன் னீர்ப்பப் போனார்.

3252 சண்பையர் தலைவர் தாமு மனையராய்த் தம்பின் செல்லும்
நண்புடைய யவரநோக்கி நம்மிடத் தன்பு நீங்காப்
பண்பினர் ஆகி நீறு பாதுகாத் தீசன் கீர்த்தி
மண்பட வாழ்மி னீது மறுக்கன்மி னின்மி னென்றார்.

3253 ஆளுடைப் புகலி வேந்தர் அருண்மொழி மறுக்க வஞ்சித்
தாளுடைப் பதுமச் செந்தா டலையுறப் பணிந்து மீண்டு
வாளுடைத் தனைத் தென்னன் மதுரையில்
வந்தான் கஞ்சத்
தோளுடைச் சிங்க மன்னர் சோழர் கோனோடு புக்கார்.

3254 ஞானமா மதநீர் சோர ஞானசம் பந்தர் என்னும்
மானமா யானை வந்து கடம்பமா வனத்திற் றுன்னும்
ஊனமாஞ் சமண ரென்னுந் தருக்களை யொடித்து
வெண்ணீ
றானமாப் பூழி யள்ளித் தூற்றிய தவனி யெங்கும்.

3251. பாண்டியனும், அவனுடைய கற்பிற் சிறந்த மனைவியான மங்கையற்கரசியாரும், குலச் சிறையாரும் முன்னே செல்லும் சீகாழித் தலைவராகிய பிள்ளையார் பின்னே, அவர் திருவடியின் பிரிவினைப் பொறாதவராகி அவரிடத்தில் அன்பு பூண்டு நட்புக் கொண்ட அந்த நாள் முதல் நீங்காத இன்ப மெல்லாம் தற்போது துன்பமாக மாறி இழுக்கச் சென்றனர்.

3252. காழியார் பெருமான் தாமும் அத்தன்மையுடைய வராய்த் தம்மின் பின்னே வரும் நட்புடைய அவர்களைப் பார்த்து ''நம்மிடத்து அன்பு நீங்காத குணமுடையவராய் திருநீற்றினைப் பாதுகாத்து இறைவன் புகழ் நிலவுலகம் முற்றும் வளர்ந்து பரவுமாறு வாழுங்கள்! இதனை மறுக்காமல் நில்லுங்கள்'' என்று கூறியருளினார்.

3253. தம்மை ஆளாக உடைய காழிவேந்தரின் அருள் நிரம்பிய மொழியினை மறுப்பதற்கு அஞ்சி, தாமரை மலர் போன்ற சிவந்த திருவடிகள் தலையில் பொருந்துமாறு வணங்கி, வாட்படை ஏந்திய தானையை யுடைய பாண்டியன் திரும்பி மதுரையை அடைந்தான். தாமரை மாலையை அணிந்த தோளையுடைய பிள்ளையார் சோழநாட்டிற்குள் சென்று புகுந்தருளினார்.

கடம்பவனத்தில் காழிப்பிள்ளையாகிய யானை செயல்

3254. ஞானமாகிய மதநீர் ஒழுக, ஞானசம்பந்தராகிய பெரிய யானை வந்து, பெரிய கடம்ப வனத்தில் செறிந்த குற்றமுடைய சமணராகிய மரங்களை ஒடித்து, திருநீறாகிய சிறந்த பூழியை வாரி உலகம் முழுவதும் பரவுமாறு தூற்றியது.

வேறு

3255 ஆதி யாலயத் தடலைகொண் டாழிசூழ் காழிச்
சோதி வேதியர் பாண்டியன் சுரந்தணித் துடலிற்
பேதி யாதகூ னிமிர்த தலாற் பிறங்குகற் பாதிப்
பூதி யாவினுஞ் சிறந்ததவ் வட்டில்வாய்ப் பூதி.

சமணரைக் கழுவேற்றிய படலம் முற்றிற்று.

64. வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்

3256 சென்னிவெண் டிங்கண் மிலைச்சிய சிவனருள்
அடைந்தசம் பந்தர்
துன்னிருஞ் சமணைக் கழுமுனை யேற்றித் துணித்தவா
றிசைத்தனம் வணிகக்
கன்னிதன் மன்றற் கரியினை மாற்றாள் காணவக்
கண்ணுத லருளால்
வன்னியுங் கிணறு மிலிங்கமு மாங்கு வந்தவா
றடுத்தினி யுரைப்பாம்.

3257 பொன்மலர்க் கைதை வேலிசூழ் வேலைப் புறத்தொரு
பட்டினத் துள்ளான்
மின்மணிக் கொடும்பூ ணொருகுல வணிகன் வேறுவே
றாம்பல செல்வத்
தன்மையிற் சிறந்தோன் மகவிலன் ஆகித் தன்மனக்
கினியதோர் காட்சி
நன்மனைக் கொடியோ டறம்பல புரிந்தோர் நகைமதிக்
கொம்பையீன் றெடுத்தான்.

விபூதியின் பெருமை

3255. முதற்கடவுளாகிய சோமசுந்தரப் பெருமான் திருக்கோயில் சாம்பலினால், கடல் சூழ்ந்த சீகாழியில் அவதரித்த புகழ் ஒளியினையுடைய மறையவராகிய பிள்ளையார் பாண்டியன் வெப்பு நோயை நீக்கி, உடலின் மாறுபடாத கூனை நீக்கியதால் மடப்பள்ளி சாம்பலே, கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பம் என்னும் நான்கு வகைத் திருநூறுகளிலும் மிகச் சிறந்து விளங்கியது.

சமணரைக் கழுவேற்றிய படலம் முற்றிற்று.

64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்

3256. முடியின்கண் வெண்மையான பிறையை அணிந்த மதுரைப் பெருமானாகிய, சோமசுந்தரக்கடவுள் திருவருளை அடைந்த சம்பந்தர், சமணர்களைக் கழுமுனையில் ஏற்றித் தண்டித்த திருவிளையாடலைக் கூறினோம். ஒரு வணிகப் பெண்ணின் திருமணச் சான்றினை, அவள் மாற்றாள் காணுமாறு, அவ்விறைவன் திருவருளால் வன்னி மரமும், கிணறும், சிவலிங்கமும் அங்கு வந்த திருவிளையாடலை இனி எடுத்துக் கூறுவோம்.

கடற்கரைப் பட்டினத்து வணிக வாழ்க்கை

3257. பொன்போலும் மலரையுடைய தாழையாகிய வேலி சூழ்ந்த கடற்கரையில் உள்ள ஒரு பட்டினத்தில் ஒளி பொருந்திய மணிகள் அழுந்திய வளைந்த அணிகளை அணிந்த சிறப்புடைய வணிகன் ஒருவன் பல்வேறு செல்வங்களில் மிக்கேனாய் வாழ்ந்து வந்தான். அவன் மகப்பேறு இல்லாதவனாய்த் தன் மனதுக்கு இனியதொரு தோற்றத்தையுடைய நல்ல மனைவியுடன் பலவகை அறங்களைச் செய்து, ஒளி பொருந்திய மதியை ஏந்திய பூங்கொடி போன்ற ஒரு புதல்வியைப் பெற்றெடுத்தான்.

3258 அத்தன வணிகற் குரியநன் மருகன் அவன்முதற்
கடிமண முடித்தோன்
முத்தமிழ் மதுரைப் புதியுளா னவற்கே முறையினா
னோற்றுநான் பயந்த
வித்தக மயிலைக் கொடுப்பலென் றனைய வியற்குல
வணிகர்கோன் றன்னோ
டொத்தபல் கிளைஞர் யாவரு மறிய வுணர்த்தினான்
சிலபக லொழிய.

3259 ஊழ்வினை வலியா லாருயி ரிழந்தான் உயிர்க்குடம்
பனையதன் கற்பின்
சூழ்கதிர் மணிப்பூண் மனைவியு மிறப்பத் துணிந்தன
ளவரிரு வோர்க்கும்
ஆழ்கடற் கிளைஞர் செய்த்தகு கடன்க ளாற்றியச்
செய்தியை மதுரை
வாழ்தரு மருகற் குணர்த்துவா னோலை விடுத்தனர்
மருமகன் வாங்கா.

3260 தன்னருண் மாமன் றுஞ்சினான் கூடத் தாரமுந்
துஞ்சிய திப்பால்
அன்னவற் களவின் றாகிய தனமுண் டவன்னி
நாண்மக வின்றிப்
பின்னொரு பெண்ணைப் பெற்றன னவளைத்
தனக்கென்ப பேசினான் அனைய
கன்னியை மணந்து செல்கென முடங்கற் கழறிய
பாசுரந் தெரியா.

3261 வீழ்ந்தனன் றரைமேற் புரண்டனன் உயிர்ப்பு வீங்கினன்
விழிப்புனல் வெள்ளத்
தாழ்ந்தனன் விம்முற் றம்மவோ வென்றென் றரற்றினன்
கிளைஞர்நட் படைந்து
வாழ்ந்தவர் தழுவத் தழீஇத்தழீஇக் கரைந்தான் மற்றவர்
தேற்றிடத் தெளிந்து
சூழ்ந்தவெந் துயர்நீத் தொருதலை மாமன் றொன்னகர்க்
கேகுவான் றுணிந்தான்.

3258. அந்தத் தன வணிகனுக்கு உரிமையுடைய நல்ல மருமகன் ஒருவன் மூன்று தமிழையும் உடைய மதுரையில் இருந்தான். அவன் முன்னே மணம் புரிந்து கொண்டவன். ஆயினும் ''அவனுக்கே நான் தவம் கிடந்து பெற்றெடுத்த சதுரப்பாடுடைய மயில் போன்ற புதல்வியை முறைப்படி மணம் செய்து கொடுப்பேன்'' என்று அந்தச் சிறந்த குல வணிகர் தலைவன் தன்னுடன் ஒத்த தன் கிளைஞர் யாவரும் அறியச் சொல்லிக் கொண்டிருந்தான்.

மருமகன் வருந்துதல்

3259. சில நாட்களில் தன் ஊழ்வினையின் காரணமாக அவ்வணிகன் தன் உயிரைத் துறந்தான். உயிருக்கு உடல் போன்ற அவனது கற்பினையுடைய ஒளிமிக்க மணிகள் அழுந்திய அணிகளை அணிந்த மனைவியும் இறக்கத் துணிந்து விட்டனள். அவ்வாறு அவள் இறந்தபின் அவ்விருவருக்கும் நிறைந்த சுற்றத்தினர் செய்யத் தகுந்த கடன்களைச் செய்து முடித்தனர். பின்னர் அச்செய்தியை மதுரையில் வாழும் அவன் மருமகனுக்கு அறிவிக்கும் பொருட்டு ஓலை விடுத்தனர். மருமகன் அவ்வோலையை வாங்கினான்.

3260. ''உனது மாமன் இறந்தனன். அவனுடன் அவள் மனைவியும் இறந்தனள். அவனுக்கு அளவற்ற செல்வம் உண்டு. அவன் நெடுநாள் மகப்பேறு இல்லாதவனாய்ப் பின் ஒரு பெண்ணைப் பெற்றெடுத்தான். அவளை உனக்கு மணம் செய்து கொடுப்பதாகச் சொன்னான், ஆதலால் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு செல்வாய்,'' என்று ஓலையில் எழுதியிருந்தது. அவ்வாசகத்தை அறிந்து கொண்டான்.

3261. உடன் தரையில் விழுந்து புரண்டு பெருமூச் செறிந்தான். கண்ணீர் விட்டு அழுது அரற்றினான். விம்மி 'அம்மாவோ' என்று புலம்பினான். சுற்றத்தாரும் நட்போடு வாழ்ந்து வருகின்றவர்களும் வந்து தழுவ, தானும் எதிராகத் தழுவித் தழுவி அழுது மற்றவர் தேற்றிடத் தெளிந்தான். தன்னைச் சூழ்ந்த கொடிய துயரினை ஒருவாறு நீக்கிவிட்டு மாமனுடைய பழம் பதிக்குச் செல்லத் துணிந்தான்.

3262 அங்குள்ள கிளைஞர் சிலரொடுங் கூடி யருங்கடி
மதுரைநீத் தேகிப்
பொங்கிருங் கழிசூழ் பட்டினங் குறுகிப் புகுதுவான்
வரவறிந் தங்குத்
தங்குதங் கிளைஞர் வினவநேர் வாரைத் தழீஇத்தழீஇக்
செலவிடுத்து ஏகிக்
கொங்கிவர் தளவத் தாரினான் மாமன் கேயால் புக்
கிருந்தன னாக.

வேறு

3263 நாள்சில கழிந்த பின்னர் நாய்கரே றனையான் அன்ன
வாள்புரை கண்ணி னாளை மதுரையிற் கொடுபோ யங்கென்
கேளிர்முன் வேட்ப லென்று கிளந்துதன் மாம னீட்டு
நீள்பெரும் பொருள்கண் மற்றுங் கைக்கொடு
நெறியிற் செல்வான்.

3264 வழிவிட வருவார் தம்மை நிறுத்திப்பின் மதுரை மூதூர்க்
கெழுதரு சுற்றத் தாரை முன்சென்பின் என்று போக்கித்
தொழுபரி சனமுந் தானுந் தோகையும் வைக லொன்றிற்
கழிவழி யரைமேற் பெய்த காவத மாகப் போவான்.

3265 வெங்கதிர் வேலை செல்லும் வேலைவந் தனையு முன்னம்
இங்கிருந் தொழிக மென்னாப் புறம்பய மூதூர் எய்தி
அங்கிறை கோயின் முன்னிக் கூலனீ ராடி யங்குத்
தங்கிய வன்னி மாடே போனகஞ் சமைத்துண் டெல்வாய்.

3262. அங்குள்ள சில சுற்றத்தாருடன் சேர்ந்து கொடிய காவலையுடைய மதுரையை விட்டு நீங்கிச் சென்று பொங்குகின்ற உப்பங்கழி சூழ்ந்த பட்டணத்தை நெருங்கினான். அவன் வருகையை அறிந்து அங்கு வாழுகின்ற அவன் சுற்றத்தார் அச்செய்தியைக் கேட்க வருகின்றவரை, மகரந்தம் பரந்த முல்லை மாலையை அணிந்த அவ்வணிகன் தழுவித் தழுவிச் சென்றான். பின்னர் மாமன் மாளிகையைச் சென்றடைந்தான்.

வணிகன் மாமன் மகளை அழைத்துக் கொண்டு புறப்படல்

3263. சில நாட்கள் சென்றபின் வணிகருள் ஏறு போல் வானாகிய அவன், ''வாள்போலும் கண்களையுடைய அம்மங்கையை மதுரைக்கு அழைத்துக்கொண்டு போய் அங்கு என் சுற்றத்தார் முன்னிலையில் மணம் செய்து கொள்வேன்'' என்று கூறித் தன் மாமன் தேடிய மிகப் பெரிய பொருள்களையும் பிறவற்றையும் கைக் கொண்டு வழியில் செல்வானாயினான்.

3264. வழிவிட வருகின்றவரை நிற்கச் செய்து, பின் மதுரைப் பதிக்குத் தம்முடைய சுற்றத்தாரை, ''முன்னே செல்லுங்கள்'' என்று சொல்லி அனுப்பிவிட்டு, தன்னை வணங்கும் ஏவலாளர்களோடு மாமன் மகளை அழைத்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு ஒன்றரை காத தூரமாக நடந்து செல்வானாயினான்.

வணிகன் பாம்பு தீண்டி இறத்தல்

3265. கதிரவன் மேலைக் கடலில் செல்லும் முன்னரே இங்கே தங்கி இருப்போம் என்று கருதி 'திருப்புறம்பயம்' என்னும் தலத்தை அடைந்து அங்குள்ள திருக்கோயிலை அடைந்து கிணற்றில் நீராடி அங்கிருந்த வன்னி மரத்தடியில் உணவு சமைத்து உண்டான். அவ்விரவில்,

3266 மலைவைத்த சிலையான் கோயின் மருங்கொரு
படியின் உம்பர்த்
தலைவைத்துத் துயிலு மெல்லை விதிவழிச் சார வந்தோர்
கொலைவைத்த விடவாய் நாகங் கடித்தது
கொதித்து நீண்ட
விலைவைத்த கொடும்பூ ணாய்கன் விடந்தலைக்
கொண்டு மாய்ந்தான்.

3267 அங்குள பரிச னங்கள் ஆவலித் திரங்கிச் சூழக்
கொங்கைகள் புடைத்துச் சேடிக் குற்றிடை மகளி ரேங்கச்
சிங்கவே றனையா னாகந் தீண்டிடா தொதுங்கிப் போந்த
பங்கய மலர்க்கொம் பன்னாள் பாவைபோற்
புறம்பு நின்றாள்.

வேறு

3268 ஆளியே றன்னவ னரவின்வாய்ப் பட்டது மவிந்ததும்
மீளிவேல் உண்கணார் கைகுலைத் தழுவதும் விழுவதும்
கேளிர்சூழ்ந் தயர்வதுஞ் சோர்வதுங் கண்டிளங் கிளியனாள்
வாளியே றுண்டதோர் மயிலின்வீழ்ந் துயங்கினாள்
மயங்கினாள்.

3269 வடிக்கணுட் செருகின வருகின வுயிர்ப்பழல் வாய்ப்படுந்
தொடுத்தபூங் கோதைபோற் சோர்ந்ததா கங்கரஞ் சோர்ந்தன
அடித்தளிர் சோர்ந்தன கன்னியன் னப்பெடை யன்னவள்
இடிக்கெதிர்ப் பட்டுவீழ்ந் தாளெனக் கிடந்தனள்
என்செய்வாள்.

3266. மலையை வில்லாக வளைத்த சிவபெருமானின் திருக்கோயிலின் அருகே ஒரு படியின் மேல் தலை வைத்துத் தூங்கும் போது ஊழ்வினையின் காரணமாகக் கொல்லுதற்கரிய நஞ்சினையுடைய வாயையுடைய பாம்பொன்று சினந்து கடித்தது. பெரிய விலைமதிப்புள்ள வளைந்த அணியினை அணிந்த அவ்வணிகன் விஷம் தலைக்கேறி மாண்டான்.

3267. அதைக்கண்டு ஏவலாளர்கள் கதறி அழுதனர். தோழிகளாகிய சிறிய இடையினை உடைய பெண்கள் தங்கள் கொங்கைகளில் அடித்துக் கொண்டு புலம்பினர். அவனுடன் வந்த தாமரை மலர்போன்ற பெண்ணானவள் அவ்வணிகனின் உடலைத் தொடாது ஒருபக்கமாக ஒதுங்கிப் பாவைபோல் நின்றனள்.

வணிக மங்கை வருந்துதல்

3268. சிங்க ஏறு போன்ற அவ்வணிகன் பாம்பின் வாய்ப்பட்டதையும் இறந்ததையும், மேல் போன்ற மையுண்ட கண்களையுடைய பெண்கள் கை நெரித்து அழுவதையும் விழுவதையும் சுற்றத்தார் சூழ்ந்து அயர்வதையும், சோர்வதையும், இளம் கிளி போன்ற அவ்வணிக மகள் பார்த்து அம்பு பாயப் பெற்ற மயிலொன்று வீழ்ந்து சோர்வது போல மயங்கினாள்.

3269. அவளது மாவடு போன்ற கண்கள் உள்ளே செருகின. மூச்சுகள் குறைந்தன. நெருப்பில் அகப்பட்ட கட்டிய பூமாலை போல உடல் வாடியது. கைகள் சோர்ந்தன. பாதங்கள் வாடின. இளமையான அன்னப் பறவையைப் போன்ற அவ்வணிக மாது இடிக்கு எதிர்ப்பட்டு வீழ்ந்தவளைப் போன்று வீழ்ந்து கிடந்தனள். வேறு என்ன செய்வாள்!

3270 சாயும்பூங் கொம்பரிற் சூழ்ந் திறந் தான்புறஞ் சார்ந்தழூஉம்
ஆயமென் மகளிர்மீண் டன்பனோ டெங்கைதன் னாவியும்
போயதே கொல்லென மடியுறக் கொடுங்கையாற்
புறந்தழீஇத்
தூயதூ செறிந்திளைப் பாற்றினார் சிறிதுயிர் தோற்றவே.

3271 மெய்கழிந்து இன்னுயிர் மீண்டுதன் யாக்கையின்
மெல்லவே
கைகலந் தாங்கிரு காலியங் குற்றன கண்களும்
பொய்கைநீ லஞ்சிறி தவிழ்ந்தென வலர்ந்தன பூவையை
மைகழி நாண்முத னான்குநால் வேலியாய் வளைந்தவே.

3272 கையெறி யுங்குழற் கற்றைசோ ருந்திரி காறுளி
நெய்யெனக் கண்புனல் கொங்கைமுற் றத்துக நெஞ்சுகும்
பையவாய் விடும்புறம் பார்க்குநா ணெடுந்தளைப்
படுஞ்சிறு
தெய்வந்தொட் டாளெனத் தேம்பிவிம் மாந்து
ஒளி தேயுமால்.

3273 வணங்கில்செல் வந்தழீஇப் பிறந்தநா டொட்டொகு
வைகலும்
அணங்கெனக் கனவிலுங் கண்டிலா ளன்பன்மேல்
அன்பெனும்
இணங்குதன் னுருவமாய் நிறைவாம் பிற்றென
விருந்தொர்பெண்
அணங்குவாய் விட்டழு தாலெனப் புலம்பலுற் றாளரோ!

3270. வளைகின்ற பூங்கொம்புகளைப் போல, இறந்தவன் அருகில் சுற்றி நின்று அழுகின்ற தோழிப் பெண்கள் திரும்பிப் பார்த்து அன்போடு, என் தங்கையின் ஆவியும் போயிற்றோ என்று கருதி கையால் அவள் உடலைத் தழுவி எடுத்து மடிமேல் கிடத்தி, தூய்மையான ஆடையால் வீசி இளைப்பாற்றினர். அதனால் சிறிது உயிர்ப்பு வெளிப்பட்டது.

3271. உடலில் இருந்து நீங்கிய உயிரானது மீண்டும் தனது உடலில் வந்து கலப்பது போன்று இரண்டு கால்களும் மெல்ல அசைந்தன. பொய்கையிலே நீலமலர் சிறிது மலர்ந்தது போல கண்கள் சிறிது சிறந்தன. குற்றம் நீங்கிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களும் நான்கு வேலிகளாக அவளை வந்துவளைத்தன.

வணிக மங்கையின் புலம்பல்

3272. அவ்வணிக மங்கை நிலத்தில் கையினை மோதுவாள். திரண்ட கூந்தல் கீழே விழச் சோர்வடைவாள். திரிசிந்தும் நெய்த்துளி போல் கண்ணீர் சிந்துவாள். உள்ளம் உருகுவாள். மெல்ல வாய்திறந்து புலம்பக் கருதுவாள். புறத்தே திரும்பிப் பார்ப்பாள். உடனே நாணம் மிகுந்தவளாய்ச் சிறு தெய்வத்தால் பற்றப்பட்டவளைப் போல் தேம்பி விம்மி அழுவாள்.

3273. குறைவில்லாத செல்வத்தின் காரணமாகப் பிறந்த நாள் முதலாக ஒரு நாளேனும் துன்பமென்று கனவிலும் கண்டறியாத அப்பெண், ''தன் அன்பன்மேல் கொண்ட அன்பின் உருவமாக அமைந்தாளோ?'' - என்று காண்போர் கூறுமாறு ஒரு பெண் தெய்வம் இருந்து வாய்விட்டு அழுதாற் போல அழத் தொடங்கினாள்.

வேறு

3274 என்னா யகனேயோ வென்னிருகண் மணியேயோ
வென்னை யீன்றான்
றன்னாவி யன்னதனி மருகாவோ முருகாவோ தாரார் முல்லை
மன்னாவோ வணிகர்குல மணியேயோ விடவரவின்
வாய்ப்பட் டாயோ
உன்னாக நிழலான வென்னைவிடுத் தெவ்வண்ணம்
ஒளிப்ப தேயோ.

3275 பொன்னாட்டின் மடவாரைப் புணர்வதற்கோ நம்மளகா
புரத்து வேந்தன்
நன்னாட்டின் மடவாரை மணப்பதற்கோ வுனைக்கடித்த
நாகர் வேந்தன்
றன்னாட்டின் மடவாரைத் தழுவுதற்கோ வென்னாவித்
தலைவா வென்னை
இந்நாட்டில் இருத்தியெனை வஞ்சித்துப் போயினவா
றென்னே யென்னே.

3276 தென்னுலகிற் புகுந்தனையோ பணிந்தனையோ
மாதுலனைத் தேவியோடுந்
தன்னிருதோ ளுறவாரத் தழுவினனோ நானுமுடன்
சார்ந்தே னாகில்
என்னுரிய குரவரையுங் கண்ணாரக் காணேனோ
வெனையீங் கிட்டாய்
பின்னுரிய பரிசனமுங் கைவிட்டாய் தனியோயென்
பெற்றாய் ஐயா.

3277 வரிசைமரு மகனரவால் விளிந்ததுநா னறைபோய
மனத்தோ டிங்குப்
பரிவுறலு மெனைப்பயந்தார் நோற்றபய னன்றாகப்
பலித்த தேயோ
பெரிதவரிக் கட்கலக்கங் காணாமு னிறந்தன்றோ
பிழைத்தார் அந்தோ
அரியதிலு மரியபய னிதுவன்றோ வெவர்பெற்றா ரவர்போ லம்மா.

3274. ''என் நாயகனே! என் இரு கண்மணியே! என்னைப் பெற்றெடுத்த என் தந்தையின் ஒப்பற்ற மருமகனே! இளமைப் பருவம் உடையவனே! முல்லை மாலையை அணிந்த மன்னனே! வணிக மரபிற்கு ஒரு மணி போன்றவனே! நீ நஞ்சினையுடைய பாம்பின் வாய்ப்பட்டனையே! உனது உடலின் நிழலாகிய என்னை விட்டு நீ மறைவது எங்ஙனம்?

3275. ''பொன்னாட்டில் உள்ள மகளிரைக் கூடுதற்கு எண்ணினாயோ? அன்றி அளகாபுரத்து அரசனாகிய குபேரனது நல்ல நாட்டில் உள்ள பெண்களை மணம் புரிவதற்கோ? அல்லது உன்னைக் கடித்த பாம்புகளின் வேந்தனாகிய அனந்தனது நாட்டில் உள்ள மாதரைக் கூடுவதற்கோ? என் உயிர்த் தலைவனே! என்னை இந்த நாட்டில் விட்டுவிட்டு வஞ்சித்துப் போன காரணம் என்னே? என்னே?

3276. ''தென்னுலகில் புகுந்தனையோ? உன் மாமனையும் மாமியையும் வணங்கினையோ? அவன் தன் இரண்டு தோள்களும் பொருந்த நின்னை நன்கு தழுவினனோ? நானும் உன்னுடன் வந்திருப்பேனாகில் என் தாய் தந்தையரைக் காணேனோ? என்னை இங்குத் தனியே விட்டு விட்டாய். பின் உனக்குரிய ஏவலரையும் கைவிட்டாய். ஐயனே! தனியே சென்று என்ன பயனைப் பெற்றாய்?

3277. ''சிறந்த மருமகன் பாம்பினால் இறந்து விட்டதையும் நான் திறந்த உள்ளத்துடன் இங்கிருநது துன்புறுவதையும் நோக்கின் என்னைப் பெற்றவர் தவம் செய்த பயன் நன்றாகப் பலித்தது! அத் தாய் தந்தையர் பெரிதாகிய இந்தக் கண் கலக்கத்தைக் காணுதற்கு முன்னரேயே இறந்தன்றோ தப்பினர்! அந்தோ! இதுவல்லவோ அரிதினும் அரிதான பயன்! அவர் பெற்றது போல வேறு யார் பெற்றனர்?

3278 உன்காதன் மாமனெனைப் பயந்தவன்றே யுறவறிய
வுனக்கே பேசிப்
பின்காதன் மனைவியொடு முயிரிழந்தான் யானுமந்தப்
பெற்றி யாலே
என் காதல் உயிர்போக வெற்றுடம்போ விருக்குமுட
னிறப்பே னென்னாத்
தன்காதற் றுணையிழந்த வன்றிலென விழுந்தழுதா
டமிய ளானாள்.

வேறு

3279 நன்னக ருறக்க நீங்கி நடுக்கமுற் றழுங்கக் காழித்
தென்னகர் ஞானச் செல்வர் சிவனகர் தொறும்போய்ப் பாடி
அந்நகர் அடைந்தா ரங்கோ ரணிமடத் திருந்தார் கேட்டீ
தென்னென வாள்விட் டாய்ந்து கோயிலி னிடைவந் தெய்தி.

3280 கன்னிநீ யாரை யுற்ற தென்னெனக் கன்னி தாழ்ந்து
தன்னரு மரபு மீன்றார் தம்மையு மருகற் கென்றே
உன்னினர் மன்றல் பேசி யிறந்தது முயிரன் னானோ
டிந்நெறி யடைந்தீங் குற்ற நிகழ்ச்சியும் எடுத்துச் சொன்னாள்.

3281 தந்தையுந் தாயு மன்னார் தமியளாய் இரங்கும் பேதைப்
பைந்தொடி யாவி காப்பான் பாம்புகோட் பட்டான் மாடே
வந்தவ னாக மெல்லா மருந்துரு வாகும் வண்ணஞ்
சிந்தைசெய் தருட்கண் வைத்தார் குதித்தது தீவாய் நஞ்சம்.

3278. ''உனது அன்புள்ள மாமன் என்னைப் பெற்ற காலத்திலேயே, உறவினனாகிய உனக்கே திருமணம் செய்து கொடுப்பதாகப் பேசிப் பின்பு தன் அன்புடைய மனைவி யோடுஉயிர் நீத்தான்! நானும் அந்தத் தன்மையினாலேயே உன்னோடு இறந்து விடுவேன்! என் காதல் உள்ள உயிராகிய நீ சென்றுவிட உயிரற்ற உடம்பாகிய யானோ இங்கிருப்பேன்?'' என்று கூறிக் காதல் துணையாகிய ஆண் அன்றிலை இழந்த பெண் அன்றிற்பேடு போல் வணிக மங்கை தன்னந்தனியாக இருந்து அழுது புலம்பினாள்.

ஞானசம்பந்தர் வணிகனை எழுப்புதல்

3279. அவள் அழுகை ஒலி கேட்டு அந்நல்ல நகரில் உள்ளவர்கள் தூக்கம் நீங்கி வருந்தி நின்றனர். சீகாழியில் அவதரித்த ஞானச் செல்வரான ஞானசம்பந்தர் சிவபெருமான் எழுந்தருளிய திருப்பதிகள் தோறும் சென்று பதிகம் பாடி அத்திருப்பதியை அடைந்து ஒரு திருமடத்தில் தங்கி இருந்தார். அவர் இவ்வழுகை ஒலியைக் கேட்டு இஃது என்னவென்று ஆள்விட்டு ஆராய்ந்து தெரிந்து கொண்டு கோயிலின் பக்கம் வந்து சேர்ந்தார்.

3280. ''கன்னியே! நீ யார்? உனக்கு என்ன நேர்ந்தது?'' என்று கேட்டார். அப்பெண் அவரை வணங்கி, தனது அரிய மரபினையும் தன் பெற்றோர்களையும், இந்த மருமகனுக்கே தன்னைத் திருமணம் செய்து கொடுப்பதென்று கருதி மணம் பேசிப் பின் இறந்ததையும், உயிர் போல்வானுடன் இவ்வழியை அடைய இங்கு நேர்ந்த நிகழ்ச்சியினையும் எடுத்துக் கூறினாள்.

3281. உயிர்களுக்குத் தந்தையும் தாயும் போல்வாராகிய ஆளுடைப் பிள்ளையார், தனியே வருந்தும் பேதையாகிய பசிய வளையலை அணிந்த அவ்வணிகப் பெண்ணின் உயிரைக் காக்கும் பொருட்டு, பாம்பினால் கொல்லப்பட்டு கிடக்கும் அவ்வணி கனின் அருகில் வந்து அவன் உடல் அமிர்தம் ஆகும்படி திருவுள்ளம் கொண்டு, அருள் நோக்கம் கொண்டார். நெருப்பின் தன்மை வாய்ந்த நஞ்சு தான் ஏறிய இடத்தினின்றும் குதித் தோடியது.

3282 எழுந்தன னுறங்கி னான்போல் இறந்தவன் யாருங் கண்டு
தொழுந்தகை ஞான வேந்தைத் தொழுதன்ர்
துதிசெய் தார்வத்
தழுந்தினர் கன்னி யன்ன மனையவ ளின்பத் தீந்தேன்
பொழிந்தொரு புறத்தே கஞ்சம் பூத்ததோர்
கொம்பி னின்றாள்.

3283 தலைவனை யிறந்த போதுந் தனியுயிர் பெற்ற போதுஞ்
சிலைநுதல் காதன் மாமன் செல்வியா யிருந்துந் தீண்டா
நிலைமையும் அன்புங் கற்பி னீர்மையும் வியந்து நோக்கி
மலைமகண் ஞான முண்டார் வணிகனை நோக்கிச்
சொல்வார்.

3284 வருதிநின் மரபுக் கெல்லா மணியனா யுன்றன் மாமன்
றருதிரு வனையாள் இன்பஞ் சாருநா டுன்பம் வந்து
பெருகுநா ளன்றி யென்றுன் மெய்தொடப் பெறுவ ளீண்டே
திருமண முடித்துக் கொண்டு போகெனச் செப்ப லோடும்.

3285 செங்கணே றனையான் ஐயன் றிருமொழி
தலைமேற் கொண்டு
பங்கயன் படைத்த சாதி நான்கையும் பாது காப்பீர்
எங்குல வணிக ரின்றிக் கரிகளு மின்றி யீங்கே
மங்கல முடிக்கும் வண்ணம் யாதென வணங்கிச்
சொன்னான்.

3282. இறந்து கிடந்த அவ்வணிகன் உறங்கியவன் போல் விழித்து எழுந்தான். அதனைப் பார்த்த அனைவரும் ஞானவேந்தராகிய ஆளுடைப் பிள்ளையாரைக் கை தொழுதனர். துதி மொழி கூறி மகிழச்சிக்கடலுள் மூழ்கினர். அன்னத்தைப் போன்ற அப் பெண் இன்பமாகிய இனிய தேனைச் சொரிந்து தாமரை மலரைப் பெற்ற ஒரு கொம்பு போல ஒரு புறமாக ஒதுங்கி நின்றனள்.

மங்கையை மணந்து செல்க என வணிகனிடம் கூறல்

3283. வில்போன்ற நெற்றியையுடைய அப்பெண், காதல் மிக்க மாமன் மகளாய் இருந்தும் தன் தலைவன் இறந்த காலத்திலும் அவன் உயிர் பெற்று எழுந்த காலத்திலும் அவனைத் தொடா திருந்த தன்மையையும், உமையம்மையின் ஞானப்பாலைப் பருகிய பிள்ளையார் கண்டு வியந்து அவ் வணிகனைப் பார்த்துக் கூறத் தொடங்கினார்.

3284. ''வணிக மரபிற்கு மணிபோன்றவனே! வருக! உன் மாமன் மகளாகிய இப்பெண் திருமகளைப்போன்றவள். உனக்கு இன்பம் வரும் நாளிலும், துன்பம் வரும் நாளிலும் மட்டுமின்றி வேறு எந்நாட்களிலும் உன் உடலைத் தொடத் தகுதி வாய்ந்தவள். ஆகையால் திருமணம் முடித்துக் கொண்டு செல்வாய்'' என்றார். அவ்வாறு சொல்லிய அளவில்,

3285. சிவந்த கண்களையுடைய ஏறு போன்ற அவ்வணிகன், ஐயன் திருமொழியைத் தலைமேற்கொண்டு, ''பிரமன் படைத்த நான்கு வருணத்தையும் பாதுகாப்பவரே! இங்கு எமது குல வணிகரில்லாமல், பிற சான்றுகளும் இல்லாமல் நான் எவ்வாறு திருமணம் முடிப்பேன்?'' என்று கூறினான்.

3286 கன்னியை யீன்ற ஞான்றே யுனக்கென்றுன் காதன் மாமன்
உன்னிய துறவி னுள்ளார் அறிவரே யுனக்கீ தன்றி
வன்னியுங் கிணறு மிந்த விலிங்கமும் கரிகண் மைந்தா
இந்நிலை வதுவை செய்தி யெம்முரை கடவா தென்றார்.

3287 மாசறு மனத்தான் காழி வள்ளலைப் பணிந்த நீரே
தேசிகர் குரவர் நட்டோர் தெய்வமுங் கிளையும் என்னாப்
பேசிய வாறே வேள்வி பெற்றியா னிறீஇத்தான் வேட்ட
பாசிழை யோடு தாழ்ந்து விடைகொடு பரவிப் போனான்.

3288 ஏவல்செய் யாயத் தாரு மடியரும் ஈண்ட வீண்டிக்
காவல்செய் மதுரை மூதூர் குறுகித்தன் காதன் மாமன்
பூவையை மணந்த வண்ணங் கேட்டங்குப்
புடைசூழ் சுற்றம்
யாவரு முவப்ப வின்புற் றிருந்தன னிளங்கோ மன்னன்.

3289 தன்பெருந் தனமு மாம னீட்டிய தனமும் ஈட்டி
மன்பெரு நிதிக்கோ னென்ன வாணிகம் பெருக்கி நாய்கன்
இன்புறு காத லார்க ளிருவரு மீன்ற காதல்
நன்பொருண் மகிழ்ச்சி செய்ய நலம்பெற வாழு நாளில்.

வன்னி, கிணறு, லிங்கம் சாட்சி

3286. உன் அன்புள்ள மாமன் இக்கன்னியைப் பெற்ற போதே, உனக்கே என்று பேசியதை உறவினர் அனைவரும் அறிவாரே! உனக்கு இதுவே அல்லாமல் இந்த வன்னி மரமும் கிணறும், சிவலிங்கமும் சாட்சிகளாகும். மைந்தனே! என் சொல்லைத் தட்டாது இங்கேயே திருமணம் முடித்துக் கொள்வாயாக!'' என்று கூறியருளினார்.

3287. குற்றமற்ற அவ்வணிகன் சீகாழி வள்ளலை வணங்கி, ''தேவரீர் நீரே எமக்கு ஆசிரியரும், நண்பரும், தெய்வமும் உறவினரும் ஆவீர்'' என்று கூறி அங்ஙனமே திருமணத்தை முறைப்படி செய்து முடித்து, தான் மணந்த அப்பெண்ணுடன் அவரை வணங்கி, விடை பெற்றுக் கொண்டு சென்றான்.

3288. வணிகர் தலைவன், பணிபுரியும் மகளிர் கூட்டமும், ஏவலாளரும் தொடர்ந்து வர, நெருங்கிய காவலையுடைய பழம் பதியாகிய மதுரையை அடைந்தான். தனது அன்புள்ள மாமன் மகளை மணந்த தன்மையைக் கேட்டு அங்கு வந்து சூழ்ந்திருந்த சுற்றத்தார் அனைவரும் மகிழ்ந்தனர். அவனும் இன்புற்றான்.

3289. தனது பெரும் பொருளையும், மாமன் தேடி வைத்த பொருளையும் ஓரிடத்தில் தொகுத்துப் பெரிய குபேரனைப் போல வாணிகத்தால் பொருள் மேலும் பெருக்கித் தன் காதலுக்குரிய இரண்டு மனைவியரும் பெற்ற அன்பு மிகுந்த புதல்வர்கள் மகிழ்ச்சியை விளைவிக்க, அவ்வணிகன் நலமுற வாழ்ந்து வந்தான்.

3290 மூத்தவள் சிறுவர் சால மூர்க்கரா யுள்ளார் ஏனை
மாத்தளி ரியலி னாட்கோர் மைந்தனுண் டிவனு மன்ன
தீத்தொழி னாக மன்ன சிறார்களு மல்லற் செல்வம்
பூத்தநீ ணியமத் தூடு போய்விளை யாடல் செய்வார்.

3291 முந்திய மணாட்டி மைந்தர் முகிழ்முலை யிளைய பாவை
மைந்தனை யொருநாட் சீறி யடித்தனர் வருந்தி யீன்ற
சந்தணி முலையாண் மாற்றா டனையரை வைதாள் ஈன்ற
பைந்தொடி தானுஞ் சீறி யிளையளைப் பழித்து வைவாள்.

3292 எந்தவூர் எந்தச் சாதி யார்மகள் யாவர் காணச்
செந்தழல் சான்றா வெங்கோன் கடிமணஞ் செய்து வந்த
கொந்தவிழ் கோதை நீயென் கொழுநனுக் காசைப் பட்டு
வந்தவ ளான காமக் கிழத்திக்கேன் வாயும் வீறும்.

3293 உரியவன் றீமுன் னாக வுன்னைவேட்ட டதற்கு வேறு
கரியுள தாகிற் கூறிக் காட்டெனக் கழற லோடும்
எரிசுட வாடிச் சாய்ந்த விணர்மலர்க் கொம்பிற் சாம்பிற்
தெரியிழை நாணஞ் சாய்ப்ப நின்றிது செப்புகின்றாள்.

மூத்தாளும் இளையாளும் சண்டை இடுதல்

3290. வணிகனுடைய மூத்தாளின் புதல்வர்கள் மிகவும் கொடியவர்கள். மாந்தளிர் போன்று மென்மையான வளான இளையவளுக்கு ஒரு புதல்வன் இருந்தான். இம்மைந்தனும் கொடிய பாம்பு போன்ற தீய செயல்களையுடை அம்மைந்தர்களும் பெரும் செல்வம் நிறைந்த பெரிய கடை வீதிக்குச் சென்று விளையாடுவாராயினார்.

3291. மூத்த மனைவியின் புதல்வர்கள், தாமரை மொட்டினை ஒத்த கொங்கைகளையுடைய இளையாளின் புதல்வனை ஒரு நாள் சினந்து அடித்தனர். அவனை வருந்திப் பெற்ற சாந்து அணிந்த கொங்கைகளையுடைய இளையாள், மூத்தாள் புதல்வர்களைத் திட்டினாள், அப்பிள்ளைகளைப் பெற்ற பசிய வளையலை அணிந்த மூத்தாள் தானும் கோபம் கொண்டு இளையவளை இகழ்ந்து நிந்திப்பாளாயினாள்.

3292. ''நீ எந்த ஊரினள்? என்ன மரபினள்? யார் மகள்? யார் முன்னிலையில் அக்கினி சான்றாக என் கணவனைத் திருமணம் செய்து கொண்டு வந்த மலர் மாலையை அணிந்த பெண் நீ? என் கொழுநனுக்கு ஆசைப் பட்டு வந்தவளான காமக் கிழத்தியாகிய உனக்கு இந்தப் பேச்சும் இறுமாப்பும் ஏன்?

3293. ''எனக்கு உரிய நாயகன், தீ முன்னர் உன்னை மணந்ததற்கு சாட்சி உள்ளதேல் அதனைக் கூறிக் காட்டுவாய்!'' என்று கூறினாள். அவ்வாறு அவள் சொல்லியவுடன் நெருப்புச் சுடுதலால் வாடிச் சாய்ந்த கொத்துகளையுடைய பூங்கொம்பு போல வாட்டமடைந்து அணிகளை அணிந்த அப்பெண் நாணம் அடைந்தாள். பின்னர் சொல்லத் தொடங்கினாள்:

3294 அரவின்வாய்ப் பட்ட வைக லாருயிர் அளித்த ஞானப்
புரவல ரருளா லெங்கோன் புறம்பய நாதன் வன்னித்
தருவொடு கிணறு காணச் செய்தனன் சாறம் மூன்று
கரிகளு முள்ள வென்றாள் கற்பினா லொப்பி லாதாள்.

3295 மாற்றவ ணகைத்து நன்று நன்றுநின் மன்றல் வேள்விக்
கேற்றன கரியே சொன்னா யிங்குமக் கரிகண் மூன்றுந்
தோற்றமேல் அதுவு மெய்யே யென்றன டோகை யோடும்
வேற்றுமை யிலாத சாய லிளையவள் விழுமங் கூரா.

3296 வெவ்வுயிர்ப் பெறிய வில்போய் மெல்விர
னெரிக்குங் கையால்
அவ்வயி றதுக்கும் வீழுங் கண்புனல் வெள்ளத் தாழுங்
கொவ்வைவாய் துடிக்கு நாணந் தலைக்கொளுங்
கூசு மன்னோ
தெய்வமே யாவா வென்னும் என்செய்கேன்
சிறியே னென்னும்.

3297 தாதைதா யிறந்த வன்றே தமியளாய் இங்குப் போந்த
பேதையேற் காருண் டைய பேதுறும் வணிகற் கன்று
மாதுல னாகி ஞாதி வழக்கறுத் துரிமை யீந்த
நாதனே யேதி லாள்வாய் நகையினிற் காத்தி யென்னா.

3294. ''என் கணவன் பாம்பின் வாய்ப்பட்ட பொழுது அரிய உயிரினைக் கொடுத்தருளிய ஞானவேந்தராகிய ஆளுடைப் பிள்ளையாரின் ஆணையால் எம் தலைவன் திருப்புறம்புயத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெருமானும் வன்னி மரமும் கிணறும் காணத் திருமணம் புரிந்தனன். அந்த மூன்று சான்றுகளும் உள்ளன'' என்றாள் கற்பில் மிக்கவளான அவள்.

3295. அதனைக் கேட்டு மாற்றாள் சிரித்து, ''நன்று! நன்று! உன் திருமணத்திற்கு ஏற்ற சான்றினைக் கூறினாய். அச்சான்று மூன்றும் இங்குத் தோன்றுமாயின் அந்த மணமும் உண்மையே!'' என்று கூறினாள். மயிலுடன் வேற்றுமை இல்லாத சாயலையுடைய இளையாள் மிகுந்த துன்பமடைந்தாள்.

வன்னி, கிணறு, சிவலிங்கம் இவற்றை அழைத்தல்

3296. வெம்மையாகிய பெருமூச்செறிய, வீட்டினுள் சென்று மெல்லிய விரல்களை நெறிப்பாள். கையினால் அம்மெல்லிய வயிற்றைப் பிசைவாள். கீழே விழுவாள். கண்ணீர் விட்டு அழுவாள். கொவ்வைக்கனி போன்ற உதடு துடிப்பாள். வெட்கப் படுவாள். ஐயோ! தெய்வமே! என்பாள். என்ன செய்வேன் சிறியேன் என்பாள்.

3297. ''ஐயனே! தாயும் தந்தையும் இழந்து தனியாளாக இங்கு வந்த பேதையான எனக்கு உம்மையன்றி வேறு துணை யாருளர்? மனமயங்கி வருந்திய அவ்வணிகனுக்கு முன்னொரு காலத்தில் மாமனாக வந்து பங்காளிகளின் வழக்கினை ஒழித்து அவன் உரிமையைக் கொடுத் தருளிய இறைவனே! மாற்றாள் வாயிலிருந்து வரும் பழி மொழியினை நீக்கி அருள்க!'' என்று குறையிரந்து வேண்டினாள்.

(இக்கதையினை, இப்புராணத்தின் கூடற் காண்டத்தில் உள்ள மாமனாகி வந்து வழக்குரைத்த படலத்தில் காண்க.)

3298 அன்றிர வுண்டி யின்றித் துயிலின்றி யழுங்கிப் பின்னாட்
பொன்றிணி கமல வாவிப் புண்ணியப் புனறோய்ந் தண்ட
நின்றிழி விமானக் கோயி னிரம்பிய வழகர் முன்னாச்
சென்றிரு தாளில் வீழ்ந்து தன்குறை செப்பி வேண்டும்.

3299 அன்றெனைக் கணவன் வேட்ட விடத்தினில்
அதற்குச் சான்றாய்
நின்றபைந் தருவு நீயுங் கிணறுமந் நிலையே யிங்கும்
இன்றுவந் தேதி லாள்வாய் நகைதுடைத்
தெனைக்கா வாயேற்
பொன்றுவ லென்றாள் கற்பின் புகழினை நிறுத்த வந்தாள்.

3300 அல்லலுற் றழுங்கி நின்றாள் பரிவுகண் டந்தண் கூடல்
எல்லையில் கருணை மூர்த்தி யருளினால் எவருங் காணத்
தொல்லையின் படியே யன்னாள் சொல்லிய
கரிகண் மூன்றும்
ஒல்லைவந் திறுத்த கோயி லுத்தர குணபா லெல்லை.

3301 அன்னபோ திளையாண் மூத்தாட் கொண்டுபோ
யால வாயெம்
முன்னவன் திருமுன் றாழ்ந்து காட்டுவாண்
முகிறோய் சென்னி
வன்னியீ திலிங்கம் ஈது கிணறிதென் மன்றற் சான்றாய்த்
துன்னிய வென்றாள் கண்டாண் முடித்தலை
தூக்கி நின்றாள்.

3298. அன்றிரவு உணவும் இன்றி உறக்கமும் இன்றி வருந்திக் கழிய மறுநாள், புலர்ந்தது. செறிந்த பொற்றாமரைகளை யுடைய வாவியில் அறவடிவாகிய நீரில் மூழ்கி, வானினின்று இறங்கிய திருக்கோயிலில் எழுந்தருளிய பேரழகராகிய சோமசுந்தரக் கடவுளின் திருமுன்னர் சென்று அவருடைய இரண்டு திருவடிகளிலும் விழுந்து வணங்கித் தனது குறையைக் கூறத் தொடங்கினாள்;

3299. ''அன்று என் நாயகனை மணம் புரிந்த இடத்தில் திருமணத்திற்குச் சான்றாக நின்ற வன்னி மரமும், கிணறும், சிவலிங்கமுமாகிய நீயும் அங்ஙனமே இங்கு இன்று வந்து மாற்றாளின் இகழ் மொழியைப் போக்கி என்னைக் காத்தருளாவிடில் இறந்து விடுவேன்'' என்று கூறினாள், கற்பின் புகழை உலகில் நிலை நிறுத்த வந்த அவ் வணிகப்பெண்.

3300. துன்பமுற்று வாடி நிற்கும் அவ்வணிகப் பெண்ணின் வருத்தத்தை நோக்கி, அழகிய குளிர்ந்த கூடற் பதியில் எழுந்தருளிய அளவற்ற கருணை வடிவினனாகிய இறைவன் அருளினால், அனைவரும் காணுமாறு முன்பிருந்தவாறே அம்மாது சொன்ன சான்றுகள் மூன்றும் திருக்கோயிலின் வடகீழ்த் திசையில் விரைந்து வந்து தங்கின.

3301. இளையவள், மூத்தாளை அழைத்துக் கொண்டு போய், ஆலவாயில் எழுந்தருளிய முன்னவனான சோமசுந்தரக் கடவுளின் திருமுன்னர் விழுந்து வணங்கி, ''எனது திருமணத்திற்குச் சான்றாகிய முகிலை அளாவிய முடியினை உடைய வன்னிமரம் இது! சிவலிங்கம் இது! கிணறு இது!'' என்று காட்டினாள். பரந்த மூத்தாள் தலை கவிழ்ந்தாள்.

3302 அவ்விடைத் தருவு நீரு மன்றுபோல் இன்றுஞ் சான்றாய்
இவ்விடைப் பட்ட வென்ன வதிசய மெவர்க்குந் தேறாத்
தெய்வமு மெளிவந் தங்கைக் கனியினித் திருவி னன்னாள்
கைவ்வசப் பட்ட தென்றாற் கற்பினுக் கரிதே தம்ம.

3303 மங்கைதன் கற்பு மீச னிடத்தவள் வைத்த வன்பும்
அங்கணன் அவட்குச் செய்த வருளையும் வியந்து நோக்கி
மங்கல நகரா ரெல்லா மகிழச்சியு ளாழ்ந்தார் முல்லைத்
தொங்கலான் முதும ணாட்டி யொருத்தியுந்
துன்பத் தாழ்ந்தாள்.

3304 மேதகு வணிகர் மூத்த வினைக்கொடி யாளைப் பொல்லாப்
பாதகி யிவளாம் என்று பழித்தனர் படிறு பேசிக்
கோதறு குணத்தி னாளைக் குடிப்பழு துரைத்தாய் நீயென்
காதலி யாகா யென்று கணவனுந் தள்ளி விட்டான்.

3305 அந்நிலை யிளையாள் கேள்வன் அடியில்வீழ்ந்
திரப்பாள் ஐய
என்னது கற்பை யின்று நிறுத்தினா ளிவண்மாற் றாளன்
றன்னையி லாதேற் கன்னை யாயினா ளிவளும் யானும்
இன்னுயி ருடல்போல் வாழ்வோ மெனத்தழீஇத்
தம்மி னட்டார்.

கற்பின் பெருமை

3302. அவ்விடத்தில் உள்ள வன்னி மரமும் கிணறும் மணம் முடித்த காலத்தில் இருந்தது போலவே இன்றும் இங்குச் சான்றாக வந்துத் தோன்றின. இஃது என்னே அதிசயம்! எவராலும் அறிய முடியாத இறைவனும் எளிதாக வந்து உள்ளங்கை நெல்லிக்கனி போல, இத்திருமகள் போன்றவளின் கையில் அகப்பட்ட தென்றால் கற்பினால் அடைய முடியாத அரிய பொருள் யாது உளது? ஒன்றுமில்லை.

3303. மங்கலம் நிறைந்த மதுரை நகர் உள்ளார் அனைவரும் அவ்வணிகப் பெண்ணின் கற்பினையும், இறைவனிடத்தில் அவள் வைத்துள்ள அன்பினையும், அவ்விறைவன் அவளுக்குச் செய்த அருளினையும் கண்டு வியப்படைந்து மகிழ்ச்சிக் கடலுள் மூழ்கினர். முல்லை மாலையை அணிந்த மூத்தாள் மட்டும் துன்பக் கடலுள் மூழ்கினாள்.

மூத்தாளை யாவரும் வெறுத்தல்

3304. அங்குள்ள வணிகர்கள் மூத்தாளாகிய தீவினையை யுடைய கொடியாளை, ''இவள் பொல்லாத பாவியாவாள்'' என்று பழித்தார்கள். ''குற்றமற்ற குணத்தினையுடைய இளையாளைப் பொய் பேசி குடிக்குற்றம் கூறினை. ஆகையால் நீ என் மனைவியாக மாட்டாய்'' என்று கணவனும் அவளைத் தள்ளி விட்டான்.

3305. அப்போது இளையாள் தன் கணவன் திருவடியில் விழுந்து வணங்கி வேண்டினாள், ''ஐயனே! இவள் இன்று என்னுடைய கற்பை நிலை நிறுத்தினாள். ஆகையால் இவள் எனக்கு மாற்றாள் அல்லள். தாயில்லாத எனக்கு இவளே தாய், இனி இவளும் நானும் இனிய உயிரும் உடலும் போலப் பிரிவின்றி வாழ்வோம்!'' என்று கூறித் தங்களுள் ஒருவரை ஒருவர் தழுவி நட்புப் பூண்டனர்.

3306 உடம்பினால் இரண்டே யன்றி யுயிர்ப்பொரு
ளிரண்டற் றுள்ளம்
மடம்படு மழுக்கா றற்று மைந்தரு மனைய ராக
விடம்படு மைவாய் நாகம் விழுங்கிரை யொத்துத் தம்மில்
இடம்படு மன்புற் றின்புற் றிருவரு மிருந்தார் மன்னோ.

3307 அருந்ததி யனையாள் கேள்வற் காயுளு மானாச் செல்வப்
பெருந்தன நிறைவுஞ் சீரும் ஒழுக்கமும் பீடும் பேறு
தருந்தவ நெறியுங் குன்றாத் தருமமும் புகழும் பல்க
இருந்தனள் கமலச் செல்வி யென்னவீற் றிருந்து மன்னோ.

3308 பொன்னவிர் கமலம் பூத்த பொய்கைசூழ் ஆல வாயெம்
முன்னவன் விளையாட் டெல்லை கண்டியார்
மொழிய வல்லார்
இன்னமு மளவின் றென்ப வெங்குரு நாத சாமி
சொன்னவா றுங்கட் கெண்ணெண் காதையுஞ்
சொன்னே னம்ம.

வேறு

3309 என்றுதென் மலைமே லிருந்தமா தவத்தோன் இன்னருட்
குருபரன் றனையும்
அன்றவன் திருவாய் மலர்ந்தவா சகமு மருள்கனிந்
தொழுகவுள் ளடக்கித்
தென்றமி ழால வாய்த்தனிப் பதியைச் சென்னிமேற்
பன்னிரண் டும்பர்
ஒன்றவைத் திமையா வங்கயற் கண்ணி யுடனுறை
யொருவனை நினைந்தான்.

வணிக மாதரின் இல்லற வாழ்வு

3306. அவ்விருவரும் உடலினால் இரண்டேயன்றி உயிரால் ஒன்றாகி உள்ளத்தில் அறியாமையால் உண்டாகும் அழுக்காறு இன்றி வாழ்ந்தனர். புதல்வர்களும் அத்தன்மையர்களாக, நஞ்சுடைய ஐந்துதலைப் பாம்பு விழுங்கும் இரையைப் போன்று தங்களுள் மிகுந்த அன்புடன் இன்ப மெய்தி இருந்தனர்.

(ஐந்தலை நாகம் ஒரு தலையால் உணவு உண்டாலும் ஐந்தலைக்கும் பொறுந்துமாப்போல் - உடன்பட்டு வாழ்ந்தனர் என்க).

3307. ''அருந்ததி போன்றவளாகிய அவ்விளைய நங்கை, தன் நாயகனுக்கு நிறைந்த வாழ்நாளும், பெரிய பொருட் செல்வமும், சிறப்பும் ஒழுக்கமும், பெருமையும் பயன்தரும் தவ ஒழுக்கமும் குன்றாத அறமும், புகழும் தந்து பூமகள் வீற்றிருந்தாள் போல வாழ்ந்திருந்தனள்.

அகத்தியர் மதுரை நாயகரைத் தியானித்தல்

3308. ''பொன் போல் விளங்கும் தாமரைகள் மலர்ந்த பொய்கைகள் சூழ்ந்த திருவாலவாயில் எழுந்தருளியுள்ள எம் முன்னவன் விளையாட்டு எல்லை கண்டு மொழிவார் யார்? அவருடைய திருவிளையாடல் பெருமைகளுக்கு அளவே இல்லை. எமது குருநாதராகிய முருகப்பெருமான் அருளிச் செய்தவாறே ''அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் உங்களுக்குச் சொன்னேன்.''

3309. என்று கூறிப் பொதியின் மலைமேல் இருந்த பெருந்தவ முனிவனாகிய அகத்தியன், இனிய அருளையுடைய குருநாதனையும் அன்று அக் குருநாதன் திருவாய் மலர்ந்தருளிய உபதேச மொழியையும், அருள் பழுத்து ஒழுகுமாறு உள்ளத்தின் கண் அடக்கி, அழகிய தமிழையுடைய திருவாலவாயில் எழுந்தருளிய ஒப்பற்ற இறைவனும் அங்கயற் கண்ணம்மையுடன் உறைகின்ற ஒருவனுமாகிய சோமசுந்தரக் கடவுளை முடியின்மீது பன்னிரண்டு அங்குலத்திற்கு அப்பால் பொருந்த வைத்துத் தியானித்தான்.

3310 பரவச மடைந்து வழிகவர்ந் துண்ணும் பழிப்புல
வேடர்போ யொளிப்ப
இருள்வெளி கடந்து திருவருள் வழிச்சென் றெண்ணிலாச்
சராசரம் அனைத்தும்
புரையற நிறைந்து காட்சிகண் காண்பான் புதைபடத்
தனித்தபூ ரணமாய்
உரையுணர் விறந்த வுண்மையா னந்த வுணர்வினை
யுணர்வற வுணர்ந்தான்.

வன்னியும் கிணறும் லிங்கமும் அழைத்த படலம்
முற்றிற்று

65. அருச்சனைப் படலம்

3311 கன்னிதன் வதுவைக் கரிகளாய் இலிங்கக் கடவுளுங்
கவைக்கருங் கோட்டு
வன்னியும் படுநீர்க் கூவலும் வந்த வழியிது
மதுரைநா யகனைச்
சென்னியில் வைத்த முனிவனைப் பூசை செய்துமா
தவரொருங் கெய்திப்
பன்னிற மலர்தூஉ யாலவா யானைப் பரவிய
பரிசது பகர்வாம்.

3312 போதவா னந்தத் தனிக்கடல் பருகும் புயல்புரை
முனிவனை வசிட்ட
மாதவ னாதி முனிவரு முலோபா முத்திரை
தன்னொடும் வரித்துப்
போதொடு சாந்த மான்மதந் தீபம் புகைமுதற்
கருவிகைக் கொண்டு
மேதகு சிறப்பால் அருச்சனை செய்து பின்னுமோர்
வினாவுரை செய்வார்.

3310. சிவகரணம் பெற்று ஆறலைத் துண்ணுகின்ற பழிமிக்க ஐம்புல வேடர்கள் போய் மறைய, கேவல சகல அவத்தைகளைக் கடந்து திருவருளின் வழியே சென்று, சராசர மனைத்திலும் நிறைந்து காண்பானும், காட்சியும் காட்சிப் பொருளும் மறையப் பூரண வடிவாய் மாற்றமும் மனமும் கழிய நின்றானுமான சச்சிதானந்த வடிவினை இடையறாது தியானம் செய்தார்.

வன்னியும் கிணறும் லிங்கமும் அழைத்த படலம் முற்றிற்று.

65. அருச்சனைப் படலம்

3311. வணிக மங்கையின் திருமணச் சான்றுகளாய்ச் சிவலிங்க மூர்த்தியும், கரிய பிளவுபட்ட கிளையுடைய வன்னி மரமும், நீர் ஊறும் கிணறுமாகிய இவை வந்த திருவிளையாடல் இது. சோமசுந்தரக் கடவுளைச் சென்னியில் வைத்த குரு முனிவனைப் பூசித்து அம்மாதவர்கள் ஒரு சேரச் சென்று, திருவாலவாயுடைய இறைவனைப் பல நிறங்களையுடைய மலர்களைத் தூவி வழிபட்ட தன்மையைக் கூறுவோம்.

முனிவர்களின் வேட்கை

3312. ஞானானந்தமாகிய ஒப்பற்ற கடலைக் குடிக்கும் முகில் போன்ற அகத்திய முனிவரை உலோபாமுத்திரையுடன் இருத்தி, வசிட்டன் முதலிய முனிவர் அனைவரும், மலர், சந்தனம், மான்மதம், தீபம் தூபம் முதலிய உபகரணங்களைக் கொண்டு சிறப்புடன் அருச்சனை செய்து வணங்கினர். மீண்டும் ஒரு வினாவினைக் கேட்கத் தொடங்கினர்.

வேறு

3313 கோட்டஞ் சிலைகுனிந்த கூடற் பிரானாடல்
கேட்டஞ் செவிபடைத்த பேறடைந்தேங் கேட்டபடி
நாட்டங் களிப்ப நறுமலர் தூஉய்க் கண்டிறைஞ்ச
வேட்டங்கள் யாங்களென வோதினார் மெய்த்தவரே.

3314 என்ற வறவோர் எதிரே முகமலர்ந்து
குன்ற மடக்குங் குறுமுனிவன் கூறுவான்
நன்றுமுனி காளிதனை நானுள்ளத் தெண்ணியாங்
கொன்றமொழிந் தீரென்றான் பின்னும்வியந் தோதுவான்

3315 பண்ணான் மறைமுடியுந் தேறாப் பரசிவனை
எண்ணால் அளவிறந்த வெக்கலையாற் கண்டுமுளக்
கண்ணா லறியாதார் வீட்டின்பங் காண்பரோ
மண்ணாதி யாறாறு நீத்ததனி மாதவரே.

3316 அஞ்செவியி லூறுபடக் கேட்டபடி யாலவாய்ப்
பஞ்சமுகச் சோதிப் பரனைப்போய் அர்ச்சித்து
நெஞ்சநெகக் கண்டு நினையா வழிநினைந்து
வஞ்சவினை வேர்களைவான் வம்மின்க ளென்றானே.

3313. ''மேருமலையை வில்லாக வளைத்த நான் மாடக் கூடலின் நாயகனான சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல் களைக் கேட்டதால் அழகிய செவிகளைப் பெற்றதின் பயன்களை அடைந்தோம். கேட்ட வண்ணமே கண்கள் களிகூர நாங்கள் நறுமலர் தூவி வணங்க வேட்கை மிகுந்துள்ளோம்'' என்று அவ்வுண்மைத் தவமுடைய முனிவர்கள் கூறினார்கள்.

அகத்திய முனிவர் யாவரையும் மதுரைக்கு அழைத்தல்

3314. இவ்வாறு கூறிய முனிவர் முன்னே, விந்த மலையை அடக்கிய அகத்திய முனிவர் முகமலர்ந்து கூறவாராயினார். ''முனிவர்களே! நன்று, நான் என் மனதில் நினைத்த வண்ணமே நீங்களும் உரைத்தீர்கள்'' என்று கூறிப் பின்னும் வியந்து கூறுவானாயினார்.

3315. ''மண் முதலிய முப்பத்தாறு தத்துவங்களையும் களைந்த பெருந் தவத்தினையுடைய முனிவர்களே! இசையமைந்த நான்கு மறைகளின் முடிவுகளும் கண்டறியாத சிவபெருமானை, எண்ணினால் அளவில்லாத எந்தக் கலைகளின் உணர்வினால் கண்டு இருந்தும் மனக் கண்ணால் அறியாதவர் முக்தி இன்பத்தைக் காண்பார்களோ? முடியாது.

3316. ''அகஞ்செவியில் அழுந்தக் கேட்ட வண்ணமே திருவாலவாயில் எழுந்தருளிய ஐந்து திருமுகங்களையுடைய ஒளிவடிவினனாகிய சோமசுந்தரக் கடவுளை, போய் அர்ச்சித்து, நெஞ்சு நெக்குவிட்டுருகத் தரிசித்து, முன்னொரு காலத்தும் நினையாத திருவருள் வழியே நினைந்து, வஞ்சித்துப் பிறவியில் செலுத்தும் வினைகளுக்கு மூலமாகிய ஆணவத்தைப் போக்கு வதற்கு வருவீராக.'' என்று கூறினார்.

3317 மங்கல வோரைவருதினத்தில் வானிழிந்த
கங்கை படிந்துலக நாயகனைக் கைதொழுது
புங்கவர்முன் சங்கற்பஞ் செய்தனுச்சை பூண்டொழுகி
அங்கவர்வாய் ஆசி மொழிகேட் டகமகிழ்ந்தே.

3318 ஐம்புலனுங் கூடற் பெருமான் அடியொதுக்கி
நம்பனுரு வைந்தெழுத்து நாவாடாக் கைகூப்பித்
தம்புனித சைவ தவத்தெய்வத் தேர்மேற்கொண்
டும்பர் வழிநடக்க லுற்றார்க ணற்றவரே.

3319 செய்ய சடையார் திருநீறு சண்ணித்த
மெய்யர்தவ நோற்றிளைத்த மேனியின ருட்புறம்புந்
துய்யரணி கண்டிகையர் தோலு மருங்குடையர்
ஐயர் தவத்துக் கணிகலம்போற் போதுவார்.

வேறு

3320 புண்ணியந் தழைக்குந் தெய்வத் தலங்களும் புலன்கள் வென்றோர்
நண்ணிய வனமுந் தீர்த்த நதிகளுந் தவத்தோர் நோற்கும்
வண்ணமு நோக்கி நோக்கி மலயமா முனிவன் காட்டக்
கண்ணினை களிப்ப நோக்கிக் கைதொழுது இறைஞ்சிச் செல்வார்.

மதுரையைத் தரசிக்கப் புறப்படல்

3317. வசிட்டர் முதலிய முனிவர்கள் அவ்விடத்தில் அவ்வகத்தியர் முன், சங்கற்பம் செய்து கொண்டு, அவர் வாய் வாழ்த்துரையைக் கேட்டு அகமகிழ்ந்து விடை பெற்றுச் சென்று மங்கலமான நல்லோரை வரும் நாளில் வானினின்றும் இழிந்து கங்கையில் நீராடி விசுவநாதனைக் கையால் தொழுதனர்.

3318. நல்ல தவத்தினையுடைய அம்முனிவர்கள் ஐந்து பொறிகளையும் கூடல் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவடியில் பதியுமாறு ஒதுக்கி, அவ்விறைவனின் திருவுருவ மாகிய திருவைந்தெழுத்தையும் நா உருவேற்ற, கைகளைக் கூப்பித் தம் மனித சைவநெறியில் தப்பாத தவமாகிய தெய்வத் தன்மை பொருந்திய தேரில் ஏறி வான் வழியாக நடக்கத் தொடங்கினர்.

3319. தவத்திற்கு அணிகலன் போலும் முனிவர்கள் சிவந்த சடையினை உடையவராய்த் திருநீறுபூசிய உடலினை உடைய வராய், தவம் புரிவதால் இளைத்த உடலினை உடையவராய், அகமும், புறமும் தூய்மை உடையவராய், உத்திராக்க மாலையை அணிந்தவராய், தோலையும் இடையில் உடையவராய்ப் போவாராயினர்.

விண்வழியே செல்கையில் கண்ட தலங்கள்

3320. புண்ணியம் தழைக்கும் தெய்வத்தலங்களையும் புலன்களை வென்றடக்கிய முனிவர்கள் வசிக்கும் காடுகளையும், தூய நதிகளையும் முனிவர்கள் தவம் புரியும் தன்மையையும் ஆராய்ந்து கண்டு பொதிய மலையை உடைய அகத்தியர் காட்ட, கண்கள் இரண்டும் களிப்படைய கைகூப்பி வணங்கிச் செல்வராயினர்.

3321 சீறுகொள் இலங்கை வேந்தைச் செருத்திட விராமன் பூசித்
தாறணி விரூபக் கண்ண னருள்பெறு தலமீ தும்பர்
ஏறிவீழ்ந் திறந்தோர் முன்ன மெண்ணிய வெண்ணி யாங்கே
மாறிய பிறப்பி னல்கு மலையிது காண்மின் காண்மின்.

3322 சுரபிநீள் செவியி லிங்கச் சுடருரு வாயி னான்றன்
இரவினிற் றிருத்தேர் மன்ற னடக்குமூர் இவ்வூர் மேலை
உரவுநீர்க் கரைத்தேன் மாதத் துயர்ந்தகார்த் திகையிற் றேரூர்ந்
தரவுநீர்ச் சடையான் வேள்வி நடக்குமூ ரவ்வூர் காண்மின்

3323 விற்பயி றடக்கை வேடன் மென்றவூன் பாகம் பார்த்தோன்
பொற்புறு கிரியீ தண்டம் புழைபட விடத்தா ணீட்டி
அற்புதன் காளி தோற்க வாடிய திதுமா நீழற்
கற்புடையொருத்தி நோற்கும் பிலமிது காண்மின் காண்மின்.

3324 திருமறு மார்பன் காவற் செயல்பெற வரனைப் பூசித்
திருகர முகிழ்த்து நேர்நின் றேத்திட மிதுவா மோத்தின்
உரைவரம் பகன்ற முக்க ணுத்தமன் சந்தை கூட்டி
அருமறை யறவோர்க கோதுவித்திடம் அதனைக் காண்மின்.

3321. சினம் கொண்ட இலங்கை மன்னனைக் கொல்லுவதற்காக இராமன் வழிபட்டுக் கங்கையை அணிந்த 'விரூபக் கண்ணன்' அருள் பெறும் தலம் 'ஏமகூடம்', இது. உச்சியில் ஏறிக் கீழே வீழ்ந்து இறந்தவர்கள் முன் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைய மறுபிறவியில் அவர்களுக்கு அளிக்கும் 'திருப்பதம்' (ஸ்ரீசைலம்) இது. இவற்றைப் பாருங்கள்! பாருங்கள்!!

3322. பசுவினது நீண்ட காதைப் போல ஒளியினையுடைய இலிங்க வடிவான இறைவனுக்குச் சிவராத்திரியில் திருத்தேர் விழா நடக்கும் 'திருக்கோகரணம்' இது. மேலைக் கடற்கரையில் கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகை நாளில், கங்கையையும், பாம்பையும் அணிந்த சிவபெருமானுக்குத் திருவிழா நடக்கும் 'திருவஞ்சைக் களம்' இது. பாருங்கள்! பாருங்கள்!!

3323. வில்லை ஏந்திய பெரிய கையையுடைய வேடர் குலத்தினரான கண்ணப்பர் மென்ற ஊனினை, சுவை பார்த்த இறைவன் எழுந்தருளிய அழகிய 'திருக்காளத்தி' மலை இது. அண்டம் தொளைபடுமாறு இடது காலினை நீட்டி, ஞான வடிவினனாம் இறைவன் காளி தோல்வியடையுமாறு ஆடியருளிய 'திருவாலங்காடு' இது. ஒற்றை மாமரத்தின் நிழலில் கற்புடைய காமாட்சியம்மையார் தவம் செய்யும் 'காஞ்சிபுரம்' இது. பாருங்கள்! பாருங்கள்!!

3324. திருமகள் உறையும் மார்பினை உடைய திருமால், தான் காக்கும் தொழிலைப் பெறுவதற்கு இருகரம் கொண்டு நேர் நின்று, சிவபெருமானை வழிபட்ட 'திருமாற்பேறு' இது. வேதங்களின் வரம்பினைக் கடந்த முக்கண் இறைவனான சிவபெருமான், வேதத்தை ஓதுவித்த 'திருவோத்தூர்' இது. இதனைப் பாருங்கள்!

3325 அடிமுடி விலங்கும் புள்ளும் அளந்திடா தண்டங் கீண்டு
நெடுகிய நெருப்பு நின்ற நிலையிது முள்வாய்க் கங்க
வடிவெடுத் திருவர் நோற்கு மலையிது பல்வே றூழி
இடையுற முன்னும் பின்னு மிருக்குமிக் குன்றைக் காண்மின்.

3326 அவுணரிற் கள்வ னான வந்தகற் காய்ந்து மூன்று
புவனமுங் கவலை தீர்த்த புண்ணியன் புரம் ஈதாகும்
தவலரும் புரங்கண் மூன்றுந் தழனுதற் றிருக்கண் சாத்திப்
பவமறு மூவ ரன்பிற் பட்டவன் பதியைக் காண்மின்.

3327 சத்திய ஞானா னந்த தத்துவ மசைவற் றாடும்
நித்திய பரமா னந்த நிறையருண் மன்ற மீது
முத்தியங் குதித்தோர் எய்தும் பதியது முதனூ னான்கும்
பத்தியிற் பூசித் தேத்தும் பதியிது வாகும் பார்மின்.

3328 பிரமன்மான் முதலாந் தேவர் பிரளயத் திறவா வண்ணம்
பரமனார் தோணி யேற்றும் பன்னிரு நாமம் பெற்ற
புரமிது சடாயு சம்பா திகள்பெரும் பூசை செய்ய
வரமளித் திருணோய் தீர்க்கு மருந்துறை பதியீது ஆகும்.

3325. அடியையும் முடியையும் திருமாலும் நான்முகனும் முறையே பன்றியும் அன்னமுமாக வடிவு கொண்டு தேட, இறைவர் அண்டத்தைக் கிழித்து நீண்ட அனல் வடிவாய் நின்ற 'திருவண்ணாமலை' இது. இருவர் முள் போலும் வாயினை யுடைய கழுகு உருவம் எடுத்துத் தவம் புரியும் 'திருக்கழுக் குன்றம்' இது. பலவேறாகிய ஊழிகள் இடையில் வர முன்னும் பின்னும் அழியாது இருக்கும் பழமலை (விருத்தாசலம்) இதுவாகும்.

3326. அவுணருள் வஞ்சகம் உடையவனாகிய அந்தகா சூரனைக் கொன்று மூன்று உலகங்களிலும் உள்ளவர்களின் துன்பத்தையும் நீக்கிய அறவடிவினன் ஆகிய சிவபெருமானது திருக்கோவிலூர் வீரட்டம் இதுவாகும். அழிவில்லாத மூன்று புரங்களிலும் நெற்றியிலுள்ள நெருப்பு விழியைச் செலுத்தி அவற்றை அழித்து அங்குள்ள பிறப்பு அற்ற மூவர்களின் அன்பு வலையில் அகப்பட்ட அவ்விறைவன் பதியாகிய 'திருவதிகை வீரட்டானம்' காணுங்கள்!

3327. சச்சிதானந்த மெய்ப் பொருளாகிய திருக்கூத்தப் பெருமான் அசைவின்றி ஆடியருளப் பெற்ற சிவானந்தம் நிறைந்த அழியாத அருள் மன்றமாகிய 'சிதம்பரம்' இது. உன்னிடம் பிறந்தவர் வீடுபேற்றினை அடையப் பெறும் திருப்பதியாகிய 'திருவாரூர்' இது. முதல் நூல்களாகிய மறைநான்கும் அன்போடு வழிபட்டுத் துதிக்கும் 'திருமறைக்காடு' (வேதாரண்யம்) இதுவாகும்.

3328. பிரமனும், திருமால் முதலிய தேவர்களும் ஊழி வெள்ளத்தில் இறவா வண்ணம் அவர்களை இறைவன் தோணியில் ஏற்றியருளிய பன்னிரண்டு திருப்பெயர்களைப் பெற்ற (திருத்தோணிபுரம்) சீகாழி இது. சடாயுவும், சம்பாதியும் பெரிய வழிபாடு செய்து அவர்களுக்கு வேண்டிய வரம் கொடுத்து ஆணவ இருளோடு கூடிய பிறவி நோயைத் தீர்க்கும் மருந்து உறையும் புள்ளிருக்கு வேளூர் (வைதீஸ்வரன் கோவில்) இதுவாகும்.

3329 மதிநுத லிமயச் செல்வி மஞ்ஞையாய் வழிபட் டேத்தும்
இதுதுலாப் பொன்னித் தானம் எம்மனோர் மூன்று கோடி
மதிபெறு முனிவர் வந்து வழிபடு மூதூ ரீதிப்
பதியறக் கடவுள் பூசை பண்ணிய தானங் காண்மின்.

3330 கோடுதான் குடைய வேழந் தானவன் குறைத்த கோட்டைப்
பாடற நோற்றுப் பெற்ற பதியிது மாலை சாத்துந்
தாடகை மானங் காப்பான் றாழ்ந்துபூங் கச்சிட் டீர்க்கும்
பீடுறு கலய னன்பி னிமிர்ந்தவெம் பிரானூர் ஈதால்.

3331 கரிமுகத் தவுணற் காய்ந்து கரிமுகத் தண்ணல் பூசை
புரிசிவ நகர மீது தாரகற் பொருது செவ்வேள்
அரணையர்ச் சித்த தார்க்கீழ் மணற்குறி யான்பா லாட்டிப்
பரன்முடி மாலை சூடுஞ் சேய்வளம் பதியீ தாகும்.

3332 கறுவிவீழ் காலன் மார்பிற் சேவடிக் கமலஞ் சாத்திச்
சிறுவனுக் காயுள் ஈந்த சேவகப் பெருமான் மேய
அறைபுனற் பழன மூதூ ரதுவிது வானை தந்த
குறையுடற் போர்வை போர்த்த கொற்றவன்
கோயில் காண்மின்.

3329. பிறைமதியைப் போன்ற நெற்றியையுடைய பனிமலையின் புதல்வியாகிய உமாதேவியார் மயிர் உருவம் கொண்டு வழிபட்டுப் பரவும் இப்பதி, ஐப்பசி மாதம் தன்னில் மூழ்குவோருக்கு வீடுபேற்றினை அருளும் காவிரியையுடைய 'மாயூரம்' என்பதாகும். எம்மைப் போன்ற மூன்று கோடி அறிவுள்ள முனிவர்கள் வந்து வணங்கும் பழம்பதி 'திருக்கோடிக்கா' இதுவாகும். இப்பதி அறக்கடவுள் பூசித்த 'தருமபுரம்' ஆகும். காணுங்கள்!

3330. நான்கு கொம்பினையுடைய ஐராவதம் என்னும் யானை, அவுணனாகிய பானுகோபன் வெட்டிய தன் கொம்பு களைத் துன்பம் நீங்கத் தவம் செய்து பெற்ற 'திருவெண்காடு' இது. மாலை சூட்டும் தாடகை என்னும் பெண்ணின் மானத்தைக் காப்பாற்றுவதற்காகத் தாழ்ந்து அழகிய கச்சினைப் பூட்டி இழுத்த பெருமைமிக்க குங்கிலியக் கலய நாயனார் அன்பினால் நிமிர்ந்த எம்பிரான் ஊராகிய 'திருப்பனந்தாள்' இதுவாகும்.

3331. யானை முகத்தையுடைய மூத்த பிள்ளையார், கயமுகாசூரனைக் கொன்று வழிபாடு இயற்றிய 'திருச்செங் காட்டங்குடி' இதுவாகும். முருகன் தாரகனைக் கொன்று சிவபெருமானை வழிபட்டதும் ஆத்திமரத்தின் அடியில் அமைந்த மணலால் அழகிய சிவலிங்கத்திற்குப் பசுவின் பாலால் ஆட்டி அவ்விறைவன் திருமுடியில் உள்ள மாலையை அணியும் சண்டீசர் திருவவதாரம் செய்ததுமாகிய 'திருச்செய்ஞலூர்' இதுவாகும்.

3332. சினந்து மார்க்கண்டன் மேல் விழுந்த காலனுடைய மார்பில் சிவந்த திருவடித் தாமரையைச் சாத்தி, அச்சிறுவனுக்கு வாழ்நாளைக் கொடுத்தருளிய வீரனாகிய சிவபெருமான் எழுந்தருளிய ஒலிக்கும் நீரினையுடைய வயல்கள் சூழ்ந்த பழம் பதியாகிய 'திருக்கடவூர்' இது. யானை தந்த தோலாகிய போர்வையைப் போர்த்தருளிய வீரன் திருக்கோயிலையுடைய 'வழுவூர்' என்பது இது. பாருங்கள்!

3333 பங்கயக் கடவுள் ஈந்த பரிகலம் வாங்கிக் கொண்ட
அங்கண னிடமீ தாட லனங்கனை யமுது செய்த
செங்கணா னிருக்கை யீது மேழகச் சென்னி தன்னை
மங்கல மாமற் கீந்த மருகனா ரிருக்கை காண்மின்.

3334 திண்டிறல் அவுணன் றன்னைப் பெருவிரற் றீட்டு நேமி
உண்டிட விருந்தாக் கொண்டோ னுறையதா
மொருத்தி மன்றல்
கண்டிடு கரியாய்க் கூவல் கண்ணுத லிலிங்கம் வன்னி
எண்டிசை யறியக் காட்ட நின்றிட மிதனைக் காண்மின்.

3335 சாமகண் டத்தன் றன்னைத் தானருச் சித்த தென்னர்
கோமகன் பிரம சாயை குறைத்ததிப் பதியாங் கங்கை
மாமகந் தோறும் வந்து வந்துதற் படிந்தோர் விட்டுப்
போமகம் போக மூழ்கும் புனிதநீர்ப் பதியைக் காண்மின்.

3336 குருமொழி தந்தைக் கீந்தெங் குருவுறை மலையீ தெங்கோன்
கருமுகில் வண்ணத் தண்ணல் கண்ணிடந் தடியிற் சாத்தப்
பொருவிறல் ஆழி யீந்த புரமிது நந்தி யெந்தை
திருவுரு வடைய நோற்ற தலமிது தெரிந்து காண்மின்.

3333. பிரமதேவன் கொடுத்த பலிக்கலனை வாங்கித் திருக்கரத்தில் வைத்துக் கொண்ட இறைவன் இடமாகிய 'திருக்கண்டியூர்' இது. வெற்றி மிக்க மன்மதனை நீறாக்கிய அனல் கண்ணையுடைய சிவபெருமானின் 'திருக்குறுக்கை' இது. ஆட்டுத் தலையை மங்கலமான மாமனாகிய தக்கனுக்குக் கொடுத்த மருமகனாகிய சிவபெருமான் இருக்கும் 'திருப்பறியலூர்' இது. பாருங்கள்!

3334. மிக்க வலியினையுடைய சலந்தாசுரனைக் கால் பெருவிரலால் வரைந்த திகிரிப்படை விருந்தாக உண்ண அதனைக் கொண்ட சிவபெருமான் இருப்பிடமாகிய 'திருவிற்குடி' இதுவாகும். ஒரு வணிக மகள் தன் மணத்தைக் கண்ட சான்றுகளாய்க் கிணறும், சிவலிங்கமும், வன்னியும் ஆகிய மூன்றையும் எட்டுத்திக்கில் உள்ளவர்களும் அறியுமாறு காண்பிக்க அவை நின்ற இடமாகிய 'திருப்புறம் பயம்' இதுவாகும். பாருங்கள்!

3335. சாமவேதம் முழங்கும் திருமிடற்றினையுடைய இறைவன், தன்னைத் தானே அர்ச்சித்ததும், பாண்டிய மன்னனாகிய வரகுண பாண்டியனது பிரமக் கொலைப் பாவத்தைப் போக்கியதும் ஆகிய 'திருவிடை மருதூர்' இப்பதியாகும். கங்கையில் நீராடியோர் விட்டுப்போகும் பாவங்கள் போகுமாறு மாமகந்தோறும் வந்து வந்து நீராடும் தூய தடாகத்தையுடைய 'திருக்குடந்தை' யைப் பாருங்கள்!

3336. உபதேசமொழியைத் தன் தந்தையாருக்கு அருளி எம் குருவாகிய சாமிநாதன் உறையும் 'சுவாமிமலை' இதுவாகும். கரிய முகில் போன்ற நிறத்தினையுடைய திருமால் கண்ணைத் தோண்டித் திருவடியில் சாத்த பெறுதற்கரிய வலிமையான திகிரிப்படையை அளித்தருளிய எம் சிவபெருமான் எழுந்தருளிய 'திருவீழிமிழலை' இதுவாகும். திருநந்திதேவர் சிவபெருமான் திருவுருவத்தைப் பெறுதற்குத் தவம் புரிந்த 'திருவையாறு' என்னும் இப்பதியினை ஆராய்ந்து காணுங்கள்!

3337 முடங்குகாற் சிலந்தி யானை மலைமகண் முளரி நாட்டத்
தடங்கடல் வண்ண னோற்ற தவநகர் இதுமுச் சென்னி
மடங்கலே றனையா னாம வரையிது குடைந்தோர் பாவம்
அடங்கலும் பருகும் பொன்னி யாறிது காண்மின் காண்மின்.

3338 இந்நதி வெண்முத் தார மெனக்கிடந் திலங்குஞ் சென்னி
மன்னவ னாடீ தென்ப தமிழறி வைகைப் பேர்யா
றந்நதி துறக்க மண்மேல் வழுக்கிவீழ்ந் தாங்குத் தோற்றித்
தென்னவ னாடு சேய்த்தாத் தெரிவதே காண்மின் என்றான்.

3339 பொங்கர்மென் புதல்கள் என்னப் பொருநதி சிறுகா லென்னக்
கொங்கலர் தடஞ்சிற் றூறற் குழியெனப் பழனஞ் சில்லி
தங்குமென் பாத்தி யென்னத் தாழைதாழ் சிறுபுல் லென்னப்
பைங்குலைக் கதலி மஞ்சட் பாத்திபோற் றோற்றக் கண்டார்.

3340 பன்னிற மாட மாலை யுபரிகைப் பந்தி செய்குன்
றன்னம்வெண் குருகு செம்போத் தளகுபைங் கிள்ளை மஞ்ஞை
இன்னபுள் வேறு வேறா யொழுங்குபட் டிருப்பது ஒப்ப
மின்னுபூங் கொடியப் புட்கள் சிறகென விதிர்ப்பக் கண்டார்.

3337. வளைந்த காலையுடைய சிலந்தியும் யானையும், உமையம்மையும், தாமரைமலர் போன்ற கண்களையும், பெரிய கடல் போன்ற கரிய நிறத்தையும் உடைய திருமாலும், தவம் யெ்த 'திருவானைக்கா' என்னும் பதி இதுவாகும். மூன்று தலைகளை யுடைய சிங்க ஏறுபோல்வானாகிய 'திரிசரன்' பெயரைப் பெற்ற 'திரிசிரா' மலை இதுவாகும். மூழ்கியோரின் பாவம் தீர்க்கும் காவிரி ஆறு இதுவாகும். இவற்றைப் பாருங்கள்! பாருங்கள்!

3338. இந்த நதியானது வெண்மையான முத்தைப் போலக் கிடந்து விளங்கும். சோழ மன்னன் நாடு இது என்று சொல்வர். அந்த நதியானது தமிழ் மறையின் சுவையை அறிந்த வையை என்னும் பெயரினையுடையது. பொன்னுலகமானது மண்ணின் மேல் வழுக்கி விழுந்ததென விளங்கித் தூரத்தே காணப்படுவது பாண்டிய நாடு. அதனைப் பாருங்கள் என்று கூறினார்.

3339. விண்வழியே சென்ற முனிவர்கள் கண்களுக்கு மரம் செறிந்த காடுகள் சிறு செடிகளைப் போலவும் கரையோடு மோதும் பெரிய அலைகளையுடைய நதி சிறிய கால்வாயினைப் போலவும், மணம் பொருந்திய பெரிய தடாகங்கள் சிறிய ஊற்றுக் குழிகளைப் போலவும், வயல்கள் மெல்லிய சிறிய கீரைகள் தாங்கும் பாத்திகள் போலவும், பசிய குலையை யுடைய வாழைகள் மஞ்சட் பாத்திரள் போலவும் தோன்றின.

3340. அன்னங்களும், நாரைகளும், செம் போத்துகளும், அழகிய கிளிகளும் மயில்களும் இவை போன்ற பிற பறவைகளும் தனித் தனியே நின்று காட்சி அளிப்பனபோலப் பல நிறங்களை யுடைய மாடவரிசைகளும் உப்பரிகைகளும் செய்குன்றங்களும் காட்சியளித்தன. அம்மாளிகையிற் கட்டிய கொடிகள், அப் பறவைகள் சிறகினை அசைத்தன போலக் காட்சியளித்தன.

3341 கண்டு நாட்டு நகர்வளங்க ணடந்துநடந்து கண்கள்விருந்
துண்டு மீள வகல் விரும்பா றொழுகி வலமா வருமுனிவர்
விண்டு ழாவுங் கொடுங்குன்றுந் தளிப்புத் தூரும்
வரிபொழில்வாய்
வண்டு பாட மயிலாடல் பயிலா டானை வளநகரும்.

வேறு

3342 சரத வேதம் பரவுபுன வாயி னகருந் தவசித்தர்
இரத வாதஞ் செய்துசிவன் உருவங் கண்ட வெழினகரும்
வரத னாகி யரனுறையுங் கானப் பேரு மலைமகளை
வரத யோக நெறிநின்று மணந்தார் சுழியல் வியனகரும்.

3343 மறவாள் இலங்கை யிறைமகனை வதைத்த
பழியான் மருண்டரியன்
றறவா ணேமி யளித்தவனை யர்ச்சித் தகன்ற வணிநகரும்
நிறவாண் முத்தும் வயிடூர்ய நிறையும் பொன்னும்
விளைபொருநைத்
துறைவாய்ப் பிறவாக் கடவுள்வேய் வயிற்றிற்பிறந்த
தொன்னகரும்.

3341. நாட்டு வளங்களையும், நகர வளங்களையும் கண்டு விருந்து அருந்தியது போன்று முனிவர்கள் மகிழ்வடைந்த வண்ணம் சென்றார்கள். வானின் வழியாகச் சென்று வலமாக வரும் முனிவர்கள் வானையளாவிய 'திருக்கொடுங் குன்றமும்', 'திருத்தளிப் புத்தூரும்', விரிந்த சோலையில் வண்டுகள் பாடி நிற்க மயில்கள் ஆடுகின்ற 'திருவாடனை' என்னும் வளம் மிக்க பதியையும் கண்டார்கள்.

3342. மறை துதிக்கும் 'திருப்புனவாயில்' என்னும் திருப்பதியும், தவ வடிவமுடைய சித்த மூர்த்திகள், பொன்னனையாள் பொருட்டு இரசவாதம் செய்து, சிவபெருமான் திருவுருவம் கண்ட அழகிய 'திருப்பூவணமும்', இறைவன் அருட் கொடையுடையவனாய் எழுந்தருளிய 'திருக்கானப் பேரும், பார்வதி தேவியாரை யோக நெறியில் நின்று மணம் செய்தருளிய சிவபெருமானது 'திருச்சுழியல்' என்னும் சிறந்த பதியும் கண்டனர்.

3343. கொலைத் தொழிலை உடைய கொடிய இராவணனைக் கொன்ற பாவத்தினரல் திருமால் மனமயங்கி, முன்னொரு காலத்தில் அறம் பொருந்திய ஒளியினையுடைய திகிரிப் படையைக் கொடுத்தருளிய இறைவனை வழிபட்டு, அப்பழியை நீக்கிக் கொண்ட அழகிய 'திருஇராமேச்சுரமும்', மிக்க ஒளியினையுடைய முத்துக்களும் வயிடூரிய வரிசைகளும் பொன்னும் விளைகின்ற பொருநைத் துறையின்கண் மூங்கிலின் வயிற்றில் யாண்டும் பிறவாத இறைவன் வந்து பிறக்கப் பெற்ற பழமையுடைய 'திருநெல்வேலி' யையும் கண்டார்கள்.

3344 துளபக் குன்றைக் கொன்றைமுடிக் குன்ற மாக்குந்
தொன்னகரும்
அளகைப் பொறித்த கொடியிளையோன் மானேர்
நோக்கி னானைமகள்
புளகக் குன்றை மணந்துமுதல் இருந்த பொருப்பும்
போர்வியசன்
வளைவிற் றாக்க வடுக்கிடந்த முடியோன் மேய வளநகரும்.

3345 கொண்டல் படியுந் திருவாப்ப னூருந் தொழுது
குளிர்திரைக்கை
வண்டு படியுங் கமலமுக வைகைப் பிராட்டி
யெதிர்வணங்கிக்
கண்டு படிந்து திசையெட்டும் விழுங்கி யண்டங்
கடந்துலகம்
உண்ட நெடியோன் எனவுயர்கோ புரமுன்
னிறைஞ்சி யுள்புகுதா.

3346 மறுகு தோறும் பணிந்தெழுந்து வளைந்து வளைந்து
பொற்கோயில்
குறுகி விதியாற் பொற்கமலங் குடைந்து செய்யுங்
குறைநிறுவி
உறுதி பெறவைந் தெழுத்தெண்ணி யூற்று மதத்து
நாற்றடந்தோட்
சிறுகு கண்ண வைங்கரத்துச் சித்தி யானை யடிவணங்கா.

3347 மும்மை யுலகு நான்மறையு முறையான் ஈன்ற வங்கயற்கண்
அம்மை யடிகண் முடியுறத்தாழ்ந் தன்பு
கொடுத்தின் னருள்வாங்கி
வெம்மை யொளிகான் மணிக்கனக விமானத்
தமர்ந்த தனிச்சுடரின்
செம்மை யடித்தா மரைவேணிச் சிரமேன் மலர்ப்
பணிந்தேத்தா.

3344. துளப மாலையை அணிந்த நீலமலை போலும் திருமலையும், கொன்றை மாலை அணிந்த முடியினை யுடைய மாணிக்கமலை போன்ற சிவபெருமான் உண்டாக்கிய 'திருக் குற்றாலமும்', கோழியை உடைய கொடியினை ஏந்திய முருகக் கடவுள், மான் போன்ற பார்வையினையுடைய தெய்வயானை யாரின் தனங்களை அணைந்து முதலில் வீற்றிருந்தருளிய 'திருப்பரங் குன்றமும்' 'போர் வெற்றியையுடைய அருச்சுனன் வளைந்த வில்லால் அடித்தலால் தழும்புபட்ட முடியினையுடைய இறைவன் வீற்றிருக்கும் 'திருவேடகமும்' கண்டார்கள்.

3345. பின்னர் மேகம் படியும் சோலை சூழ்ந்த 'திரு ஆப்பனூர்' என்னும் திருப்பதியைத் தரிசித்து இன்பம் பெற்றனர். குளிர்ந்த அலைகளாகிய கைகளையும் தாமரையாகிய முகத்தையும் கொண்ட வையையாகிய பெருமாட்டியை முனிவர் கள் எதிர்கண்டு வீழ்ந்து வணங்கினார்கள். எட்டுத் திசைகளையும் விழுங்கி அண்டத்தைக் கடந்து உலகத்தை உண்ட திருமாலைப் போல உயர்ந்த கோபுரத்தை முன் வணங்கி உள்ளே சென்றனர்.

3346. வீதிகள் தோறும் விழுந்து வணங்கி எழுந்து பலமுறை வலம் வந்தனர். பொன்மயமான திருக்கோயிலை அடைந்து பொற்றாமரையில் விதிப்படி நீராடினர். செய்ய வேண்டிய இன்றியமையாத வினைகளைச் செய்து திருவைந்தெழுத்தைச் செபித்து, கொட்டும் மதநீரையும் நான்கு திருத்தோள்களையும் சிறிய கண்களையும், ஐந்து திருக்கரங்களையும் உடைய சித்தி விநாயகரின் திருவடிகளை வணங்கினர்.

3347. மூன்று உலகங்களையும் நான்கு மறைகளையும் முறையாகப் பெற்ற அங்கயற்கண்ணம்மையின் திருவடிகள் முடியில் பொருந்த வீழ்ந்து வணங்கினர். அன்பினைக் கொடுத்து அம்மையின் அருளினைப் பெற்றனர். ஒளியினை வீசும் மணிகள் அழுந்திய பொன்னாலாகிய விமானத்தில் எழுந்தருளிய ஒப்பற்ற ஒளிவடிவினனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவடித் தாமரைகள் தம் முடியின் மேல் மலர வணங்கித் துதித்தனர்.

3348 அன்றிரு போது முண்டி துறந்திரா வறுக்குந் தீவாள்
என்றெழு முன்னீ ராடி நியதிகள் இயற்றி யைந்தும்
வென்றுளத் தன்பு பாய விளைமுழு முதலைப் பார்மேல்
மின்றிரண் டென்ன நின்ற விமான மீதிருப்பக் கண்டார்.

3349 வாசமஞ் சனந்தேன் கன்னல் பைங்கனி மறுவி லானைந்
தாசறு மமுத மைந்து தென்மலை யாரம் வாசம்
வீசுதன் பனிநீர் வெள்ள மான்மதம் விரைமென் போது
தூசணி மணிப்பூ ணல்ல சுவையமு தின்ன தாங்கா.

3350 சதவுருந் திரத்தா லாட்டி மட்டித்துச் சாத்திப் பூட்டிப்
பதமுற மனுவால் அட்ட பாலமு தருத்திப் பஞ்ச
விதமுறு வாசம் பாகு வெள்ளிலை யளித்துப் போகம்
உதவுறு தூப தீபா திகள்பல வுவப்ப நல்கா.

3351 ஐம்முகச் சைவச் செந்தீ யகத்தினுந் துடுவை யார
நெய்ம்முகந் தருத்திப் பூசை நிரப்பிநால் வேதஞ் சொன்ன
மெய்ம்மனு நூற்றப் பத்தான் மூவிலை வில்ல நீலங்
கைம்மலர் ஏந்திச் சாத்திக் கடவுளை யுவப்பச் செய்து.

3348. முனிவர்கள் யாவரும் அன்று இரண்டு வேளை உணவின்றி இருந்து, இரவை நீக்கும் வெவ்விய வாளையுடைய சூரியன் எழுவதற்கு முன்னே எழுந்து நீராடி, நாள் வினைகளை முடித்தனர். ஐம்புலன்களை வென்ற அவர்களுடைய உள்ளமாகிய வயலில் அன்பாகிய நீர் பெருகிப் பாய்தலால் இனிய அருளை விளைக்கின்ற முழுமுதலை நிலவுலகில் திரண்டெழுந்த மின்திரளைப் போலக் காட்சியளிக்கும் விமானத்தின்மீது இருக்கக் கண்டனர்.

3349. மணம்நிறைந்த திருமஞ்சனம், தேன், கருப்பஞ் சாறு, பழங்களின் சாறு, பஞ்ச கவ்வியம், பஞ்சாமிர்தம், பொதிய மலைச்சாந்து, மணம் வீசிய குளிர்ந்த பனிநீர் பெருக்கு (பன்னீர்), கத்தூரி, மெல்லிய மலர்கள், ஆடை, அணிகலன்கள், நல்ல சுவையுடைய திருவமுது முதலியவற்றைக் கைக்கொண்டு,

3350. சதஉருத்திர மந்திரம்கூறி அபிடேகம் செய்து, கத்தூரி பூசி, சந்தனக் குழம்பு, மலர்கள், ஆடைகள் அணி கலன்கள் சாத்தி, பதம் அமைய சுமைத்த பால் அன்னம் நிவேதித்து, ஐவகையான மணப்பொருள்களையும் பாக்கையும் வெற்றிலையையும் கொடுத்துத் தூப தீபங்காட்டி,

3351. ஐந்து முகங்களையுடைய சிவபெருமான் திருவுருவமாகிய சிவந்த வேள்வித்தீயின்கண்ணும் துடுப்புநிறைய நெய்யை முகர்ந்து வார்த்து ஆகுதி செய்து சிவபூசையை முடித்தனர். நான்கு மறைகளும் கூறிய சிவபெருமானின் ஆயிரம் திருப்பெயரினால் மூன்று இலைகளையுடைய வில்வத்தையும் நீலோற்பல மலரையும் கையில் ஏந்தி அர்ச்சனை செய்து இறைவனை மகிழ்வுறச் செய்தனர்.

3352 வாசமஞ் சனநீ ரோடு மந்திர மலர்களைக் கொண்டு
பூசையின் பயனை முக்கட் புண்ணியன் கையி னல்கி
நேசநெஞ் சூறக் கண்க ணிறையநீ ரூறிச் சோர
ஈசனை யிறைஞ்சி யாரும் அஞ்சலித் தேத்தல் செய்வார்.

வேறு

3353 பழியொடு பாச மாறு கெடவாச வன்செய் பணிகொண்ட
வண்ட சரணம்
வழிபடு தொண்டர் கொண்ட நிலைகண்டு வெள்ளி
மணிமன்று ளாடி சரணஞ்
செழியன்வி ளிந்தி டாத படிமாறி யாட றெளிவித்த
சோதி சரணம்
எழுகடல் கூவி மாமி யுடன்மாம னாட விசைவித்த
வாதி சரணம்.

3354 வெங்கரி யாவி சோர நரசிங்க வாளி விடுவேடர்
ஏறு சரணம்
புங்கவர் தேற வாதி மறையுட் கிடந்த பொருளோது
போத சரணம்
வங்கம் தேறி வேலை மகரம் பிடித்த வலையாண்
மணாள சரணங்
கங்கண நாகம் வீசி நகரெல்லை கண்ட கறைகொண்ட
கண்ட சரணம்.

3355 மைந்தனி லாழி மேரு மகவான் அகந்தை மடிவித்த
நித்த சரணஞ்
சுந்தர நாம வாளி பணிகொண்டு கிள்ளி தொகைவென்ற
வீர சரணம்
வெந்திறன் மாறன் முன்க லுருவானை கனனன்
மிசைவித்த சித்த சரணம்
முந்திய கல்லின் மாதர் பெறவட்ட சித்த
முயல்வித்த யோகி சரணம்.

3352. மணம் பொருந்திய திருமஞ்சன நீருடன் மலரையும் கைக் கொண்டு அவற்றுடன் சிவமூலமந்திரத்தால் வழிபாட்டின் பயனை மூன்று கண்களையுடைய அறவடிவினன் ஆகிய இறைவன் திருக்கரத்தில் கொடுத்தனர். உள்ளத்தில் அன்பு சுரக்க, கண்கள் நீர் சுரந்து ஒழுக யாவரும் சோமசுந்தரக் கடவுளை வணங்கிக் கைகூப்பித் துதிப்பாராயினர்.

3353. ''பழியும் பாசமும் ஆகிய பகைகெட, இந்திரன் செய்த பணியினை ஏற்றுக் கொண்டருளிய தேவனே அடைக்கலம்! வழிபடுகின்ற முனிவராகிய புலிக்கான் முனியும், பதஞ்சலியும் உள்ளத்திற் கொண்ட உறுதியைக் கண்டருளி வெள்ளியம்பலத்துள் திருக் கூத்தாடியவனே அடைக்கலம்! இராசசேகர பாண்டியன் இறவாவாறு கால் மாறி ஆடிக் காட்டியருளிய ஒளிவடிவினனே அடைக்கலம்! ஏழு கடல்களையும் அழைத்து மாமியாகிய காஞ்சன மாலையுடன் மாமனாகிய மலயத்துவசனும் ஆடுதற்கு அவனை அழைத்தருளிய கடவுளே அடைக்கலம்!

3354. ''சமணர் ஏவிய கொடிய யானையின் உயிர் நீங்க நரசிங்க பாணத்தை விட்ட வேடர் ஏறுபோலும் இறைவனே அடைக்கலம்! கண்ணுவர் முதலிய முனிவர்கள் தெளிவடைய வேதத்துள் மறைந்து கிடந்த பொருளை அருளிச் செய்த ஞானவடிவினனே அடைக்கலம்! தோணியில் ஏறிக் கடலில் உள்ள சுறாமீனைப் பிடித்து நெய்தல் நிலத் தலைவன் மகளை மணந்தவனே அடைக்கலம்! கையில் கங்கணமாகிய பாம்பினை விடுத்து நகரின் எல்லையைக் காட்டியருளிய கறை கொண்ட கண்டனே அடைக்கலம்!

3355. ''புதல்வனாகிய உக்கிரகுமார வழுதியினால் உடலின் செருக்கையும், இந்திரன் செருக்கையும் மேரு மலையின் செருக்கையும், அழித்தருளியவனே அடைக்கலம்! சுந்தரப் பேரம்பினை ஏவல் கொண்டு விக்கிரம சோழனுடைய படையை வென்றருளிய வீரனே அடைக்கலம்! மிக்க வலிமையினையுடைய அபிடேக பாண்டியன் முன்னர் கல்லானைக்குக் கரும்பினை அருத்திய சித்தனே அடைக்கலம்! கல்வடிவாகக் கிடந்த இயக்கியர் அறுவரும் அட்டமாசித்திகளை அடையச் செய்வித்த யோகியே அடைக்கலம்.

3356 திருமணி மைந்தன் மைந்தன் முடிசூட விற்ற திருமல்கு
செல்வ சரணம்
மருமகன் என்று மாம னுருவாய் வழக்கு வலிபேசு
மைந்த சரணம்
குருமொழி தந்து நாரை குருவிக்கு வீடு குடிதந்த
வெந்தை சரணம்
வருபழி யஞ்சி வேட மகனுக் கிரங்கு மதுராபு ரேச சரணம்.

3357 விருத்தகு மார பால வருண்மேனி கொண்டு விளையாடும்
அண்ணல் சரணங்
குரத்தியை நச்சு பாவி யுயிருண்டு சோரி குடைவாகை
வேல சரணம்
கருத்திசை பாண னாளி னிசைபாடி மாறு களைவேத
கீத சரணம்
நரித்திரண் மாவை மீள நகரங் கலங்க நரிசெய்த
நம்ப சரணம்.

3358 முற்பக லாறி ரண்டு சிறுபன்றி யுண்ண முலைதந்த
வன்னை சரணம்
பொற்புறு மாய வாவை யடலேறு கொண்டு பொருதட்ட
சிட்ட சரணம்
பற்பல ஞால மெங்கு மடையப் பிரம்பு படுமட்ட
மூர்த்தி சரணம்
கற்பினொ ருத்தி மன்றல் அறிவிக்க மூன்று கரிதந்த
வள்ளல் சரணம்.

3359 அளவைக ளாலும் முதனூல்க ளாலு
மயன்மாய னாலு மளவாக்
களவையு ணக்கு நாம குணசின்ன சாதி கதிசெய்தி
யில்லை யவையும்
உளவென யாம றிந்து துதிசெய்ய வேகொ
லுலகஞ்செ யன்பின் எளிதாய்
விளையருண் மேனி கொண்டிவ் வறுபத்து நாலு
விளையாடல் செய்த படியே.

3356. ''வீரபாண்டியன் புதல்வனாகிய அபிடேக பாண்டியன் சூடும் பொருட்டுச் சிறந்த மாணிக்கங்களை விற்ற செல்வனே அடைக்கலம்! மாமன் உருவெடுத்து வந்து ஒரு வணிகச் சிறுவனை மருமகன் என்று கூறி வன்மையாக வழக்குப்பேசிய வீரனே அடைக்கலம்! உபதேச மொழியை அருளி நாரைக்கும், கரிக்குருவிக்கும் வீட்டுலகினைக் கொடுத் தருளிய எம் தந்தையே அடைக்கலம்! தென்னவனுக்கு வரும் பழியினை அஞ்சி, வேடனுக்கு இரங்கி அருளிய மதுரைப் பதியின் தலைவனே அடைக்கலம்!

3357. ''விருத்த குமார பாலராகிய அருள் திருமேனி கொண்டு திருவிளையாட்டுப் புரியும் அண்ணலே அடைக்கலம்! ஆசிரியன் மனைவியாகிய மாணிக்க மாலையை விரும்பிய பாவியாகிய சித்தன் உயிரை உண்டு அவன் குருதியில் மூழ்கிய வெற்றி மாலையை அணிந்த வேற்படையோனே அடைக்கலம்! நின் திருவடியில் கருத்தை இசைத்த பாணபத்திரன் அடிமை போலச் சென்று இசைபாடி அவன் பகைவனாகிய ஏமநாதனை ஒட்டிய வேதகீதனே அடைக்கலம்! நரிக்கூட்டங்களாகிய குதிரைகளை நகரம் கலங்குமாறு மீண்டும் நரிகளாக்கிய நம்பனே அடைக்கலம்!

3358. ''முன்னொரு காலத்தில் பன்னிரண்டு பன்றிக் குட்டிகள் பால் பருகுமாறு முலை கொடுத்தருளிய தாயே அடைக்கலம்! அழகுமிக்க மாயப் பசுவினை வலிய திருநந்தித் தேவராகிய ஆனேற்றினால் போர் புரிந்து கொன்ற மேலானவனே அடைக்கலம்! பற்பல ஞாலங்கள் அனைத்தும் வடுவினைப் பெறப் பிறம்படிபட்ட அட்ட மூர்த்தியே அடைக்கலம்! கற்பின் மிக்க ஒரு வணிக மாதின் மணத்தை அவள் மாற்றாளுக்கு அறிவிக்க மூன்று சான்றுகள் கொடுத்தருளிய வள்ளலே அடைக்கலம்!

3359. ''காட்சி முதலிய அளவைகளாலும், வேதங்களாகிய முதல் நூல்களாலும் பிரமனும் திருமாலும் அளந்து காண முடியாத மறைவை யுடையை, உனக்குப் பெயரும் குணமும் குறியும் சாதியும் பிறப்பும் தொழிலும் இல்லையே! யாம் அறிந்து துதிப்பதற்குப் போலும், உயர்ந்தோர் செய்யும் அன்பிற்கு எளிதாக அவையும் உனக்கு உள்ள தென்று கூறுமாறு விளையும் அருள் திருமேனி கொண்டு இந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் செய்தருளிய தன்மை உள்ளது.

வேறு

3360 எனத்துதித்த வசிட்டாதி யிருடிகளைக் குருமுனியை யெறிதே னீப
வனத்துறையுஞ் சிவபெருமான் இலிங்கத்தின் மூர்த்தியாய்
வந்து நோக்கிச்
சினத்திணைவென் றகந்தெளிந்தீர் நீர்செய்த பூசைதுதி
தெய்வத் தானம்
அனைத்தினுக்கு மெனைத்துயிர்க்கு நிறைந்துநமக் கானந்த
மாயிற் றென்னா.

3361 சிறந்தவருள் சுரந்துகுறு முனியைவரு கென்றுகரஞ்
சிரமேல் வைத்துப்
புறந்தடவி யெமையொப்பா நீயேநின் கற்புடைய
பொலங்கொம் பன்னாள்
அறந்தழையு முமையொப்பாள் ஆதலினா லுமையொப்பார்
அகிலத் தியாரே
நிறைந்ததவம் புரிந்தோனுந் தவத்துறுதி பெற்றோனு நீயே யன்றோ.

3362 உனக்கரிய வரமினியாந் தருவதெவன் உனக்கரிதா
வொன்றுங் காணேம்
எனக்கருணை செய்திலிங்கத் திடையிச்சை
வடிவாய்ச்சென் றிருந்தா னாகத்
தனக்கரிய வரநல்குஞ் சிவலிங்கந் தன்பெயரா றாபித் தான்றன்
இனக்கருணை வசிட்டாதி முனிவர்களுந் தம்பெயரா
லிலிங்கங் கண்டார்.

3363 ஏத்தியருச் சனைசெய்து நினைவிலரி தாயன்பி லெளிய வட்ட
மூர்த்தியையங் கயற்கண்ணி யன்பனைமுப் போதும்போய்
முடிதாழ்ந் தின்பம்
பூத்தமனத் தினராகிக் கருவித்தேன் பொதிந்தசிறு புட்போல் அந்த
மாத்தலனில் வசிட்டாதி முனிவர்தபோ வனஞ்செய்து
வதிந்தார் மன்னோ.

அருச்சனைப் படலம் முற்றிற்று.
திருவாலவாய்க் காண்டம் முற்றிற்று.
திருவிளையாடற் புராணம் முற்றுப் பெற்றது.

திருச்சிற்றம்பலம்

இறைவர், முனிவர்களுக்கு அருளல்

3360. என்று துதித்த வசிட்டர் முதலிய முனிவர்களையும், அகத்திய முனிவரையும், தேன்பொழியும் கடம்பவனத்தில் கண் எழுந்தருளிய சிவபெருமான் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு வந்து நோக்கி, ''சினத்தினை வென்று உள்ளம் தெளிவடைந்தவர்களே! நீங்கள் எனக்குச் செய்த வழிபாடும் துதிமொழியும் திருத்தலங்கள் அனைத்திற்கும் உயிர் அனைத்திற்கும் நிறைந்து நமக்கும் பெருமகிழ்ச்சியை அளித்தன.

3361. என்று திருவாய் மலர்ந்து திருவருள் செய்து, அகத்திய முனிவரை அருகில் அழைத்து, தம் திருக்கரத்தை அவர் முடியின் மேல் வைத்து முதுகினைத் தடவி, ''நீ எம்மை ஒப்பாய். உம்முடைய கற்புடைய மனைவியாகிய உலோபா முத்திரை முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கும் உமையம்மையைப் போல்வாள். ஆகையால் உம்மை ஒப்பவர் உலகத்தில் வேறு யாருமில்லை. நிறைந்த தவம் செய்தவனும் அத்தவத்தினால் பயன் அடைந்தவனும் நீயே அல்லவா?

3362. ''உனக்கு அரிதாக ஒன்றையும் கண்டிலோம். ஆகையால் உமக்கு யாம் அளிக்கத்தக்க வரம் என்ன இருக்கிறது?'' என்று அருள் புரிந்து இச்சை வடிவாய் சிவலிங்கத்தினுள் சென்று மறைந்தருளினார். அவ்வகத்தியர் தனக்கு அரிய வரத்தினை நல்கியருளும் சிவலிங்கம் ஒன்றினைத் தனது பெயரினால் நிறுவினார். அவன் இனமாகிய வசிட்டன் முதலிய முனிவர்களும் தத்தம் பெயரால் ஒவ்வொரு சிவலிங்கத்தினை நிறுவினார்கள்.

முனிவர்கள் மதுரையில் வசித்தல்

3363. தாம் நிறுவிய சிவலிங்கத்தினைத் துதித்து அருச்சனை செய்து, நினைத்தற்கு அரிதாகி அன்பிற்கு எளிய அட்டமூர்த்தியும், அங்கயற்கண்ணம்மையின் தலைவராகிய சோமசுந்தரக் கடவுளை மூன்று காலங்களிலும் சென்றுவணங்கினர். இன்பம் நிறைந்த மனத்தினை உடையவராய், தேனடையில் மொய்த்த வண்டுகள் போல அந்தச் சிறந்த பதியின்கண் வசிட்டர் முதலிய முனிவர்கள் தபோவனம் ஒன்று உண்டாக்கி அதில் தங்கி இருந்தனர்.

அருச்சனைப் படலம் முற்றிற்று.
திருவாலவாய்க் காண்டம் முற்றிற்று.
திருவிளையாடற் புராணம் முற்றுப் பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

பாட்டு முதற் குறிப்பகராதி

★ ★ ★